மார்க்ஸ் எங்கெல்ஸ்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

❁

தொகுதி

6

20/-



Karl Marx



F. Engels

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

மார்க்ஸ் எங்கெல்ஸ்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

6

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

К. Маркс, Ф. Энгельс

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

Том 6

на тамильском языке

K. Marx, F. Engels

SELECTED WORKS IN 12 VOLUMES

Volume 6

in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭ $\frac{0101010000-731}{014(01)-85}$ 340-86

பொருளடக்கம்

கா. மார்க்ஸ். மூலதனம். முதல் பாகம். முதல் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை 9

கா. மார்க்ஸ். மூல்தனம். முதல் பாகம். இரண்டாவது ஜெர்மன் பதிப்புக்குப் பின்னுரை . 17

கா. மார்க்ஸ். மூலதனம். முதல் பாகம். பகுதி VIII. ஆதித்திரட்சி என்றழைக்கப்படுகிறது . . 34

அத்தியாயம் XXVI. ஆதித்திரட்சியின் ரகசியம் 34

அத்தியாயம் XXVII. விவசாய ஜனத்தொகையிலிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்தல் 40

அத்தியாயம் XXVIII. 15ம் நூற்றுண்டின் முடிவு முதல் பறிமுதல் செய்யப்பட்டோருக்கெதிரான கொடுரமான சட்டங்கள். சட்டங்களின் மூலம் கூலிகளைப் பலவந்தமாகக் குறைத்தல்' 74

அத்தியாயம் XXIX. முதலாளித்துவப் பண்ணையாரின் மூலத்தோற்றம் 90

அத்தியாயம் XXX. தொழில்துறையின் மீது விவசாயப் புரட்சியின் பிரதிபலிப்பு. தொழில் மூலதனத்துக்காக உள்நாட்டுச் சந்தையைச் சிருஷ்டித்தல் 95

அத்தியாயம் XXXI. தொழில் முதலாளியின் மூலத்தோற்றம் 104

அத்தியாயம் XXXII. முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கு 125

பி. எங்கெல்ஸ். கா. மார்க்ஸ், ''மூலதனம்'', முதல் பாகம் பற்றிய மதிப்புரை, *Demokratisches Wochenblatt*க்கு எழுதப்பட்டது . . . 131

1 131

2 137

பி. எங்கெல்ஸ். கா. மார்க்ஸ், ''மூலதனம்'', இரண்டாவது பாகத்திற்கு எழுதிய முன்னுரையிலிருந்து 145

கா. மார்க்ஸ். சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கவுன்சில் ஜினீவாவில் இருக்கும் ருஷ்யப் பிரிவின் கமிட்டி உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதம் 151

கா. மார்க்ஸ். அந்தரங்கமான செய்தியிலிருந்து . 153

பி. எங்கெல்ஸ். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் லண்டன் மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவைப் பற்றி ஆசிரியருடைய குறிப்பு, செப்டெம்பர் 21, 1871 . . 159

கா. மார்க்ஸ். பாரிஸ் கம்யூன் ஆண்டு விழாக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 162

கா. மார்க்ஸ். நிலத்தைத் தேசவுடைமையாக்குதல் 164

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். ஹேகில் நடைபெற்ற பொதுக் காங்கிரசின் தீர்மானங்களிலிருந்து, செப்டெம்பர் 2-7, 1872 169

கா. மார்க்ஸ். ஹேக் காங்கிரஸ். ஆம்ஸ்டர்டாம் பொதுக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின்

நிருபர் பதிவுக்குறிப்பு, செப்டெம்பர் 8, 1872 171
கூ. மார்க்ஸ். ஹனேவரிலிருந்த லு. குகெல்மனுக்கு எழுதிய கடிதம். ஜூலை 11, 1868 . 176
கா. மார்க்ஸ். நியூயார்க்கிலிருந்த பி. போல்டேக்கு எழுதிய கடிதம். நவம்பர் 23, 1871 180
பி. எங்கெல்ஸ். மிலானிலிருந்த தி. குனேவுக்கு எழுதிய கடிதம். ஜனவரி 24, 1872 . . . 185
பி. எங்கெல்ஸ். ஹியுபெர்டுஸ்புர்கிலிருந்த ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதம். ஜூன் 20, 1873 196
பி. எங்கெல்ஸ். ஹோபோக்கனிலிருந்த பி. அ. ஸோர்கேக்கு எழுதிய கடிதம். செப்டெம்பர் 12-17, 1874 203
பதிப்பாளர் குறிப்புகள் 206
பெயர்க் குறிப்பகராதி 229
இலக்கிய மற்றும் புராணப் பெயரகராதி . . 246

கா. மார்க்ஸ்

மூலதனம்[1]

முதல் பாகம்

முதல் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை

இந்நூல்—இதன் முதல் பாகத்தை நான் இப்போது பொது ஜனங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்—1859ல் பிரசுரிக்கப்பட்ட *Zur Kritik der Politischen Oekonomie* என்ற நூலின் தொடர்ச்சியாக அமைகிறது. முதல் பகுதிக்கும் தொடர்ச்சிக்கும் இடையிலான நீண்ட தேக்கம், மீண்டும் மீண்டும் என் வேலையில் குறுக்கிட்ட பல்லாண்டுக் கால உடல்நலமின்மையின் விளைவேயாகும்.

அந்த முந்தைய நூலின் சாரம், இந்தப் பாகத்தின் முதல் மூன்று அத்தியாயங்களில் சுருக்கித் தரப்பட்டுள்ளது.[2] இப்படிச் செய்வது இணைப்பு, பூரணத்துவம் இவற்றின் நிமித்தம் மட்டுமே அல்ல. கருப்பொருளை முன்வைக்கும் விதமும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. சூழ்நிலைகள் அனுமதித்த அளவுக்கு முந்தைய நூலில் குறிப்பாக மட்டுமே தெரிவிக்கப்பட்ட பல அம்சங்கள் இங்கே இன்னும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளன; நேர்மாறாக அங்கே முழுமையாக விவரிக்கப்பட்ட அம்சங்கள் இந்தப் பாகத்தில் சுருக்கமாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. மதிப்பு, பணம் இவை பற்றிய தத்துவங்களின் வரலாறு தொடர்பான பிரிவுகள் இப்போது முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனபோதிலும், முந்தைய நூலின் வாசகர், முதல் அத்தியாயத்துக்கான குறிப்புகளில் அந்தத் தத்துவங்களின் வரலாறு தொடர்பாகப் பார்த்துக் கொள்ள வேண்டிய கூடுதல் மூலாதாரங்களைக் காண்பார்.

ஆரம்பமென்றாலே சிரமமானதுதான் என்பது எல்லா விஞ்ஞானங்களுக்கும் பொருந்தும். ஆகவே, முதல் அத்தி

யாயத்தை, குறிப்பாகப் பண்டங்களின் பகுப்பாய்வைக் கொண்டுள்ள பிரிவைப் புரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கும். இன்னும் குறிப்பாக, மதிப்பின் சாரம், மதிப்பின் பருமன் இவற்றின் பகுப்பாய்வு தொடர்பான பகுதியை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு நான் ஜனரஞ்சகமாக்கியுள்ளேன்.* மதிப்பு வடிவம்—அதன் முழு வளர்ச்சியடைந்த உருவம் பண வடிவமாகும்—மிக ஆரம்ப நிலையானதும் எளிமையானதும் ஆகும். ஆயினும் மனித உள்ளம் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் அடிமட்டத்தை அடையச் செய்த முயற்சி பயன் தரவில்லை என்னும் அதே நேரத்தில், மறுபுறம், இன்னும் அதிகம் சிக்கலான, சிரமமான வடிவங்களின் பகுப்பாய்வு வெற்றியை நெருங்கி அருகில் உள்ளது. ஏன்? ஏனெனில், உடலை ஒரு அங்கக முழுமை என்ற விதத்தில் பயில்வது அந்த உடலின் செல்களைப் பயில்வதைக் காட்டிலும் அதிகம் சுலபமானதாக இருக்கிறது. மேலும், பொருளாதார வடிவங்களின் பகுப்பாய்வில், நுண்ணோக்காடிகளோ ரசாயன ஆய்வுப் பொருட்களோ பயன்

---

* ஷெல்ட்ஸை-டெலிசுக்கு எதிரான ஃபெர்டினண்டு லஸ்ஸாலின் நூலில் இந்த விஷயங்கள் பற்றிய எனது விளக்கங்களின் ''மிகத் தூய அறிவுச் சாற்றைத்'' தருவதாக அவர் பாசாங்கு செய்கின்ற பிரிவே கூட முக்கியமான தவறுகளைக் கொண்டுள்ளது என்பதால் இது மேலும் அவசியமாகிறது.[3] ஃபெர்டினண்டு லஸ்ஸால் தனது பொருளாதார நூல்களில் பொதுவான தத்துவக் கருத்துரைகள் அனைத்தையும், உதாரணமாக மூலதனத்தின் வரலாற்றுக் குணம், உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி முறைக்கும் இடையிலான தொடர்பு முதலானவை பற்றிய கருத்துரைகளை என்னில் உருவாக்கப்பட்ட பதப்பிரயோகத்தைக் கூட விட்டு வைக்காமல், அநேகமாக உள்ளது உள்ளபடியே என் படைப்புகளிலிருந்து காப்பி அடித்திருக்கிறார். அப்படிக் காப்பி அடித்ததை ஒப்புக் கொள்ளவும் இல்லை என்றால், இதன் காரணம் ஒருக்கால் பிரச்சார நோக்கங்களாக இருக்கலாம். இந்தக் கருத்துரைகளை அவர் விரிவாக வகுப்பது குறித்தும் பிரயோகிப்பது குறித்தும் நான் இங்கே பேசிக்கொண்டிருக்கவில்லை; அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பது உண்மையே.

படுவதில்லை. சூட்சுமமாகச் சிந்திக்கும் சக்தி இவ்விரண்டின் இடத்தையுமே நிரப்ப வேண்டும். ஆனால் பூர்ஷ்வா சமுதாயத்தில், உழைப்பின் உற்பத்திப் பலனின் பண்ட வடிவம்—அல்லது பண்டத்தின் மதிப்பு வடிவம்—பொருளாதாரச் செல் வடிவமாகும். நுனிப்புல் மேயும் நோக்கருக்கு, இந்த வடிவங்களின் பகுப்பாய்வு மிகச் சிறு விஷயங்களை வைத்து ஆரம்பிப்பதாகத் தோன்றுகிறது. அது உண்மையிலேயே மிகச் சிறு விஷயங்களைத்தான் கையாளுகிறது. ஆனால் நுண்பெருக்காடிச் சோதனையில் கையாளப்படுகின்ற சிறு பொருட்களின் அணியைச் சேர்ந்தவையே அவையும்.

ஆகவே, மதிப்பு வடிவம் பற்றிய பிரிவைத் தவிர்த்து, கஷ்டம் என்ற குற்றச்சாட்டை இந்தப் புத்தகத்தின் மீது சுமத்த முடியாது. புதித்தாக ஏதேனும் கற்றுக்கொள்ளவும், ஆகவே தனக்குத்தானே சிந்திக்கவும் சித்தமாயுள்ள ஒரு வாசகரையே நிச்சயமாக நான் மனதில் கொண்டுள்ளேன்.

பௌதிக அறிஞன், ஒன்று பௌதிக நிகழ்வுகளை மிக ஆதர்சமான வடிவத்திலும் தொந்தரவு தரும் செல்வாக்கிலிருந்து மிகச் சுதந்திரமாகவும் அவை நேரிடும் இடங்களில் கவனிக்கிறான்; அல்லது சாத்தியமான இடங்களிலெல்லாம் நிகழ்வு சீரான தன்மையில் நிகழ்வதை நிச்சயப்படுத்தும் நிலைமைகளின் கீழ் பரிசோதனைகளை நடத்துகிறான். இந்த நூலில் நான் முதலாளித்துவ உற்பத்தி முறையையும் அந்த முறைக்கென்றுள்ள உற்பத்தி, பரிவர்த்தனை இவற்றின் நிலைமைகளையும் ஆராய வேண்டியுள்ளது. இப்போது வரை அவற்றின் ஆதர்ச பூமி இங்கிலாந்தாகும். எனது தத்துவக் கருத்துக்களை வளர்த்தெடுப்பதில் பிரதான எடுத்துக்காட்டாக இங்கிலாந்து பயன்படுத்தப்பட்டிருப்பதன் காரணம் அதுவே. ஆனபோதிலும் ஜெர்மன் வாசகர், ஆங்கிலேய தொழில் துறை மற்றும் விவசாயத் துறை உழைப்பாளிகளின் நிலைமை குறித்து இகழ்ச்சியால் முகம் சுழிக்கிறார், அல்லது ஜெர்மனியில் அநேகமாக நிலைமை அவ்வளவு மோசம் இல்லை என்ற எண்ணத்தைக் கொண்டு நம்பிக்கையொளியூட்டும் பாணியில் தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொள்கிறார் என்றால், நான் அவருக்கு தெளி

வாகச் சொல்லி விட வேண்டும்: De te fabula narratur! [கதை சொல்லப்படுவது உன்னைப் பற்றியே!]*

வாஸ்தவமாகவே, முதலாளித்துவ உற்பத்தியின் இயற்கையான விதிகளிலிருந்து விளைகின்ற சமுதாயப் பகைமைகளின் வளர்ச்சியின் உயர்வான அல்லது தாழ்வான மட்டம் பற்றிய பிரச்சினை அல்ல அது. பிரச்சினை இந்த விதிகள் பற்றியதே; தவிர்க்க முடியாத முடிவுகளை நோக்கி விட்டுக் கொடுக்காத அவசியத்துடன் செயல்படுகின்ற இந்தப் போக்குகள் பற்றியதே. குறைவாகத் தொழில் வளர்ச்சி அடைந்த நாட்டுக்கு அதன் சொந்த எதிர்காலத்தின் பிரதிபிம்பத்தையே அதிகம் தொழில் வளர்ச்சி அடைந்த நாடு காட்டுகிறது.

ஆனால் இது மட்டுமல்ல. ஜெர்மானியர்கள் மத்தியில் முதலாளித்துவ உற்பத்தி முழு அளவில் உள்நாட்டுச் சரக்காக்கப்பட்டுள்ள இடங்களில் (உதாரணமாக முறையான தொழிற்சாலைகளில்) நடப்பு நிலைமை இங்கிலாந்திலிருப்பதை விட படுமோசமாக உள்ளது; ஏனெனில், தொழிற் சாலைச் சட்டங்களுக்கு இணையான ஒன்று அங்கில்லை. மற்றெல்லாத் துறைகளிலும் நாம், கண்டத்தைச் சேர்ந்த மேற்கு ஐரோப்பாவின் மீதப் பகுதி பூராவையும் போலவே, முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியால் மட்டுமின்றி, அந்த வளர்ச்சியின் முழுமையின்மையாலும் அவதிப்படுகிறோம். தற்கால தீமைகளோடு கூட பக்கத்திலேயே, பண்டைக் காலத்திய உற்பத்தி முறைகளின் செயல் நடிப்பில்லாத மீதமிச்சத்திலிருந்து, அவற்றின் சமூக, அரசியல் கால வழுக்குப் பைகளின் தவிர்க்க முடியாத பரிவாரத்துடன், கிளம்புகின்ற பரம்பரையாய்ப் பெற்ற தீமைகளின் ஒரு முழுச்சரமும் நம்மை வருத்துகிறது. வாழ்ந்துகொண்டு இருப்பவற்றுல் மட்டுமின்றி மாண்டு போய் விட்டவற்று

---

* Mutato nomine de te fabula narratur! (பெயரை மட்டுமே நீ மாற்றியாக வேண்டும், கதை சொல்லப்படுவது உன்னைப் பற்றியே!) ஹொராஷியஸ், நகைச்சுவை வரிகள், நூல் I, முதலாவது கவிதை.—ப-ர்.

லும் நாம் அவதிப்படுகிறோம். Le mort saisit le vif! [இறந்தவன் வாழ்பவனைத் தன் பிடியில் வைத்திருக்கிறான்!]

ஜெர்மனி மற்றும் கண்டத்தைச் சேர்ந்த மேற்கு ஐரோப்பாவில் மீதப் பகுதியின் சமுதாயப் புள்ளி விவரங்கள் இங்கிலாந்தின் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுமிடத்து மோசமாகத் தொகுக்கப்படுகின்றன. ஆனல் மறைந்துள்ள மெடுஸாத் தலையை ஒரு முறை நோட்டம் விட்டுக்கொள்ளுவதற்குப் போதுமான அளவுக்கே அவை முக்காட்டை நீக்குகின்றன. இங்கிலாந்தில் போலவே, நமது அரசாங்கங்களும் பாராளுமன்றங்களும் பொருளாதார நிலைமைகள் பற்றிய விசாரணைக் கமிஷன்களை அப்போதைக்கபோது நியமித்தால், உண்மையைக் கண்டறிவதற்கு அதே பூரண அதிகாரங்கள் உடையவையாக இந்தக் கமிஷன்கள் இருந்தால், ஆங்கிலேயத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள், பொது சுகாதாரம் பற்றிய அந்நாட்டு மருத்துவத் தகவலாளர்கள், பெண்களும் குழந்தைகளும் சுரண்டப்படுவது, வீட்டு வசதி, உணவு முதலியவை பற்றிய அந்நாட்டு விசாரணைக் கமிஷனர்கள் ஆகியோரைப் போலவே தகுதியுள்ளவர்களும் சார்புத் தன்மை, பதவி மரியாதை ஆகியவற்றிலிருந்து சுதந்திரமானவர்களுமான மனிதர்கள் இந்தக் காரியத்துக்காக நமக்குக் கிடைப்பது சாத்தியமானல், உள்நாட்டில் உள்ள நிலைமை நம்மை திடுக்கிடச் செய்ய வேண்டும். தான் வேட்டையாடிய விகார ஜந்துக்கள் தன்னைப் பார்க்காதிருக்கப் பெர்சியஸ் ஒரு மாயாஜாலக் குல்லாயினை அணிந்து கொண்டான். எந்த விகாரங்களும் இல்லை என்று பாசாங்கு செய்வதற்காக நாம் கண்களின் மீதும் காதுகளின் மீதும் மாயாஜாலக் குல்லாயை இழுத்துவிட்டுக் கொள்கிறோம்.

இந்த விஷயத்தில் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளாதிருப்போமாக. 18வது நூற்றாண்டில் அமெரிக்கச் சுதந்திரப் போர்[4] ஐரோப்பிய முதலாளி வர்க்கத்துக்கு எச்சரிக்கை மணியை ஒலித்தது போலவே, 19வது நூற்றாண்டில் அமெரிக்க உள்நாட்டுப் போர்[5] ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்துக்கு எச்சரிக்கை மணியை ஒலித்தது. இங்கிலாந்தில் சமுதாய நசிவின் போக்கு எளிதில் புலனுகும் விதத்தில் உள்ளது. அது ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்த

தும், கண்டத்தில் பிரதிபலித்தாக வேண்டும். அங்கே தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சி மட்டத்துக்கேற்ப, மேலும் மிருகத்தனமானதோ அல்லது மேலும் மனிதத் தன்மையுள்ளதோ ஆகிய ஒரு வடிவத்தை அது எடுக்கும். எனவே உயரிய நோக்கங்களிலிருந்து வேருகத் தொழிலாளி வர்க்கத்தின் சுதந்திர வளர்ச்சிக்குத் தடையாக உள்ள, சட்டப் பூர்வமாக அகற்றப்படத் தக்க தடைகள் அனைத்தையும் அகற்றுமாறு, தற்போதைய ஆளும் வர்க்கங்களுக்கு அவ்வர்க்கங்களின் மிக முக்கிய சொந்த நலன்கள் கட்டளையிடுகின்றன. மற்றக் காரணங்களைப் போலவே இந்தக் காரணத்துக்காகவும் நான் இந்தப் புத்தகத்தில், ஆங்கிலேயத் தொழிற் சாலைச் சட்ட முறையின் வரலாறு, விவரங்கள், விளைவுகள் ஆகியவற்றுக்கு இவ்வளவு நிறைய இடம் ஒதுக்கியுள்ளேன். ஒரு தேசம் மற்றத் தேசங்களிடமிருந்து கற்றுக் கொள்ள முடியும், கற்றுக்கொள்ளவும் வேண்டும். ஒரு சமுதாயம் தனது இயக்கத்தின் இயற்கையான விதிகளைக் கண்டுபிடிப்பதற்கான சரியான சுவட்டில் அடி வைத்துவிட்டபோதுங்கூட—தற்காலச் சமுதாயத்தின் பொருளாதார இயக்க விதியைப் பட்டவர்த்தனமாக்கிக் காட்டுவது இந்த நூலின் முடிவான நோக்கமாகும்,—தனது சீரான வளர்ச்சியின் அடுத்தடுத்த கட்டங்களைத் துணிச்சல் மிக்க பாய்ச்சல்களின் மூலம் கடந்து விடவோ, சட்ட முறைகள் மூலம் அகற்றிவிடவோ முடியாது. ஆனால் அது பிரசவ வேதனைகளைக் குறுக்கிக்கொள்ளவும் குறைத்துக்கொள்ளவும் முடியும்.

தவருகப் புரிந்துகொள்ளக் கூடிய சாத்தியத்தைத் தடுக்க ஒரு வார்த்தை. முதலாளியையும் நிலச்சுவான்யும் எந்த விதத்திலும் couleur de roseஆக (மிகச் சிறந்தோராக) நான் வண்ணம் தீட்டவில்லை; ஆனால் இங்கே தனிநபர்கள் கையாளப்படுவது, பொருளாதார இனங்களின் மானிட ரூபங்களாக, குறிப்பான வர்க்க உறவுகள், வர்க்க நலன்கள் இவற்றின் உருவமைப்புகளாக அவர்கள் இருக்கிறார்கள் என்ற அளவிலேயே. சமுதாயத்தின் பொருளாதார அமைப்பின் பரிணமத்தை இயற்கை வரலாற்றின் ஒரு செய்முறையாகக் கருதுகின்ற எனது நோக்குநிலை, வேறு எந்த நோக்குநிலையை விடவும் குறைவாகவே, தனிநபர் சமுதாய

ரீதியில் எந்த உறவுகளின் சிருஷ்டியாக இருக்கின்றனவோ—அவன் அவற்றுக்கு மேலாகத் தன்னைத்தான் அகரீதியில் எவ்வளவுதான் அதிகமாக உயர்த்திக்கொள்ளக் கூடும் என்றாலும்—அந்த உறவுகளுக்குப் பொறுப்பாளியாக அவனை ஆக்க முடியும்.

அரசியல் பொருளாதாரத் துறையில் சுதந்திர விஞ்ஞான ஆராய்ச்சி சந்திப்பது, மற்ற எல்லாத் துறைகளிலும் சந்திக்கின்ற அந்த எதிரிகளை மட்டுமே அல்ல. அது கையாளுகின்ற விஷயத்தின் விசேஷத் தன்மையானது, மானிட நெஞ்சத்தின் மிக உக்கிரமான, அற்பமான, குரோதமிக்க உணர்ச்சிகளை, தனியார் நலனின் வெறித்தனங்களை யுத்த களத்துக்குள் எதிரிகளாக வரவழைக்கிறது. உதாரணமாக, ஆங்கிலேய ஸ்தாபித திருச்சபையானது [The English Established Church][6] தனது வருமானத்தில் 1/39 பகுதியின் மீதான ஒரு தாக்குதலை மன்னிப்பதை விட தனது 39 விதிகளில் 38ன் மீதான ஒரு தாக்குதலை மன்னிக்க அதிகம் சித்தமாய் இருக்கும். இப்போதெல்லாம் நிலவுகின்ற சொத்துறவுகளைக் குறைகூறும் செயலுடன் ஒப்பிடுமிடத்து நாத்திகமே culpa levis [சிறு குற்றம்] தான். ஆனபோதிலும், சந்தேகத்திற் கிடமற்ற ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, சுடந்த சில வாரங்களுக்குள் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் நீலப் புத்தகத்தை[7] நான் குறிப்பிடுகிறேன்: *Correspondence with Her Majesty's Missions Abroad, regarding Industrial Questions and Trades Unions.* ஜெர்மனியில், பிரான்சில், சுருங்கச் சொல்லின் ஐரோப்பாக் கண்டத்தின் எல்லா நாகரிக நாடுகளிலும், மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் நிலவும் உறவுகளில் ஒரு தீவிரமான மாற்றம் ஏற்படுவது இங்கிலாந்தில் இருப்பது போன்றே தெட்டென்றும் தவிர்க்க முடியாததாகவும் உள்ளது என அயல் நாடுகளிலுள்ள ஆங்கிலேய முடியாட்சியின் பிரதிநிதிகள் இப்புத்தகத்தில் நறுக்கென்று பிரகடனம் செய்கின்றனர். அதே நேரத்தில், அட்லாண்டிக் சமுத்திரத்தின் மறுபுறத்தில், அடிமை முறை ரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் மூலதன உறவுகளிலும் நிலவுடமை உறவுகளிலும் ஒரு தீவிரமான மாற்றம் அடுத்து நடக்கும் நிலையில் இருப்பதாக, அமெரிக்க ஐக்கிய நாடு

களின் உதவி ஜனாதிபதி திரு. வேய்ட் பொதுக் கூட்டத்தில் பிரகடனப்படுத்தினர். அரசர்களின் ஆடம்பர ஆடைகளைக் கொண்டோ அல்லது கருப்புநிற பாதிரிக் கவுன்களைக் கொண்டோ மறைக்கப்பட முடியாத காலத்தின் அடையாளங்கள் இவை. நாளை ஒரு அதிசயம் நடக்குமென்று அவை குறிக்கவில்லை. ஆனால், இன்றைய சமுதாயம் ஒன்றும் திடமான படிகம் அல்ல, மாறவல்லதொரு உருவமைப்பே, அது இடைவிடாமல் மாறிக்கொண்டுமிருக்கிறது என்ற ஒரு சகுனத் தோற்றம் ஆளும் வர்க்கங்களுக்குள்ளேயே உதித்துக்கொண்டிருக்கிறது என்பதை அவை காட்டுகின்றன.

இந்த நூலின் இரண்டாவது பாகம் மூலதன சுற்றோட்டத்தின் செய்முறையையும் (புத்தகம் II), மூலதனத்தின் வளர்ச்சிப் போக்கில் அது மேற்கொள்கின்ற வேறுபட்ட வடிவங்களையும் (புத்தகம் III), கடைசி பாகமான மூன்றுவது பாகம் (புத்தகம் IV) பொருளாதாரத் தத்துவங்களின் வரலாற்றையும் விளக்கும்.

விஞ்ஞான ரீதியான விமர்சனத்தின் அடிப்படையிலான சகல விதமான அபிப்பிராயத்தையும் நான் வரவேற்கிறேன். பொதுஜன அபிப்பிராயம் என்று சொல்லப்படுவதன் விருப்பு வெறுப்புகளைப் பொறுத்த வரை—இவற்றுக்கு நான் என்றுமே சலுகைகள் காட்டியதில்லை—முன்போலவே இப்போதும் மாபெரும் ஃப்ளோரென்டைனின் நீதி மொழியே எனதுமாகும்:

Segui il tuo corso, e lascia dir le gentil*

கார்ல் மார்க்ஸ்

லண்டன், *ஜூலை 25, 1867*

K. Marx, *Das Kapital. Kritik der politischen Oekonomie*, Erster Band, Hamburg, 1867இல் முதல் தடவையாகப் பிரசுரிக்கப்பட்டது

ஆங்கிலப் பதிப்பின்படி (லண்டன், 1887) அச்சிடப்பட்டது எங்கெல்சால் சரிபார்த்துப் பதிப்பிக்கப்பட்டது

---

* உன் சொந்தப் பாதையைப் பின்பற்று, பேசுவோர் பேசட்டும்! டான்டே, தெய்வீக நாடகம், பாவம் கழுவப்படும் இடம், பாடல் V (மாற்றியமைக்கப்பட்டது).—ப-ர்.

கா. மார்க்ஸ்

மூலதனம்
முதல் பாகம்

இரண்டாவது ஜெர்மன் பதிப்புக்குப் பின்னுரை

இரண்டாவது பதிப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி முதல் பதிப்பின் வாசகர்களுக்கு ஆரம்பத்தில் நான் தெரிவிக்க வேண்டும். புத்தகத்தின் முன்னிலும் தெளிவான ஒழுங்கமைப்பு உடனே பளிச்சிடுகிறது. கூடுதல் குறிப்புகள் எல்லா இடங்களிலும் இரண்டாவது பதிப்புக்கான குறிப்புகளாக குறிக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்டவை வாசகம் குறித்தான மிகமிக முக்கியமான அம்சங்களாகும்:

அத்தியாயம் I, பிரிவு 1ல், சகலவித பரிவர்த்தனை மதிப்பையும் தெரிவிக்கும் வழியான சமன்பாடுகளைப் பகுப்பாய்வதிலிருந்து மதிப்பைக் கண்டுபிடிப்பதானது முன்னிலும் அதிகமான விஞ்ஞான ரீதியான கண்டிப்புடன் செய்யப்பட்டிருக்கிறது. அதே போல மதிப்பின் சாரத்துக்கும், சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தை கொண்டு மதிப்பின் பருமனை நிர்ணயிப்பதற்கும் இடையிலான தொடர்பு— இது முதல் பதிப்பில் ஜாடையாகவே குறிக்கப்பட்டது— இப்போது வெளிப்படையாகவே வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. அத்தியாயம் I, பிரிவு 3 (மதிப்பின் வடிவம்) முழுவதும் திருத்தப்பட்டுள்ளது. இப்பணி வேறு எதனாலும் இல்லாவிட்டாலும் முதல் பதிப்பின் இரட்டை வெளியீட்டால் அவசியமாக்கப்பட்டது. அந்த இரட்டை வெளியீட்டுக்குக் காரணம் ஹனேவரில் உள்ள எனது நண்பர் டாக்டர் எல். குகெல்மன் என்பவரே என்பதை போகிறபோக்கில் நான் குறிப்பிடவேனுக. 1867 வசந்த காலத்தில் நான் அவரைப் பார்க்கச்

சென்றிருந்தேன்; அப்போது ஹாம்பர்க்கிலிருந்து முதல் அச்சு நகல்கள் வந்தடைந்தன; மதிப்பின் வடிவம் பற்றிய அனுபந்த ரீதியான, இன்னும் அதிகமாக கற்பிக்குந்தன்மையுள்ள விளக்கம் ஒன்று பெரும்பாலான வாசகர்களுக்குத் தேவை என அவர் எனக்கு உணர்த்தினர்.—முதல் அத்தியாயத்தின் கடைசிப் பிரிவான **பண்டங்களின் மகிமையும்...** பெரிதும் மாற்றப்பட்டுள்ளது. அத்தியாயம் III, பிரிவு 1 **(மதிப்பின் அளவை)** கவனமாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் முதல் பதிப்பில் இந்தப் பிரிவு அசட்டையாகக் கையாளப்பட்டிருக்கிறது. 1859 பெர்லின் பதிப்பான *Zur Kritik der Politischen Oekonomie*ல் ஏற்கெனவே தரப்பட்டுள்ள விளக்கத்தைப் பார்த்துக்கொள்ளுமாறு வாசகருக்குக் கூறப்பட்டுள்ளது. அத்தியாயம் VII, குறிப்பாகப் பகுதி 2 [ஆங்கிலப் பதிப்பில் அத்தியாயம் IX, பிரிவு 2] பெருமளவுக்குத் திரும்ப எழுதப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் வெறுமனே நடை சம்பந்தப்பட்டவையான, பகுதியான வாசக மாற்றங்கள் அனேத்தையும் பார்த்துக்கொண்டிருப்பது நேரத்தை வீணக்குவதாகவே இருக்கும். அவை புத்தகம் முழுதிலும் வருகின்றன. ஆயினும், ஜெர்மன் மூலத்தின் பல பகுதிகளுக்கு ஓரளவுக்கு முழுமையான மறு வளர்ப்பு தேவைப்படுகிறது; மற்றப் பகுதிகளுக்கு நடை சம்பந்தமாக ஓரளவு கடுமையான பதிப்பித்தல் தேவைப்படுகிறது; இன்னும் சில பகுதிகளில் எப்போதாவது வருகின்ற பிழைகளைப் பிரயாசைப்பட்டு நீக்க வேண்டியுள்ளது என்பதை, பாரிசில் வெளிவருகின்ற பிரெஞ்சு மொழிபெயர்ப்பைச் சரிபார்த்ததும் நான் இப்போது காண்கிறேன். ஆனால் அதற்கு நேரம் இருக்கவில்லை. ஏனெனில், புத்தகம் விற்றுத் தீர்ந்து விட்டது, இரண்டாவது பதிப்பை அச்சிடும் வேலை 1872 ஜனவரியில் தொடங்க இருக்கிறது என்று 1871 இலையுதிர்க் காலத்தில்தான், வேறு அவசர வேலையில் ஈடுபட்டிருக்கும் போது என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

மூலதனம் ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் விசாலமான வட்டாரங்களில் விரைவாக ஈட்டியுள்ள நன்மதிப்பே

எனது உழைப்புக்கு மிகச் சிறந்த வெகுமதியாகும். பொருளாதார விஷயங்களில் பூர்ஷ்வாக் கண்ணோட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு வியன்னு தொழிலதிபரான ஹெர் மேயர், பிராங்கோ-ஜெர்மன் யுத்தத்தின் போது[8] பிரசுரிக்கப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில்[9] வழக்கமாக ஜெர்மானியர்களின் பரம்பரைச் சொத்தாகக் கருதப்பட்டு வந்த தத்துவப் பேராற்றல் ஜெர்மனியில் கல்வி கற்றதாகக் கூறப்படும் வர்க்கங்கள் மத்தியில் அநேகமாக முற்றிலும் மறைந்து விட்டது; ஆனால் அதற்கு மாறுக ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் அந்த ஆற்றல் புத்துயிர் பெற்றுக் கொண்டாட்டம் போடுகிறது என்ற கருத்தைப் பொருத்தமாக எடுத்துரைத்தார்.

இப்போது வரை ஜெர்மனியில் அரசியல் பொருளாதாரம் ஒரு அந்நிய விஞ்ஞானமே. குஸ்டாவ் வான் கூலிஹ் தனது *Geschichtliche Darstellung des Handels, der Gewerbe usw.* என்னும் நூலில், குறிப்பாக 1830ல் பிரசுரிக்கப்பட்ட முதல் இரண்டு பாகங்களில், ஜெர்மனியில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சியையும், அதன் விளைவாக அந்நாட்டில் தற்காலப் பூர்ஷ்வா சமுதாயத்தின் வளர்ச்சியையும் தடுத்த வரலாற்றுச் சூழ்நிலைகளை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். இவ்வாறுக அரசியல் பொருளாதாரம் முளைப்பதற்கான மண்வாகு இல்லாமலிருந்தது. இந்த ''விஞ்ஞானம்'' இங்கிலாந்திலிருந்தும் பிரான்சிலிருந்தும் ஒரு ரெடிமேடு பொருளாக இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது; அதன் ஜெர்மன் பேராசிரியர்கள் பள்ளி மாணவர்களாகவே இருந்தனர். அவர்களது கரங்களில், ஒரு அயல் நாட்டு எதார்த்தத்தின் தத்துவத் தெரிவிப்பு சூத்திரங்களின் ஒரு தொகுப்பாக ஆக்கப்பட்டது. அவர்களைச் சுற்றியிருந்த குட்டி முதலாளித்துவ உலகத்தின் சொற்களில் அவர்களால் அதுவியாக்கியானம் செய்யப்பட்டது. எனவே தவறுகவியாக்கியானம் செய்யப்பட்டது. முழுதும் அடக்கிவிடலாகாத ஒரு உணர்வான விஞ்ஞான ரீதியான கையாலாகாத்தனத்தின் உணர்வும் எதார்த்தத்தில் தங்களுக்கு அந்நியமான ஒரு விஷயத்தைத் தொட வேண்டி இருக்கிறது என்

பதை விசனத்துடன் உணர்வதும், இலக்கிய மற்றும் வரலாற்றுப் புலமையின் பவனியைக் காட்டியோ, அல்லது பிதற்றல்களின் ஒரு கதம்பமான ''கேமரல்'' விஞ்ஞானங்கள் என அழைக்கப்படுபவற்றிடமிருந்து கடன் வாங்கப்பட்ட சம்பந்தா சம்பந்தமில்லாத விஷயங்களின் ஒரு கலவையைக் கொண்டோ அரைகுறையாகவே மூடி மறைக்கப்பட்டன. ஜெர்மன் அதிகார வர்க்கத்தில் நம்பிக்கையுடன் சேர முனைகின்ற அபேட்சகர்கள் இந்தக் ''கேமரல்'' விஞ்ஞானிகளின் சோதனைக்களம் வழியே தேறிச் செல்ல வேண்டியுள்ளது.

1848 முதற்கொண்டு முதலாளித்துவ உற்பத்தி ஜெர்மனியில் துரிதமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. தற்போது அது ஹேஷ்ய வாணிபம், மோசடித் தொழில் இவற்றின் முழுமலர்ச்சிக் கட்டத்தில் உள்ளது. ஆனால் நமது தொழில்முறைப் பொருளாதார அறிஞர்களுக்கு இன்னமும் விதி சகாயமற்றதாகவே உள்ளது. நேர்மையான விதத்தில் அரசியல் பொருளாதாரத்தை அவர்கள் கையாள முடிந்த நேரத்தில், தற்காலப் பொருளாதார நிலைமைகள் வாஸ்தவமாகவே ஜெர்மனியில் நிலவவில்லை. இந்த நிலைமைகள் நிலவி வந்த போதே, பூர்ஷ்வா அறிவு மண்டலத்தின் எல்லைகளுக்குள் அவை எதார்த்தப் பூர்வமாகவும் பாரபட்சமின்றியும் ஆராய்ச்சி செய்யப்படுவதற்கு இனியும் இடமளிக்காத சூழ்நிலைகளில் நிலவி வந்தன. அரசியல் பொருளாதாரம் அந்த அறிவு மண்டலத்திற்குள் நீடித்திருக்கிறது என்ற அளவில், அதாவது முதலாளித்துவ அமைப்பு, சமூக உற்பத்தியின் பரிணமத்தில் இறுதி வந்து போகின்ற ஒரு வரலாற்றுக் கட்டமாகக் கருதப்படுவதற்குப் பதிலாக, சமூக உற்பத்தியின் சம்பூரண வடிவமாகக் கருதப்படுகிறது என்ற அளவில், வர்க்கப் போராட்டம் இலைமறை காயாக இருக்கும் வரைதான், அல்லது தனிமைப்பட்ட, எப்போதேனும் எங்கேனும் நிகழ்கின்ற நிகழ்வுகளில் மட்டுமே தன்னைக் காண்பித்துக் கொள்ளும் வரைதான் அரசியல் பொருளாதாரம் ஒரு விஞ்ஞானமாக நீடித்திருக்க முடியும்.

நாம் இங்கிலாந்தை எடுத்துக்கொள்வோமாக. அதன்

மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரம் வர்க்கப் போராட்டம் இன்னும் வளர்ச்சியடையாதிருந்த காலத்துக்குச் சொந்தமாகும். அதன் கடைசிப் பெரும் பிரதிநிதியான ரிக்கார்டோ, முடிவில் வர்க்க நலன்களின், கூலி-லாபம் இவற்றின், லாபம்-வாடகை இவற்றின் விரோதத்தை இயற்கையின் ஒரு சமூக விதியென வெகுளித்தனமாக எடுத்துக் கொண்டு, இந்த விரோதத்தைத் தனது ஆராய்ச்சிகளின் துவக்கப் புள்ளியாக உணர்வு பூர்வமாய் ஆக்கிக்கொள்கிறார். ஆனால் இந்தத் துவக்கத்துக்கு முன்னரே பூர்ஷ்வாப் பொருளாதார விஞ்ஞானம் இனிமேல் தாண்டிச் செல்ல முடியாத எல்லைகளை அடைந்து விட்டிருந்தது. ஏற்கெனவே ரிக்கார்டோவின் வாழ்க்கைக் காலத்தில் அவருக்கு எதிர்ப்பாக ஸிஸ்மாண்டியின் உருவத்தில் அது விமர்சனத்தைச் சந்தித்தது.*

அடுத்து வந்த 1820 முதல் 1830 வரையிலான காலம் இங்கிலாந்தில் அரசியல் பொருளாதாரத் துறையில் விஞ்ஞானப் பூர்வ நடவடிக்கைக்குக் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. அது, ரிக்கார்டோவின் தத்துவம் பழைய கருத்துப் பிரிவுடன் போட்டியிடும் காலமாகவும் அதே அளவுக்கு அத்தத்துவத்தைக் கொச்சைப்படுத்துவது, விஸ்தரிப்பது இவற்றின் காலமாகவும் இருந்தது. அற்புதமான போட்டிப் பந்தயங்கள் நடந்தன. அப்போது என்ன செய்யப்பட்டது என்பது பொதுவாகக் கண்டத்துக்குச் சொற்பமாகவே தெரிந்துள்ளது, ஏனெனில் இச்சர்ச்சை விமர்சன ஏடுகளில் கட்டுரைகள் மூலமும் எப்போதேனும் இலக்கியத்தின் மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் பெரும்பகுதி சிதறலாகவே வெளியிடப்பட்டது. இந்தச் சர்ச்சையின் காழ்ப்புணர்வற்ற தன்மைக்கு—ரிக்கார்டோவின் தத்துவம் ஏற்கெனவே, விதிவிலக்கான இடங்களில் பூர்ஷ்வாப் பொருளாதாரத்தின் மீதான தாக்குதலுக்கு ஒரு ஆயுதமாகப் பயன்படுகிறது என்ற போதிலும்—அந்த நேரத்தின் சூழ்நிலைகளே விளக்கமாகின்றன. ஒருபுறம், தற்காலத் தொழிலே குழந்தைப்

* எனது நூலான *Zur Kritik etc.*, பக்கம் 39 பார்க்க.

பருவத்திலிருந்து அப்போதுதான் வெளிப்பட்டுக்கொண்டிருந்தது; 1825ன் நெருக்கடியுடன் அதன் தற்கால வாழ்க்கையில் முறையான சுழற்சிகள் ஆரம்பமாகின்றன என்ற உண்மையால் இது ருசுப்பிக்கப்படுகிறது. மறுபுறம், ஒரு பக்கத்தில் புனிதக் கூட்டணியைச்[10] சுற்றித் திரட்டப்பட்ட அரசாங்கங்கள், நிலப்பிரபுத்துவ உயர்குடியாளர் ஆகியோருக்கும் மறு பக்கத்தில் முதலாளி வர்க்கத்தின் தலைமையிலான மக்கள் திரள்களுக்கும் இடையிலான சச்சரவால் அரசியல் ரீதியிலும், தொழில் மூலதனத்துக்கும் உயர்குடி நிலவுடமைக்கும் இடையிலான சண்டையால் பொருளாதார ரீதியிலும்—இச்சண்டை பிரான்சில் சிறு நிலவுடமைக்கும் பெரு நிலவுடமைக்கும் இடையிலான எதிர்ப்பால் மறைக்கப்பட்டது; இச்சண்டை இங்கிலாந்தில் தானியச் சட்டங்களுக்குப்[11] பின்னர் வெளிப்படையாக வெடித்தது—மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. இந்த நேரத்தில் இங்கிலாந்திலிருந்த அரசியல் பொருளாதார இலக்கியம், டாக்டர் கெனேயின் மரணத்துக்குப் பின்னர் பிரான்சில் நடந்த புயலொத்த முன்னேக்கிய இயக்கத்தை நினைவுக்குக் கொணர்கிறது, ஆனால் செயின்ட் மார்ட்டினில் கோடைக் காலம் வசந்தத்தை நினைவுபடுத்துவது போலவே. 1830ம் ஆண்டு முடிவான நெருக்கடியையும் அழைத்துக் கொண்டு வந்தது.

பிரான்சிலும் இங்கிலாந்திலும் முதலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றிருந்தது. அது முதல், வர்க்கப் போராட்டம் நடைமுறை ரீதியிலும் அதேபோல் தத்துவ ரீதியிலும் மேலும் மேலும் ஒளிவுமறைவற்ற, அச்சுறுத்தும் தன்மையுள்ள வடிவங்களை மேற்கொண்டது. விஞ்ஞான ரீதியான பூர்ஷ்வாப் பொருளாதாரத்தின் சாவு மணியை அது ஒலித்தது. அது முதல், இந்தத் தேற்றம் உண்மையானதா அல்லது அந்தத் தேற்றம் உண்மையானதா என்பது இனியும் கேள்வியாக இருக்கவில்லை; ஆனால் அது மூலதனத்துக்கு உபயோகமுள்ளதா அல்லது ஊறுசெய்வதா, பொருத்தமானதா அல்லது பொருத்தமற்றதா, அரசியல்

ரீதியில் அபாயகரமானதா இல்லையா என்பதே கேள்வியாக இருந்தது. பாரபட்சமற்ற ஆராய்ச்சியாளர்களின் இடத்தில் கூலிக்கமர்த்தப்பட்ட பரிசுப் போட்டியாளர்கள் இருந்தனர்; அசல் விஞ்ஞான ஆராய்ச்சியின் இடத்தில் நெறிபிறழ் நிலையும் சாக்குபோக்குவாதிகளின் தீய நோக்கமும் இருந்தன. இருந்தும் தொழிலதிபர்களான காப்டென், பிரைட் ஆகியோர் தலைமையில் தானியச் சட்ட எதிர்ப்புக் கழகம் எந்த துண்டுப் பிரசுரங்களின் வெள்ளத்தில் உலகை ஆழ்த்தியதோ, அந்தக் கருத்துத் திணிப்புப் பிரசுரங்களுங்கூட, நிலம் படைத்த உயர்குடியினருக்கு எதிரான அவற்றின் சர்ச்சையின் காரணத்தால் விஞ்ஞான ரீதியாக இல்லாவிட்டாலும் வரலாற்று ரீதியாக சிரத்தைக்குரியவையாக உள்ளன. ஆனால் அதன் பின் சர் ராபர்ட் பீல் துவக்கி வைத்த சுதந்திரத் தொழில் முறைச் சட்ட நிறைவேற்றம் கொச்சைப் பொருளாதாரத்திடமிருந்து அதன் கடைசிக் கொடுக்கான இதைப் பறித்துக்கொண்டிருக்கிறது.

1848—1849ன் கண்டம் தழுவிய புரட்சி இங்கிலாந்திலும் தன் பிரதிபலிப்பைக் கொண்டிருந்தது. இன்னமும் ஓரளவு விஞ்ஞான ரீதியான அந்தஸ்துக்கு உரிமை கொண்டாடியவர்களும், வெறுமனே ஆளும் வர்க்கங்களின் குதர்க்கவாதிகளாகவும் துதிபாடுவோராகவும் இருப்பதை விட மேலான ஒன்றுக இருக்க அபிலாஷைப் பட்டவர்களுமான நபர்கள், மூலதனத்தின் அரசியல் பொருளாதாரத்தை இனி மேலும் புறக்கணிக்கப்படலாகாத பாட்டாளி வர்க்கத்தின் பாத்தியதைகளுடன் ஒத்திசைவானதாக்க முயன்றனர். ஒரு ஆழமற்ற ஒட்டுப்போடும் கொள்கை பிறந்தது இதிலிருந்தே. ஜான் ஸ்டுவர்ட் மில் இக்கொள்கையின் மிகச் சிறந்த பிரதிநிதியாவார். அது பூர்ஷ்வாப் பொருளாதாரத்தின் ஒரு திவாலாப் பிரகடனமாகும். இந்நிகழ்ச்சி பற்றி மாபெரும் ருஷ்யக் கல்வியாளரும் விமர்சகருமான என். செர்னிஷேவ்ஸ்கி மில்லின் கருத்துப்படி அரசியல் பொருளாதாரத்தின் சுருக்கமான வர்ணனைகள் என்னும் தனது நூலில் ஒரு நிபுணத்துவம் வாய்ந்த உள்ளத்தின் ஒளியைப் பாய்ச்சியுள்ளார்.

ஆகவே, பிரான்சிலும் இங்கிலாந்திலும் முதலாளித்துவ

உற்பத்தி முறையின் பகைமைக் குணம் வர்க்கங்களின் பயங்கரமான சச்சரவில் ஏற்கெனவே தன்னைக் காட்டிக்கொண்டதற்குப் பின்னர், அவ்வுற்பத்தி முறை ஜெர்மனியில் முதிர்ச்சியடைந்தது. மேலும், இதற்கிடையில் ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் ஜெர்மன் முதலாளி வர்க்கத்தை விட வெகு அதிகம் தெளிவான ஒரு வர்க்க உணர்வை ஈட்டியிருந்தது. இவ்வாறு ஜெர்மனியில் ஒரு பூர்ஷ்வா அரசியல் பொருளாதார விஞ்ஞானம் கடைசியில் சாத்தியமெனத் தோன்றிய அக்கணமே, அது எதார்த்தத்தில் மீண்டும் சாத்தியமற்றதாகி இருந்தது.

இந்தச் சூழ்நிலைகளின் கீழ் அதன் பேராசிரியர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து நின்றனர். ஒரு குழு, முன் யோசனையும் நடைமுறைக் காரிய நோக்கும் கொண்ட கூட்டம், கொச்சைப் பொருளாதாரத்தின் சாக்குப் போக்குவாதிகளின் மிக மேலெழுந்த வாரியான, எனவே மிகப் பொருத்தமான பிரதிநிதியான பாஸ்டியாவின் பதாகையின் கீழ் மந்தை சேர்ந்தது; இன்னொரு குழு, தங்கள் விஞ்ஞானத்தின் பேராசிரியக் கண்ணியம் குறித்து கர்வமிக்கது, ஒத்துப்போக முடியாதவற்றை ஒத்துப் போகச் செய்யும் முயற்சியில் ஜான் ஸ்டுவர்ட் மில்லை பின்பற்றியது. பூர்ஷ்வாப் பொருளாதாரத்தின் ஆதர்ச காலத்தில் போலவே, அதன் வீழ்ச்சிக் காலத்திலும் ஜெர்மானியர்கள் வெறும் பள்ளி மாணவர்களாகவும் காப்பி அடிப் போராகவும் பின் செல்வோராகவும், பெரும் அந்நிய மொத்த வியாபார அமைப்பிற்குச் சேவை செய்யும் அற்பசில்லறை வியாபாரிகளாகவும் அங்காடி வியாபாரிகளாகவும் இருந்தனர்.

ஆகவே, ஜெர்மன் சமுதாயத்தின் விசேஷமான வரலாற்று வளர்ச்சி அந்த நாட்டில் பூர்ஷ்வாப் பொளாதாரத்தில் சுயமான வேலை அனைத்தையும் தடுத்து விடுகிறது, ஆனால் அந்தப் பொருளாதாரத்தின் விமர்சனத்தைத் தடுப்பதில்லை. இப்படிப்பட்ட விமர்சனம் ஒரு வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதென்ற அளவில், முதலாளித்துவ உற்பத்தி முறையைத் தூக்கியெறிவதும், எல்லா வர்க்கங்களையுமே இறுதியில் இல்லாமல் செய்வதும் வரலாற்

றில் எந்த வர்க்கத்தின் பணியோ, அந்த வர்க்கத்தையே—பாட்டாளி வர்க்கத்தையே—அது பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

ஜெர்மன் முதலாளி வர்க்கத்தின் கற்றோரும் கல்லாதோருமான பிரதிநிதிகள், எனது முந்தைய எழுத்துக்களின் விஷயத்தில் எப்படியோ மௌனக் கொலை புரிய வழி கண்டது போலவே, மூலதனத்தையும் மௌனத்தால் கொன்று விட முதலில் முயன்றனர். இந்தத் தந்திரங்கள் இனியும் காலத்தின் நிலைமைகளுக்குப் பொருந்தவில்லை என்பதை அவர்கள் கண்டு கொண்டவுடனேயே, எனது புத்தகத்தை விமர்சிக்கும் பாசாங்கில் ''பூர்ஷ்வா உள்ளத்தைச் சாந்தப்படுத்துவதற்கான'' நியமங்களை எழுதினர். ஆனால், அவர்கள் தொழிலாளர்களின் பத்திரிகை உலகில்—உதாரணமாக *Volksstaat*இல்[12] ஜோசப் டிட்ஸ்கெனின் கட்டுரைகளைப் பார்க்கவும்—தங்களை விடவும் பலமான எதிராளிகளை (இவர்களுக்கு இந்த நாள் வரைக்கும் அவர்கள் பதில் சொன்னார்களில்லை) கண்டனர்.*

* ஜெர்மன் கொச்சைப் பொருளாதாரத்தின் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உளறுவாயர்கள் எனது புத்தகத்தின் நடையுடன் மோத வந்தனர். மூலதனத்தின் இலக்கியக் குறைபாடுகளை என்னை விட அழுத்தமாக வேறு யாரும் உணர முடியாது. இருந்தும், இந்த கனவான்களுடையவும் அவர்களது பொதுஜனங்களுடையவும் அனுகூலத்துக்காகவும் அனுபவிப்புக்காகவும், இது தொடர்பாக ஒரு ஆங்கில அறிவிப்பையும் ஒரு ருஷ்ய அறிவிப்பையும் மேற்கோள் காட்டுவேன். எப்போதுமே எனது கருத்துக்கள் பால் பகைமை பாராட்டும் *Saturday Review*[13] முதல் பதிப்பு பற்றிய அதன் அறிவிப்பில் கூறியது: ''விஷயத்தை முன்வைக்கும் விதம் மிக வறண்ட பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஒரு குறிப்பிட்ட தனி வசிகரத்தை (charm) சேர்க்கிறது''. "С.-П. Ведомости" (செயின்ட் பிட்டர்ஸ்பர்க் சஞ்சிகை)[14] *1872* ஏப்ரல் *8 (20)* இதழில் கூறுகிறது: ''விஷயத்தை முன்வைக்கும் விதம், ஓரிரு விதிவிலக்கான விசேஷப் பகுதிகளைத் தவிர்த்து, பொதுவான வாசகர் புரிந்து கொள்ளத் தக்கதாகவும், தெளிவாகவும், விஷயத்தின் விஞ்ஞான ரீதியான சிக்கல் தன்மைக்கு மாறுக வழக்கத்துக்கு மாறான உயிரோட்டமுள்ளதாகவும் இருப்பதால்

மூலதனத்தின் ஒரு அருமையான ருஷ்ய மொழிபெயர்ப்பு 1872 வசந்தத்தில் வெளிவந்தது. 3,000 பிரதிகள் கொண்ட பதிப்பு ஏற்கெனவே கிட்டத்தட்ட தீர்ந்து விட்டது. 1871 லேயே, கீவ் பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியரான என். ஸீபர் (Зибер) "Теория ценности и капитала Д. Рикардо" (மதிப்பு மற்றும் மூலதனம் பற்றிய டேவிட் ரிக்கார்டோவின் தத்துவம்) என்ற தனது நூலில், மதிப்பு, பணம், மூலதனம் இவை பற்றிய என் தத்துவம் அதன் அடிப்படை அம்சங்களில் ஸ்மித், ரிக்கார்டோ ஆகியவர்களின் போதனையின் ஒரு அவசியமான பின்விளைவாகுமென்று குறிப்பிட்டார். இந்த அற்புதமான நூலைப் படிப்பதில் மேற்கு ஐரோப்பியரைப் பிரமிக்கச் செய்வது, சுத்தமான தத்துவ நிலையை இந்நூலாசிரியர் முரணற்ற விதத்திலும் உறுதியாகவும் பற்றிக் கொண்டிருப்பதாகும்.

மூலதனம் ஈடுபடுத்தப்பட்டுள்ள முறை அதிகம் புரிந்து கொள்ளப்படவில்லையென்பதை அது பற்றி உருவாக்கப்பட்டுள்ள ஒன்றுக்கொன்று முரணான பல்வேறு கருத்தமைவுகள் காட்டுகின்றன.

இவ்வாறுக, ஒருபுறம், நான் பொருளாதார இயலை மானசீகமாக நடத்துகிறேன் என்றும், மறுபுறம்—கற்பனை செய்து பாருங்கள்!—வருங்காலத்தின் உணவு விடுதிகளுக்கான சமையல் முறைகளை (கோம்டிஸ்ட் சமையல் முறைகள்?) எழுதுவதற்குப் பதிலாக வெறுமனே உண்மை விவரங்களை விமர்சன ரீதியில் பகுத்தாய்வதுடன் என்னை நானே கட்டுப்படுத்திக்கொள்கிறேன் என்றும் பாரிஸ் (*Revue Positiviste*)[15] என்னைக் கடிந்துகொள்கிறது. மானசிகவியல் என்ற கண்டனத்துக்குப் பதில் சொல்லும் விதத்தில் பேராசிரியர் ஸீபர் இவ்வாறு சொல்கிறார்: "மார்க்சின்

தனிச்சிறப்புடைத்தாகிறது. இவ்விஷயத்தில், சாதாரண மானிடர்களின் மண்டைகளைப் பிளக்கின்ற அளவுக்கு வறண்டதும் விளங்காததுமான பாஷையில் தங்கள் புத்தகங்களை எழுதுகின்ற... பெரும்பாலான ஜெர்மன் கல்விமான்களின் சாயல்... இந்நூலாசிரியரிடம் எவ்விதத்தும் காணேம்."

முறை வாஸ்தவமான தத்துவத்தைக் கையாளுகிறது என்ற அளவில், அது ஆங்கிலேயக் கருத்துப் பிரிவு முழுமையின்—இக்கருத்துப் பிரிவின் தவறுதல்களும் நல்லியல்புகளும் மிகச் சிறந்த தத்துவப் பொருளாதார அறிஞர்களுக்குப் பொதுவானவையாகும்—காரணகாரிய ஆய்வு முறையாகும்.''[16] எம். பிளாக்—*Les Théoriciens du Socialisme en Allemagne. Extrait du "Journal de Économistes", juillet et août 1872*—எனது முறையில் பகுத்தாயும் தன்மையுள்ளது என்பதைக் கண்டு பிடித்துக் கூறுகிறார்: ''இந்தப் படைப்பின் மூலம் கனவான் மார்க்ஸ் தான் மிகவும் மகத்தான பகுப்பாய்வு நபர்களில் ஒருவர் என்பதை நிரூபிக்கிறார்.'' ஜெர்மன் விமர்சன ஏடுகள் ''ஹெகலிய குதர்க்கவாத முறை'' குறித்து ஊளையிடுகின்றன என்பது உண்மையே. செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கைச் சேர்ந்த "Вѣстникъ Европы" (ஐரோப்பியத்தூதுவன்)[17] மூலதனத்தின் முறையைப் பிரத்தியேகமாக எடுத்தாய்கின்ற ஒரு கட்டுரையில் (மே மாதம், 1872, பக்கங்கள் 427—436), எனது ஆராய்ச்சி முறை கண்டிப்பாக எதார்த்தப் பூர்வமாக இருப்பதாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக எனது முன்வைக்கும் முறை ஜெர்மன்-இயக்கவியல் ரீதியாக இருப்பதாகவும் கண்டுபிடிக்கிறது. ஆசிரியர்* கூறுகிறார்: ''முதல் பார்வையில், விஷயத்தை முன்வைக்கும் வெளிவடிவத்தின் அடிப்படையில் பார்த்தால் மார்க்ஸ் கருத்தியல் தத்துவஞானிகளிலேயே—எப்போதுமே கருத்தியல் என்ற இச்சொல்லின் 'ஜெர்மன்' அர்த்தத்தில், அதாவது கெட்ட அர்த்தத்தில்—மிகவும் கருத்தியலான தத்துவஞானியாவார். ஆனால் உண்மையிலேயே பொருளாதார விமர்சன வேலையில் தனது முன்னேடிகள் அனைவரையும் விட அவர் எல்லையற்ற அளவுக்கு அதிகமான எதார்த்தவாதியாவார்.... அவரை எந்த அர்த்தத்திலும் கருத்தியல்வாதி என அழைக்க முடியாது.'' ருஷ்ய மூலத்தை எட்ட வழியில்லாத என் வாசகர்கள் பலருக்குச் சுவாரஸ்யம் அளிக்கக் கூடியதான அவரது சொந்த விமர்சனத்திலிருந்தே எடுக்கப்பட்ட சில பகுதிகளின் துணை

* இ. இ. கௌஃப்மன்,—ப-ர்.

கொண்டு மேற்கண்டதை எழுதியவருக்குப் பதிலளிப்பதே சாலச் சிறந்ததாகும்.

1859ல் பெர்லினில் பிரசுரிக்கப்பட்ட எனது *Zur Kritik der Politischen Oekonomie*க்கான—முன்னுரையிலிருந்து பக்கங்கள் IV—VII* ஒரு மேற்கோளை—அங்கே நான் எனது முறையின் பொருள்முதல்வாத அடிப்படை குறித்து விவாதிக்கிறேன்—காட்டிய பின்னர் இந்த எழுத்தாளர் மேலும் சொல்கிறார்: ''மார்க்சுக்கு முக்கியத்துவமுள்ள ஒரு விஷயம், எந்நிகழ்வுகளின் ஆராய்ச்சியுடன் அவர் சம்பந்தப்பட்டுள்ளாரோ அந்நிகழ்வுகளின் விதியைக் கண்டுபிடிப்பதாகும்; இந்நிகழ்வுகள் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலப் பகுதிக்குள் ஒரு திட்டவட்டமான வடிவத்தையும் பரஸ்பரத் தொடர்பையும் பெற்றுள்ளன என்ற அளவில், அவற்றை நிர்வகிக்கின்ற அந்த விதி மட்டுமல்ல அவருக்கு முக்கியத்துவமுடையது. அவற்றின் மாறுபடுதலைப் பற்றிய, அவற்றின் வளர்ச்சியைப் பற்றிய, அதாவது, ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கு, தொடர்புகளின் ஒரு சரத்திலிருந்து வேறொரு சரத்துக்கு அவை மாறிச் செல்வதைப் பற்றிய விதி அவருக்கு இன்னும் அதிகம் முக்கியத்துவமுடையதாகும். இந்த விதி கண்டுபிடிக்கப்பட்ட உடனேயே, அது சமூக வாழ்க்கையில் எவ்விளைவுகளில் தன்னைக் காண்பித்துக்கொள்கிறதோ அவ்விளைவுகளை அவர் நுணுக்கமாக ஆராய்கிறார்.... இதன் விளைவாக மார்க்ஸ் ஒரு விஷயம் பற்றி மட்டுமே அலட்டிக் கொள்கிறார்; சமுதாய நிலைமைகளின் அடுத்தடுத்த நிர்ணயமான அமைப்புகளின் அவசியத்தை வலைந்து கொடுக்காத விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் ருசுப்பிப்பதும் அடிப்படையான துவக்கப் புள்ளிகளாக அவருக்குப் பயன்படுகின்ற உண்மைகளை முடிந்த அளவுக்குப் பாரபட்சமின்றி நிலைநாட்டுவதுமே அவ்விஷயம். தற்போதைய அமைப்பின் அவசியம், இவ்வமைப்பு தவிர்க்க முடியாமலே கடந்தடைய வேண்டியதான இன்னொரு அமைப்பின் அவசியம் ஆகிய இரு அவசியங்களையுமே அவர் ஒரே நேரத்தில் நிரூபித்

* இதே பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 204—212 பார்க்க.—ப-ர்.

தாலே இதற்கு முற்றிலும் போதுமானது; மனிதர்கள் அதை நம்பினாலும் நம்பாவிட்டாலும், உணர்ந்திருந்தாலும் உணராதிருந்தாலும் இது இப்படித்தான். மார்க்ஸ், மனித விருப்பத்திலிருந்தும் தன்னுணர்விலிருந்தும் மதிநுட்பத்திலிருந்தும் சுதந்திரமானவை என்பது மட்டுமல்லாமல், ஓரளவு மாறுகவே, அந்த விருப்பத்தையும் தன்னுணர்வையும் மதிநுட்பத்தையும் நிர்ணயிப்பவையுமான விதிகளால் ஆளப்படும் இயற்கை வரலாற்றின் ஒரு செய்முறையாக சமுதாயத்தின் இயக்கத்தைக் கருதுகிறார்.... நாகரிகத்தின் வரலாற்றில் உணர்வு அம்சம் இவ்வளவு கீழான தொரு பாத்திரத்தை வகிக்கிறதென்றால், நாகரிகத்தைக் கருப்பொருளாகக் கொண்ட ஒரு விமர்சன ஆராய்ச்சி, தன்னுணர்வின் வடிவமெதையும் அல்லது விளைவெதையும் தனது அடிப்படையாகக் கொண்டிருப்பது கடைப்பட்சமாகவே இருக்க முடியும் என்பது தானே தெளிவாகும். இவ்வாறு சொல்வதன் பொருள், அதன் துவக்கப் புள்ளியாகப் பயன்படக் கூடியது கருத்தல்ல, பொருளியல் நிகழ்வே என்பதாகும். இப்படிப்பட்டதொரு ஆராய்ச்சி, ஒரு நிகழ்ச்சியைக் கருத்துக்களுடனன்றி, இன்னொரு நிகழ்ச்சியுடனேயே ஒத்திட்டும், ஒப்பிட்டும் பார்ப்பதுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும். முடிந்த அளவுக்கு சரிநுட்பமாக இரு நிகழ்ச்சிகளுமே ஆராயப்படுவதும், ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தினால், ஒரு பரிணமத்தின் வெவ்வேறு கட்டங்களாக அவை வாஸ்தவத்திலேயே அமைவதும் இவ்வாராய்ச்சிக்கு முக்கியத்துவமுள்ள ஒரு விஷயமாகும்; ஆனால் அனைத்திலும் மிக முக்கியமானது, இப்படியொரு பரிணமத்தின் வெவ்வேறு கட்டங்கள் காண்பிக்கப் பெறுகின்ற அடுத்தடுத்த நிகழ்ச்சிகளின் வரிசையைக் கிரமங்கள் மற்றும் சங்கிலித் தொடர்களைக் கறாராகப் பகுத்தாய்வதாகும்.... ஆனால், பொருளாதார வாழ்க்கையின் பொது விதிகள் நிகழ்காலத்துக்குப் பிரயோகிக்கப்பட்டாலும் சரி, அல்லது இறந்த காலத்துக்குப் பிரயோகிக்கப்பட்டாலும் சரி, ஒன்றே எனக் கூறப்படும். இதை மார்க்ஸ் நேரடியாக மறுக்கிறார். அவரது கூற்றுப்படி இப்படிப்பட்ட சூட்சும விதிகள் கிடையா...

மாறுக, அவரது அபிப்பிராயத்தில் ஒவ்வொரு வரலாற்றுக் காலப்பகுதியும் தன் சொந்த விதிகளைப் பெற்றிருக்கிறது.... சமுதாயம் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் வாழ்ந்து தீர்த்து விட்டு, ஒரு குறிப்பிட்ட கட்டத்திலிருந்து இன்னெரு குறிப்பிட்ட கட்டத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் போதே, அது மற்ற விதிகளுக்கும் கீழ்ப்பட்டதாக இருக்கத் தொடங்குகிறது. சுருங்கச் சொல்லின் மற்ற ஜீவ சாஸ்திரக் கிளைகளில் காணப்படும் பரிணமத்தின் வரலாற்றுக்கு இணையான ஒரு நிகழ்வு முறையைப் பொருளாதார வாழ்க்கை நமக்கு வழங்குகிறது.... பழைய பொருளாதார அறிஞர்கள் பொருளாதார விதிகளை பௌதிகம், ரசாயனம் இவற்றின் விதிகளுக்கொப்பானவையாகக் காட்டியிருப்பது பொருளாதார விதிகளின் தன்மையைத் தவருகப் புரிந்துகொள்வதாகும்.... தாவரங்கள் அல்லது மிருகங்கள் எந்த அளவுக்கு அடிப்படையிலேயே தங்கள் மத்தியில் வேறுபடுகின்றனவோ அந்த அளவுக்கு அடிப்படையிலேயே சமுதாய அங்க ஜீவிகன் தங்கள் மத்தியில் வேறுபடுகின்றன என்பதை நிகழ்வுகளின் இன்னும் செம்மையான பகுப்பாய்வு காட்டுகிறது.... அது மட்டுமல்ல, ஒரு முழுமை என்ற விதத்தில் அந்த அங்க ஜீவிகளின் வேறுபடும் வடிவமைப்பு, அவற்றின் தனித் தனி அங்கங்களின் மாறுபாடுகள், அந்த அங்கங்கள் செயல்படுகின்ற வெவ்வேருன நிலைமைகள் முதலானவற்றின் விளைவாக ஒரே நிகழ்வு முற்றிலும் வெவ்வேருன விதிகளுக்கு ஆட்பட்டு நிற்கிறது. உதாரணமாக, ஜனத்தொகை பற்றிய விதி எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் ஒன்றே என்பதை மார்க்ஸ் மறுக்கிறூர். மாறுக, ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் தன் சொந்த ஜனத்தொகை விதியைப் பெற்றிருக்கிறது என அவர் உரைத்திடுகின்றூர்.... உற்பத்தியாற்றலின் வேறுபடுகின்ற வளர்ச்சி மட்டத்துக்கு ஏற்பச் சமூக நிலைமைகள், அவற்றை ஆளுகின்ற விதிகள் ஆகியவையும் வேறுபடுகின்றன. இந்த நோக்கு நிலையிலிருந்து மூலதனத்தின் ஆட்சியால் நிறுவப்பட்ட பொருளாதார அமைப்பைப் புரிந்துகொள்வது, விளக்குவது என்ற பணியை மார்க்ஸ் மேற்கொள்கையில், பொருளாதார வாழ்க்கை பற்

றிய துல்லியமான ஆராய்ச்சி ஒவ்வொன்றுக்கும் இருக்க வேண்டிய நோக்கத்தையே கறாராக விஞ்ஞான ரீதியான விதத்தில் வகுத்துரைக்கிறார், அவ்வளவே.... ஒரு குறிப்பிட்ட சமூக அங்க ஜீவியின் பிறப்பையும் வாழ்வையும் வளர்ச்சியையும் இறப்பையும், அதன் இடத்துக்கு அதனிலும் உயர்ந்த இன்னொரு அங்க ஜீவி வருவதையும் ஒழுங்கியக்குகின்ற விசேஷ விதிகளை வெளிப்படுத்துவதிலேயே இப்படிப்பட்டதொரு ஆராய்ச்சியின் விஞ்ஞான மதிப்பு அடங்கியுள்ளது. இந்த மதிப்பையே உண்மையில் மார்க்சின் புத்தகம் பெற்றுள்ளது.''

வாஸ்தவமாகவே எனது முறையென்று இந்த எழுத்தாளர் எதை எடுத்துக்கொள்கிறாரோ, அதை அவர் இவ்வாறு பளிச்சென்ற விதத்திலும் அதை நான் பிரயோகித்திருப்பதைப் பொறுத்த வரையில் தாராளமான விதத்திலும் சித்தரிக்கையில், இயக்க இயல் முறையை அல்லாமல் வேறு எதை அவர் சித்தரிக்கிறார்?

முன்வைக்கும் முறை ஆராய்ச்சி முறையிலிருந்து வடிவத்தில் வேறுபட்டே தீரும் என்பது உண்மையே. ஆராய்ச்சி முறையானது விஷயாதாரத்தை விவரமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அதன் வெவ்வேறு வளர்ச்சி வடிவங்களைப் பகுத்தாயவும் அவற்றின் உள்தொடர்பைக் கண்டறியவும் வேண்டியிருக்கிறது. இந்த வேலை செய்யப்பட்ட பின்னர் தான், வாஸ்தவமான இயக்கத்தைத் தக்க விதத்தில் விவரிக்க முடியும். இது வெற்றிகரமாகச் செய்யப்பட்டால், கருப்பொருளின் ஜீவன் ஒரு கண்ணாடியில் பிரதிபலிப்பது போல ஆதர்சமாகப் பிரதிபலிக்குமாறு செய்யப்பட்டால், நம் முன்னர் இருந்தது வெறுமனே ஊக ரீதியான பொருள் விளக்கந்தானே எனத் தோன்றக் கூடும்.

எனது இயக்க இயல் முறை ஹெகலிய முறையிலிருந்து வேறுபட்டது மட்டுமல்ல, அதற்கு நேர் எதிரானதுமாகும். ஹெகலுக்கு, மனித மூளையின் உயிர்ச் செய்முறையானது, அதாவது சிந்தனைச் செய்முறையானது—இதை அவர் ''கருத்து'' என்ற பெயரின் கீழ் ஒரு சுதந்திரமான விஷயமாகக் கூட மாற்றி விடுகிறார்—எதார்த்த உலகத்தின்

படைப்பாளி ஆகும்; எதார்த்த உலகம் ''கருத்தின்'' வெளிப் புறமான, புலனுகக் கூடிய வடிவமேயாகும் மாருக எனக்கு, கருத்தியல் உலகம் என்பது மனித உள்ளத்தால் பிரதி பலிக்கப்பட்டுச் சிந்தனை வடிவங்களாக மாற்றப்படுகின்ற பொருளியல் உலகமேயல்லாமல் வேறில்லே.

ஹெகலிய இயக்க இயலின் மறைபொருள்வாத அம்சத் தைச் சுமார் 30 ஆண்டுகள் முன்னரே, அது இன்னமும் ஒரு நாகரிக மோஸ்தராக இருந்து வந்த காலத்திலேயே, நான் விமர்சித்தேன். ஆனல் மூலதனத்தின் முதல் பாகத்துக்கான வேலேயில் நான் ஈடுபட்டிருக்கையிலேயே, இப்போது பண் பாடு மிக்க ஜெர்மனியில் பெரிதாகப் பீற்றிக்கொள்கின்ற சிடுசிடுப்பான, அகந்தையுள்ள இரண்டாம் தரமான அற் பர்கள்,[18] தைரிய மிக்க மோசஸ் மெண்டல்சன் லெஸ் ஸிங்கின் காலத்தில் ஸ்பினேஸாவைக் கருதி நடத்தியது போலவே, அதாவது ''ஒரு செத்த நாயாக'' ஹெகலேக் கருதி நடத்துவதில் உல்லாசம் கண்டனர். எனவே, அந்த வல் லமையுள்ள சிந்தனேயாளரின் மாணவன் நான் என்று வெளிப் படையாக அறிவித்தேன்; ஏன், மதிப்பின் தத்துவம் பற்றிய அத்தியாயத்தில் இங்குமங்குமாக அவருக்கே பிரத்தியேக மான தெரிவிப்பு முறைகளில் கை போட்டேன். ஹெகலின் கரங்களில் இயக்க இயல் அனுபவிக்கின்ற மறைபொருள் தன்மையானது அதன் பொதுவான செயல்பாட்டு வடி வத்தைப் புரிந்து கொள்ளத் தக்க, உணர்வு பூர்வமான விதத் தில் முன்வைக்கின்ற முதல் மனிதராக இருக்க விடாமல் அவரை எவ்விதத்திலும் தடுத்து விடவில்லே. அவரிடம் அது தலேக் கீழாக நின்றுகொண்டிருக்கிறது. மறைபொருள்வாத ஓட்டுக்குள் உள்ள பகுத்தறிவு உள்முத்தை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டுமென்ருல், அது மீண்டும் நேரான நிலேயில் திருப்பி நிறுத்தப்பட வேண்டும்.

இயக்க இயல், அதன் மறைபொருள் வடிவத்தில், ஜெர் மனியில் நாகரிக மோஸ்தரானது; ஏனெனில் அது நிலவு கின்ற அமைப்பை உயர்த்திக் காட்டுவதாகவும் போற்றிப் புகழ்வதாகவும் தோன்றியது. அதன் பகுத்தறிவு ரீதியான வடிவத்தில், முதவாளி வர்க்க ஆளுகைக்கும் அதன் ஏட்டுச்

சுரைக்காய்ப் பேராசிரியர்களுக்கும் அது ஒரு முறை கேடும் அருவருப்பும் ஆகும்; ஏனெனில் நிலவுகின்ற அமைப்பை அது புரிந்துகொள்வதிலும் நேர்மறையாக அங்கீகரிப்பதிலும், அந்த அமைப்பின் மறுப்பும் அதன் தவிர்க்க முடியாத தகர்வும் ஒப்புக்கொள்ளப்படுவது அதே நேரத்தில் அடங்கியுள்ளது; மேலும் ஏனெனில், வரலாற்று ரீதியாக வளர்ச்சியடைந்த ஒவ்வொரு சமூக வடிவமும் தேங்கி நிற்காத இயக்கத்திலிருப்பதாக அது கருதுகிறது; ஆகவே அதன் நிலையற்ற வாழ்க்கையைப் போலவே அதன் தோன்றி மறையும் தன்மையையும் கணக்கிலெடுத்துக்கொள்கிறது; மேலும் ஏனெனில், அதன் மீது எதுவும் திணிக்கப்படுவதை அனுமதிப்பதில்லை; சாராம்சத்தில் விமர்சன ரீதியானதாகவும் புரட்சிகரமானதாகவும் உள்ளது.

தற்காலத் தொழில் எதன் வழியாகச் சென்றுகொண்டிருக்கிறதோ, சர்வ வியாபக நெருக்கடி எதன் முடிசூடும் அம்சமாக உள்ளதோ, அந்தக் குறித்தகாலச் சகடத்தின் மாற்றங்களின் உருவில் முதலாளித்துவ சமுதாய இயக்கத்தில் உள்ளார்ந்துள்ள முரண்பாடுகள் நடைமுறை பூர்ஷ்வாவின் மனதில் மிக அழுத்தமாகப் பதிகின்றன. அந்த நெருக்கடி இது வரை அதன் பூர்வாங்கக் கட்டத்திலேயே உள்ளதெனினும், மீண்டும் ஒரு முறை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது; அது தனது ஆட்ட அரங்கத்தின் சர்வ வியாபகத் தன்மையாலும் தனது செயலின் உக்கிரத்தாலும் புதிய புனித பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் நேற்று முளைத்த காளாஞ்சித்தவர்களின் மண்டைகளிலுங்கூட இயக்க இயலிப் பறையறைந்து நுழைவிக்கும்.

கார்ல் மார்க்ஸ்

லண்டன், ஜனவரி 24, 1873

K. Marx, *Das Kapital. Kritik der politischen Oekonomie*, Erster Band, Zweite verbesserte Auflage, Hamburg, 1872இல் முதல் தடவையாகப் பிரசுரிக்கப்பட்டது

ஆங்கிலப் பதிப்பின்படி (லண்டன், 1887) அச்சிடப்பட்டது

எங்கெல்சால் சரிபார்த்துப் பதிப்பிக்கப்பட்டது

கா. மார்க்ஸ்

மூலதனம்

முதல் பாகம்

பகுதி VIII

ஆதித்திரட்சி என்றழைக்கப்படுகிறது

அத்தியாயம் XXVI

ஆதித்திரட்சியின் ரகசியம்

பணம் மூலதனமாக மாற்றப்படுவது எப்படி என்பதையும், மூலதனத்தின் மூலமாக உபரி மதிப்பும் உபரி மதிப்பின் மூலமாக மேலும் மூலதனமும் உருவாக்கப்படுவது எப்படி என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் மூலதனத் திரட்சி உபரி மதிப்பை முன்தேவையாகக் கொண்டுள்ளது; உபரி மதிப்பு முதலாளித்துவ உற்பத்தியை முன்தேவையாகக் கொண்டுள்ளது; முதலாளித்துவ உற்பத்தி பண்ட உற்பத்தியாளர்களின் கரங்களில் மூலதனம் மற்றும் உழைப்புச் சக்தியின் கணிசமான திரள்கள் முன்கூட்டியே இருப்பதை முன்தேவையாகக் கொண்டுள்ளது. எனவே இயக்கம் முழுவதும் ஒரு நச்சுவட்டத்தில் சுழல்வதாகத் தோன்றுகிறது; முதலாளித்துவத் திரட்சிக்கு முன்னர் நிகழ்கின்ற ஓர் ஆதித்திரட்சியை (ஆடம் ஸ்மித் சொல்லும் ''முந்தையத் திரட்சி''—"previous accumulation"), முதலாளித்துவ உற்பத்திமுறையின் விளைவாக அல்லாமல் அதன் துவக்கப் புள்ளியாக உள்ள ஒரு திரட்சியை, அனுமானம் செய்து கொள்வதன் மூலம் மட்டுமே நாம் இந்த நச்சுவட்டத்திலிருந்து விடுபட முடியும்.

இறையியலில் ஆரம்பப்பாவம் வகிக்கின்ற அதே பாத்திரத்தையே அரசியல் பொருளாதாரத்தில் ஆதித்திரட்சி ஏறக்குறைய வகிக்கிறது. ஆதாம் ஆப்பிள் பழத்தைக் கடித்தான்; அதோடு மனித வர்க்கத்தின் தலையில் பாவம் விழுந்

தது. இது கடந்த காலத்தின் உபகதையாகச் சொல்லப் படும் போது பாவத்தின் தோற்றுவாய் விளக்கப்படுவதாக அனுமானித்துக்கொள்ளப்படுகிறது. நெடுங்காலம் முன்னர் மக்கள் இரு வகைகளாக இருந்தனர்: ஒன்று, ஊக்கமுடன் உழைக்கின்ற, மதிநுட்பமுள்ள, அனைத்துக்கும் மேலாகக் கட்டுச் செட்டான மேன்மக்கள் வகை; இன்னென்று, சோம் பேறிக் கயவாளிகள், தங்கள் சரக்கையும் இன்னும் பிறவற் றையும் காலித்தனமான வாழ்க்கையில் செலவழிப்போர் வகை. மனிதன் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துச் சோறு தின்னட்டுமெனத் தண்டித்தொதுக்கப்படுமாறு நேர்ந்தது எவ்வாறு என்பதை இறையியல் ரீதியான ஆதிப் பாவம் பற்றிய புராணக்கதை நமக்குச் சொல்கிறது; ஆனால் இப்படி உழைத்துச் சாப்பிடுவது எவ்விதத்திலும் அத்தி யாவசியமாக இல்லாத நபர்கள் எப்படித் தோன்றியிருக்க முடியும் என்பதைப் பொருளாதார ரீதியான ஆதிப்பாவம் பற்றிய வரலாறு நமக்கு வெளிப்படுத்துகிறது. கவலை என் பதில்லையே! இவ்வாறு, முன்னல் குறிப்பிட்ட வகை செல் வத்தைத் திரட்டியது, பின்னல் குறிப்பிட்ட வகையிடம் கடைசியில் தம் சொந்த சருமத்தைத் தவிர விற்பதற் கொன்றுமில்லை என்ற நிலை ஏற்பட்டது. உழைத்துங்கூட இப்போதுவரை தம்மைத் தவிர விற்பதற்கு ஒன்றுமில்லாத மிகப் பெரும்பாலோரின் வறுமையும், உழைப்பதை நிறுத்தி நீண்ட காலமாகி விட்டபோதிலும் இடையறாது அதிகரிக் கின்ற மிகச் சிலரின் செல்வமும் இந்த ஆரம்பப்பாவத் திலிருந்து தோன்றி வருவதாகும். Propriété [சொத்துக்கு] ஆதரவாக இப்படிப்பட்ட சுவாரஸ்யமில்லாத குழந்தைத் தனம் தினந்தோறும் நமக்குப் போதிக்கப்படுகிறது. உதாரண மாக, ஒரு காலத்தில் இவ்வளவு ஆன்மீக உணர்வுள்ள வர்களாக இருந்த பிரெஞ்சு மக்களிடம் இதையே ஓர் அரசுக் கலைஞனுக்குரிய முழு பவித்திரத்தோடு திருப்பிச் சொல்லும் நெஞ்சுரம் திரு. தியேருக்கு இருந்தது. ஆனால் சொத்துப் பிரச்சினை தலைதூக்கியதுமே, குழந்தையின் அறிவுத் தினியை சகல காலங்களுக்கும், சகல வளர்ச்சிக் கட்டங் களுக்கும் லாயக்கான ஒரே பொருளெனப் பிரகடனப்

படுத்துவது ஒரு புனிதக் கடமையாகிறது. வாஸ்தவமான வரலாற்றில் வெற்றி கொள்ளுவது, அடிமைப்படுத்துவது, கொள்ளையடிப்பது—சுருங்கச் சொல்லின் பலப்பிரயோகம் —பெரும் பங்கு வகிக்கின்றன என்பது நாற்றப்புகழுடைத்த தாகும். அரசியல் பொருளாதாரத்தின் நுண்மையான சரித்திர ஏடுகளில் நினைவுக்கெட்டாக் காலந்தொட்டுக் கிராமிய ரம்மியம் கோலோச்சுகிறது. சதாகாலமும் உரிமையும் ''உழைப்பும்''தான் செல்வங்குவிக்கும் ஏகச் சாதனங்களாக இருந்தன; ''நிகழுமாண்டு'' எப்போதுமே விதிவிலக்காகக் கொள்ளப்படுவது உண்மையே. உள்ளபடியே ஆதித்திரட்சியின் முறைகளுக்கும் ரம்மியத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை.

உற்பத்திச் சாதனங்களையும் ஜீவனோபாயங்களையும் போலவே, பணமும் பண்டங்களும் தம்மிலேயே மூலதனமாகா. அவை மூலதனமாக மாற வேண்டுமென விரும்புகின்றன. ஆனால் இம்மாற்றமானது, இதில் மையமாயுள்ள, அதாவது இருவிக வெவ்வேறான வகைகளைச் சேர்ந்த பண்டம் வைத்திருப்போர் நேருக்கு நேராக வந்து தொடர்புகொள்ள வேண்டும் என்ற சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே நடைபெறமுடியும்; ஒருபுறம் மற்ற நபர்களின் உழைப்புச் சக்தியை வாங்குவதன் மூலம் தம்மிடமிருக்கும் மதிப்புகளின் தொகையை அதிகரிக்க ஆவல் கொண்டிருப்பவர்களான பணத்தின், உற்பத்திச் சாதனங்களின், ஜீவனோபாயங்களின் சொந்தக்காரர்கள்; மறுபுறம், சுதந்திர உழைப்பாளிகள், தம் சொந்த உழைப்புச் சக்தியை விற்போர், ஆகவே உழைப்பு விற்பனையாளர்கள். சுதந்திர உழைப்பாளிகள் என்பது, அடிமைகள், கொத்தடிமைகள் போன்றோரின் விஷயத்தில் இருப்பது போல உற்பத்திச் சாதனங்களின் பிரிக்க முடியாத பகுதியாக தாமே அமைவதுமில்லை, உடமை விவசாயிகளின் விஷயத்தில் போன்று உற்பத்திச் சாதனங்கள் அவர்களுக்குச் சொந்தமாக இருப்பதுமில்லை என்னும் இரட்டை அர்த்தத்திலாகும்; எனவே அவர்கள் தமக்கே சொந்தமான உற்பத்திச் சாதனங்கள் எதிலிருந்தும் சுதந்திரமாக, இச்சாதனங்கள் எதனாலும் சுமையேற்றப்படாமல் உள்ளனர். பண்

டங்களுக்கான சந்தை இப்படி துருவகரணமாதலுடன், முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை நிலைமைகள் வரப் பெறுகின்றன. உழைப்பாளிகள் தம் உழைப்பைப் பொருளாக்குவதற்கு வேண்டிய சாதனங்களின் உடமை அனைத்திடமிருந்தும் அவர்களை முழுமையாகப் பிரித்தெடுப்பதை முதலாளித்துவ அமைப்பு முன்தேவையாகக் கொண்டுள்ளது. முதலாளித்துவ உற்பத்தி தன் சொந்தக் கால்களில் நிற்கத் தொடங்கியதுமே, அது இப்பிரிவினையைப் போற்றிப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் தொடர்ந்து விரிவடைந்து கொண்டேபோகும் விதத்தில் அதனைப் புனருருவாக்குகிறது. எனவே முதலாளித்துவ அமைப்புக்கு வழிதிறந்து விடுகின்ற செய்முறை, தொழிலாளியிடமிருந்து உற்பத்திச் சாதனங்களின் மீதான அவனது உடமையைப் பறித்துக்கொள்ளும் ஒரு செய்முறையாகவன்றி, ஒருபுறம் சமுதாய உற்பத்திச் சாதனங்களையும் ஜீவனோபாயங்களையும் மூலதனமாகவும், மறுபுறம் உடனடி உற்பத்தியாளர்களைக் கூலித் தொழிலாளர்களாகவும் மாற்றியமைக்கின்ற ஒரு செய்முறையாகவன்றி வேறுக இருக்க முடியாது. எனவே ஆதித்திரட்சி என்று அழைக்கப்படுவது, உற்பத்தியாளனை உற்பத்திச் சாதனங்களிடமிருந்து பிணையறுக்கும் ஒரு வரலாற்று செய்முறையேயன்றி வேறொன்றுமில்லை. அது ''ஆதிகாலத்தியதாகத்'' தோன்றுவது ஏனென்றால், மூலதனத்தினுடையவும் அதனோடிணையான உற்பத்தி முறையினுடையவும் வரலாற்று முற்காலக் கட்டமாக அது அமைகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார வடிவமைப்பு நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் பொருளாதார வடிவமைப்பிலிருந்து விளைந்துள்ளது. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் குலைவு முதலாளித்துவச் சமுதாயத்தின் சக்திகளைக் கட்டவிழ்த்து விட்டது.

உடனடி உற்பத்தியாளனை உழைப்பாளி, மண்ணோடுள்ள பிணைப்பு முடிந்த பின்னர்—மற்றொருவனின் அடிமை, பண்ணையடிமை அல்லது கொத்தடிமையாக இருப்பது முடிந்த பின்னர்—தன் சொந்த உருவத்தை மட்டுமே விற்க முடிந்தது. சந்தை காணுமிடமெல்லாம் தன் பண்டத்தை எடுத்துச்

செல்லுகின்ற ஒரு சுதந்திர உழைப்புச் சக்தி விற்பனை யாளனாக ஆவதற்கு, அவன் மேலும், கில்டுகளின் ராஜ்யத்திலிருந்தும் பழகித் தொழிலாளர்கள் மற்றும் தகுதித் தொழிலாளர்களுக்கான அவற்றின் விதிகளிலிருந்தும் அவற்றின் உழைப்பு விதிமுறைகளின் இதர தங்குதடைகளிலிருந்தும் தப்பியிருக்க வேண்டும். இதனால்தான் உற்பத்தியாளர்களைக் கூலித் தொழிலாளர்களாக மாற்றுகின்ற வரலாற்று இயக்கம், ஒரு புறம் பண்ணையடிமைத்தனத்திலிருந்தும் கில்டுகளின் தளைகளிலிருந்தும் அவர்கள் அடைகின்ற விடுதலையாகத் தோன்றுகிறது; நமது பூர்ஷ்வா வரலாற்றுசிரியர்களுக்கு இந்த அம்சம் இருப்பது மட்டுமே தெரிகிறது. ஆனால் மறுபுறம், இந்தப் புதிய சுதந்திரமான்தர்கள் தம் சொந்த உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும், பழைய நிலப்பிரபுத்துவ ஏற்பாடுகளால் கிடைத்த வாழ்க்கை உத்தரவாதங்கள் அனைத்தையும் பறிகொடுத்த பின்னரே தம்மைத் தாமே விற்பவர்களாயினர். அவர்கள் பறிமுதலுக்காளான இந்த வரலாறு மனித இனத்தின் சரித்திர ஏடுகளில் ரத்தத்தாலும் நெருப்பாலும் எழுதப்பட்டுள்ளது.

தொழில் முதலாளிகளென்ற இந்தப் புதிய பலவான்கள் தங்கள் பங்குக்குக் கில்டு மாஸ்டர்களை மட்டுமல்லாமல் செல்வ மூலாதாரங்களின் உடமையாளர்களான நிலப்பிரபுக்களையும் பெயர்த்தெறிய வேண்டியிருந்தது. இவ்விஷயத்தில், சமுதாய அதிகாரத்தை அவர்கள் வென்றதானது, நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்துக்கும் அதன் எரிச்சலூட்டும் தனிச் சலுகைகளுக்கும் எதிராகவும், கில்டுகளுக்கும் அவை சுதந்திரமான உற்பத்தி வளர்ச்சியின் மீதும் மனிதனை மனிதன் சுதந்திரமாகச் சுரண்டுவதன் மீதும் போட்ட தடைவிலக்குகளுக்கும் எதிராகவும் நடந்த ஒரு வெற்றிகரமான போராட்டத்தின் நற்பயனாகத் தோன்றுகிறது. ஆயினும், இத்தொழில் மாவீரர்கள் தாங்கள் முற்றிலும் பொறுப்பில்லாத சம்பவங்களைப் பயன்படுத்திக்கொண்டதன் மூலம், வாளேந்தும் மாவீரர்களின் இடத்தைப் பிடிப்பதில் வெற்றி பெற்றனர், அவ்வளவே. முன்னொரு காலத்தில் விடுதலை பெற்ற ரோமானிய அடிமை தனது முந்தைய அடிமைச்சொந்தக்காரனின்

எஜமானனுகத் தன்னேத்தானே ஆக்கிக்கொள்ளக் கையாண்ட உபாயங்களின் அளவுக்கே இழிவான உபாயங்களின் மூலம் அவர்கள் உயர்ந்தெழுந்துள்ளனர்.

கூலித் தொழிலாளிக்கும், அதேபோல் முதலாளிக்கும் தோற்றங்கொடுத்த வளர்ச்சியின் துவக்கப்புள்ளி தொழிலாளியின் தொண்டுழியமாக இருந்தது. முன்னேற்றமென்பது இத்தொண்டுழியத்தின் வடிவமாற்றமொன்றில்—நிலப்பிரபுத்துவச் சுரண்டலே முதலாளித்துவச் சுரண்டலாக மாற்றியமைத்ததில்—அடங்கியிருந்தது. அதன் அணி நடையைப் புரிந்துகொள்ள நாம் வெகுதூரம் திரும்பிச் செல்லத் தேவையில்லே. 14வது அல்லது 15வது நூற்றுண்டிலேயே முதலாளித்துவ உற்பத்தியின் முதல் ஆரம்பங்களே, இங்குமங்குமாக எங்காவது, மத்தியதரைக் கடல்பகுதியின் சில குறிப்பிட்ட நகரங்களில் சந்திக்கிறோம் என்றாலும், முதலாளித்துவ சகாப்தம் என்பது 16வது நூற்றுண்டிலிருந்து ஆரம்பிப்பதாகும். அது தோற்றமெடுக்கின்ற இடங்களிலெல்லாம் பண்ணேயடிமைத்தனத்தின் கதை முடிக்கப்பட்டு வெகு காலமாகியுள்ளது; மத்திய காலத்தின் சிகரமொத்த வளர்ச்சியான சுயாதிகார நகரங்களின் வாழ்வு மறைந்து சுவடழிந்து வெகு காலமாகியுள்ளது.

ஆதித்திரட்சியின் வரலாற்றில், அமையும் போக்கிலுள்ள முதலாளி வர்க்கத்துக்கு நெம்புகோல்களாகச் செயல்புரியும் எல்லாப் புரட்சிகளுமே சரித்திரம் படைக்கும் புரட்சிகளாகும்; ஆனல், அனேத்துக்கும் மேலாக, பெரும் மனிதத் திரள்கள் திடீர் என்றும் பலவந்தமாகவும் அவர்களது ஜீவனோபாயங்களிடமிருந்து பிய்த்தெடுக்கப்பட்டு, சுதந்திரமான, ''பிணேப்பில்லாத'' பாட்டாளிகளாக உழைப்புச் சந்தைக்குள் கடாசப்படுகின்ற தருணங்களாகும். விவசாய உற்பத்தியாளனிடமிருந்து, உழவனிடமிருந்து மண்ணேப் பறிமுதல் செய்வது இச்செய்முறை முழுவதன் அடிப்படையாகும். இந்தப் பறிமுதலின் வரலாறு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அம்சங்களே உடுத்திக்கொள்கிறது; வெவ்வேறு ஒழுங்கு வரிசைகளில், வெவ்வேறு காலக்கட்டங்களில் அதன் பல்வேறு படலங்களின் வழிச் செல்கிறது. நாம் நமது உதாரண

மாக எடுத்துக்கொண்டுள்ள இங்கிலாந்தில் மட்டுமே அது ஆதர்ச வடிவம் பெற்றுத் திகழ்கிறது.[189]

அத்தியாயம் XXVII

விவசாய ஜனத்தொகையிலிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்தல்

இங்கிலாந்தில், பண்ணையடிமைத்தனம் 14ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் நடைமுறையில் மறைந்துபோனது. அப்போதும் இன்னும் பெரிய அளவுக்கு 15ம் நூற்றாண்டிலும் ஜனத்தொகையின் மிகப்பெரும் பெரும்பான்மை,[190]

---

189) முதலாளித்துவ உற்பத்தி மிகமிக முன்னதாக வளர்ச்சியடைந்த இத்தாலி நாட்டில், பண்ணையடிமைத்தனத்தின் குலைவும் வேறிடங்களை விட முன்னதாக நடந்தது. பண்ணையடிமை மண்ணுக்கு அதிகார உரிமை எதையும் ஈட்டு முன்னரே அந்த நாட்டில் விடுவிக்கப்பட்டான். அவனது விடுதலை அவனை ஒரு சுதந்திரப் பாட்டாளியாக உடனே மாற்றியது; மேலும், பெரும்பாலும் ரோமானியக் காலத்திலிருந்து பரம்பரைச் சொத்துகளாக வழிவழி வந்த நகரங்களில் தன் எஜமானன் தனக்காகத் தயாராகக் காத்திருப்பதை அவன் கண்டான். 15ம் நூற்றாண்டின் முடிவு வாக்கில் உலகச் சந்தையின் புரட்சி[19] வட இத்தாலியின் வாணிப முதன்மையை ஒழித்துக் கட்டிய போது, எதிர்த்திசையில் ஓர் இயக்கம் துவங்கியது. நகரங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக நாட்டுப்புறத்துக்குத் துரத்தப்பட்டு, தோட்டச் சாகுபடியின் வடிவத்தில் நடத்தப்பட்டு வந்த சிற்றளவு பயிர்த்தொழிலுக்கு முன்னெப்போதும் கண்டிராத ஓர் தூண்டு விசை அளித்தனர்.

190) "தம் சொந்த வயல்களில் தாமே உழுது பயிரிட்டு, ஒரு மிதமான நலத்தை அனுபவித்த சிறு உடமையாளர்கள்... இப்போதிருப்பதை விட அப்போது தேசத்தில் வெகு அதிகம் முக்கியமானதொரு பகுதியாக அமைந்தனர்... அக்காலத்தின் மிகச் சிறந்த புள்ளிவிவர எழுத்தாளர்களை நாம் நம்பலாம் என்றால், தம் குடும்பங்களோடு சேர்ந்து ஜனத்தொகை பூராவிலும் ஏழிலொரு பகுதிக்கும் அதிகமாய் இருந்திருக்க வேண்டிய 1,60,000க்கும் குறையாத உடமை விவசாயிகள் சிறு சுதந்திரவுடமை (freehold) பண்ணை

அவர்களது சொத்துரிமையை ஒளித்துக்கொண்டிருந்த நிலப்பிரபுத்துவப் பட்டப் பெயர் எதுவானாலும், சுதந்திர உடமை விவசாயிகளால் ஆனதாய் இருந்தது. இன்னும் பெரிய உயர்பிரபுத்துவக் குடைகீழிருந்த பகுதிகளில், தானே ஒரு பண்ணையடிமையான பழைய bailiff (அமுல்தார்) சுதந்திர விவசாயியால் அகற்றப்பட்டான். விவசாயக் கூலித் தொழிலாளர்கள் என்ற வகை, பகுதி, பெரிய பண்ணைகளில் வேலைசெய்வதன் மூலம் தங்களது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக்கொண்ட விவசாயிகளாலும், பகுதி, ஒப்பீட்டு ரீதியிலும் அறுதியாகவும் எண்ணிக்கையில் சிலராயிருந்த ஒரு விசேஷ வகைப்பட்ட கூலித் தொழிலாளர்களும் ஆனதாய் இருந்தது. பின்னல் குறிப்பிட்ட இக்கூலித் தொழிலாளர்கள் அதே நேரத்தில் பண்ணை விவசாயிகளாகவும் நடைமுறையில் இருந்தனர்; ஏனென்றால், கூலியன்னியில், அவர்கள் தமது குடிசைகளோடு சேர்ந்தாற்போல, 4 அல்லது அதற்கதிகமான ஏக்கர் விஸ்தீரணத்துக்குப் பயிர் செய் நிலம் ஒதுக்கப்பெற்றிருந்தனர். மேலும், அவர்களது கால் நடைகளுக்கான மேய்ச்சல் பரப்பளித்த, வேலைக்குரிய மரம், விறகு, புல்பற்றை முதலானவற்றை அவர்களுக்கு வழங்கிய பொதுநிலத்தின் அனுபோகத்தை மற்ற விவசாயிகளோடு

களிலிருந்து தம் ஜீவனத்தைச் சம்பாதித்தனர். இந்தச் சிறு நிலச்சொந்தக்காரர்களின் சராசரி வருமானம் ஆண்டொன்றுக்கு 60 பவுன்களுக்கும் 70 பவுன்களுக்கும் இடையிலிருக்குமென மதிப்பிடப்பட்டது. தம் சொந்த நிலத்தைத் தாமே உழுத நபர்களின் எண்ணிக்கை மற்றவர்கள் நிலத்தில் விவசாயம் செய்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது.'' (Macaulay, *History of England*, 10th ed., London, 1854, Vol. I, pp. 333, 334.) 17ம் நூற்றாண்டின் கடைசி மூன்றும் பகுதியில் கூட, ஆங்கிலேயர்களில் 4/5 பகுதியினர் விவசாயத்திலிருந்தனர். (முன்வந்தது, பக்கம் 413.) நாம் மாகோலியே மேற்கோள் காட்டுவது ஏனென்றால், பிறழ்வில்லாத வரலாற்றுப் பொய்யுரைஞர் என்ற விதத்தில் அவர் சாத்தியமான அளவுக்கு இம்மாதிரி உண்மைகளைக் ''குறைந்தபட்சமாக்கிக்கொள்கிறார்.''

சேர்ந்து அவர்கள் அனுபவித்தனர்.[191] சகல ஐரோப்பிய நாடுகளிலும், சாத்தியமான அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான உப-நிலப்பிரபுத்துவ உடமையாளர்கள் மத்தியில் நிலத்தைப் பிரிவினை செய்வது நிலப்பிரபுத்துவ உற்பத்தியின் குணக்குறியாய் இருந்தது. அரசனின் வலிமையைப் போலவே நிலப்பிரபுவின் வலிமையும் அவனது குத்தகைப் பட்டியின் நீளத்தைப் பொறுத்ததில்லை, ஆனால் அவனது குடிகளின் எண்ணிக்கையையே பொறுத்திருந்தது; இக்குடிகளின் எண்ணிக்கை உடமை விவசாயிகளின் எண்ணிக்கையைப் பொறுத்திருந்தது.[192] ஆகவே நார்மன் வெற்றிக்குப் பின்னர்[20] ஆங்கிலேய நிலம் பிரமாண்டமான பட்டத்துப் பிரபுத்துவங்களாகப் பங்கிடப்பட்டதென்ற போதிலும்,—இவற்றில் ஒன்றில், பலநேரங்களில், பழைய ஆங்கிலோ-சாக்ஸன் பிரபுத்துவங்களில் சுமார் 900 அடங்கியிருந்தன—இங்குமங்குமாக மட்டுமே பெரிய உயர்பிரபுத்துவ ஆதிக்கப்

---

[191] பண்ணையடிமையே கூட தன் வீட்டையொட்டிய நிலத் துண்டுக்கு—கப்பம் கட்டும் சொந்தக்காரனே என்றாலும்—சொந்தக்காரன் மட்டுமல்ல, பொதுநிலத்தின் கூட்டு உடமையாளனும் ஆவான் என்பதை நாம் ஒருக்காலும் மறக்கக் கூடாது. (சைலீஸியாவில்) ''விவசாயி பண்ணையடிமையாக இருந்தான்.'' எப்படியாயினும், இந்தப் பண்ணையடிமைகள் பொதுநிலங்களைப் பெற்றிருந்தனர். ''பொதுநிலங்களைப் பிரிப்பதற்கு சைலீஸியர்களை இதுவரை உடன்படும்படிச் செய்ய இயலவில்லை. ஆனால் நைமார்க்கிலோ மிகவும் வெற்றிகரமாக இந்தப் பிரிவு நிறைவேற்றப்படாத கிராமமே எஞ்சியிருக்கவில்லை.'' (Mirabeau, *De la Monarchie Prussienne*, Londres, 1788, t. II, pp. 125, 126.)

[192] சுத்தமாக நிலப்பிரபுத்துவத் தன்மையுள்ள நிலவுடமை அமைப்பும் வளர்ச்சியடைந்த சிற்றளவுப் பயிர்த்தொழிலும் உடைய ஜப்பான் நாடு—நமது வரலாற்றுப் புத்தகங்கள் பெரும்பாலும் பூர்ஷ்வா மூடநம்பிக்கைகளின் நியமப்படி எழுதப்பட்டவை என்பதால், அவை அனைத்தை விடவும்—ஐரோப்பிய மத்திய காலம் பற்றி அதிகம் உண்மையான ஒரு படப்பிடிப்பை வழங்குகிறது. மத்திய காலத்தைப் பலியிட்டு, ''தாராளப் போக்குடன்'' இருப்பது மிகச் சௌகரியமானதாகும்.

பிரதேசங்கள் குறுக்கிடுகின்ற சிறு விவசாய உடமைகளாக அது சிதறிக் கிடந்தது. இவ்வளவு தூரம் 15ம் நூற்றாண்டின் தனிச்சிறப்பாகத் திகழ்ந்த நகரங்களின் செழிப்போடு சேர்ந்து, இப்படிப்பட்ட நிலைமைகள்—அமைச்சர் ஃபோர்டெஸ்க்யூ தனது Laudibus Legum Angliaeல் இத்தனைச் சொல்வன்மையோடு தீட்டுகின்ற—மக்களின் செல்வத்துக்கு வழி செய்தன; ஆனால் அவை முதலாளித்துவச் செல்வத்தின் சாத்தியத்தை உள்ளடக்கவில்லை.

முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அஸ்திவாரமிட்ட புரட்சியின் பீடிகை 15வது நூற்றாண்டின் கடைசி மூன்றரை பாகத்திலும் 16ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலும் போடப்பட்டது. சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் நன்றாகச் சொல்வது போல, ''எங்குப் பார்த்தாலும் பயனற்ற விதத்தில் வீட்டிலும் கோட்டையிலும் நிரம்பியிருந்த''[21] நிலப்பிரபுத்துவப் பணியாட்களின் குழுக்களைக் கலைத்ததன் மூலம் சுதந்திரப் பாட்டாளிகள் திரள் ஒன்று உழைப்புச் சந்தையினுள் வீசப்பட்டது. தானே பூர்ஷ்வா வளர்ச்சியின் ஓர் விளைபயனான மன்னராட்சி பரிபூரண சுயாதிபத்தியத்தை அடைவதற்கான தனது போராட்டத்தில் இந்தப் பணியாள் குழுக்களின் கலைப்பைப் பலவந்தமாகத் துரிதப்படுத்தியது என்ற போதிலும், எவ்விதத்தும் அதன் ஏகக்காரணமாக இருக்கவில்லை. அரசரோடும் பாராளுமன்றத்தோடும் அகந்தையுடன் மோதிய பெரும் நிலப்பிரபுக்கள், எந்த நிலத்துக்குப் பிரபுவிற்கிருந்த அதே நிலப்பிரபுத்துவ உரிமை விவசாயிகளுக்கும் இருந்ததோ அந்த நிலத்திலிருந்தே விவசாயிகளைப் பலவந்தமாகத் துரத்தியடித்ததன் மூலமும் பொதுநிலங்களை அபகரித்துக்கொண்டதன் மூலமும் ஒப்பீட்டுக்கடங்காத அளவுக்குப் பெரியதொரு பாட்டாளி வர்க்கத்தை சிருஷ்டித்தனர். இங்கிலாந்தில் ஃப்ளெமிஷ் கம்பளிப் பட்டறைத் தொழில்களின் துரிதமான உயர்வும், அதற்கொப்பக் கம்பளி விலையில் ஏற்பட்ட உயர்வும் இந்த வெளியேற்றங்களுக்கு நேரடி உந்துவிசை கொடுத்தன. பழைய பிரபுக் குழாம் பெரிய நிலப்பிரபுத்துவ யுத்தங்களால் கபளீகரம் செய்யப்பட்டது. புதிய பிரபுக்குழாம் அதன் காலத்தின்

குழந்தையாக இருந்தது; அதற்கு, சக்திகளுக்கெல்லாம் சக்தி பணமே. எனவே, பயிர் நிலத்தை ஆடு மேய்க்கும் நிலங்களாக மாற்றுவதே அதன் கோஷமாக இருந்தது. சிறு விவசாயிகளை ஒட்டாண்டிகளாக்குவது நாட்டை எப்படி நாசப்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை ஹாரிஸன் தனது *Description of England. Prefixed to Holinshed's Chronicles*இல் விவரிக்கிறார். "What care our great incroachers!" (நமது மிகப்பெரிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு என்ன கவலை?) விவசாயிகளின் வசிப்பிடங்களும் தொழிலாளர்களின் குடிசைகளும் தரை மட்டமாக்கப்பட்டன அல்லது மக்கிக் கெட்டழிவது அவற்றின் தலையெழுத்தாக்கப்பட்டது. ஹாரிஸன் சொல்கிறார்: ''நிலப்பிரபுத்துவ ஜமீனின் பழைய பதிவேடுகளை அலசிப் பார்த்தால்... சில ஜமீன்களில் 17, 18 அல்லது 20 வீடுகள் அழிக்கப்பட்டன என்பதும்... இங்கிலாந்து இப்போதிருப்பதை விட குறைவாக மக்கள் வாய்க்கப்பட்டதாய் ஒரு போதும் இல்லை என்பதும் சீக்கிரமே தெரியவரும்.... ஒன்று, முழுமையாக அழிந்து போன, அல்லது ஏதேனும் ஒன்று எங்காவது சிறிது அதிகரித்திருக்கலாம் என்றாலும், கால்வாசிக்கும் அதிகமாக அல்லது சரிபாதிக்கும் அதிகமாகச் சுருங்கிவிட்ட பெருநகர்களிலும், ஆட்டுக் கொட்டில்களுக்காகப் பிரித்துப் போடப்பட்ட நகரங்களிலும் இப்போது பிரபுப் பண்ணைகளன்றி வேறெதுவுமில்லை.... என ஒரு விதத்தில் நான் சொல்லலாம்.'' இந்தப் பழைய நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் புகார்கள் எப்போதும் மிகைப்படுத்தப்பட்டவை; ஆனால் அவை, உற்பத்தி உறவுகளிலான புரட்சி சமகாலத்தவர் மீது பதிக்கின்ற எண்ணத்தை உண்மையுணர்வுடன் பிரதிபலிக்கின்றன. அமைச்சர் மோபார் டெஸ்க்யூ, தாமஸ் மோர் ஆகியோர் எழுதியவற்றை ஒப்பு நோக்கினால், 15ம் நூற்றாண்டுக்கும் 16ம் நூற்றாண்டுக்கும் இடையிலுள்ள அகண்ட இடைவெளி காட்டப்படுகிறது. தார்ண்டன் சரியாகச் சொல்வது போல ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் அதன் பொற்காலத்திலிருந்து இரும்புக் காலத்துக்கு மாறுங்காலமேதுமின்றியே விசப்பட்டது.

இந்தப் புரட்சியைக் கண்டு சட்ட அமைப்பு நடு

நடுங்கிப் போனது. "Wealth of the Nation" [''தேசத்தின் செல்வம்''] அதாவது, மூலதனம் உண்டாவதும் மக்கள் திரளை கண்மூடித்தனமாகச் சுரண்டி வறுமையில் ஆழ்ந்துவதும் அரசுத் திறமனைத்தின் ultima Thule* ஆக இடம் பெறுகின்ற நாகரிகத்தின் அந்தச் சிகரத்தின் மீது அது இன்னமும் நிற்கவில்லை. ஏழாம் ஹென்ரி பற்றி தான் எழுதிய சரித்திரத்தில், பேக்கன் சொல்கிறார்: ''அந்த நேரத்தில்'' (1489) ''அடைப்புகள் அதிகம் அடிக்கடி நிகழத் தொடங்கின; இதன் மூலம் (நபர்களும் குடும்பங்களும் இல்லாமல் உரமிட முடியாத) பயிர் நிலம் மேய்ச்சல் நிலமாக்கப்பட்டு, ஒருசில ஆடுமேய்ப்போரால் சுலபாகச் சுத்தமாக்கப்பட்டது; பல்லாண்டுக் குத்தகை, வருடாந்தரக் குத்தகை அல்லது தன்னிச்சையான குத்தகைக்கு விடப்பட்ட நிலங்கள் (குடியானவர்களில் கணிசமான பகுதியினர் வருடாந்தரக் குத்தகையின் கீழ் வாழ்ந்தனர்) பிரபுத்துவப் பண்ணைகளாக மாற்றப்பட்டன. இது, மக்கள் மடிவதற்கும் (அதன் விளைவாக) நகரங்களும் திருச்சபையும் கோயில்வரிகளும் மடிவதற்கும் வழி செய்துள்ளது.... இந்த அசௌகரியத்துக்குப் பரிகாரம் செய்வதில் மன்னரின் மதிசாலகமும் பாராளுமன்றத்தின் மதிசாலகமும் அந்த நேரத்தில் வியந்து போற்றும் வண்ணம் இருந்தன.... ஜனக்குறைப்பு செய்யும் அடைப்புகளையும் (depopulating inclosures) ஜனக்குறைப்பு செய்யும் மேய்ச்சல் வெளிகளையும் (depopulating pasturage) அகற்றிவிடும் பாதையில் அவர்கள் நடந்தனர்.'' 1489ம் வருடத்திய ஏழாம் ஹென்ரியின் சட்டமொன்று (அத்தியாயம் 19) குறைந்தபட்சம் 20 ஏக்கர் நிலம் சொந்தமாகப் பெற்றிருந்த வேளாண்மையில்லங்கள் அனைத்தையும் அழிப்பதற்கு தடை விதித்தது. எட்டாம் ஹென்ரியின் ஆட்சிக் காலத்தில் 25வது வருடத்திய சட்டத்தின் மூலம் இதே

---

* கடைக்கோடி. ஃபூலா என்று இதற்குப் பொருள்; கடைக்கோடி எல்லை என்ற அர்த்தத்தில் இது பயன்படுத்தப்படுகிறது. (ஃபூலா என்பது பண்டையக்கால மக்களின் கருத்துப்படி ஐரோப்பாவின் வட கோடியிலிருந்த ஒரு தீவு.) — ப-ர்.

சட்டம் புதுப்பிக்கப்பட்டது. பல பண்ணைகளும் பெரும் கால்நடை மந்தைகளும், குறிப்பாக ஆட்டுமந்தைகளும் ஒரு சிலரின் கரங்களில் குவிந்துள்ளன; அதனால் நிலத்தின் வாடகை அதிகம் உயர்ந்துள்ளது, உழவு (tillage) வீழ்ந்துள்ளது, கோயில்களும் வீடுகளும் பிரித்தெறியப்பட்டுள்ளன, பேரெண்ணிக்கையிலான மக்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பராமரித்துக்கொள்வதற்கான சாதனங்களைப் பறிகொடுத்துள்ளனர் என்றும் அச்சட்டம் ஒப்பிக்கிறது. எனவே இச்சட்டம் மடிந்துபோன பண்ணை இல்லங்களை மீண்டும் கட்டுமாறு ஆணையிடுகிறது; தானிய நிலத்துக்கும் மேய்ச்சல் நிலத்துக்கும் இடையில் ஒரு விகிதாச்சாரத்தை நிர்ணயிக்கிறது. 1533ம் வருடத்திய சட்டமொன்று, சில சொத்துக்காரர்களுக்கு 24,000 ஆடுகள் உள்ளன என்று விவரிக்கிறது; சொந்தமாய் இருக்க வேண்டிய ஆடுகளின் எண்ணிக்கைக்கு 2,000 என வரம்புகட்டுகிறது.[193] சிறு பண்ணைக்காரர்களையும் விவசாயிகளையும் ஓட்டாண்டிகளாக்குவதற்கெதிராக, ஏழாம் ஹென்ரிக்குப் பின்னர் 150 ஆண்டுக்காலத்துக்கு, மக்களின் குரலும் குறிப்பான சட்டங்களும் ஒன்றேபோல் பயனற்றவையாக இருந்தன. அவற்றின் இயலாமையின் ரகசியத்தைத்தான் தெரிந்துகொள்ளாமலே நமக்கு வெளிப்படுத்துகிறார் பேக்கன். அவர் தனது *Essays, Civil and Moral*, கட்டுரை 29ல் சொல்கிறார்: ''வேளாண்மைத் தொழில் புரிவோரின் பண்ணைகளையும் வீடுகளையும் ஓர் அளவுத் திட்டமுடையவையாக ஆக்குவதில்,—அதாவது சௌகரியமான எதேஷ்டம் மற்றும் தொண்டுழியமல்லாத நிலையில் வாழ்வதற்கும், வெறும் கூலியாட்களின் கரங்களிலன்றி சொந்தக்

---

193) இங்கிலாந்தில், ''இவ்வளவு தூரம் பணிவாகவும் சாதுவாகவும் இருக்கப் பழகியவையும் இவ்வளவு குறைவாகத் தின்பவையுமாக இருந்த உங்கள் ஆடுகள், இப்போது மனிதர்களையே மென்று விழுங்கிவிடுமளவுக்கு இவ்வளவு பெரிய தீனிக்கொல்லிகளாக ஆகின்றன என நான் கேள்விப்படுகிறேன்'' என்று தாமஸ் மோர் தனது கற்பனலோகத்தில் சொல்கிறார். (*Utopia*, transl. Robinson, ed. Arber, London, 1869, p. 41.)

காரர்களின் கரங்களில் கலப்பையை வைத்துக்கொள் வதற்கும் ஏற்ப, ஒரு குடிமகனை வளர்க்கக் கூடிய ஒரு விகி தாச்சாரப்படியான நிலத்தைக் கொண்டு பராமரிக்கப்படு பவையாக ஆக்குவதில்—மன்னர் ஏழாம் ஹென்ரியின் உபா யம் ஆழ்பொருளுடையதும் போற்றக் கூடியதுமாகும்.''193*)

193*) ஒரு சுதந்திரமான, வசதிபடைத்த விவசாய சமூ கத்துக்கும் நல்ல காலாட்படைக்கும் இடையிலுள்ள தொடர்பை பேக்கன் காட்டுகிறார். ''திறனுள்ள உடலொன் றைத் தரித்திரமில்லாமல் பராமரிக்கப் போதுமான ஒரு குத்தகை தரம், நாட்டின் வலிமையையும் பெருமையையும் தக்கவைப்பதோடு வியப்புக்குரிய விதத்தில் தொடர்புள்ள தாக இருந்தது; செயலளவில், நாட்டின் நிலங்களில் ஒரு பெரும் பகுதியைக் கனவான்களுக்கும் குடிசைவாசிகள் (cottagers) மற்றும் விவசாயிகளுக்கும் இடைப்பட்ட நிலை யிலுள்ள குடியானவர்கள் அல்லது நடுத்தர மக்களின் உட மைக்கும் அனுபோகத்துக்கும் கணக்குத் தீர்த்துக் கொடுத் தது.... ஒரு ராணுவத்தின் பிரதான வலிமை காலாட் படையில் அடங்கியிருக்கிறது... என்று போர்களில் மிகச் சிறப்பான கணிப்பாற்றலுடையவர்கள் பொதுவான அபிப் பிராயம் கொண்டுள்ளனர். நல்ல காலாட்படை வேண்டு மானால், சிப்பாய்களைத் தொண்டுழிய பாணியில் அல்லது வெறுப்புக்குரிய விதத்தில் வளர்க்கக் கூடாது; ஏதேனும் சுதந்திரமான, எதேஷ்டமான விதத்தில் வளர்க்க வேண் டும். எனவே ஒரு அரசு பிரபுக்களிடமும் கனவான்களிடமும் அதிகபட்சமாக ஓடினால், வேளாளர்களும் உழவர்களும் அவர்களது வேலையாட்களாகவும் தொழிலாளர்களாகவும் அல்லது வெறும் குடிசைவாசிகளாகவும் (இவர்கள் வீடுள்ள பிச்சைக்காரர்கள், அவ்வளவு தான்) மட்டுமேயிருந்தால், உங்களுக்கு ஒரு நல்ல குதிரைப்படை இருக்கலாம், ஆனால் ஒருக்காலும் நல்ல ஸ்திரமான காலாட்படைப் பிரிவு கள் இருக்க மாட்டா.... இதைப் பிரான்சிலும் இத்தாலி யிலும், வெளி நாடுகளில் மற்றும் சில பகுதிகளிலும் பார்க்க லாம்; அங்கே, காரியாம்சத்தில் எல்லோருமே பிரபுக்கள் அல்லது விவசாயிகள்.... அவர்கள் தங்களுக்கு வேண்டிய காலாட்படைகளுக்காக ஸ்விட்ஸர்கள் முதலானோரின் கூலிப்பட்டாளங்களை அமர்த்தும் நிர்ப்பந்தம் உள்ளது; இதனாலும், அந்த தேசங்களில் மக்கள் அதிகமாகவும் சிப்பாய்கள் சிலராகவும் இருக்கும் நிலை ஏற்படுகிறது.'' (*The Reign of Henry VII etc. Verbatim Reprint from Kennet's England, ed. 1719*, London, 1870, p. 308.)

மறுபுறம் முதலாளித்துவ அமைப்பு கோரியது என்னவென்றால், மக்கள் திரள் சீரழிந்து அநேகமாகத் தொண்டுழிய நிலைமையை எட்ட வேண்டும், அவர்களைக் கூலிப்பட்டாளங்களாகவும், அவர்களது உழைப்புச் சாதனங்களை மூலதனமாகவும் மாற்ற வேண்டும் என்பதே. இந்த மாற்றக் காலத்தின் போது, விவசாயக் கூலித் தொழிலாளியின் குடிசையை ஒட்டியுள்ள குறைந்தபட்சம் 4 ஏக்கர் நிலத்தை நிலைநிறுத்தவும் சட்டம் பிரயாசைப்பட்டது; அவனது குடிசைக்குள் நிரந்தரமல்லாத வாசிகளை நுழைக்க விடாமல் தடை செய்தது. 1627ல், முதலாம் சார்லஸ் ஆட்சிக் காலத்தில், ஃபிரண்ட் மில் நிலப்பிரபுத்துவப் பண்ணையில் 4 ஏக்கர் நிரந்தர ஒட்டு நிலமில்லாமல் ஒரு குடிசையைக் கட்டியதற்காக ஃபிரண்ட் மில்லைச் சேர்ந்த ரோஜர் க்ரோக்கருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது; 1638ல் முதலாம் சார்லசின் ஆட்சிக் காலத்தில், அவ்வளவு தூரம் பிற்காலத்திலேயே, பழைய சட்டங்களை, குறிப்பாக 4 ஏக்கர் நிலம் பற்றிய சட்டத்தை அமல்படுத்துமாறு கட்டாயப்படுத்த முடியரசுக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது; குரோம்வெல்லின் காலத்தில் கூட, லண்டனைச் சுற்றி 4 மைல் எல்லைக்குள், 4 ஏக்கர் நிலம் வாய்க்கப் பெறாமல் வீடு கட்டுவது தடை செய்யப்பட்டது. 18ம் நூற்றாண்டின் முதல் பாதியளவுக்குப் பிந்திய காலத்திலும், விவசாயத் தொழிலாளியின் குடிசை ஓரிரு ஏக்கர் ஒட்டு நிலம் இல்லாதிருந்தால் புகாருக்காளாகிறது. இப்போதெல்லாம் விடு ஒரு சிறு தோட்டத்தைப் பெற்றதாக இருந்தால், அல்லது அவனது குடிசையிலிருந்து தொலைவாகச் சில ரூடுகள் நிலத்தை அவன் குத்தகைக்குப் பெறக் கூடுமென்றால், அவன் அதிருஷ்டசாலியே. டாக்டர் ஹண்டர் சொல்கிறார்: ''நிலக்கிழார்களும் பண்ணைக்காரர்களும் இங்கே கைகோர்த்து வேலை செய்கிறார்கள். குடிசையோடு சில ஏக்கர்கள் இருந்தால், தொழிலாளர்களை ரொம்பவும் சுதந்திரமானவர்களாக்கி விடுமாம்.''[194])

---

[194]) டாக்டர் ஹண்டர், *Public Health. 7th Report 1864*, London, 1865, p. 134. (பழைய சட்டங்களில்)'' ஒதுக்கப்

மக்களைப் பலவந்தமாக ஒட்டாண்டிகளாக்கும் செய்முறைக்கு, 16ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கத்திடமிருந்தும்,[22] அதன் விளைவாகத் திருச்சபைச் சொத்து பிரமாண்டமான அளவு ஜப்தியானதிலிருந்தும் ஒரு புதிய, பயங்கரமான தூண்டுவிசை கிடைத்தது. சீர்திருத்த இயக்கக் காலத்தில் ஆக்கிலேய நிலத்தில் ஒரு பெரும் பகுதியின் நிலப்பிரபுத்துவ உரிமையாளராகக் கத்தோலிக்கத் திருச்சபை இருந்தது. துறவி மடங்கள் அழிக்கப்பட்டது போன்ற நடவடிக்கைகள் இவற்றில் வாழ்ந்தவர்களை பாட்டாளிகளாக மாற்றின. கத்தோலிக்கத் திருச்சபையின் பண்ணைகள் பெருமளவுக்கு, அரண்மனைக்குப் பிடித்தமான கொள்ளைக்காரப் பேர்வழிகளிடம் தரப்பட்டன; அல்லது ஹைஷ்ய பேரக்காரர்களான பண்ணையார்களிடமும் நகரவாசிகளிடமும் பெயரளவிலான ஒரு விலைக்கு விற்கப்பட்டன; அவர்கள் பரம்பரைப் பரம்பரையாக இருந்த குத்தகைதாரர்களைக் கூட்டம் கூட்டமாக வெளியேற்றிவிட்டு அவர்களது நிலவுடமைகளை நன்முகச் சேர்த்தனர். திருச்சபையின் காணிக்கைகளின் ஒரு பகுதியில் ஏழை ஜனங்களுக்குச் சட்டப்பூர்வமாக உத்திரவாதம் செய்யப்பட்ட உரிமை மறைமுகமாகப் பறிமுதல் செய்யப்பட்டது.[195] இங்கிலாந்து பூராவும் ஒருமுறை பிரயாணம் செய்த பின் எலிஸபெத் ராணி கூறினாள்: "Pauper ubique jacet."[23] அவளது ஆட்சியின் 43வது ஆண்டில், வறியோர் நலவரியொன்றைப் புகுத்தியதன் மூலம், வக்கற்ற நிலையை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும் கட்டாயத்

படும் நிலத்தின் அளவு தொழிலாளர்களுக்கு மிகவும் அதிகப்படியானதெனவும், அநேகமாக அவர்களைச் சிறு பண்ணைக்காரர்களாக மாற்றிவிடக்கூடிய தெனவும் இப்போது கணிக்கப்படும்.'' (George Roberts, *The Social History of the People of the Southern Counties of England in Past Centuries*, London, 1856, pp. 184, 185.)

195) ''திருச்சபையின் காணிக்கையில் பங்கு பெறுவதற்கு ஏழைகளுக்குள்ள உரிமை புராதனச் சட்டங்களின் தொனியால் ருசுப்பிக்கப்படுகிறது.'' (J. D. Tuckett, முன்வந்தது, பாகம் 2, பக்கங்கள் 804—805.)

திலிருந்தது. ''இச்சட்டத்தை இயற்றியோர் அதன் முகாந் திரங்களை உரைத்திட வெட்கப்பட்டிருப்பதாகத் தோன்று கிறது; எனவே (மரபு வழி வந்த வழக்கத்துக்கு மாறுக) அது முன்னுரை எதையும் கொண்டிருக்கவில்லை.''[196] முதலாம் சார்லசின் ஆட்சிக் காலத்தில் 16வது வருடத்திய 4வது சட்டத்தின் மூலம், அது நிரந்தரமானதென அறிவிக் கப்பட்டது; உண்மையில் 1834ல்தான் அது ஒரு புதிய, கடுமையான வடிவத்தை மேற்கொண்டது.[197] சீர்திருத்த

---

[196] William Cobbett, *A History of the Protestant Reformation*, § 471.

[197] புராட்டெஸ்ட்டன்ட் சமயத்தின் ''ஆன்மாவைப்'' பின்வருவதிலிருந்தும் அறியலாம். இங்கிலாந்தின் தென்பகுதி யில் சில நிலவுடமையாளர்களும் வசதிபடைத்த பண்ணை யார்களும் கூடித் திட்டம் போட்டு எலிஸபெத்தின் வறி யோர் நலச்சட்டத்தைச் சரியாக பொருள் விளக்கம் செய் வது பற்றிப் பத்து பிரச்சினைகளை முன்வைத்தனர். இவற்றை அவர்கள் அக்காலத்தில் புகழ் மிக்க சட்ட நீதி நிபு ணர், சர்ஜண்ட் ஸ்னிஜ் (பின்னர் முதலாம் ஜேம்ஸ் ஆட்சி யில் நீதிபதியாக இருந்தவர்) என்பவரிடம் அபிப்பிராயம் கேட்டுச் சமர்ப்பித்தனர். ''பிரச்சினை 9: வட்டாரத்தில் அதிகம் செல்வம் படைத்த பண்ணையார்கள் சிலர் இந்தச் சட்டத்தைச் செயலாக்குகின்ற தொல்லை முழுவதையும் தவிர்ப்பதற்குரிய திறமை மிக்க முறையொன்றைக் கண்டு பிடித்துள்ளனர். நாம் வட்டாரத்தில் ஒரு சிறையை நிறுவு வோம்; இந்த சிறையில் தண்டனையை அனுபவிக்க ஒப்புக் கொள்ளாத ஒவ்வொரு ஏழைக்கும் உதவி மறுக்கப்பட வேண்டும். பின்னர் யாராவது இவ்வட்டாரத்தின் ஏழைகளை விவசாய வேலைக்கு அமர்த்த நாட்டங்கொண்டால், அவர் கள் நம் கையிலிருந்து அந்த ஏழைகளை எடுத்துக்கொள்ள விரும்பும் குறைந்தபட்ச விலை பற்றி ஒரு குறிப்பிட்ட தினத் தில் உறையிலிடப்பட்ட யோசனைகளை அளிக்கட்டும் என் றும், மேற்குறிப்பிட்ட சிறையில் அடைக்கப்பட்டிராவிட் டால் எவருக்கும் வேலை மறுக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும் என்றும் அண்டைப்புறத்தில் அறிவிப்புச் செய்வோம் என்று அவர்கள் யோசனை கூறியுள்ளனர். இத் திட்டத்தை முன்மொழிந்திருப்போர், அண்டையிலுள்ள மாவட்டங்களில் உழைப்பதற்கு விருப்பம் இல்லாததாலும், உழைக்காமல் வாழ்வதற்காக (so as to live without labour) ஒரு பண்ணையோ கப்பலோ வாங்குவதற்கு பசையில்

இயக்கத்தின் இந்த உடனடி விளைவுகள் அதன் மிகமிக நீடித்து நிற்கக் கூடிய விளைவுகளாக இருக்கவில்லை. திருச் சபையின் சொத்து நிலச்சொத்தின் பாரம்பரியமான உறவு

லாததாலும் அல்லது கடன் கிடைக்காததாலும் வட்டார நிர்வாகத்துக்கு மிக அனுகூலமான விதத்தில் பேரம் செய்யுமாறு தூண்டப்படக் கூடிய நபர்கள் கிடைப்பர் எனக் கருதுகின்றனர். ஏழைகள் யாரேனும் கான்டிராக்டரின் பொறுப்பில் மடிந்தால், அந்தப் பாவம் அவனைச் சுற்றும்; ஏனென்றால் அவர்களுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையை வட்டார நிர்வாகம் செய்துவிட்டது. ஆயினும், தற்போதைய சட்டம் இம்மாதிரியான முன்யோசனையுள்ள நடவடிக்கை (prudential measure) எதையும் உத்தரவாதப்படுத்தாது என்று நாங்கள் அஞ்சுகிறோம்; ஆனால் இந்த மாவட்டத்தினுடையவும் அண்டை மாவட்டங்களினுடையவும் சுதந்திர நிலவுடமையாளர்களில் மீதப்பகுதியினர், ஏழைகளைப் பூட்டி வைத்து வேலை வாங்குவதற்கு ஒரு நபருடன் வட்டார நிர்வாகம் ஒப்பந்தம் செய்துகொள்வதைச் சாத்தியமாக்கவும், இப்படிப் பூட்டி வைத்து வேலை வாங்கப்படுவதற்கு எந்த நபராவது மறுப்பு தெரிவித்தால், எந்த நிவாரணம் பெறுவதற்கும் அவனுக்கு அருகதையில்லை என அறிவிப்பதற்கும் ஒரு சட்டத்தை முன்மொழியுமாறு தங்கள் அங்கத்தினர்களுக்கு வழி சொல்வதில் மிகமிகத் தயக்கமின்றிச் சேர்ந்து கொள்வார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். இது ஏழ்மையிலுள்ள நபர்கள் நிவாரணம் வேண்டுவதைத் தடுக்கும் (will prevent persons in distress from wanting relief), வட்டார நிர்வாகங்களை அடக்கி வைக்கும் வழியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.'' (R. Blakey, *The History of Political Literature from the Earliest Times*, London, 1855, Vol. II, pp. 84, 85.) ஸ்காட்லாந்தில் பண்ணையடிமை முறையின் ரத்து இங்கிலாந்தில் நிகழ்ந்ததை விட சில நூற்றாண்டுகள் காலந்தாழ்ந்து நடைபெற்றது. 1698லேயே கூட, சால்டூனைச் சேர்ந்த ஃப்ளெட்சர் ஸ்காட்லாந்துப் பாராளுமன்றத்தில் அறிவித்தார்: ''ஸ்காட்லாந்துப் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை 2,00,000க்குக் குறையாதெனக் கணக்கிடப்படுகிறது. குடியரசுக் கொள்கையுடைய நான் ஆலோசனையாகத் தெரிவிக்கக் கூடிய ஒரே பரிகாரம், பழைய பண்ணையடிமை நிலையை மீட்க வேண்டும் என்பதும், தம் சொந்த ஜீவனத்துக்கு வழி செய்து கொள்ள முடியாத அனைவரையும் அடிமைகள் ஆக்கிவிட

களின் மத ரீதியான அரணுக அமைந்தது. அது வீழ்ந்த துடன் இவ்வுறவுகள் இனியும் நிலைத்து நிற்க முடியாதவை யாயின.[198]

17ம் நூற்றுண்டின் கடைசிப் பத்தாண்டில் கூட, சுதந்திர விவசாயிகள் வர்க்கமான குடியானவச் சமூகத்தினர் பண்ணைக்காரர்கள் வர்க்கத்தை விட அதிக எண்ணிக்கையினராய் இருந்தனர். குரோம்வெல்லின் வலிமையின் முதுகெலும்பாக அவர்கள் அமைந்திருந்தனர்; மாகோலியின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படியே கூட, குடிகாரத் துரைமக்களோடும், தங்கள் எஜமானர்கள் ஒதுக்கித் தள்ளி விட்ட ஆசை நாயகிகளை மணந்துகொள்ள வேண்டியிருந்த நாட்டுப் புற குருமார்களான அவர்களது பணியாட்களோடும் நிறுத்திப்பார்த்தால் உயர்ந்த நிலையில் இருந்தனர். கூலி விவசாயத் தொழிலாளர்கள் கூட பொதுநிலத்தின் கூட்டு உடமையாளர்களாக இன்னமும் இருந்தனர். சுமார் 1750 வாக்கில், குடியானவச் சமூகம் மறைந்துவிட்டது.[199]

வேண்டும் என்பதும் ஆகும்.'' ஈடன் (*The State of the Poor*, Vol. I, Ch. I, pp. 60, 61) அப்படியே சொல்கிறார்: ''பிரபுத்துவப் பண்ணையடிமைத்தனத்தின் குறைவு தவிர்க்க முடியாமலே ஏழ்மையின் உதய சகாப்தமாக இருந்துள்ளதெனத் தோன்றுகிறது. பட்டறைத் தொழில்களும் வாணிபமும் நம் தேசிய வறுமையின் தாய்தந்தையாகும்.'' ''குடியரசுக் கொள்கைவாதியான'' நமது ஸ்காட்லாந்துப் பேர்வழியைப் போலவே ஈடனும் பின்வருவதில்தான் பிசகிவிடுகிறார்: விவசாயியை ஒரு பாட்டாளியாகவும், இறுதியில் வக்கற்றவனுகவும் ஆக்கியது பிரபுத்துவப் பண்ணையடிமை முறையின் ஒழிப்பல்ல, அவனது நிலச் சொத்துரிமையின் ஒழிப்பே.—பறிமுதல் வேறொரு விதத்தில் நடத்தப்பட்ட பிரான்சில், 1566ம் வருடத்திய முலேன் அவசரச் சட்டமும் 1656ம் வருடத்திய அரசாணையும் ஆங்கிலேய வறியோர் நலச்சட்டத்துக்கு இணையானவை.

198) பேராசிரியர் ரோஜர்ஸ், புராட்டெஸ்ட்டன்ட் வைதிகத்தின் நாற்றங்காலான ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராக முன்பு இருந்தவர் என்ற போதிலும், *History of Agriculture*க்குத் தனது முகவுரையில், சீர்திருத்த இயக்கத்தால் மக்கள் திரள் ஓட்டாண்டிகளாக்கப்பட்ட உண்மைக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

199) *A Letter to Sir T. C. Bunbury, Brt.: On the High Price of*

18ம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டில் விவசாயத் தொழிலாளியின் பொதுநிலத்தின் கடைசிச் சுவடும் மறைந்துபோய் விட்டது. இங்கே விவசாயப் புரட்சிக்கான சுத்தமாகப் பொருளாதார ரீதியான காரணங்களை ஒருபுறம் விட்டு வைக்கிறோம். ஈடுபடுத்தப்பட்ட பலவந்த வழிமுறைகளை மட்டுமே எடுத்தாய்கிறோம்.

ஸ்டுவர்ட் வம்ச ஆட்சியின் மீட்சிக்குப்[24] பின்னர் நிலவுடமையாளர்கள், கண்டத்தில் எங்குப் பார்ப்பினும் சட்டத்துக்குரிய சம்பிரதாயம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதான அபகரிப்புச் செய்முறையொன்றைச் சட்டவழிகளில் நடத்தினர். அவர்கள் நிலப்பிரபுத்துவ நில அனுபோகத்தை ரத்துச் செய்தனர், அதாவது அரசுக்கான அதன் கடப்பாடுகள் அனைத்தையும் தொலைத்துக் கட்டினர்; விவசாய சமூகத்தின் மீதும் மக்கள் திரளின் மீதப்பகுதியின் மீதும் வரிகள் விதித்ததன் மூலம் அரசுக்கு ''இழப்பீடு செய்தனர்'', தங்களுக்கு ஒரு நிலப்பிரபுத்துவப் பட்டத்துரிமை மட்டுமே இருந்த பண்ணைகளில் தற்காலத் தனியார்ச் சொத்துரிமைகளைத் தங்களுக்கென நிலைநாட்டிக்கொண்டனர்; இறுதியாக, ருஷ்ய விவசாய சமூகத்தின் மீது தாத்தார் போரிஸ் கோடுநோஃபின் அரசாணை[25] ஏற்படுத்திய அதே விளைவை mutatis mutandis [உரிய மாற்றங்களுடன்]

Provisions. By a Suffolk Gentleman, Ipswich, 1795, p. 4. பெரிய பண்ணைகள் முறையை வெறித்தனமாக ஆதரிப்பவரான *Inquiry into the Connection between the Present Price of Provisions and the Size of Farms etc.* (London, 1773) என்னும் நூலின் ஆசிரியரே கூட சொல்கிறார் (பக்கம் 139): ''இந்த தேசத்தின் சுதந்திரத்தை உண்மையிலேயே காப்பாற்றி வந்துள்ள மனிதர்குழாமான நமது குடியானவச் சமூகத்தின் இழப்பு குறித்து நான் மிகமிக துக்கப்படுகிறேன்; அவர்களது நிலங்கள் இப்போது ஏகபோகப் பிரபுக்களின் கைகளிலிருப்பதையும் சிறு பண்ணைக்காரர்களிடம் குத்தகைக்கு விடப்படுவதையும் பார்த்து வருத்தமடைகிறேன் நான்; பணியாட்களை விடவும் அதிகச் சிறப்பற்ற நிபந்தனைகளின் அடிப்படையில் நீங்கு நேரும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் தர்பாரில் ஆஜராகும் உத்தரவுக்குச் சித்தமாயுள்ள இச்சிறு பண்ணைக்காரர்கள் தம் குத்தகைகளை வைத்துள்ளனர்.''

ஆங்கிலேய விவசாயத் தொழிலாளியின் மீது ஏற்படுத்திய குடியேற்ற விதிகளை (laws of settlement) நிறைவேற்றினர்.

"Glorious Revolution" (''புகழ் மிக்க புரட்சி'')யானது[26] ஆரஞ்சைச் சேர்ந்த மூன்றும் வில்ஹெல்மோடு[200] கூட உபரி மதிப்பை வசப்படுத்தும் நிலப்பிரபு மற்றும் முதலாளி மார்களையும் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தியது. அவர்கள், அரசு நிலங்களைத் திருடுவதை—இதுவரையிலும் அதிகம் அடக்கமாக எப்படியோ நடத்தப்பட்டு வந்த திருட்டு களாகும் இவை—பகாசுரமானதொரு அளவில் நடை முறைப்படுத்தியதன் மூலம் புதிய சகாப்தத்தைத் துவக்கி வைத்தனர். இந்தப் பண்ணைகள் அள்ளிக் கொடுக்கப்பட் டன; மிக சல்லிசான விலைக்கு விற்கப்பட்டன; அல்லது, ஏன், நேரடியாகக் கைப்பற்றுவதன் மூலமுங்கூடத் தனியார் பண்ணைகளோடு சேர்த்துக்கொள்ளப்பட்டன.[201] இவை

[200] இந்தப் பூர்ஷ்வா கதாநாயகரின் தனிப்பட்ட ஒழுக்க சிலம் பற்றி அறிய இதுவும் உதவும்: ''1695ல் அயர்லாந் தில் ஓர்க்னீ சீமாட்டிக்கு நிலங்களைப் பெருமளவில் வழங் கியதானது மன்னரின் நேசபாவத்துக்கும் சீமாட்டியின் செல் வாக்குக்கும் ஓர் வெளிப்படையான எடுத்துக்காட்டாகும்.... சீமாட்டி ஓர்க்னீயின் பிரியமேற்படுத்தும் செல்வாக்கு இது வென்று அனுமானிக்கப்படுகிறது—foeda labiorum ministeria [ஒழுக்கக் கேடான காதல் சேவைகள்].'' (பிரிட்டிஷ் பொருட்காட்சி நிலையத்தில் ஸ்லொவுன் கையெழுத்துச் சுவடித்திரட்டில், எண் 4224. கையெழுத்துச் சுவடிக்கு இடப்பட்டுள்ள தலைப்பு: *The Character and Behaviour of King William, Sunderland etc. as represented in Original Letters to the Duke of Shrewsbury from Somers, Halifax, Oxford, Secretary Vernon etc.* இது சுவாரஸ்யம் நிறைந்ததாய் உள்ளது.)

[201] ''பகுதி விற்பனையின் மூலமும் பகுதி கொடை யின் மூலமும் முடியாட்சியின் பண்ணைகளைச் சட்டவிரோத மாகப் பராதீனம் செய்தது ஆங்கிலேய வரலாற்றில் ஓர் ஊழல் அத்தியாயமாகும்... தேசத்துக்கெதிரான பெரிய தோர் மோசடியாகும்.'' (F. W. Newman, *Lectures on Political Economy*, London, 1851, pp. 129, 130.) [இங்கிலாந்தில் தற்போ துள்ள பெரிய நிலவுடைமையாளர்கள் தங்கள் வசமுள்ள உடைமைகளைப் பெற்றதெவ்வாறு என்பது பற்றிய விவ ரங்களறிய பார்க்க *Our old Nobility. By Noblesse Oblige*, London, 1879.—பி.எ.]

யனைத்தும் சட்ட சம்பிரதாயங்கள் துளியும் அனுஷ்டிக்கப் படாமல் நிகழ்ந்தன. இவ்வாறு மோசடி செய்து வசப் படுத்தப்பட்ட அரசு நிலங்களும் திருச்சபைப் பண்ணை களின் கொள்ளையுமாகச் சேர்ந்து—இவை குடியரசுப் புரட்சிக் காலத்தில் மீண்டும் இழக்கப்பட்டிடவில்லை என்ற அளவுக்கு—ஆங்கிலேயச் சிறு குழுவாதிக்கத்தின் இன்றைய ராஜிய ஆதிக்க மண்டலங்களின் அடிப்படையாக அமைகின் றன.[202] மற்ற நோக்கங்களோடு கூட, நிலத்தில் சுதந் திர வர்த்தகத்தை வளர்ப்பது, பெரும் பண்ணை முறை யிலான தற்கால விவசாயத்தின் ஆளுகையை விஸ்தரிப்பது, தங்கள் கைக்குக் கிடைக்கத் தயாராயிருக்கக் கூடிய சுதந் திர விவசாயப் பாட்டாளிகளின் சப்ளையை அதிகரிப்பது, முதலிய நோக்கங்களோடும் பூர்ஷ்வா முதலாளிகள் இந்த நடவடிக்கையை ஆதரித்தனர். இஃதன்னியில், புதிய நிலம் படைத்த உயர்குலமானது, புதிதாகப் பிறந்திருந்த நிதி மூலயான புதிய வங்கியாட்சியினுடையவும், அப்போது காப்பு வரிகளைச் சார்ந்திருந்த பெரும் தொழிலதிபர்களு டையவும் இயற்கையான கூட்டாளியாக இருந்தது. செய் முறையைத் தலைக்கீழாக்கி, தங்களது பொருளாதார நேச சக்திகளான விவசாயிகளுடன் கைகோர்த்து நின்று ஆதிக்கச் சிறு குழுவினரிடமிருந்து இவர்கள் கொள்ளையடித்த (இது 1604 முதல் பத்தாம் கார்ல் ஆட்சியிலும், பதினே ராம் கார்ல் ஆட்சியிலும் நிகழ்ந்தது) அரண்மனை நிலங் களைப் பலவந்தமாகத் திரும்பப் பெறுவதில் மன்னர்களுக்கு உதவிய ஸ்வீடன் நாட்டு முதலாளி வர்க்கத்தைப் போலவே ஆங்கிலேய முதலாளி வர்க்கமும் முற்றிலும் தன் சொந்த நலனுக்காகவே புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டது.

சமூகக் கூட்டுச் சொத்து—சற்றுமுன் எடுத்தாளப்பட்ட அரசுச் சொத்திலிருந்து எப்போதுமே வேறானது—நிலப் பிரபுத்துவம் என்ற திரையின் பின்னால் ஜீவித்து வந்த ஒரு

---

202) உதாரணத்துக்குப் படிக்க, பெட்மோபார்டின் கோம கன் இல்லம் பற்றி ஏ. பார்க்கின் துண்டுப் பிரசுரம்; இக்கோ மகன் போட்ட குட்டிதான் "the tomtit of liberalism" ["மித வாதத்தின் குருவி"] எனப்படும் ஜான் ரஸ்ஸல் பிரபு.

பண்டைய ஜெர்மன் அமைப்பாகும். பொதுவாகப் பயிர் நிலத்தை மேய்ச்சல் நிலமாக மாற்றுவதை உடன் கொணர்கின்ற இச்சொத்தின் பலவந்த அபகரிப்பு 15ம் நூற்றாண்டின் முடிவில் தொடங்கி 16ம் நூற்றாண்டில் நீண்டு செல்வது எப்படி என்பதை நாம் பார்த்துள்ளோம். ஆனால் அந்த நேரத்தில் இச்செய்முறை தனிப்பட்ட வன்முறைச் செயல்களின் மூலம் நிறைவேற்றப்பட்டது; இவ்வன்முறைக்கெதிராக நூற்று ஐம்பது ஆண்டுகளாகச் சட்டமியற்றிப் போராடியது விழலுக்கிறைத்த நீரானது. பெரும் பண்ணையார்கள் தங்களது சுயேச்சையான சிறு முறைகளையும் பயன்படுத்திக் கொண்ட போதிலும், சட்டமே மக்களின் நிலத்தைத் திருடுவதற்கான கருவியாக இப்போது ஆகிறது என்பதிலேயே 18ம் நூற்றாண்டு கண்ட முன்னேற்றம் வெளிப்படுகிறது.[203] "Bills for Inclosures of Commons" (பொதுநிலங்களின் அடைப்புகளுக்கான சட்டங்களின்) வடிவமே, வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மக்களைப் பறிமுதலுக்காளாக்கும் ஆணைகளான, நிலக்கிழார்கள் மக்களின் நிலத்தைத் தனியார்ச் சொத்தாகத் தங்களுக்குத் தாங்களே வழங்கிக்கொள்வதற்கான ஆணைகளின் வடிவமே பாராளுமன்ற ரீதியான கொள்ளை வடிவமாகும். சர் எஃப். எம். ஈடன், சமூகக் கூட்டுச் சொத்தை, நிலப்பிரபுத்துவ உயர்குடியினர்களினிடத்தை மேற்கொண்டுள்ள பெரிய நிலச்சு

---

203) "குடிசைவாசிகள் மிருகங்களையோ கோழிகளையோ வளர்த்தால், அவர்கள் அவற்றுக்குத் தீனி போடுவதற்காகப் பண்ணையார்களின் களஞ்சியங்களிலிருந்து திருடுவார்கள் என்ற பொய்ச்சாக்கில், குடிசைவாசிகள் தம்மையும் தம் குழந்தைகளையும் தவிர வேறெந்த உயிர்ப் பிராணிகளையும் வளர்ப்பதைப் பண்ணையார்கள் தடை செய்தனர்; குடிசைவாசிகளை ஏழ்மையிலேயே இருக்க வை, அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பார்கள் என்றும் இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பண்ணையார்கள், பொதுச் சொத்துக்கான உரிமை முழுவதையும் தமக்கென்றே வைத்துக்கொள்ளலாம் என்பதே எதார்த்த உண்மையென நான் நம்புகிறேன்." (*A Political Inquiry into the Consequences of Enclosing Waste Lands*, London, 1785, p. 75.)

வான்களின் தனியார்ச் சொத்தாகக் காட்ட முயல்கின்ற தன் சொந்த வஞ்சகமான விசேஷ வாதத்தை, ''பொது நிலங்களின் அடைப்புக்கான பொதுவான பாராளுமன்றச் சட்டம்'' ஒன்று வேண்டுமெனக் கோருவதன் மூலமும் (இதன் மூலம், அதனைத் தனிச் சொத்தாக்க ஒரு பாராளுமன்ற அதிரடி நடவடிக்கை அவசியமென்பதை அவர் ஒப்புக்கொள் கிறார்), பறிமுதலுக்காளாக்கப்பட்ட ஏழைகளுக்கு ''இழப் பீடு'' செய்யுமாறு கோருவதன் மூலமும் தானே மறுதலிக் கிறார்.[204])

சுதந்திரக் குடியானவனின் இடத்தை வருடாந்தரக் குத் தகை ஒப்பந்தம் செய்துகொள்ளும் சிறு பண்ணைக்காரர் களான tenants-at-will — நிலச்சுவான்தார்களின் மன திருப்தியைச் சார்ந்திருந்த ஒரு தொண்டூழியத்தன்மையுள்ள கூட்டம் இது—மேற்கொண்ட அதே நேரத்தில், சமூகக் கூட்டு நிலங்களின் திட்டமிட்டாற்போன்ற கொள்ளையா னது, அரசு நிலங்களின் திருட்டுக்கு அடுத்தபடி, 18ம் நூற்றாண்டில் மூலதனப் பண்ணைகள்[205]) அல்லது வணிகப் பண்ணைகள்[206]) என்றழைக்கப்பட்ட பெரிய பண்ணைகளை விரிவடையச் செய்வதற்கும், விவசாய ஜனக்கூட்டத்தைப் பட்டறைத் தொழிலுக்கான பாட்டாளிகளாக ''விடுவிப் பதற்கும்'' குறிப்பாக உதவியது.

ஆயினும் தேசியச் செல்வத்துக்கும் மக்களின் வறுமைக் கும் இடையிலிருந்த ஒற்றுமையை 19ம் நூற்றாண்டின் அள வுக்கு முழுமையாக 18ம் நூற்றாண்டு கண்டுகொள்ளவில்லை. ''பொதுநிலங்களின் அடைப்பு'' பற்றி அக்காலத்திய பொரு ளாதார இலக்கியத்தில் மிகமிக உக்கிரமான சொற்போர் நடப்பது இதனுலேயே. என் முன்னர் கிடக்கின்ற திரளான

---

204) Eden, முன்வந்தது, முகவுரை.

205) "Capital farms." (*Two Letters on the Flour Trade and the Dearness of Corn. By a Person in Business*, London, 1767, pp. 19, 20.)

206) "Merchant farms." (*An Enquiry into the Causes of the Present High Price of Provisions*, London, 1767, p. 11, Note.) அனுமதேய மாகப் பிரசுரிக்கப்பட்ட இந்த அற்புதமான நூலை எழுதி யவர் மறைதிரு நதேனியல் ஃபோர்ஸ்டர் ஆவார்.

விஷயாதாரங்களிலிருந்து, அக்காலத்திய சூழ்நிலைகளை மிகப் பளிச்சென்று காட்டும் சில எடுகோள்களை நான் தருகிறேன். எரிச்சலடைந்த ஒரு நபர் எழுதுகிறார்: ''ஹெர்ட்ஃபோர்டுஷயரைச் சேர்ந்த பல வட்டாரங்களில், சராசரியில் 50—150 ஏக்கருடைய 24 பண்ணைகள் மூன்று பண்ணைகளாக ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.''[207] ''நார்த்தாம்ப்டன்ஷயரிலும் லீசெஸ்டர்ஷயரிலும் பொதுநிலங்களின் அடைப்பு மிகப்பெருமளவில் நடைபெற்றுள்ளது; இவ்வடைப்பிலிருந்து விளைகின்ற புதிய ஜமீன்களில் பெரும்பாலானவை மேய்ச்சல் வெளியாக மாற்றப்பட்டுள்ளன; இதன் விளைவாக, முன்னதாக ஆண்டுக்கு 1,500 ஏக்கர் நிலம் உழுவிலிருந்த பல ஜமீன்களில் இப்போது 50 ஏக்கர் கூட உழுவிலில்லை. முந்தைய குடியிருப்பு வீடுகள், தானியக் களஞ்சியங்கள், லாயங்கள் முதலானவற்றின் இடிபாடுகளே'' முந்தைய வாசிகளின் ஏகச்சுவடுகளாகும். ''சில திறந்த வயல் கிராமங்களில் ஒரு நூறு இல்லங்களும் குடும்பங்களும்... 8 அல்லது 10ஆக பல்டியடித்துள்ளன.... 15 அல்லது 20 ஆண்டுகளாக மட்டுமே அடைக்கப்பட்டுள்ள பெரும்பாலான வட்டாரங்களில் நிலவுடமையாளர்கள், திறந்த வயல் நிலையில் அவற்றிலிருந்தோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுமிடத்து மிகச் சிலரேயாவர். முன்னர் 20 அல்லது 30 பண்ணைக்காரர்களின் கைகளிலும் அத்தனை சிறு குத்தகைதாரர்கள் மற்றும் உடமையாளர்களின் கைகளிலும் இருந்த பெரும் அடைப்பு ஜமீன் ஒன்றை 4 அல்லது 5 செல்வம் படைத்த கால்நடையதிபர்கள் அமிழ்த்திவிடுவது அசாதாரணமான விஷயமல்ல. இதன் மூலம் இவர்களனைவரும் அவர்களது குடும்பத்தினரும், பிரதானமாக அவர்களிடம் வேலை பெற்று அவர்களால் ஆதரிக்கப்பட்ட மற்றும் பல குடும்பங்களும் வாழ வழியற்றோராக்கப்படுகின்றனர்.''[208] வீண் கிடந்த நிலம் மட்டுமல்ல, பலநேரங்களில்,

---

207) Thomas Wright, *A Short Address to the Public on the Monopoly of Large Farms*, 1779, pp. 2, 3.

208) Rev. Addington, *Inquiry into the Reasons for or against Inclosing Open Fields*, London, 1772, pp. 37-43 passim.

ஒன்று பொதுவில் சாகுபடி செய்யப்பட்ட, அல்லது சமூகத்துக்கு ஒரு திட்டமான குத்தகை செலுத்தி வைத்துக்கொள்ளப்பட்ட நிலமும் அடைப்பு என்ற நொண்டிச்சாக்கின் பேரில் அண்டைப்புற நிலச்சுவான்தார்களால் பிடித்துச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ''இங்கே நான் கருத்தில் கொண்டிருப்பது ஏற்கெனவே அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வயல்கள் மற்றும் நிலங்களின் அடைப்புகளேயே. இந்தச் சுருங்கிய கிராமங்கள் பண்ணைகளின் ஏகபோகங்களே ஆதரிக்கின்றன, பலசரக்குகளின் விலைகளே உயர்த்துகின்றன, ஜனக் குறைப்பை உண்டாக்குகின்றன என்பது அடைப்புகளுக்கு ஆதரவாக வாதாடும் எழுத்தாளர்களாலேயே ஒப்புக்கொள்ளப்படுகிறது.... இப்போது நடத்தப்படும் விதத்தில் வீண் நிலங்களின் அடைப்பே கூட ஏழைகளிடமிருந்து அவர்களது ஜீவனத்தின் ஒரு பகுதியைப் பறித்துக்கொள்வதன் மூலம் அவர்களைக் கடுமையாக நெருக்குகிறது, ஏற்கெனவே அதிகப்படியாகப் பெருத்துப்போயுள்ள பண்ணைகளை அதிகரிக்கவே வழிசெய்கிறது.''[209] டாக்டர் பிரைஸ் சொல்கிறார்: ''இந்த நிலம் ஒருசிலரான பெரும் பண்ணையார்களின் கைகளில் போய்ச் சேரும் போது, சிறு பண்ணை விவசாயிகள்'' (''தாங்கள் வைத்துள்ள பூமியின் விளை பயனில், பொதுவில் வளர்க்கப்படும் ஆடுகளால், கோழி, பன்றி முதலான வற்றால் தம்மைப் பராமரித்துக் கொள்வோரும், எனவே ஜீவனோபாயங்கள் எதையும் வாங்குவதற்கு அதிகம் சந்தர்ப்பமில்லாதோருமான பற்பல சிறுவுடமையாளர்களும் குத்தகைதாரர்களும்'' என்று முன்னதாக அவரால் குறிக்கப்பட்டோர்), மற்றவர்களுக்காக வேலை செய்வதன் மூலம் தங்கள் ஜீவனத்தைச் சம்பாதிக்கின்ற, தங்களுக்கு வேண்டியதனைத்துக்கும் சந்தைக்குச் செல்லும் அவசியத்துக்காளா

---

[209] Dr. R. Price, முன்வந்தது, பாகம் II, பக்கங்கள் 155, 156. ஃபோர்ஸ்டர், ஆடிங்டன், கெண்ட், பிரைஸ், ஜேம்ஸ் ஆண்டர்ஸன் ஆகியோர் எழுதியவற்றைப் படித்துப்பார்த்து, பின்வரும் தனது பட்டியல் நூலில் முகத்துதி செய்பவனை மக்காலோக் பரிதாபமாக உளறுவதுடன் ஒப்புநோக்க வேண்டும்: *The Literature of Political Economy*, London, 1845.

கின்ற ஒரு மனிதக் கூட்டமாக மாற்றப்படுவார்கள் என்பதே அதன் விளைவாக இருந்ததாக வேண்டும்.... ஒருக்கால் உழைப்பு கூடுதலாக இருக்கும்; ஏனென்றால் உழைக்குமாறு கட்டாயப்படுத்துவது கூடுதலாக இருக்கும்.... நகரங்களும் பட்டறைத் தொழில்களும் அதிகரிக்கும்; ஏனெனில் முன்னிலும் அதிகம் பேர் இடமும் வேலையும் தேடி அவற்றின்பால் துரத்தப்படுவர். பண்ணைகளைப் பெருக்குவது இயல்பாகவே செயல்படும் விதம் இதுதான். பல்லாண்டுக் காலமாக அது வாஸ்தவத்தில் இந்த நாட்டில் செயல்பட்டு வந்திருக்கும் விதம் இதுவே.''[210] அடைப்புகளின் விளைவை அவர் இவ் விதத்தில் தொகுத்துச் சொல்கிறார்: ''மொத்தத்தில் தாழ் வான அணிகளைச் சேர்ந்த ஆட்களின் சூழ்நிலைகள் அநேக மாக ஒவ்வொரு அம்சத்திலுமே இன்னும் மோசமான நிலைக்கு மாற்றப்படுகின்றன. சிறு நிலக்காரர்கள் என்ற நிலையி லிருந்து அன்றுடங்காய்ச்சிகள், கூலியாட்கள் என்ற நிலைக்கு அவர்கள் தாழ்த்தப்படுகின்றனர்; அதே நேரத்தில் அந்த நிலையில் அவர்களது ஜீவனம் முன்னிலும் கஷ்டமானதாய் ஆகியுள்ளது.''[211] உள்ளபடியே, பொதுநிலங்களின் அபக ரிப்பும் அது உடன் கொணர்ந்த விவசாயப் புரட்சியும் விவ சாயத் தொழிலாளர்களை எந்த அளவுக்குக் கூர்மையாகப் பாதித்தனவென்றால், ஈடனின் கூற்றுப்படியே 1765க்கும்

---

210) Dr. R. Price, முன்வந்தது, பக்கம் 147.

211) Dr. R. Price, முன்வந்தது, பக்கம் 159. பண்டை ரோமாபுரி நம் நினைவுக்கு வருகிறது. ''பிரிவினை செய்யப் படாத நிலத்தில் பெரும்பாலான பகுதியைப் பணக்காரர் கள் வசப்படுத்தியிருந்தனர். இந்த உடமைகள் தம்மிட மிருந்து திரும்பவும் எடுத்துக்கொள்ளப்பட மாட்டா என்று அவர்கள் அக்காலத்தின் நிலைமைகளில் நம்பிக்கை வைத் தனர்; எனவே தங்கள் நிலத்துக்கு அருகாமையிலிருந்த வையும் ஏழைகளுக்குச் சொந்தமாயிருந்தவையுமான நிலத் துண்டுகளில் சிலவற்றை, அவற்றின் சொந்தக்காரர்களின் சம்மதத்துடனும் சிலவற்றைப் பலவந்தமாகவும் வாங்கிக் கொண்டனர்; இதனால் இப்போது அவர்கள் தனித்தொ துங்கிய வயல்களுக்குப் பதிலாக விரிவாக விஸ்தாரமடைந்த ஜமீன்களைச் சாகுபடி செய்துகொண்டிருந்தனர். பின்னர் அவர்கள் விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் அடிமை

1780க்கும் இடையில் அவர்களது கூலிகுறைந்தபட்சத்துக்கும் கீழாக வீழத் தொடங்கியது; அதிகாரப்பூர்வ வறியோர் நலச் சட்ட நிவாரணத்தின் மூலம் அதனை நிறைவு செய்ய வேண்டியிருந்தது. அவர்களது கூலி, ''வாழ்க்கைக்கு முற்றிலும் அவசியமான பொருட்களுக்குப் போதுமான அளவை விட அதிகமாக இருக்கவில்லை'' என்று அவர் சொல்கிறார்.

அடைப்புகளை ஆதரிப்பவரும் டாக்டர் பிரைசை எதிர்ப்பவருமான ஒருவர் கூறுவதைச் செவிமடுப்போமாக: ''ஆட்கள் திறந்த வயலில் தமது உழைப்பை விரயம் செய்து கொண்டிருப்பது காணப்படவில்லை என்பதால் ஜனக் குறைப்பு இருந்தே ஆக வேண்டும் என்பது ஒரு அவசிய விளைவல்ல.... சிறு பண்ணைக்காரர்களை மற்றவர்களுக்காக

களை அமர்த்தினர்; ஏனென்றால் சுதந்திரப் புருஷர்கள் உழைப்புப் பணியிலிருந்து ராணுவப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பார்கள். அடிமைகள் ராணுவப் பணியிலிருந்து விலக்கு பெற்றிருந்தபடியால் சுதந்திரமாக இனப் பெருக்கம் செய்யவும் ஏராளம் குழந்தைகள் பெறவும் முடிந்தது என்பதால், அடிமைகள் என்ற உடமை அவர்களுக்குப் பெரும் லாபத்தை ஈட்டித் தந்தது. இவ்வாறு அதிகாரச் சக்தி மிக்கவர்கள் செல்வம் அனைத்தையும் தம் பக்கம் ஈர்த்துக் கொண்டனர்; நிலம் பூராவிலும் அடிமைகள் மொய்த்தனர். மறுபுறம் இத்தாலியர்கள் வறுமையாலும் வரிகளாலும் ராணுவச் சேவையாலும் அழிக்கப்பட்டதால், அவர்களின் எண்ணிக்கை எப்போதுமே குறைந்து கொண்டிருந்தது. சமாதானக் காலங்கள் வந்த போதுங்கூட பரிபூரணமாகச் செயலற்றிருப்பதே அவர்கள் தலையெழுத்தாக இருந்தது; ஏனென்றால் பணக்காரர்கள் பூமியைத் தம் வசப்படுத்தியிருந்தனர், உழவு வேலைக்குச் சுதந்திரப் புருஷர்களுக்குப் பதிலாக அடிமைகளைப் பயன்படுத்தினர்.'' (Appian, *Römische Bürgerkriege*, I, 7.) இந்நூற்பகுதி லிசீனிய சின் சட்டங்களுக்கு[27] முந்திய காலத்தைக் குறிக்கிறது. ரோமானியக் கீழ்மக்களின் (பிளெபியர்கள்) நாசத்தை இவ்வளவு பெருமளவுக்கு அவசரப்படுத்திய ராணுவச் சேவை மாபெரும் சார்லசுக்கு, சுதந்திர ஜெர்மானிய விவசாயிகளைப் பண்ணையடிமைகளாகவும் கொத்தடிமைகளாகவும் மாற்றியமைத்திடக் கையாண்ட பிரதான உபாயமாக இருந்தது.

உழைக்க வேண்டிய ஒரு மனிதக்குழாமாக மாற்றுவதன் மூலம் கூடுதலான உழைப்பு உண்டாக்கப்படுகிறது என்றால், தேசம்'' (மாறிவந்தவர்கள் இதைச் சேர்ந்தவர்களில்லைதான்) ''வேண்டி விரும்ப வேண்டிய ஓர் அனுகூலமிது.... அவர்களது கூட்டு உழைப்புகள் ஒரு பண்ணையில் ஈடுபடுத்தப்படும் போது உற்பத்தி கூடுதலாகி, பட்டறைத் தொழில்களுக்கு ஒரு உபரியிருக்கும்; இதைக் கொண்டு தேசத்தின் செல்வச் சுரங்கங்களில் ஒன்றான பட்டறைத் தொழில்கள், உற்பத்தி செய்யப்படும் தானியத்தின் அளவுக்கான விகிதாச்சாரத்தில் பெருகும்.''[212])

''புனிதமான சொத்துரிமைகளை'' மிகமிக மானங்கெட்ட முறையில் மீறுவதையும் நபர்களின் பால் மிகமிக அப்பட்டமான வன்முறைச் செயல்களையும், இவை முதலாளித்துவ உற்பத்தி முறையின் அஸ்திவாரங்களை இடுவதற்குத் தேவையெனில், அரசியல் பொருளாதார அறிஞன் நிலைகுலையாத மன அமைதியுடன் நோக்குவதை, ''பரோபகாரியும்'' அதோடு டோரியுமான சர் எஃப். எம். ஈடன் காட்டுகிறார். 15ம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதி முதல் 18ம் நூற்றாண்டின் முடிவு வரை மக்களைப் பலவந்தமாக ஓட்டாண்டிகளாக்கியதோடு சேர்ந்துவந்த தொடர்வரிசையான திருட்டுகளும் அட்டகாசங்களும் மக்கள் துயரும் அவரை வெறுமனே பின்வரும் ''ஆறுதலான'' முடிவுக்கு இட்டுச்செல்கின்றன: ''பயிர் நிலத்துக்கும் மேய்ச்சல் நிலத்துக்குமிடையில் தக்க (due) விகிதாச்சாரத்தை நிறுவ வேண்டியிருந்தது. 14ம் நூற்றாண்டு முழுவதிலும் 15ம் நூற்றாண்டின் பெரும் பகுதியிலும் 2, 3, ஏன் 4 ஏக்கர் பயிர் நிலத்துக்கு ஒரு ஏக்கர் மேய்ச்சல் நிலமொன்றிருந்தது. 16ம் நூற்றாண்டின் மத்தி

---

212) *An Inquiry into the Connection between the Present Price of Provisions etc.*, pp. 124, 129. இதே மாதிரியான விளைவை, ஆனால் ஒரு எதிர்மாறான சுபாவத்துடன் காண்பதற்கு: ''தொழிலாளர்கள் அவர்களது குடிசைகளிலிருந்து விரட்டப்பட்டு வேலை தேடி நகரங்களுக்குள் நெட்டித்தள்ளப்படுகின்றனர்; ஆனால் பின்னர் கூடுதலான ஒரு உபரிகிடைக்கிறது; இவ்வாறு மூலதனம் பெருக்கப்படுகிறது.'' (*The Perils of the Nation*, 2nd ed., London, 1843, XIV.)

வாக்கில், இவ்விகிதாச்சாரம் 2 ஏக்கர் பயிர் நிலத்துக்கு 2 ஏக்கர் மேய்ச்சல் நிலமாகவும், பிற்பாடு ஒரு ஏக்கர் பயிர் நிலத்துக்கு 2 ஏக்கர் மேய்ச்சல் நிலமாகவும் மாற்றப்பட்டது; கடைசியில் ஒரு ஏக்கர் பயிர் நிலத்துக்கு 3 ஏக்கர் மேய்ச்சல் நிலம் என்ற நியாயமான விகிதாச்சாரம் எட்டப்பட்டது''.

19ம் நூற்றாண்டில் விவசாயத் தொழிலாளிக்கும்பொதுச் சொத்துக்கும் இடையில் தொடர்பு என்ற நினைவே கூட அற்றுப்போய்விட்டிருந்தது என்பது உண்மையே. அதிகம் சமீபமான காலங்கள் பற்றி ஒன்றும் சொல்லாவிட்டாலும், 1801க்கும் 1831க்குமிடையில் விவசாய ஜன சமூகத்திடமிருந்து—நிலக்கிழார்கள் நிலக்கிழார்களிடம் சமர்ப்பித்த பாராளுமன்ற ரீதியான உபாயங்களைக் கொண்டு திருடிக்கொள்ளப்பட்ட 35,11,770 ஏக்கர் பொதுநிலத்துக்கு நஷ்ட ஈடாக அந்த ஜனங்களுக்குச் சல்லிக்காசாவது கிடைத்துள்ளதா?

இறுதியாக, விவசாய மக்களிடமிருந்து மண்ணை ஒட்டு மொத்தமாகப் பறிமுதல் செய்கின்ற கடைசிச் செய்முறை Clearing of Estates (பண்ணைகளைக் காலி செய்வது) எனப்படுவதாகும், அதாவது அவற்றிலிருந்து ஆட்களைத் துடைத்தெறிவதாகும். இதுவரையிலும் பரிசீலிக்கப்பட்டுள்ள ஆங்கிலேய முறைகள் அனைத்துமே ''காலி செய்வதில்'' உச்சங்கண்டன. தற்கால நிலைமைகள் பற்றி முன்பு ஒரு அத்தியாயத்தில் தரப்பட்ட சித்தரிப்பில் நாம் பார்த்தது போலவே, இனியும் தொலைத்துக்கட்ட வேண்டிய சுதந்திர விவசாயிகள் இல்லாத இடத்து, குடிசைகளைக் ''காலி செய்வது'' துவங்குகிறது; இதனால் தாங்கள் சாகுபடி செய்யும் பூமியில் தங்கள் சொந்த வீட்டு வசதிக்கு அவசியமான பற்றை நிலங்கூட விவசாயத் தொழிலாளிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் எதார்த்தத்திலும் முறையாகவும், "Clearing of Estates" குறிப்பது என்ன என்பதைத் தற்கால அழகியலின் சத்திய பூமியான ஸ்காட்லாந்து மேட்டு நிலங்களில் மட்டுமே நாம் கற்கிறோம். திட்டமிட்டாற்போன்ற தன்மையாலும் ஒரேயடியில் அது நிறை

வேற்றப்படுகின்ற வீச்சின் அளவாலும் (அயர்லாந்தில் ஒரே தடவையில் பல கிராமங்களைத் துடைத்தெறியுமளவுக்கு நிலக்கிழார்கள் சென்றுள்ளனர்; ஸ்காட்லாந்து மேட்டு நிலங்களில்; ஜெர்மானிய சமஸ்தானங்களின் அளவுக்குப் பெரிய பரப்புகளில் காரியம் நடந்தது), இறுதியாகக் கையாடிவந்த நிலங்கள் வைத்துக்கொள்ளப்படும் விசேஷச் சொத்து வடிவத்தாலும் இச்செய்முறை அங்கே வேறு படுத்திக் காட்டப்படுகிறது.

ஸ்காட்லாந்து மேட்டு நில கெல்டுகள் கணங்களாக அமைந்திருந்தனர்; இக்கணம் ஒவ்வொன்றும் அது குடியமர்ந் திருந்த நிலத்துக்குச் சொந்தக்காரராயிருந்தது. இங்கிலாந் தின் ராணி தேசத்து நிலம் முழுவதற்கும் பட்டப்பெயரள விலான சொந்தக்காரியாக இருப்பது போலவே, கணத் தின் பிரதிநிதியான அதன் தலைவர் அல்லது ''பெரியவர்'' இந்தச் சொத்தின் பெயரளவுச் சொந்தக்காரராக மட்டுமே இருந்தார். இந்தப் ''பெரியவர்களின்'' உள் யுத்தங்களையும் ஸ்காட்லாந்து தாழ்நிலை சமவெளிகளினுள் அவர்களது இடையறு படையெடுப்புகளையும் ஒடுக்குவதில் ஆங்கிலேய அரசாங்கம் வெற்றி கண்ட போது, கணத் தலைவர்கள் கொள்ளைக்காரர்களென்ற தங்களது தொன்றுதொட்ட தொழிலை எவ்விதத்தும் கைவிடவில்லை; அதன் வடிவத்தை மாற்றிக்கொண்டனர், இவ்வளவுதான். தம் சொந்த அதி காரத்தின் பேரில் அவர்கள் தங்களது பெயரளவிலான உரி மையை ஒரு தனிச் சொத்துரிமையாக மாற்றிக்கொண் டனர்; இதனால் கணத்தைச் சேர்ந்தவர்களோடு மோதல் ஏற்பட்டதால், வெளிப்படையான பலாத்காரத்தின் மூலம் அவர்களைத் துரத்தியடிக்கத் தீர்மானித்தனர். ''இதே மாதிரி இங்கிலாந்தின் அரசர் ஒருவரும் குடிமக்களைக் கடலுக்குள் துரத்த உரிமை கொண்டாடலாம்'' என்கிறார் பேராசி ரியர் நியூமன்.[213] பிரிட்டென்டரை பின்பற்றியோரின் கடைசி எழுச்சிக்குப்[28] பின்னர் ஸ்காட்லாந்தில் துவங்கிய

213) "A king of England might as well claim to drive his subjects into the sea." (F. W. Newman, முன்வந்தது, பக்கம் 132.)

இந்தப் புரட்சியின் முதல் படலங்களை ஜேம்ஸ் ஸ்டுவர்ட்,[214] ஜேம்ஸ் ஆண்டர்ஸன்[215] ஆகியோரின் எழுத்துக்களில் காணலாம். 18ம் நூற்றாண்டில் வேட்டையாடித் துரத்தப் பட்ட கேல்களை[30] கிளாஸ்கோ, மற்றும் பட்டறைத் தொழில் நகரங்களுக்குப் பலவந்தமாகத் துரத்தும் நோக் குடன், அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.[216] 19ம் நூற்றாண்டில் வழங்கி வந்த முறைக்கு[217] ஓர் உதாரணமாக, சுதர்லாந்துக் கோமகள்

---

214) ஸ்டுவர்ட் சொல்கிறார்: ''இந்த நிலங்களின் குத்த கையை'' (இந்தப் பொருளாதார இனத்தில் கணத் தலை வருக்கு டேக்ஸ்மேன்கள்[29] செலுத்தும் கப்பத்தையும் அவர் சேர்த்துக்கொள்வது பிசகாகும்) ''விஸ்தரணத்துடன் ஒப்பு நோக்கினால், அது மிகச் சிறிதாகத் தோன்றுகிறது. அதனை நீங்கள், பண்ணையை வைத்து வயிற்றைக் கழுவுவோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால், மேட்டு நிலங்களிலுள்ள ஒரு பண்ணை நல்ல, வளமான மாகாணத்தில் அதே மதிப் புள்ள இன்னொரு பண்ணையைப் போல ஒருக்கால் பத்து மடங்கு மக்களைப் பராமரிக்கிறது எனக் காண்பீர்கள்.'' (முன்வந்தது, பாகம் I, அத்தியாயம் XVI, பக்கம் 104.)

215) James Anderson, *Observations on the Means of Exciting a Spirit of National Industry etc.*, Edinburgh, 1777.

216) 1860ல் பலவந்தமாகப் பறிமுதலுக்காளான மக் கள், போலியான காரணங்களைக் காட்டி கனடாவுக்கு ஏற்று மதி செய்யப்பட்டனர். சிலர் மலைகளுக்கும் அண்டைப் புறத் தீவுகளுக்கும் ஓடிவிட்டனர், அவர்கள் போலீஸாரால் துரத்தப்பட்டு, அவர்களோடு கைகலப்பில் ஈடுபட்டு தப்பி யோடினர்.

217) ஆடம் ஸ்மித் பற்றிய விமர்சகர் புச்சானன் (1814) சொல்கிறார்: ''ஸ்காட்லாந்து மேட்டு நிலங்களில், புராதனச் சொத்து முறை நாள்தோறும் அரித்தெடுக் கப்படுகிறது.... இப்போது நிலக்கிழார் பரம்பரைக் குத் தகைதாரரை'' (இங்கே தவறுதலாகப் பயன்படுத்தப்படும் ஓர் இனம்) ''மதியாமல் அதிகபட்சம் தர முன்வருபவரிடம் தன் நிலத்தை விடுகிறார்; இப்படி நிலம் பெறுபவர் ஓர் அபிவிருத்தியாளராக இருந்தால், உடனடியான ஒரு புதிய சாகுபடி முறையை மேற்கொள்கிறார். முன்னதாகச் சிறு குத்தகைதாரர்கள் அல்லது உழைப்பாளிகள் நிலத்தில் பரவிக் கிடந்தனர்; உற்பத்திக்கேற்ற விகிதாச்சாரத்தில் மக்

நடத்திய ''காலி செய்தல்'' இங்கே போதுமானதாயிருக்கும். பொருளாதாரத்தில் நன்கு போதம் பெற்ற இப்பெண் மணி தன் அரசாங்கத்தில் அடியெடுத்து வைத்ததுமே, ஒரு தீவிரமான சிகிச்சை முறையைச் செயலாக்கவும், ஏற் கெனவே இம்மாதிரியான முந்தைய செய்முறைகளால் 15,000 ஆகக் குறைக்கப்பட்டிருந்த ஜனத்தொகை கொண்ட நாட் டுப்புறம் முழுவதையும் ஆடுமேய்க்கும் நிலமாக மாற்றவும் தீர்மானித்தார். 1814 முதல் 1820 வரை, சுமார் 3,000 குடும்பங்களான இந்தப் 15,000 குடிகளும் திட்டமிட்டாற் போன்று விரட்டி வேரறுக்கப்பட்டனர். அவர்களது கிரா மங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன, கொளுத்தப்பட்டன,

---

கள் இருந்தனர்; ஆனால் அபிவிருத்திச் சாகுபடி, அதிகரித்த குத்தகைகள் என்ற புதிய முறையின் கீழ், சாத்தியமான அளவு குறைந்தபட்சச் செலவில் சாத்தியமான அளவு அதிக பட்ச உற்பத்தி ஈட்டப்பட்டது; இந்த நோக்கத்துடன் பய னற்ற கைகள் அகற்றப்பட்டு, ஜனத் தொகையானது நிலம் பராமரிக்கக் கூடிய அளவுக்கன்றி, நிலம் வேலை கொடுக்கக் கூடிய அளவுக்குக் குறைக்கப்படுகிறது. நிலமிழந்த குத்தகை தாரர்கள் அண்டைப்புற நகரங்களில் ஜீவனம் தேடு கின்றனர்....'' (David Buchanan, *Observations on etc. A. Smith's "Wealth of Nations"*, Edinburgh, 1814, Vol. IV, p. 144.) ''மேட்டு நில ஸ்காட்லாந்தைச் சேர்ந்த உயர்பிரபுக்கள் முட்செடி களைக் களைந்தெறிவது போல குடும்பங்களை நிலமற்றோராக் கினர்; காட்டு மிருகங்களால் அவஸ்தைப்பட்ட இந்தியர் கள் அதற்குப் பழிவாங்கும் விதத்தில், புலிகள் வாழும் ஒரு காட்டின் விஷயத்தில் நடந்துகொள்வது போலவே, இவர்கள் கிராமங்களையும் அவற்றில் வாழ்ந்த மக்களையும் நடத்தினர்.... மனிதன் ஒரு ஆட்டுத் தோலுக்காக அல்லது ஆட்டிறைச்சிக்காக பண்டமாற்று செய்யப்படுகிறான்; அல்ல, இன்னும் மலிவாக மதிக்கப்படுகிறான்.... ஏன், சீனு வின் வட மாகாணங்களுக்குள் படையெடுத்து நுழைந்து விட்ட போது அங்கு வசிப்போரை நிர்மூலமாக்கவும் நிலத்தை மேய்ச்சல் வெளியாக மாற்றவும் மன்றத்தில் பிரேரித்த மொகலாயர்களின் நோக்கத்தை விடவும் எவ் வளவு படுமோசமானது இது! மேட்டு நிலச்சொத்துக் காரர்கள் பலர் இந்தப் பிரேரணையைத் தம் சொந்த நாட் டினருக்குச் செயல்படுத்தியுள்ளனர்.'' (George Ensor, *An Inquiry Concerning the Population of Nations*, London, 1818, pp. 215, 216.)

அவர்களது வயல்கள் அனைத்தும் மேய்ச்சல் வெளியாக மாற்றப்பட்டன. பிரிட்டிஷ் சிப்பாய்கள் இந்த நில வெளியேற்றத்தை அமல் செய்தனர்; அவர்கள் குடிகளோடு மோதிக் கொண்டனர். ஒரு வயோதிகப் பெண்மணி குடிசையை விட்டு வெளியேற மறுத்து, அந்தக் குடிசை எரிந்த தீயில் உயிரோடு கொளுத்தப்பட்டு மாண்டாள். இவ்விதத்தில் தான், நினைவுக்கெட்டாக் காலந்தொட்டு கணத்துக்குச் சொந்தமாயிருந்த 7,94,000 ஏக்கர் நிலத்தை இந்த நங்கை நல்லாள் வசப்படுத்தினாள். அவள், வெளியேற்றப்பட்ட குடிகளுக்குக் கடற்கரையில் சுமார் 6,000 ஏக்கர் நிலம் ஒதுக்கினாள்—குடும்பத்துக்கு 2 ஏக்கர். இந்த 6,000 ஏக்கர் நிலமும் அந்த நேரம் வரை வீணுகக் கிடந்ததாகும். அவற்றின் சொந்தக்காரர்களுக்கு அதிலிருந்து வருமானம் ஏதும் கிடைத்ததில்லை. இக்கோமகள், தன் இதயத்தின் பிரபுத்துவப் பெருந்தன்மை தாளாமல், பல நூற்றாண்டுகளாக அவளது குடும்பத்துக்காகத் தங்களது ரத்தத்தைச் சிந்திய கணத்தினருக்கு ஏக்கரொன்றுக்கு 2 ஷில்லிங் 6 பென்ஸ் சராசரி வாடகைக்கு இந்நிலத்தை விடுமளவுக்கு வாஸ்தவத்தில் நடந்துகொண்டாள். திருடப்பட்ட கண நிலம் முழுவதையும் 29 பெரிய ஆட்டுப் பண்ணைகளாகப் பிரித்தாள் அவள்; ஒவ்வொரு பண்ணைக்கும் ஒரே ஒரு குடும்பம் குடியிருந்தது; இவர்கள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கிலேயப் பண்ணையாட்களாக இருந்தனர். 1835ம் ஆண்டில் 15,000 கேல்களின் இடத்தை ஏற்கெனவே 1,31,000 செம்மறியாடுகள் பிடித்திருந்தன. மீதமிருந்த பழங்குடிகள் கடற்கரையில் பரவி மீன்பிடித்துக் காலந்தள்ள முயன்றனர். அவர்கள் நீர்-நில வாழ் ஐந்துக்களாகி, ஒரு ஆங்கிலேய நூலாசிரியர் சொல்வது போல பாதிநிலத்திலும் பாதிநீரிலும் இருப்பினும் இரண்டிலுமே பாதியாகவே வாழ்ந்தனர்.[218]

---

218) தற்போதைய சுதர்லாந்துக் கோமகள் அமெரிக்கக் குடியரசைச் சேர்ந்த நீக்ரோ அடிமைகள் பால் தனக்குள்ள அனுதாபத்தை—உள்நாட்டு யுத்தத்தின் போது தன் சக உயர்குலத்தாரோடு சேர்ந்து, விவேகத்துடன் இவள்

ஆனால் கணத்தின் ''பெரியவர்களே'' அழகியல் ரீதியாகவும் மலிவாழ்க்கைக்கேற்பவும் ஆராதித்தமைக்காகத் தைரிய மிக்க கேல்கள் அதிகம் கடுமையாகப் பிராயச்சித்தம் செய்யவேண்டியிருந்தது. அவர்களது மீனின் மணம் பெரியவர்களின் மூக்கில் ஏறியது. அதில் லாபமிருப்பதை அவர்கள் மோப்பம் பிடித்தனர்; கடற்கரையை லண்டனைச் சேர்ந்த பெரிய மீன் வியாபாரிகளிடம் வாடகைக்கு விட்டனர். இரண்டாவது தடவையாக கேல்கள் துரத்தியடிக்கப் பட்டனர்.[219]

ஆனால் இறுதியாக, ஆடு மேய்க்கும் நிலங்களின் ஒரு பகுதியும் மான் வளர்ப்பிடங்களாக மாற்றப்படுகிறது. இங்கிலாந்தில் உண்மையான காடுகள் ஏதும் கிடையாது என்பது சகலருக்கும் தெரிந்ததே. உயர்குடியினர்களின் பூங்காக்களிலுள்ள மான்கள் லண்டனைச் சேர்ந்த நகரசபை அங்கத்தினர்களைப் போல் கொழுத்த, சாதுவான வீட்டுக் கால் நடைகளாகும். எனவே ஸ்காட்லாந்து ''மேன்மக்கள் உணர்ச்சி

காட்ட மறந்துவிட்ட அனுதாபம் இது; அந்த யுத்தத்தில் ''உயர்வான'' ஆங்கிலேய இதயம் ஒவ்வொன்றும் அடிமைச் சொந்தக்காரனுக்காதரவாகத் துடித்தது—காட்டுவதற்காக *Uncle Tom's Cabin* நூலின் ஆசிரியான திருமதி பீச்சர் ஸ்டவ்வை லண்டனில் மிகக் கோலாகலமாக உபசரித்த போது, சுதர்லாந்து அடிமைகள் பற்றிய உண்மை விவரங்களை *New-York Tribune* பத்திரிகையில் நான் கொடுத்தேன்.[31] (*The Slave Trade* என்ற நூலில் கேரியால் பகுதி சுருக்கித் தரப்படுவது—Philadelphia, 1853, pp. 203, 204.) என் கட்டுரை ஸ்காட்லாந்து செய்தித்தாள் ஒன்றில் அச்சிடப்பட்டு இச்செய்தித்தாளுக்கும் சுதர்லாந்தைச் சேர்ந்த காக்காய்ப் பேர்வழிகளுக்குமிடையில் ஒரு சூடான சொற்போருக்கு இட்டுச் சென்றது.

[219] இந்த மீன் வியாபாரம் பற்றிய சுவாரஸ்யமான விவரங்கள் திரு. டேவிட் உர்காரட்டின் *Portfolio. New Series* என்பதில் காணக்கிடைக்கும்.—நாஸ்ஸா டபிள்யூ. சீனியர், ஏற்கெனவே மேற்காட்டப்பட்ட, இறந்த பின் பிரசுரிக்கப்பட்ட தனது நூலில், ''சுதர்லாந்துஷயர் நிகழ்ச்சிகளே மனிதனின் நினைவிலுள்ள மிகமிக நலம் பயக்கும் காலி செய்தல்களில் (clearings) ஒன்று'' என்றழைக்கிறார். (*Journals, Conversations and Essay relating to Ireland*, London, 1868.)

யின்'' கடைசிப் புகலிடமாகும். 1848ல் சோமர்ஸ் சொல் கிறார்: ''மேட்டு நிலங்களில், காளான்கள் முளைப்பது போல புதிய காடுகள் வளர்கின்றன. இங்கே, கெய்க்கின் ஒரு புறத்தில், புதிய கிளென்லிபஷி காடு உள்ளது. அங்கே மறு பக்கத்தில் புதிய ஆர்டுவெறிக்கிக் காடு உள்ளது. அதே வரிசையில் சமீபத்தில் உருவான பெரும் வீண் நிலமான பிளாக் மவுண்ட் உள்ளது. கிழக்கிலிருந்து மேற்காக—ஆபர் டீன் பகுதி முதல் ஒபானைச் சேர்ந்த குத்துப்பாறைகள் வரை —இப்போது காடுகளின் தொடர்ச்சியானதொரு வரிசை யைக் காணலாம்; மேட்டு நிலங்களின் மற்றப் பகுதிகளிலோ லோச் ஆர்க்கெயிக், கிளென்கார்ரி, கிளென்மாரிஸ்டன் முத லான புதிய காடுகள் உள்ளன. சிறு பண்ணைக்காரர் சமூகங் களின் இருக்கைகளாய் இருந்து வந்த குறுகிய பள்ளத்தாக்கு களில் செம்மறியாடுகள் புகுத்தப்பட்டன; சிறு பண்ணைக் காரர்கள் இன்னும் கரடுமுரடான, மலடான நிலப்பகுதி களில் ஜீவனம் தேடுவதற்குத் துரத்தப்பட்டனர். இப்போது மான்கள் ஆடுகளின் இடத்தைப் பிடிக்கின்றன: இவை சிறு குத்தகைதாரர்களை மீண்டுமொரு முறை நிலமற்றவர்களாய் ஆக்கிக்கொண்டிருக்கின்றன; இவர்கள் இன்னும் கரடுமுர டான நிலத்துக்கும் அதிகம் குடைந்தெடுக்கும் தரித்திர நிலைக்கும் அவசியம் துரத்தப்படுவார்கள். மான் காடு களும்[219*]) மக்களும் சகவாழ்வு வாழ முடியாது. இரண் டில் ஒன்று பணிந்து கொடுக்க வேண்டும். சென்ற கால் நூற் றாண்டில் போல அடுத்த கால் நூற்றாண்டிலும் காடுகள் எண் ணிக்கையிலும் விஸ்தாரத்திலும் பெருக்கப்பட்டும், கேல் கள் தம் பூர்வீக பூமியில் இல்லாதொழிவார்கள்.... மேட்டு நிலச் சொத்துக்காரர்கள் மத்தியிலான இந்த இயக்கம் சில ருக்கு அபிலாஷை சம்பந்தப்பட்டதாகும்... சிலருக்கு வீண்

219*) ஸ்காட்லாந்தைச் சேர்ந்த "deer forests" (மான் காடுகளில்) ஒரே ஒரு மரங்கூட கிடையாது. மொட்டை யான மலைக்குன்றுகளிலிருந்து ஆடுகள் விரட்டியடிக்கப் பட்டு மான்கள் விரட்டிக்கொணரப்படுகின்றன; பின் அது ஒரு "deer forest" என்று அழைக்கப்படுகிறது. மரம் நடு தல் மற்றும் உண்மையான காடு வளர்ப்பு கூட கிடையாது.

யாட்டின் பாலுள்ள ஆர்வமாகும்.... இன்னும் அதிகம் நடை முறை வார்ப்பில் உருவான மற்றவர்களோ முழுக்க முழுக்க லாபத்தைக் குறிவைத்து மான் வியாபாரம் செய்கின்றனர். ஒரு மலைத் தொடர் ஆடு மேய்க்கும் நிலமாக இருப்பதை விட காடாக ஆக்கப்படும் போது பல நேரங்களில் உரிமை யாளருக்கு அதிகம் லாபகரமாக இருப்பது ஓர் உண்மையா கும்....ஒரு மான் காடு வேண்டுமென விரும்புகின்ற வேட்டைக் காரன், தன் பணப்பையின் தடிப்பு தவிர வேறெந்தக் கண க்கீட்டாலும், தான் அளிக்க முன்வருவதற்கு வரம்பு கட்டு வதில்லை.... மேட்டு நிலங்களில் சுமத்தப்பட்டுள்ள அவஸ் தைகள் நார்மன் மன்னர்களின் கொள்கையால் நேரிட்ட அவஸ்தைகளை விட கடுமை குறைந்திருப்பது அரிதே. மான் களுக்கு விரிவான தொடர் பரப்புகள் கிடைத்துள்ளன; மனி தர்களோ குறுகிக் கொண்டே போகும் வட்டத்துக்குள் வேட்டையாடப்பட்டுள்ளனர்.... மக்களின் சுதந்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெட்டப்பட்டுள்ளன.... ஒடுக்குமுறை கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.... அமெரிக்கா அல் லது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வீண் கிடக்கும் நிலங் களிலிருந்து மரங்களும் புதர்களும் காலி செய்யப்படுவது போலவே மக்களைக் காலி செய்வதும் கலைத்தனுப்புவதும் ஒரு நிலை நின்ற கோட்பாடாக, ஒரு விவசாய அவசியமாகச் சொத்துக்காரர்களால் அனுஷ்டிக்கப்படுகின்றன; இந்நட வடிக்கை ஒரு அமைதியான, கருமமே கண்ணான முறையில் நடந்துகொண்டே போகிறது....''[220])

---

[220]) Robert Somers, *Letters from the Highlands; or, the Famine of 1847*, London, 1848, pp. 12—28 passim. இந்தக் கடிதங்கள் முதலில் *The Times* பத்திரிகையில் வெளிவந்தன. ஆங்கிலேயப் பொரு ளாதார அறிஞர்கள் 1847ல் கேல்களின் பஞ்சத்தை, அவர் களது மிகை ஜனத்தொகையைக் காட்டிவிளக்கினர் என்பது உண்மையே. எது எப்படியானலும், அவர்கள் தமது உணவு சப்ளையை ''நெருக்கிக்கொண்டிருந்தனர்''. "Clearing of Estates," அல்லது ஜெர்மனியில் அழைக்கப்படுவது போல "Bauernle gen", குறிப்பாக முப்பதாண்டுக்காலப் போருக்குப்[32] பின் னர் ஜெர்மனியில் நிகழ்ந்தது; 1790 அளவுக்குப் பிற்காலத் திலேயே கூட இது சாக்ஸனிய விவசாயக் கலகங்களுக்கு

இட்டுச் சென்றது. அது குறிப்பாகக் கிழக்கு ஜெர்மனியில் வழங்கியது. பிரஷ்ய மாகாணங்கள் பெரும்பாலானவற்றில், இரண்டாம் பிரெடெரிக் முதல் தடவையாக விவசாயி களுக்குச் சொத்துரிமை பெற்றுத் தந்தார். சைலீஸியாவை வென்ற பின்னர், குடிசைகள், களஞ்சியங்கள் முதலான வற்றைப் புனர் நிர்மாணிக்குமாறும் விவசாயிகளுக்குக் கால் நடைகள் மற்றும் கருவிகள் வழங்குமாறும் நிலப்பிரபுக் களை அவர் கட்டாயப்படுத்தினர். ராணுவத்துக்குச் சிப் பாய்களும் கஜானுவுக்கு வரி செலுத்துவோரும் வேண்டு மென அவர் விரும்பினர். மற்றபடி, பிரெடெரிக்கின் நிதி அமைப்பு முறையின் கீழும், கொடுங்கோன்மை, அதிகார வர்க்கம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் கதம்பமான அவ ரது ஆட்சியின் கீழும் விவசாயி நடத்திய ஆனந்த வாழ்க் கையை அவரை வியந்து போற்றுபவரான மிராபோவின் பின்வரும் மேற்கோளிலிருந்து காணலாம்: ''வட ஜெர்மனி யில் உள்ள விவசாயிகளின் முக்கியச் செல்வங்களில் ஒன்று ஃபிளாக்ஸாகும் ஆனல் மனித துரதிர்ஷ்டம் என்ன வெனில் இது கடைக்கோடி வறுமையிலிருந்து விடுவிக்கும் சாதனமே தவிர செல்வத்திற்கான மூல ஊற்று அல்ல. நேரடியான வரிகள், கொத்தடிமை, சகலவிதமான கடமை கள் ஆகியன குடியானவனே திவலாக்குகின்றன, போதாக் குறைக்கு குடியானவன் தான் வாங்கும் எல்லாவற்றிற்கும் மறைமுகமான வரிகளையும் செலுத்துகின்றன்.... இதைத் தவிர, அவனல் தனக்கு விருப்பமான இடத்தில் தனக்கு விருப்பமான விலைக்குத் தன் விளைபொருட்களை விற்க முடியாது; மிகப் பொருத்தமான விலைக்கு விற்க ஒப்புக் கொள்ளும் வியாபாரிகளிடம் அவனல் தனக்குத் தேவையான பொருட் களை வாங்க முடியாது. இவையனைத்தும் அவனை சிறிது சிறி தாக திவலாக்குகின்றன, அவன் நெசவு வேலையில் ஈடுபடா மலிருந்தால் அவனல் நேரடியான வரிகளைக் கட்ட முடி யாது; இது அவனுக்கு தேவையான துணைத் தொழிலாக இருக்கிறது, தன் மனைவி, குழந்தைகள், வேலையாட்களின் உழைப்பை, தன் உழைப்பை அவனல் இதில் பயன்படுத்த முடியும். ஆனல் இந்த துணைத் தொழில் இருந்தும் வாழ்க்கை எவ்வளவு பரிதாபகரமானது தெரியுமா? கோடையில் அவன் கடுஞ்சிறை தண்டனையை அனுபவிப்பது போல் உழவு வேலை யிலும் அறுவடை வேலையிலும் ஈடுபட்டிருப்பான், இரவு 9 மணிக்குப் படுத்து இரவு 2 மணிக்கு எழுந்திருப்பான், அப்போதுதான் அவனல் வேலையைச் சமாளிக்க முடியும்; குளிர்காலத்தில் அவன் நீண்ட ஓய்வெடுத்து, இழந்த தன்

சக்திகளை திரும்பப் பெற வேண்டும், ஆனால் வரிகளைச் செலுத்த தன் விளைபொருளில் ஒரு பகுதியை அவன் விற்றுத் தொட்டிக்கும் விதை விதைக்கவும் தானியம் போதாமல் போகும். எனவே இதைச் சரிகட்ட நெசவு வேலையைச் செய்ய வேண்டி நேரிடுகிறது.... அதுவும் பெரும் பாடுபட்டு நெசவு வேலையை செய்ய வேண்டும். எனவே குடியானவன் குளிர் காலத்தில் நள்ளிரவு 12 மணிக்கு அல்லது 1 மணிக்கு படுத்து காலை 5 அல்லது 6 மணிக்கு எழுந்திருப்பான், இல்லாவிடில் இரவு 9 மணிக்கு படுத்து இரவு 2 மணிக்கே எழுந்து விடுவான்—ஞாயிற்றுக் கிழமை தவிர வர்ழ்க்கை முழுவதும் ஒவ்வொரு நாளும் இதே மாதிரி.... இந்த அசாதாரணமான சுறுசுறுப்பும் அசாதாரண உழைப்பும் மனித உடலை அலைக் கழிக்கின்றன; எனவேதான் கிராமங்களில் உள்ள ஆண்களும் பெண்களும் நகரங்களில் உள்ளவர்களை விட பன்மடங்கு விரைவாக மூப்படைகின்றனர். (Mirabeau, முன் வந்தது, பாகம் III, பக்கங்கள் 212, அடுத்து வருவன.)

இரண்டாம் பதிப்புக்குக் குறிப்பு. 1866 ஏப்ரலில் மேலே மேற்கோள்காட்டப்பட்ட ராபர்ட் சோமர்சின் நூல் பிரசுரமாகி 18 ஆண்டுகள் கழிந்த பின்னர் பேராசிரியர் லியோன் லெவி ஆடுமேய்க்கும் நிலங்களை மான் காடுகளாக மாற்றுவது பற்றிக் கலைகள் சங்கத்தின்[33] முன்னர் ஓர் விரிவுரை ஆற்றினர். இவ்வுரையில் அவர் ஸ்காட்லாந்து மேட்டு நிலங்கள் பாழாவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைச் சித்தரிக்கிறார். மற்றவற்றோடு கூட இதையும் அவர் சொல்கிறார்: ''ஜனக்குறைப்பும் பயிர் நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றுவதும் செலவில்லாமல் வரவு பெற மிகமிகச் சௌகரியமான வழிகளாக இருந்தன.... ஆடுமேய்க்கும் நிலத்தினிடத்தில் ஒரு மான் காடு ஏற்படுவது மேட்டு நிலங்களில் சர்வ சாதாரணமான ஒரு மாற்றமாக இருந்தது. நிலச் சொந்தக்காரர்கள் ஒரு காலத்தில் தங்கள் பண்ணைகளிலிருந்து மனிதர்களை வெளித்தள்ளியது போல ஆடுகளை வெளித்தள்ளிவிட்டுப் புதிய குடித்தனக்காரர்களான காட்டு விலங்குகளுக்கும் சிறகுடைய பட்சிகளுக்கும் நல்வரவு கூறினர்.... மீபார்மீபார்ஷயரிலுள்ள டல்ஹௌஸி பிரபுவின் பண்ணைகளிலிருந்து ஜான்-ஓ-குரோட்சுக்கு நடந்து வந்தால் வழிநெடுகக் காட்டு நிலம்தான்.... இந்தக் காடுகள் பலவற்றில் குள்ளநரியும் காட்டுப் பூனையும் மார்டென் எனும் கீரியினமும் போல்கேட் மற்றும் வீஸல் எனும் மரநாய் வகைகளும் ஆப்ளன் முயலும் சர்வ சாதாரணமானவை; காட்டு முயல், அணில், எலி ஆகியவை சமீப காலத்தில்

இந்நாட்டுப்புறத்துக்குள் வழிகண்டு வந்துள்ளன. இவ் வாறு, எந்த நிலத்தில் அதிகப்பகுதி ஸ்காட்லாந்தின் புள்ளி விவரக் கணக்கில் மிக உயர்ந்த வர்ணனைக்குரிய செழிப்பும் பரப்புமுடைய மேய்ச்சல் வெளியென்று வர்ணிக்கப்படு கிறதோ அந்தப் பெரும் நிலப்பரப்புக்கள் சாகுபடி, அபிவி ருத்தி அனைத்துக்கும் வழிவிடாமல் அடைத்து வைக்கப்பட்டு ஆண்டின் மிகக் குறுகியதொரு காலத்துக்கு ஒருசில நபர் களின் விளையாட்டுக் கேளிக்கைக்கென்றே முழுக்க முழுக்க ஒதுக்கப்படுகின்றன.''

1866 ஜூன் 2, லண்டன் *Economist*[31] கூறுகிறது: ''சென்ற வாரத்திய ஸ்காட்லாந்து பத்திரிகையொன் றில் செய்தித் துணுக்குகளிடையே நாம் படிக்கிறோம்.... 'சுதர்லாந்துஷயரில் மிகமிக நேர்த்தியான ஆட்டுப் பண் ணைகளில் ஒன்றுக்கு, ஆண்டுக்கு 1,200 பவுன்கள் வாடகை தருவதாகச் சமீபத்தில் அழைப்பு வந்தது; இருக்கின்ற குத் தகையொப்பந்தம் இந்த ஆண்டு காலாவதியானதும் இது ஒரு மான் காடாக மாற்றப்படவிருக்கிறது.'' நார்மன் வெற்றியாளன்.... New Forestஐ சிருஷ்டிக்க 36 கிராமங்களை அழித்த போது நிலப்பிரபுத்துவ உள்ளுணர்வுகள் செயல் பட்டதற்கு வெகுவாக ஒத்தவிதத்தில்... இங்கே நிலப் பிரபுத்துவத்தின் தற்கால உள்ளுணர்வுகள் செயல்படுவதை நாம் பார்க்கிறோம்.... இரண்டு மில்லியன் ஏக்கர் நிலம்... ஸ்காட்லாந்தின் மிகமிக வளமான நிலங்கள் சிலவற்றைத் தம் பரப்பினுள் கொண்டு முற்றிலும் வீணாக்கி கிடந்தன. கிளென்டில்ட்டின் இயற்கைப் புல் பெர்த் நாட்டுப்புறத் திலேயே மிகமிகச் சத்துள்ள புல் வகைகளில் ஒன்றாகும். பென் ஆல்டர் மான் காடு விரிவான பாடினைக் வட்டத்தி லேயே மொத்தத்தில் மிகச் சிறந்த புல்வெளியாக இருந் தது; பிளாக் மவுண்ட் காட்டில் ஒரு பகுதி ஸ்காட்லாந்தில் கருமுக ஆடுகளுக்கு மிகச்சிறந்த மேய்ச்சல் வெளியாக இருந்தது. ஸ்காட்லாந்தில் சுத்தமாக விளையாட்டு நோக் கங்களுக்காகவே வீண்கிடத்தப்பட்ட பூமி பற்றி, அது பெர்த் நாட்டுப்புறம் முழுவதையும் விட பெரிய பரப்பளவைக் கொண்டிருந்தது என்ற உண்மையிலிருந்து ஓரளவு தெரிந்து கொள்ளலாம். பென் ஆல்டர் காட்டின் செல்வாதாரங்கள், கட்டாயமான பாழ்படுத்தல்களால் நேரிட்ட இழப்பு பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள உதவக் கூடும். இத்தரை 15,000 ஆடுகளுக்கு மேய்ச்சல் கொடுக்கலாம்; அது ஸ்காட்லாந்தின் பழைய வனபூமியில் முப்பதிலொரு பங்குக்கும் அதிகமாக இல்லை.... அந்தக் காட்டு நிலமனைத்தும் அந்த அளவு முழு

தைச் சூறையாடியது, அரசு ஜமீன்களை மோசடியாகப் பராதீனம் செய்தது, பொது நிலங்களைக் கொள்ளையிட்டது, நிலப்பிரபுத்துவச் சொத்தையும் கணச் சொத்தையும் அபகரித்தது, கண் மூடித்தனமான பயங்கரம் நிறைந்த சூழ் நிலைகளில் அச்சொத்தை தற்காலத் தனியார் சொத்தாக மாற்றியமைத்தது ஆகிய இவை ஆதித்திரட்சியின் அந்தனரம்மிய முறைகளே. அவை முதலாளித்துவ விவசாயத்துக்காக வயல்களைக் கைப்பற்றின, மண்ணை மூலதனத்தின் பிரிக்க முடியாக பகுதியாக்கின, நகரத் தொழில்களுக்காக ஒரு சுதந்திரமான பாட்டாளி வர்க்கத்தின் அவசிய சப்ளையைச் சிருஷ்டித்தன.

அத்தியாயம் XXVIII

15ம் நூற்றாண்டின் முடிவு முதல் பறிமுதல் செய்யப்பட்டோருக்கெதிரான கொடூரமான சட்டங்கள். சட்டங்களின் மூலம் கூலிகளைப் பலவந்தமாகக் குறைத்தல்

நிலப்பிரபுத்துவப் பணியாள் குழுக்களைக் கலைத்ததன் மூலமும் மக்களிடமிருந்து நிலத்தைப் பலவந்தமாகப் பறித்ததன் மூலமும் சிருஷ்டிக்கப்பட்டதான இந்த சுதந்திரப் பாட்டாளி வர்க்கம், உலகின் மீது கடாசப்பட்ட அளவுக்கு விரைவாக, புதிதாகப் பிறந்த பட்டறைத் தொழில்களால் உட்கிரகிக்கப்படுவது சாத்தியமாக முடியவில்லை. மறுபுறம், ஊறிப்போன தங்கள் வாழ்க்கை முறையிலிருந்து திடீரென இழுத்தெறியப்படும் இந்த மனிதர்கள் அந்த அளவுக்குத் திடீரென்று தங்கள் புதிய நிலைமையின் கட்டுப்பாட்டுக்குத் தகவமைத்துக் கொள்ள முடியாது. அவர்கள் பகுதி மன விருப்பத்தால், பெரும்பாலும் சூழல்கள் நெருக்கியதால் கூட்டம் கூட்டமாக பிச்சைக்காரர்களாக, கொள்ளையர்

மையாகவே உற்பத்திக்குதவாததாம்.... இந்த வாதப்படி, அதேபோல், இதனை ஜெர்மன் சமுத்திரத்தின் கீழ் மூழ்கடித்திருக்கலாம்.... இவ்வாறுக செயற்கையால் அமைக்கப்பட்ட வனந்தரங்கள் அல்லது பாலைவனங்கள் சட்டசபையின் நிர்மானமான தலையீட்டால் அடக்கி வைக்கப்படுவதே உசிதம்.''

களாக, நாடோடிகளாக மாற்றப்பட்டனர். 15ம் நூற்றாண்டின் முடிவிலும் 16ம் நூற்றாண்டு பூராவிலும், மேற்கு ஐரோப்பா வெங்கிலும் நாடோடித்தனத்துக்கெதிராக ஒரு கொடூரமான சட்ட நடைமுறை இருந்தது இதனால்தான். தற்போதைய தொழிலாளி வர்க்கத்தின் தந்தைமார்கள் கட்டாயத்தின் பேரில் நாடோடிகளாகவும் வக்கற்றோர் ஆகவும் மாறியதற்காகத் தண்டிக்கப்பட்டனர். சட்ட நடைமுறை அவர்களை ''இஷ்டப் பூர்வக்'' குற்றவாளிகளாக நடத்தியது; இனியும் நிலவாது போன பழைய நிலைமைகளின் கீழ் வேலை செய்து கொண்டே போவது அவர்களின் சொந்த நல்லெண்ணத்தைப் பொறுத்த விஷயம் என்று அனுமானித்துக் கொண்டது.

இங்கிலாந்தில் இச்சட்ட நடைமுறை ஏழாம் ஹென்ரி ஆட்சிக் காலத்தில் துவங்கியது.

எட்டாம் ஹென்ரி 1530: வயோதிகர்களும் வேலை செய்ய முடியாதவர்களுமான பிச்சைக்காரர்கள் பிச்சையெடுக்கும் லைசென்ஸ் பெறுவர். மறுபுறம் திடகாத்திரமான நாடோடிகளுக்குச் சவுக்கடியும் சிறைத்தண்டனையும். அவர்கள் வண்டியின் பின்பக்கத்தில் கட்டப்பட்டு, அவர்களது உடலிலிருந்து ரத்தம் குபுகுபுவென்று வரும் வரை சவுக்கால் அடிக்கப்படுவர்; பின் தாங்கள் பிறந்த இடத்துக்கு அல்லது கடந்த மூன்றாண்டுகளாகத் தாங்கள் வசித்துள்ள இடத்துக்குத் திரும்பிச் செல்வதாகவும் ''தங்களை உழைப்பில் ஈடுபடுத்திக்கொள்வதாகவும்'' (to put himself to labour) அவர்கள் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும். என்னே பயங்கர விசித்திரம்! எட்டாம் ஹென்ரியின் ஆட்சிக் காலத்தில் 27வது வருடத்திய சட்டத்தில் முந்தைய சட்டம் திரும்ப வருகிறது, ஆனால் புதிய ஷரத்துக்களைக் கொண்டு பலப்படுத்தப்படுகிறது. நாடோடித்தனத்துக்காக இரண்டாவது முறை கைதானால் சவுக்கடி மீண்டும் கிடைக்கும், பாதிக்காது துண்டிக்கப்படும்; மூன்றாவது முறை இதே குற்றம் புரிந்தால், எதிரி ஒரு இறுகிப்போன குற்றவாளியாகவும் பொது நலனின் விரோதியாகவும் கருதப்பட்டு மரணத் தண்டனை நிறைவேற்றப்படும்,

ஆரும் எட்வர்டு: யாராவது ஒருவர் வேலை செய்ய மறுத்தால், அவரை ஒரு சோம்பேறி என்றுகண்டித்துள்ள நபரிடம் அடிமையாக விடப்படுவார் என்று இவரது ஆட்சிக் காலத்தின் முதலாண்டான 1547ம் வருடத்திய சட்டமொன்று ஆணையிடுகிறது. எஜமானன் ரொட்டியும் தண்ணீரும், நீர்த்த குழம்பும், தான் நினைத்தபடி கழிவு இறைச்சியும் தன் அடிமைக்குக் கொடுப்பான் எவ்வளவுதான் வெறுப்பானதென்றாலும் அது ஒரு பொருட்டன்றி எந்த வேலையையும் செய்யுமாறு சாட்டையையும் சங்கிலியையும் பயன்படுத்தி அடிமையைக் கட்டாயப்படுத்தும் உரிமை அவனுக்குண்டு. அடிமை இரு வாரக் காலத்துக்கு இல்லாது போனால் ஜென்மத்துக்கும் அடிமைத்தனம் அவனுக்கு விதிக்கப்படுகிறது; நெற்றியிலோ முதுகிலோ S என்ற எழுத்து சூடு போட்டுப் பொறிக்கப்படுகிறது; அவன் மூன்று தடவை ஓடிப்போய் விட்டால் ஒரு கடும் குற்றவாளியாகக் கருதப்பட்டு மரணத் தண்டனைக்கு ஆளாவான். எஜமானன் தனக்குச் சொந்தமான வேறெந்த சொந்த முறையிலான ஜங்கமச் சொத்து அல்லது கால்நடைகளையும் போலவே அவனை விற்கலாம், உடமைமாற்றிக் கொடுக்கலாம், ஒரு அடிமையாக கூலிக்கு விடலாம். அடிமைகள் எஜமானர்களுக்கெதிராக ஏதாவது செய்ய முயன்றாலும் மரணத் தண்டனைக்கு உள்ளாவார்கள். சமாதானத்தின் நீதிமான்கள் [justices of the peace—சிறு வழக்குகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் படைத்த ஸ்தல மாஜிஸ்டிரேட்டுகள்] தகவல் கிடைத்ததுமே, அக்காலிகளை வேட்டையாடி வீழ்த்துவர். ஒரு நாடோடி மூன்று நாட்களாக வேலை செய்யாமல் திரிந்துகொண்டிருந்தால், அவன் அவனது பிறப்பிடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சிவக்கப்பழுத்த இரும்பால் மார்பில் V என்ற எழுத்து பொறிக்கப்பட்டு, சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு தெருக்களிலோ வேறு ஏதாவது உழைப்புப் பணியிலோ வேலை செய்ய விடப்பட வேண்டும். நாடோடி தான் பிறந்த இடத்தைப் பொய்யாகத் தெரிவித்தால், அவன் இந்த இடத்தின், அங்கு வசிப்போரின் அல்லது அதன் ஸ்தல ஆட்சியின் ஆயுட்கால அடிமையாகி S என்ற எழுத்து சூடு போடப் பெற

வேண்டும். நாடோடிகளின் குழந்தைகளை எடுத்துப்போய், ஆண்களை 24 வயது வரைக்கும், பெண்களை 20 வயது வரைக்கும் பழகுதொழிலாளர்களாக வைத்துக்கொள்ளும் உரிமை எல்லா நபர்களுக்கும் உண்டு. அவர்கள் ஓடிப் போய்விட்டால், இவ்வயது வரும் வரை தம் எஜமானர் களின் அடிமைகளாக வேண்டும்; எஜமானர்கள் விரும்பினால் அவர்களை சங்கிலிகொண்டு பிணைக்கவும் சவுக்கால் அடிக்க வும், இன்ன பிறவாறு தண்டிக்கவும் முடியும். ஒவ்வொரு எஜமானனும் தன் அடிமையைச் சுலபமாகத் தெரிந்துகொள் ளவும் அவன் குறித்து அதிகம் நிச்சயமாக இருக்கவும் அவ னது கழுத்து, கைகள் அல்லது கால்களைச் சுற்றி இரும்பு வளையம் போடலாம்.[221] சில குறிப்பிட்ட ஏழைகள், அவர் களுக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுப்பதற்கும், அவர் களுக்கு வேலை கிடைக்குமாறு செய்யவும் சித்தமாயுள்ள ஒரு இடம் அல்லது நபர்களால் வேலைக்கமர்த்தப்படலாம் என இந்தச் சட்டத்தின் கடைசிப் பகுதி விதிக்கிறது. வட் டார அடிமைகளின் இந்த வகை இங்கிலாந்தில் 19ம் நூற் றாண்டில் வெகுகாலம் வரைக்கும் roundsmen (ரோந்து ஆட் கள்) என்ற பெயரில் நிலைநிறுத்தப்பட்டது.

எலிஸபெத், 1572: 14 வயதுக்கு மேம்பட்ட, லைசென்ஸ் இல்லாத பிச்சைக்காரர்கள் செம்மையாகக் கசையால் அடிக் கப்பட்டு, யாராவது அவர்களை ஈராண்டுக் காலத்துக்கு வேலைக்கு எடுத்துக்கொள்ளாவிட்டால் இடது காதில் சூடு போடப்படும்; குற்றம் மறுபடி இழைக்கப்படும் பட்சத்தில், அவர்கள் 18 வயதுக்கு மேம்பட்டவர்களாக இருந்தால், யாரே னும் அவர்களை ஈராண்டுக் காலத்துக்கு வேலைக்கெடுத்துக்

---

221) 1770ம் வருடத்திய *Essay on Trade etc.* என்ற நூலின் ஆசிரியர் சொல்கிறார்; ''உள்ளபடியே ஆறும் எட்வர்டின் ஆட்சியில், ஆங்கிலேயர்கள் மனப் பூர்வமாகப் பட்டறைத் தொழில்களை ஊக்கப்படுத்தவும் ஏழைகளுக்கு வேலை கொடுக்கவும் முனைந்திருப்பதாகத் தோன்றுகிறது. இதை ஒரு குறிப்பிடத் தக்க சட்டத்திலிருந்து அறிகிறோம்; அது பின்வருமாறு உள்ளது: எல்லா நாடோடிகளுக்குமே சூடு போடப்படும்,'' இத்தியாதி. (முன்வந்தது, பக்கம் 5.)

கொள்ளாவிட்டால் மரணத் தண்டனைக்காளாவர்; மூன்று முறை குற்றமிழைத்தால் கடும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு கருணையில்லாமல் மரணத் தண்டனைக்காளாவர். இம்மாதிரிச் சட்டங்கள்: எலிஸபெத்தின் ஆட்சிக் காலத்தில் 18வது வருடத்திய சட்டம், அத்தியாயம் 13, இன்னொரு 1857ம் வருடத்துச் சட்டம்.[221*])

[221*]) தாமஸ் மோர் தனது கற்பனாலோகம் என்ற நூலில் சொல்கிறார்: ''எனவே, பேராசைக்கார, தணியா வெறி கொண்ட பணப்பேயும் தன் சொந்த நாட்டுக்கே பெருந்தொல்லையுமான ஒருவன், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஒரு படல் அல்லது வேலியைக் கட்டி வளைத்துப்போட்டு அடைத்துக் கட்டி விடலாம்; உழவர்கள் அவர்களது சொந்த பூமியிலிருந்து வெளித் தள்ளப்படலாம்; அல்லது வஞ்சகம் மற்றும் சூதுவாதினாலோ, பலாத்கார ஒடுக்கு முறையினாலோ அவர்கள் அதிலிருந்து பிரிக்கப்படலாம்; அல்லது கொடுமைகளும் கெடுதல்களும் செய்து, அவர்கள் தங்களுடைய நினைத்தையும் விற்று விடும் நிர்ப்பந்தத்துக்குட்படுமளவு தொல்லை தரப்படலாம்; எனவே ஏதாவதோரு வழியில், நியாயமான வழியிலோ, அநியாயமான வழியிலோ அவர்களை ஓடிப்போக வைக்க வேண்டும்; வறிய, நலிந்த ஈன ஆத்மாக்கள், ஆண்கள், பெண்கள், கணவர்கள், மனைவிகள், தந்தையில்லாக் குழந்தைகள், விதவைகள், கைக்குழந்தைகளோடு கூடிய சோகமயமான தாய்மார்கள்; அவர்களது குடும்பம் முழுவதும்; பசையில் குறைந்தவர்கள், எனின் எண்ணிக்கையில் நிறைந்தவர்கள், ஏனெனில் வேளாண்மைக்குக் கைகள் அதிகம் தேவை; தங்களுக்கு நன்கு தெரிந்த, பழக்கப்பட்ட வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, ஒய்வு கொள்ளவும் இடமின்றி அயர்ந்து நடக்கின்றார்கள் அவர்களென்கிறேன். வீட்டில் புழங்கும் அவர்களது பொருட்கள் மிகச் சொற்ப மதிப்புடையவையே; அவையும் நிச்சயமாக விலை போகலாமென்றாலும், அற்பச் சொற்பமான ஒரு விலைக்கு அவற்றை விற்றுவிடும் நிர்ப்பந்தமிருக்கலாம். அதுவும் செலவாகும் வரை அவர்கள் அலைந்து திரிந்த பின்னர், திருடி விட்டுப்பின் பெரும்பாலும் தூக்கிலேறுமலே, இன்றைல் பிச்சை எடுத்துக்கொண்டு திரியாமலோ அவர்கள் வேறென்ன செய்ய முடியும்? பிச்சை எடுத்தாலும் தான் நாடோடிகளென்று அவர்கள் சிறையில் தள்ளப்படுவர்; ஏனென்றால் அவர்கள் சுற்றித் திரிகின்றனர், வேலை செய்வதில்லை; அவர்கள் ஒருபோதும் அவ்வளவாக விரும்பி வேலை

முதலாம் ஜேம்ஸ்: சுற்றித் திரிந்துகொண்டும், பிச்சை யெடுத்துக்கொண்டும் இருக்கும் எந்த ஒருவனும் மோசக் காரன், நாடோடி என அறிவிக்கப்படுகிறான். Petty Sessions[35] புரியும் சமாதானத்தின் நீதிமான்கள், அவர்களைப் பொது ஜனங்கள் பார்க்கும் படி சவுக்காலடிக்க வைப்பதற்கும், முதல் முறை குற்றமிழைப்பதற்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதிப்பதற்கும், இரண்டாவது முறைக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பதற்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். சிறையிலிருக்கையில், சமாதானத்தின் நீதி மான்கள் தகுமென நினைக்குமளவுக்கு அதிகமாகவும் அடிக் கடியும் சவுக்காலடிக்கப்பட வேண்டும்.... திருத்த முடியாத மற்றும் அபாயகரமான மோசக்காரர்கள் இடது தோளில்

செய்ய முன்வருவதில்லையென்றாலும், அவர்களுக்கு வேலை கொடுக்கவும் யாரும் கிடைக்க மாட்டார்கள்.'' தாமஸ் மோர் சொல்வது போலத் திருடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட இந்த ஓடிப்போன ஏழைகளில், ''72,000 பெரிய மற்றும் சிறிய திருடர்கள் எட்டாம் ஹென்ரியின் ஆட்சிக் காலத்தில் சாகடிக்கப்பட்டனர்''. (Holinshed, *Description of England*, Vol. I, p. 186.) எலிஸபெத்தின் காலத்தில், ''மோசக் காரர்கள் விரைத்து கட்டப்பட்டனர். சாதாரணமாக முன்னூறு அல்லது நூனூறு பேர் தூக்குமேடைகளால் கொன்று விழுங்கப்படாத ஒரு ஆண்டு கூட இருந்ததில்லை''. (Strype, *Annals of the Reformation and Establishment of Religion, and other Various Occurrences in the Church of England during Queen Elisabeth's Happy Reign*, 2nd ed., 1725, Vol. II.) இதே ஸ்டிரைப்பின் கூற்றுப்படி, சோமர்ஸெட்ஷயரில் ஒரு ஆண்டில் 40 நபர்கள் மரணத் தண்டனைக்காளாயினர், 35 கொள்ளையர்கள் கையில் சூடு போடப் பெற்றனர், 37 பேர் சவுக்கடி பெற்றனர், 183 பேர் ''திருத்த முடியாத நாடோடிகள்'' என விடுவிக்கப் பட்டனர், ஆயினும், ''நீதிபதிகளின் அசட்டையின் விளை வாகவும் மக்களின் முட்டாள்தனமான பச்சாதாபத்தின் விளைவாகவும் இப்பெரும் எண்ணிக்கையிலான கைதிகள் வாஸ்தவமான குற்றவாளிகளில் ஐந்திலொரு பங்கு கூட இல்லை'' என்று அவர் அபிப்பிராயப்படுகிறார்; ''இங்கிலாந் தின் மற்ற மாவட்டங்கள் இவ்விஷயத்தில் சோமர்ஸெட் ஷயரை விட மேம்பட்டிருக்கவில்லை; சில மாவட்டங்களோ இன்னும் மோசமாக இருந்தன'' என்று அவர் மேலும் குறிப் பிடுகிறார்.

R என்று சூடு போடப் பெறுகின்றனர், கட்டாய வேலை களுக்கு அனுப்பப்படுகின்றனர்; அவர்கள் மீண்டும் பிச்சை எடுத்துப் பிடிபட்டால், கருணை காட்டாமல் மரணத் தண் டனை நிறைவேற்றப்படும். 18ம் நூற்றாண்டின் துவக்கம் வரை சட்ட ரீதியில் கட்டுப்படுத்தும் இந்தச் சட்டங்கள் ஆன் ஆட்சிக் காலத்தில் 12வது வருடத்திய சட்டத்தின் அத்தியாயம் 23ஆல்தான் ரத்துச் செய்யப்பட்டன.

பிரான்சில் இம்மாதிரிச் சட்டங்கள்; அங்கே 17ம் நூற் றாண்டின் மத்திக்குள் ஒரு நாடோடிகளின் (மட்டம் போட்ட வர்கள்) ராஜ்யமே (royaume des truands) பாரிசில் நிறுவப் பட்டுவிட்டது. பதினாறும் லூயி ஆட்சிக் காலத்தின் துவக்கத்திலேயே கூட (1777 ஜூலை 13 அவசரச் சட்டம்) 16 முதல் 60 வயதுள்ள நல்லாரோக்கியத்திலுள்ள ஒவ் வொருவனும் ஜீவனோபாயங்களில்லாமலும் ஒரு தொழில் புரியாமலுமிருந்தால் கடுஞ்சிறைக்கு அனுப்பப்பட வேண் டும். நெதர்லாந்துக்கு ஐந்தாம் கார்லின் சட்டம் (1537 அக்டோபர்), ஹாலந்தின் ராஜ்யங்கள் மற்றும் நகரங்களின் முதல் அரசாணை (1614 மார்ச் 19), ஐக்கிய மாகாணங்களின் அறிக்கை (1649 ஜூன் 25) முதலானவை இதே தன்மை யுடையவையே.

இவ்வாறு விவசாய மக்கள் முதலில் பலவந்தமாக நிலத் திலிருந்து பிரிக்கப்பட்டு, அவர்களது வீடுகளிலிருந்து விரட் டப்பட்டு, நாடோடிகளாக மாற்றப்பட்டு, பின்னர் கூலி முறைக்கு அவசியமான கட்டுப்பாட்டுக்கு இசைவித்திட, விகாரமான பயங்கரத் தன்மையுள்ள சட்டங்களின் மூலம் சவுக்கடிபட்டனர், சூடு போடப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர்.

சமுதாயத்தின் ஒரு துருவத்தில் உழைப்பின் நிலைமைகள் மூலதனத்தின் உருவத்தில் ஒரு திரளாகக் குவிக்கப்பட்டிருக்க, மறு துருவத்தில் தங்கள் உழைப்புச் சக்தி தவிர விற்பதற்கு வேறொன்றுமில்லாத மனிதத்திரள்கள் கூட்டப்பட்டிருப்பது மட்டும் போதாது. அவர்கள் அவ்வுழைப்புச் சக்தியைத் தாமாக முன் வந்து விற்குமாறு நிர்ப்பந்திக்கப்படுவதும் போதாது. முதலாளித்துவ உற்பத்தியின் முன்னேற்றமானது,

கல்வியாலும் பாரம்பரியத்தாலும் பழக்க வழக்கத்தாலும் அந்த உற்பத்தி முறையின் நிலைமைகளை இயற்கையின் தற் சான்று விதிகளாக நோக்குகின்ற ஒரு தொழிலாளி வர்க் கத்தை வளர்த்தெடுக்கிறது. முதலாளித்துவ உற்பத்திச் செய்முறையின் ஒழுங்கமைப்பு முழு வளர்ச்சியடைந்ததுமே, எதிர்ப்பனைத்தையும் நொறுக்கித் தள்ளுகிறது. ஒப்பீட்டு உபரி ஜனத்தொகையின் இடைவிடாத உருவாக்கம், மூல தனத்தின் தேவைகளுக்குப் பொருத்தமான ஒரு சுவட்டில் உழைப்பின் சப்ளை-கிராக்கி விதியையும், எனவே கூலியையும் ஓட விடுகிறது. பொருளாதார உறவுகளின் சப்பென்ற நிர்ப் பந்தம் முதலாளிக்குத் தொழிலாளி கீழ்ப்படுவதைப் பூர்த்தி செய்கிறது. பொருளாதார நிலைமைகளுக்கு வெளியே, நேரடி பலாத்காரம் இன்னமும் பயன்படுத்தப்படுகிறது என் பது உண்மையே, ஆனால் இது விதிவிலக்காக மட்டுமே. சாதாரண நிகழ்ச்சிப் போக்கில், தொழிலாளி ''இயற்கை யான உற்பத்தி விதிகளிடம்'', அதாவது உற்பத்தி நிலைமை கள் தாமே பெற்றெடுத்து நிரந்தரமாக உத்தரவாதப் படுத்துகின்ற ஒரு சார்பு நிலையாகிய மூலதனத்தின் மீதான அவனது சார்பு நிலையிடம் விடப்பட முடியும். முதலாளித் துவ உற்பத்தியின் வரலாற்று ரீதியான மூலத்தோற்றத்தின் போது விஷயமே வேறு. முதலாளி வர்க்கம் அதன் உதய காலத்தில், கூலிகளை ''ஒழுங்குமுறை படுத்த'', அதாவது உபரி மதிப்பு தயாரிப்பதற்குப் பொருத்தமான வரம்புகளுக் குள் கூலிகளைத் தள்ளிவிடவும், வேலைநாளை நீட்டுவதற்கும், சீரான அளவு சார்பு நிலையில் தொழிலாளியை வைத்துக் கொள்ளவும் அரசு அதிகாரம் வேண்டுமென்று விரும்பு கிறது, அவ்வதிகாரத்தைப் பயன்படுத்துகிறது. ஆதித்திரட்சி என்று சொல்லப்படுவதன் ஓர் அடிப்படை மூலமாகும் இது.

14ம் நூற்றாண்டின் பின்பாதியில் எழுந்துவந்த, நாட்டுப் புறத்தில் சுதந்திர விவசாயச் சொத்துடமையாலும், நகரத்தில் கில்டு ஸ்தாபனத்தாலும் நன்கு காக்கப்பட்ட அந்தஸ்துடைய கூலித் தொழிலாளர் வர்க்கம் அப்போதும் அதற்கடுத்து வந்த நூற்றாண்டிலும் ஜனத்தொகையில் மிகச் சிறியதோர் பகுதியாக மட்டுமே அமைந்தது. நாட்டுப்

புறத்திலும் நகரத்திலும் எஜமானரும் தொழிலாளர்களும் ஒன்றுக நெருக்கி நின்றனர். மூலதனத்துக்கு உழைப்பு கீழ டங்குவது வழிவ ரீதியாக மட்டுமே இருந்தது, அதாவது உற்பத்தி முறையதுவே குறிப்பான முதலாளித்துவத் தன்மையெதையும் இது வரையிலும் கொண்டிருக்கவில்லை. மாறும் மூலதனம் மாறு மூலதனத்தை விடவும் பெரிதும் மேம்பட்டுத் திகழ்ந்தது. எனவே, மூலதனத்தின் ஒவ்வொரு திரட்சியோடும் கூலியுழைப்புக்கான தேவை வேகமாக வளர்ந்தது, அதே நேரத்தில் கூலியுழைப்பின் சப்ளையோ மெதுவாகவே பின் தொடர்ந்தது. பின்னர் முதலாளித்துவத் திரட்சியின் ஒரு நிதிக்கோர்வையாக மாற்றப்பட்ட தேசிய உற்பத்திப் பொருளின் ஒரு பெரும் பகுதி, அப்போது, தொழிலாளியின் நுகர்வு நிதிக்கோர்வையினுள் சேர்வதாகவே இன்னும் இருந்தது.

கூலியுழைப்பு பற்றிய சட்டமுறை ஆரம்பமுதலே, தொழிலாளியைச் சுரண்டுவதை நோக்கமாகக் கொண்டது; முன்னேற முன்னேற எப்போதுமே அவன்பால் மாறுப் பகை கொண்டது;[222] இங்கிலாந்தில் இது 1349ம் வருடத்திய மூன்றும் எட்வர்டின் தொழிலாளர்ச் சட்டம் என்பதனுல் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. பிரான்சில் மன்னர் ஜானின் பெயரால் பிறப்பிக்கப்பட்ட 1350ம் வருடத்திய அவசரச் சட்டம் இதற்கிணையாகும். ஆங்கிலேயச் சட்டமுறையும் பிரெஞ்சுச் சட்டமுறையும் இணையாகச் செய்கின்றன, தாத்பரியத்தில் ஒரே மாதிரியுள்ளன. தொழிலாளர்ச் சட்டங்கள் வேலைநாளைக் கட்டாயமாக நீட்டுவதைக் குறியாகக் கொண்டுள்ளன என்ற அளவில் இவ்விஷயம் முன்பே (அத்தியாயம் X, பிரிவு 5) எடுத்தாயப்பட்டதென்பதால் அவற்றிடம் நான் திரும்பிச் செல்லவில்லை.

---

222) ''எஜமானர்களுக்கும் அவர்களது தொழிலாளர்களுக்குமிடையிலான வேறுபாடுகளை ஒழுங்குமுறைப்படுத்த சட்டசபை முயலும்போதெல்லாம், அதன் சட்ட ஆலோசகர்கள் எப்போதுமே எஜமானர்களாக உள்ளனர்'' என்கிறார் ஆ. ஸ்மித்.[36] ''சொத்துடமை — இதுதான் சட்டங்களின் சாரமாகும்'' என்கிறார் லிங்கே.[37]

மேற்சொன்ன தொழிலாளர்ச் சட்டமானது காமன்ஸ் சபையின் அவசரத் தூண்டுதலின் பேரில் நிறைவேற்றப்பட்டது. ஒரு டோரி வெகுளித்தனமாகச் சொல்கிறார்: ''முன்னதாகத் தொழிலையும் செல்வத்தையும் அச்சுறுத்தக் கூடிய உயர்ந்த கூலியை ஏழைகள் கோரினர். அடுத்து, அதே அளவுக்கு, ஒருக்கால் அதிகமாகவே, ஆனால் வேறொரு விதத்தில், தொழிலையும் செல்வத்தையும் அச்சுறுத்தும் அளவுக்கு அவர்களது கூலி தாழ்வாக உள்ளது.''[223]) நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்குமாக, பலன்கூலி வேலைக்கும் நாட்கூலி வேலைக்குமாகக் கூலிப்பட்டியலொன்று சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் ஆண்டுக் கணக்கில் கூலிக்கமர வேண்டும்; நகரத் தொழிலாளர்கள் ''திறந்த சந்தையில்'' கூலிக்கமர வேண்டும். சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டதை விட உயர்ந்த கூலியைக் கொடுப்பது சிறைத் தண்டனையைக் காட்டித் தடை செய்யப்பட்டது; ஆனால் உயர்ந்த கூலி கொடுப்பதற்கான தண்டனையை விட பெறுவதற்கான தண்டனை அதிகம் கடுமையானதாக இருந்தது. இவ்வாறே எலிஸபெத்தின் பழகுத் தொழிலாளர்ச் சட்டத்தின் பிரிவுகள் 18 மற்றும் 19ல், உயர்ந்த கூலி கொடுப்பவனுக்குப் பத்து நாள் சிறைத் தண்டனையும் பெறுபவனுக்கு இருபத்தியோரு நாள் சிறைத் தண்டனையும் விதிக்க ஆணையிடப்படுகிறது. 1360ம் வருடத்திய சட்டமொன்று தண்டனைகளை அதிகரித்து, உடலிலருத்தும் தண்டனையின் மூலம் சட்டப் பூர்வ கூலி விதத்தில் உழைப்பைப் பிழிந்தெடுக்க எஜமானர்களுக்கு அதிகாரம் அளித்தது. கொல்லர்களும் தச்சர்களும் பரஸ்பரம் தம்மைப் பிணைத்துக் கொள்வதற்காகச் செய்துகொண்ட ஒன்றிப்புகள், ஒப்பந்தங்கள், பிரமாணங்கள் முதலானவையனைத்தும் செல்லுபடியாக மாட்டாவென அறிவிக்கப்பட்டது. 14ம் நூற்றாண்டு முதல் தொழிலாளர்களின் கூட்டுகளுக்கெதிரான சட்டங்கள்[38] ரத்தாகிய ஆண்

223) *Sophisms of Free Trade*, By a Barrister, London, 1850, p. 206. அவர் குரோதத்துடன் மேலும் சொல்கிறார்: ''வேலைக்கமர்த்துபவனுக்காதரவாகத் தலையிடுமளவுக்கு நாம் தயாராய் இருந்தோம்; அமர்த்தப்படுவனுக்காக இப்போது ஒன்றும் செய்ய முடியாதா?''

டான 1825 வரை, தொழிலாளர்களின் கூட்டு ஒரு கடுங் குற்றமாகக் கருதி நடத்தப்படுகிறது. 1349ம் வருடத்திய தொழிலாளர்ச் சட்டத்தினுடையவும் அதன் கன்முக முளைத்தவற்றினுடையவும் உணர்வானது, உள்ளபடியே அரசு கட்டளையிடுவது கூலியின் அதிகபட்ச வரம்பையே தவிர குறைந்தபட்ச வரம்பையல்ல என்பதில் துலாம்பர மாக வெளிப்படுகிறது.

16ம் நூற்முண்டில் தொழிலாளர்களின் நிலைமை இன்னும் படுமோசமாகி விட்டதென்பதை நாம் அறிவோம். பணக்கூலி உயர்ந்தது; ஆனல் பணத்தின் மதிப்பிறக்கத்துக் கும், அதற்கிணையாகப் பண்டங்களின் விலைகளில் நேரிட்ட உயர்வுக்கும் ஈடான விகிதாச்சாரத்தில் உயரவில்லை. எனவே எதார்த்தத்தில் கூலிகள் வீழ்ந்தன. ஆயின், ''யாரும் வேலைக்கெடுத்துக்கொள்ளச் சித்தமாய் இராதவர்களின்'' காதறுப்பும் சூடு போடுதலும் இருந்து வந்ததோடு சேர்ந் நாற்போல் கூலிகளைத் தாழ்த்தியே வைத்திருப்பதற்கான ட்டங்களும் அமலில் இருந்து வந்தன. எலிஸபெத்தின் ஆட்சிக் காலத்தில் 5வது வருடத்திய பழகுத் தொழிலாளர்ச் சட்டம், அத்தியாயம் 3 மூலம், குறிப்பிட்ட கூலிகளை நிர்ணயிப்பதற்கும், ஆண்டின் காலத்துக்கும் பண்டங்களின் விலைக்குமேற்ப அவற்றைத் திருத்தி அமைப்பதற்கும் சமா தானத்தின் நீதிமான்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. நெசவாளர்கள், நூற்போர், மற்றும் சாத்தியமான சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இவ்வழைப்பு விதிமுறைகளை முதலாம் ஜேம்ஸ் விஸ்தரித்தார்.[224]

---

[224] முதலாம் ஜேம்சின் ஆட்சிக் காலத்தில் 2 வது வருடத்திய சட்டம், அத்தியாயம் 6ல் உள்ள ஷரத்திலிருந்து, சில குறிப்பிட்ட ஜவுளித் தயாரிப்பாளர்கள், சமாதானத் தின் நீதிமான்கள் என்ற கோதாவில், தம் சொந்தப் பட் டறைகளில் அதிகாரப் பூர்வக் கூலிப்பட்டியலைத் திணிக்கும் வேலையைத் தாமே மேற்கொண்டனர் என்று தெரிய வரும். ஜெர்மனியில், குறிப்பாக முப்பதாண்டுப் போருக்குப் பின் னர், கூலிகளைத் தாழ்த்தி வைப்பதற்கான சட்டங்கள் பொதுவானவையாக இருந்தன. ''ஜனங்குறைந்த வட்டங் களில், வேலைக்காரர்கள் மற்றும் தொழிலாளர்களின் தட்டுப்

இரண்டாம் ஜார்ஜ், தொழிலாளர்களின் கூட்டுகளுக்கெதிரான சட்டங்களைப் பட்டறைத் தொழிலாளர்களுக்கும் பொருந்துமாறு விஸ்தரித்தார்.

அதியுன்னதமான பட்டறைத் தொழிற்காலத்தில், கூலிகளின் சட்ட ஒழுங்குமுறை அவசியமற்றது என்பது போலவே, நடைமுறைக்கும் ஒவ்வாதது என்று ஆக்குமளவுக்கு முதலாளித்துவ உற்பத்தி முறை போதுமான வலுப்பெற்றுவிட்டது; ஆனால் ஆளுகின்ற வர்க்கங்கள் அவசியமேற்படும் பட்சத்தில் பழைய ஆயுதச்சாலையின் ஆயுதங்கள் இல்லாமல் நிற்கச் சித்தமாயிருக்கவில்லை. இன்னும், இரண்டாம் ஜார்ஜின்

பாடு நிலவுரிமையாளர்களுக்குப் பெரும் தொல்லையாயிருந்தது. தனித்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் அறைகளை வாடகைக்கு விடுவது கூடாதெனக் கிராம வாசிகள் அனைவருக்கும் தடை விதிக்கப்பட்டது; இத்தனித்த ஆண்கள், பெண்கள் விஷயத்தை அதிகாரிகளிடம் தெரிவித்துவிட வேண்டும்; அவர்கள் தினக்கூலிக்கு விவசாயிகளுக்காக விதை விதைப்பது, அல்லது, ஏன், தானியத்தை வாங்குவது-விற்பது போன்ற வேறெந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலுங் கூட, வேலைக்காரர்கள் ஆவதற்குச் சித்தமாயிராவிட்டால் சிறையில் தள்ளப்பட வேண்டும். (*Kaiserliche Privilegien und Sanctionen für Schlesien*, I, 125.) ஒரு முழு நூற்றாண்டுக் காலமாக ஜெர்மானிய சிற்றரசர்களின் ஆணைகளில், தனது கஷ்ட சுதிக்கு மன மொத்தப் போகாத, சட்டப் பூர்வக் கூலியோடு திருப்தி கொள்ளாத, அக்கிரமமான, அடாபிடியான ஆட்கள் பற்றி ஒரு கசப்பான கூக்குரல் மீண்டும் மேலெழுகிறது. ஒரு பட்டியலின் மூலம் அரசு நிர்ணயித்ததை விட அதிக ஊதியத்தைத் தனிப்பட்ட நிலவுரிமையாளர்கள் கொடுப்பதற்குத் தடை விதிக்கப்படுகிறது. இருப்பினும், போருக்குப் பின்னர் இருந்த பணி நிலைமைகள், அதன்பின் 100 ஆண்டுகள் கழிந்திருந்ததை விட சில நேரங்களில் நன்றாக இருந்தன; சைலீஸியாவைச் சேர்ந்த பண்ணையாட்களுக்கு 1652ல் வாரமிருமுறை இறைச்சி கிடைத்தது; நாம் வாழும் நூற்றாண்டில் கூட, அவர்களுக்கு ஆண்டுக்கு மூன்று தடவை மட்டுமே இறைச்சி கிடைக்கும் வட்டங்கள் இருப்பது தெரிந்ததே. மேலும் போருக்குப் பின்னர் இருந்த கூலி அடுத்து வந்த நூற்றாண்டிலிருந்ததை விட உயர்வாக இருந்தது.'' (G. Freytag.)

ஆட்சிக் காலத்தில் 8வது வருடத்திய சட்டம், பொது துக்க நேரங்களில் தவிர லண்டனிலும் அதன் சுற்றுப்புறத்திலும் தகுதித் தையல் தொழிலாளர்களுக்கு நாட்கூலி 2 ஷில்லிங் $7^1/_2$ பென்சுக்கு அதிகமாகக் கொடுப்பதைத் தடை செய்தது; இன்னும், மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில் 13 வது வருடத்திய சட்டம், அத்தியாயம் 68 பட்டு நெசவாளர்களின் கூலிகளை ஒழுங்குமுறைப்படுத்தும் பொறுப்பைச் சமாதானத்தின் நீதிமான்களிடம் ஒப்படைத்தது; இன்னும், 1796ல், கூலிகள் தொடர்பான சமாதானத்தின் நீதிமான்களின் கட்டளைகள் விவசாயமல்லாத தொழிலாளர்களுக்கும் பொருந்துமா என்பதை முடிவு செய்ய உயர்மட்ட நீதிமன்றங்களின் இரண்டு தீர்ப்புகள் அவசியமாயின; இன்னும், ஸ்காட்லாந்து சுரங்கத் தொழிலாளிகளின் கூலிகளை எலிஸபெத்தின் ஒரு சட்டமும், 1661 மற்றும் 1671 வருடத்திய வையான இரண்டு ஸ்காட்லாந்து சட்டங்களும் தொடர்ந்து ஒழுங்குமுறைப்படுத்தி வர வேண்டுமென்று 1799ல் பாராளுமன்றச் சட்டமொன்று உத்தரவிட்டது. இடைக் காலத்தில் சூழ்நிலைகள் எவ்வளவு முழுமையாக மாறிவிட்டன என்பதை ஆங்கிலேயக் கீழ்ச்சபையில் முன்கேட்டிராத ஒரு சம்பவம் நிரூபித்தது. கூலிகள் எந்த வரம்பைத் தாண்டி அறவே உயரக் கூடாதோ அந்த அதிகபட்ச வரம்புக்கான சட்டங்கள் 400 ஆண்டுகளுக்குமதிகமாக இயற்றப்பட்டு வந்த அந்த இடத்தில், 1796ல் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டப் பூர்வ குறைந்தபட்சக் கூலி வேண்டுமென விட்பிரெட் பிரேரித்தார். பீட் இதை எதிர்த்தார், ஆனால் ''ஏழைகளின் நிலைமை கொடுமையானது (cruel)'' என்று ஒப்புக்கொண்டார். இறுதியாக 1813ல் கூலிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன. அவை ஓர் அபத்தமான ஒழுங்கினமாகும்; ஏனென்றால் முதலாளி தனது சொந்தச் சட்டத்தின் மூலம் தன் தொழிற்சாலையை ஒட்டினான்; வறியோர் நலவரிகளின் மூலம் விவசாயத் தொழிலாளியின் கூலியை இன்றியமையாத குறைந்தபட்சத்துக்குச் சரிக்கட்ட அவனால் முடிந்தது. எஜமானனுக்கும் தொழிலாளிக்கும் இடையிலான ஒப்பந்

தங்கள் பற்றிய, முன்னறிவிப்பு கொடுப்பது பற்றிய, மற்றும் இது மாதிரியான தொழிலாளர்ச் சட்டங்களின் விதிமுறைகள், ஒப்பந்தத்தை மீறுகின்ற எஜமானனுக்கு எதிராகச் சிவில் நடவடிக்கைக்கு மட்டுமே இடமளிக்கின்றன, ஆனால் இதற்கு மாறுக, ஒப்பந்தத்தை மீறுகின்ற தொழிலாளிக்கெதிராகக் குற்றவியல் நடவடிக்கைக்கு அனுமதியளிக்கின்றன; இவ்விதிமுறைகள் இந்த நேரம் வரையிலும் முழுஅளவில் அமுலிலுள்ளன.

தொழிலாளர்களின் கூட்டுகளுக்கெதிரான காட்டுமிராண்டிச் சட்டங்கள் 1825ல், பாட்டாளி வர்க்கத்தின் அச்சுறுத்தும் செல்வாக்கின் முன்னர் வீழ்ச்சியடைந்தன. இருந்தபோதிலும் அவை பகுதியாகவே வீழ்ந்தன. பழைய சட்டங்களின் சில அழகுத் துணுக்குகள் 1859ல்தான் மறைந்து போயின. 1871 ஜூன் 29 தேதிய பாராளுமன்றச் சட்டம் தொழிற்சங்கங்களைச் சட்டப் பூர்வமாக அங்கீகரித்ததன் மூலம் இவ்வகைச் சட்ட நடைமுறையின் கடைசிச் சுவடுகளை அகற்றுவது போல் பாசாங்கு செய்தது. ஆனால் அதே தேதிய பாராளுமன்றச் சட்டமொன்று (An act to amend the criminal law relating to violence, threats and molestation [வன்முறை, பயமுறுத்தல், தொல்லைகொடுத்தல் ஆகியவை தொடர்பான தண்டனைச் சட்ட நடைமுறையைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்]), எதார்த்தத்தில் முந்தைய நிலவரத்தைப் புதிய உருவில் மீண்டுமேற்படுத்தியது. இந்தப் பாராளுமன்றச் சித்துவேலையின் மூலம், ஒரு வேலைநிறுத்தம் அல்லது lock-out (கதவடைப்பில்) தொழிலாளர்கள் பயன்படுத்த முடிந்த வழிகள் சகல பிரஜைகளுக்கும் பொதுவான சட்டங்களிலிருந்து வாபஸ் பெறப்பட்டு விதிவிலக்கான குற்றவியல் சட்டங்களுக்குள் வைக்கப்பட்டன; இச்சட்ட நடைமுறையை வியாக்கியானம் செய்யும் வேலை சமாதானத்தின் நீதிமான்கள் என்ற கோதாவில் எஜமானர்களிடமே போய்ச் சேர்ந்தது. ஈராண்டு முன்னர், இதே காமன்ஸ் சபையும் இதே திருவாளர் கிளாட்ஸ்டனும், பிரபலமாகிவிட்ட அந்தச் சுற்றிவளைக்காத பாணியில், தொழிலாளி வர்க்கத்துக்கெதிரான விதிவிலக்கான தண்

டனைச் சட்ட நடைமுறை அனைத்துக்கும் முடிவு கட்டுவதற் காக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தனர். ஆனால் இது இரண்டாவது வாசிப்பைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப் படுவதில்லை; இவ்விதத்தில், ''மாபெரும் லிபரல் கட்சி யானது'' தன்னை ஆட்சிக்கட்டிலில் ஏற்றிவைத்த அதே பாட் டாளி வர்க்கத்துக்கெதிராகத் திரும்புவதற்கு டோரிகளு டனை ஒரு நேச அணியின் மூலம் கடைசியாகத் துணிச்சல் பெறும் வரை விவகாரம் இழுத்தடிக்கப்பட்டது. இந்தத் துரோகம் போதாதென்று ''மாபெரும் லிபரல் கட்சி யானது'', ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்வதில் எப் போதுமே பரம திருப்தி காணுகின்ற ஆங்கிலேய நீதிபதி கள் ''சதிவேலைக்கு'' எதிரான முந்தைய சட்டங்களை[39] மீண்டும் தோண்டியெடுத்துத் தொழிலாளர் கூட்டுகளுக் கெதிராக அவற்றைப் பிரயோகிப்பதற்கு அனுமதித்தது. தொழிலாளர்களுக்கெதிராக முதலாளிகளின் ஒரு நிரந்தரத் தொழிற்சங்கம் என்ற நிலையை வெட்கங்கெட்ட அகம்பா வத்துடன் 500 ஆண்டுகளுக்குத் தானே வகித்த பின்னர், ஆங்கிலேயப் பாராளுமன்றம் வேலைநிறுத்தங்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் எதிரான சட்டங்களைக் கைவிட்ட தென்றால், தன் விருப்பத்துக்கெதிராகவும் வெகுஜனங் களின் நிர்ப்பந்தம் தாளாமலுமே அவ்வாறு செய்தது என் பதைப் பார்க்கிறோம்.

புரட்சியின் முதல் புயல் வீச்சுகளின் போதே, பிரெஞ்சு முதலாளி வர்க்கம் அப்போதுதான் ஈட்டப்பட்டிருந்த சங்கம் சேரும் உரிமையைத் தொழிலாளர்களிடமிருந்து பறித் துக்கொள்ளத் துணிந்தது. 1791 ஜூன் 14ம் தேதிய அர சாணை ஒன்றின் மூலம், தொழிலாளர்களின் கூட்டனைத்துமே, ஒரு ஆண்டுக்கு செயல்முனைப்பான பிரஜையின் உரிமைகளைப் பறிப்பதோடு 500 லிவ்ரேக்கள் அபராதமும் விதித்துத் தண்டிக்கத் தக்கதான, ''சுதந்திர உரிமைக்கும் மனித உரிமை கள் பிரகடனத்துக்கும் எதிரான ஒரு முயற்சி'' ஆகுமென அறிவித்தனர்.[225] அரசு நிர்ப்பந்தத்தைக் கொண்டு,

---

225) இந்தச் சட்டத்தின் விதி 1 வருமாறு: ''ஒரு நிலையைச் சேர்ந்த அல்லது ஒரு தொழிலைச் சேர்ந்த நபர்களின்

மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையிலான போராட்டத்தை மூலதனத்துக்கு வசதியான வரம்புகளுக்குள் கட்டி நிறுத்திய இந்தச் சட்டம் புரட்சிகளையும் ராஜவம்ச மாற்றங்களையும் தாண்டி உயிர்வாழ்ந்துள்ளது. பயங்கர ஆட்சிக் காலங்கூட[40] அதைத் தொடவில்லை. சமீபத்தில்தான் அது Code Pénal [தண்டனை விதித்தொகுப்பிலிருந்து] நீக்கப்பட்டது. இந்தப் பூர்ஷ்வா அதிரடி வேலைக்கான நொண்டிச்சாக்கை விட அதிகம் குணவிசேஷமானது ஒன்றுமில்லை. இச்சட்டம் பற்றிய விசேஷக் குழுவின் அறிக்கையாளரான லெ ஷபெலியே சொல்கிறார்: ''கூலிகள் இருப்பதை விட சற்று உயர்வாக இருக்க வேண்டுமென்பதை,... கூலியைப் பெறுபவன் வாழ்க்கையின் அவசியப் பொருட்கள் கிடைக்காமையால் ஏற்படுவதும் கிட்டத்தட்ட அடிமைத்தனத்தின் சார்பு நிலையுமான அந்த முற்றுன சார்பு நிலையிலிருந்து விடுபட்டிருப்பதற்குப் போதுமானதாகக் கூலி இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டாலும்'', தொழிலாளர்கள் தம் சொந்த நலன்கள் பற்றி எந்த உடன்பாட்டுக்கும் வரவும் பொதுவில் செயல்படவும், அதன் மூலம்

சகலவிதமான கார்ப்பரேஷன்களையும் அழிப்பதானது பிரெஞ்சு அரசியல் சட்டத்தின் மிக முக்கிய அடிப்படைகளில் ஒன்று என்பதால் எந்த ஒரு சாக்கின் கீழும், எந்த ஒரு வடிவத்திலும் இத்தகைய கார்ப்பரேஷன்களைத் திரும்ப ஏற்படுத்துவது தடை செய்யப்படுகிறது.'' விதி IV அறிவிக்கிறது: ''ஒரே தொழிலில், கலை அல்லது கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள குடிமக்கள், கூட்டாக மறுப்பு தெரிவிக்கவோ அல்லது குறிப்பிட்ட ஊதியம் தந்தால் மட்டுமே தமது தொழில் ரீதியான நடவடிக்கையின் மூலமும் தமது பணிகளின் மூலமும் சேவை புரியப் போவதாயும் ஒன்று சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொண்டாலோ அல்லது உடன்பாடு செய்து கொண்டாலோ மேற்கூறிய ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும்... அரசியல் சட்ட விரோதமானவையாக, சுதந்திர உரிமையையும் மனித உரிமைகள் பிரகடனத்தையும் மீறுபவையாக இன்ன பிறவாறு அறிவிக்கப்பட வேண்டும்'', அதாவது பழைய தொழிலாளர்ச் சட்டங்களில் இருப்பது போன்றே கடும் குற்றமாக அறிவிக்கப்பட வேண்டும். *Révolutions de Paris*, Paris, 1791, t. III, p. 523.)

''கிட்டத்தட்ட அடிமைத்தனத்தின் சார்பு நிலையுமான இந்த முற்றுன சார்பு நிலையைக்'' குறைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படலாகாது; ஏனென்றுல், நிச்சயமாக, இப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் ''தற்போதைய தொழில் முயற்சியாளர்களான தங்களது முன்னுளைய எஜமானர்களின் சுதந்திரத்திற்கு'' (தொழிலாளர்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கான சுதந்திரம்!) கெடுதி செய்கின்றனர்; மேலும் ஏனென்றுல் தொழில் ஒன்றியங்களின் முன்னுளைய எஜமானர்களின் கொடுங்கோன்மைக்கு எதிரான ஒரு கூட்டு—என்னவென்று யூகியுங்கள் பார்ப்போம்!—பிரெஞ்சு அரசியலமைப்புச் சட்டத்தால் ரத்துச் செய்யப்பட்ட தொழில் ஒன்றியங்களை மீண்டும் நிறுவுவதாகுமாம்.[226]

அத்தியாயம் XXIX

முதலாளித்துவப் பண்ணையாரின் மூலத்தோற்றம்

சட்டக் காப்பிழந்த பாட்டாளிகள் வர்க்கமொன்றின் பலவந்த சிருஷ்டிப்பை, அவர்களைக் கூலித் தொழிலாளிகளாக்கிய கர்ணகடூரமான கட்டுப்பாட்டை, உழைப்புச் சுரண்டலின் சுமையைக் கூட்டுவதன் மூலம் மூலதனத் திரட்சியின் வேகத்தை முடுக்குவதற்கு நிர்ப்பந்த முறைகளைப் பயன்படுத்திய அரசின் மானங்கெட்ட நடவடிக்கையை, இப்போது நாம் பார்த்து முடித்துள்ளபடியால், ஆதியில் முதலாளிகள் எங்கிருந்து வந்தார்கள்? என்ற கேள்வி மிஞ்சி நிற்கிறது. ஏனென்றுல் விவசாய ஜனங்களை ஓட்டாண்டிகளாக்குவது பெரிய நிலவுடமையாளர்களைத்தான் நேரடியாகச் சிருஷ்டிக்கிறது. ஆயின், பண்ணையாரின் மூலத்தோற்றத்தைப் பொறுத்த வரை, நாம் அதன் மீது கை வைக்க முடியுமென்று சொன்னுல் மிகையாகாது; ஏனென்றுல் பல நூற்றுண்டுகளின் வழியே பரிணமிக்கின்ற மெதுவான செய்முறையாகும் அது. சுதந்திரச் சிறு உடமையாளர்களைப் போலவே,

---

226) Buchez et Roux, *Histoire Parlementaire*, t. X, pp. 193—195 passim.

பண்ணையடிமைகளும் மிக வேறுபட்ட நிபந்தனைகளுக்குட் பட்டு நிலம் வைத்திருந்தனர்; எனவே மிக வெவ்வேறான பொருளாதார நிலைமைகளின் கீழ் விடுவிக்கப்பட்டனர்.

இங்கிலாந்தின் பண்ணைக்காரனின் முதல் வடிவம், தானே ஒரு பண்ணையடிமையான bailiff [அமுல்தார்] ஆகும்; அவனது நிலை—இன்னும் அதிகம் வரம்புக்குட்பட்ட செயல் மண்டலத்திலிருப்பதென்ற ஒரே வேறுபாட்டுடன் கூடிய—பழைய ரோமானிய villicusஇன் நிலையை ஒத்ததாகும். 14ம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் அவனது இடத்துக்கு ஒரு பண்ணைக்காரன் வருகிறான்; இப்பண்ணைக்காரனுக்கு நிலச்சுவான்தார் விதை, கால்நடைகள் மற்றும் உபகரணங்களை வழங்குகிறான். அவனது நிலைமை விவசாயியின் நிலைமையிலிருந்து அதிகம் வேறுபட்டதல்ல. அதன் மூலம் கூலி உழைப்பைக் கூடுதலாகச் சுரண்டுகிறான், அவ்வளவே. சீக்கிரமே அவன் ஓர் அரைப் பண்ணைக்காரனாகிய métayer ஆக மாறுகிறான். விவசாயச் செலவில் ஒரு பகுதியை அவன் முன்னீடு செய்கிறான்; மறுபகுதியை நிலச்சுவான்தார் தன் பையில் போட்டுக் கொள்கிறான். இருவரும் ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்படும் விகிதாச்சாரங்களில் மொத்த விளை பொருளைப் பிரித்துக்கொள்கின்றனர். இந்த வடிவம் இங்கிலாந்தில் துரிதமாக மறைந்து, கூலித் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதன் மூலம் தன் சொந்த மூலதனம் விருத்தியடையுமாறு செய்பவனும், உபரி உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியைப் பண ரூபத்திலோ பொருள் ரூபத்திலோ நிலச்சுவான்தாரிடம் குத்தகையாகக் கொடுப்பவனுமான முறைப்படியான பண்ணைக்காரனுக்கு இடம் விடுகிறது.

15ம் நூற்றாண்டில், தனக்காகவும் அதேபோல் கூலிக்கும் வேலை செய்த சுதந்திர விவசாயியும் பண்ணைத் தொழிலாளியும் தம் சொந்த உழைப்பைக் கொண்டு தம்மைத் தனவந்தர்களாக்கிக் கொண்டிருந்த வரை, பண்ணைக்காரனின் சூழ்நிலைகளும் அவனது உற்பத்திக் களமும் ஒரேமாதிரி இரண்டாந்தரமாக இருந்தன. 15ம் நூற்றாண்டின் கடைசி மூன்றும் பகுதியில் துவங்கி அநேகமாக 16ம் நூற்றாண்டு முழுவதிலும் (ஆயின் கடைசிப் பத்தாண்டைத் தவிர்த்து) நீடித்து

நடந்த விவசாயப் புரட்சி எவ்வளவு வேகமாக விவசாய மக்கள் திரளை வறியோர் ஆக்கியதோ அவ்வளவு வேக மாகவே அவனை செல்வந்தனாக்கியது.[227] பொதுநிலங்களை அபகரித்ததானது, இத்தியாதி அவனது கால்நடைச் செல் வத்தைப் பெரிதும் அதிகரித்திட, கிட்டத்தட்ட செலவே வைக்காமல் வழிசெய்தன; அதே நேரத்தில் அக்கால்நடை கள் காட்டைக் கழனியாக்க இன்னும் வளமான உரச் சப்ளையை அவனுக்கீந்தன.

இதோடு 16ம் நூற்றாண்டில் ஒரு மிக முக்கியமான அம் சம் சேர்க்கப்பட்டது. அப்போது குத்தகை ஒப்பந்தங்கள் நீண்ட காலத்திற்கு, பல சமயங்களில் 99 ஆண்டுகள் வரை யிலான காலகட்டத்திற்கு செய்து கொள்ளப்பட்டன. அந்த நேரத்தில் விலையுயர்ந்த உலோகங்களின், எனவே பணத் தின் மதிப்பில் கூடிவந்த வீழ்ச்சி பண்ணைக்காரர்களுக்குப் பொற்கன் வார்த்தது. மேலே உரைக்கப்பட்ட மற்றெல்லாச் சூழ்நிலைகளுன்னியில், அது கூலிகளைத் தாழ்த்தியது. கூலியின் ஒரு பாகம் இப்போது பண்ணையின் லாபங்களோடு சேர்ந்து கொண்டது. தானியத்தின், கம்பளியின், இறைச்சியின், ஒரு வார்த்தையில் சொல்வதானால் விவசாய உற்பத்திப் பொருள் அனைத்தின் விலையில் தொடர்ந்து ஏற்பட்ட உயர்வு பண்ணைக்காரன் தரப்பில் எந்தச் செயலுமின்றியே பண மூலதனத்தை உப்பச் செய்தது; அதே நேத்தில் அவன் செலுத்திய குத்தகை (பணத்தின் பழைய மதிப்பின் அடிப் படையில் கணக்கிடப்படுவது) எதார்த்தத்தில் சுருங்கியது.[228]

---

227) *Description of England* என்ற தனது நூலில் ஹாரிஸன் சொல்கிறார்: ''சந்தர்ப்ப வசமாக நான்கு பவுன்கள் என்ற பழைய குத்தகை நாற்பது, ஐம்பது அல்லது நூறு பவுன் களாக உயர்த்தப்பட்டாலும், குத்தகைக் கால முடிவுவாக் கில் ஆறு அல்லது ஏழு ஆண்டுக் காலக் குத்தகையான பணத் தொகை தன்னிடம் மிஞ்சி நிற்காவிட்டால், பண்ணைக் காரன் தன் லாபங்கள் மிகக் குறைவென்றே நினைப்பான்.''

228) 16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பணத்தின் மதிப்பிறக்கம் சமுதாயத்தின் வெவ்வேறு வர்க்கங்கள் மீது செலுத்திய செல்வாக்கை அறிய, பார்க்க: *A Compendious or Briefe Examination of Certayne Ordinary Complaints of Divers of our Countrymen in these our Days*, By W.S., Gentleman (London 1581). இந்த நூலின்

இவ்வாறு, தம் கூலித் தொழிலாளர்கள், தம் நிலச்சுவான்தார்கள் இரு சாராரையுமே பலியிட்டு அவர்கள் செல்வம்

உரையாடல் வடிவமானது, இதை ஷேக்ஸ்பியர் எழுதியிருக்க வேண்டுமென நீண்ட காலமாக மக்களை நினைக்க வைத்தது; 1751ல் கூட, இது அவரது பெயரால் பிரசுரிக்கப்பட்டது. இதை எழுதியவர் வில்லியம் ஸ்டாஃபோர்டு ஆவார். ஒரு இடத்தில் பட்டத்து விரர் (knight) பின்வருமாறு தர்க்கம் செய்கிறார்:

''பட்டத்து விரர்: நீங்கள் என் அண்டை வீட்டுக்காரர் வேளாளர், நீங்கள் திருவாளர் வியாபாரி, நீங்கள் நல்ல செம்புத் தொழிலாளி, மற்ற கைத்திறனாளர்களுடன் உங்களை நீங்களே நன்கு கச்சிதமாகக் காப்பாற்றிக்கொள்ளலாம். ஏனென்றால் எல்லாப் பொருட்களுமே முன்பிருந்ததை விட அதிகம் கிராக்கியான விலையுடையவையாய் இருக்குமளவுக்கு, நீங்கள் மீண்டும் விற்கின்ற உங்களது சரக்குகள் மற்றும் உழைப்பின் விலையை உயர்த்துகிறீர்கள். ஆனால் நாங்கள் மீண்டும் வாங்க வேண்டியுள்ள பொருட்களுக்கு ஈடுசெய்ய, விலையையுயர்த்தி விற்பதற்கு எங்களிடம் ஒன்றுமில்லை.'' இன்னொரு இடத்தில் பட்டத்து விரர் மருத்துவரைக் கேட்கிறார்: ''உங்களை வணங்கிக் கேட்கிறேன்: நீங்கள் சொல்லும் வகைகள் என்ன, சொல்வீர்கள். முதலில், அதனால் இழப்பிருக்காதென நீங்கள் நினைக்கும் வகைகள் யாவை? மருத்துவர்: வாங்குவது மற்றும் விற்பதால் ஜீவிக்கும் அனைவரையும் நான் சொல்கிறேன்; ஏனென்றால் அவர்கள் அதிக விலைக்கு வாங்கினால் அதன்பின் அதிக விலைக்கு விற்கின்றனர். விரர்: அதனால் வெற்றி பெறுமென நீங்கள் சொல்லும் அடுத்த வகை என்ன? மருத்துவர்: பழைய குத்தகைக்குத் தம் சொந்தக் கையுழைப்பில் பண்ணைகளை எடுத்துக்கொள்ளக் கூடிய அனைவரும்; ஏனென்றால் அவர்கள் பழைய வீதத்தைப் பின்பற்றிக் கொடுக்கின்றனர், புதிய வீதத்தைப் பின்பற்றி விற்கின்றனர்—அதாவது, அவர்கள் தங்கள் நிலத்துக்கு மிகச் சல்லிசான குத்தகை கொடுத்து, அதில் விளையும் அனைத்தையும் அதிக விலைக்கு விற்கின்றனர். விரர்: இதன் மூலம் கிடைக்கும் லாபத்தை விட அதிகமாக நஷ்டமடைவர் என்று நீங்கள் சொன்ன வகை எது? மருத்துவர்: எல்லா மேன்மக்களும் கனவான்களும் ஒன்று வரைக்குட்பட்ட குத்தகை அல்லது உதவித்தொகை கொண்டு வாழுகின்ற, அல்லது பூமியில் கையுழைக்காத, அல்லது வாங்கும் தொழில், விற்கும் தொழில் ஒன்றுமில்லாத மற்ற எல்லோரும்.''

பெருக்குகின்றனர். எனவே 16ம் நூற்றாண்டின் முடிவில் அக்காலத்துச் சூழ்நிலைகளை வைத்துப் பார்த்தால் செல்வந்தர்களான ''முதலாளித்துவப் பண்ணையார்களின்'' வர்க்கமொன்றை இங்கிலாந்து பெற்றிருந்ததில் வியப்பொன்றுமில்லை.[229]

---

229) பிரான்சில் மத்திய காலத்தின் முற்பகுதியின் போது நிலப்பிரபுக்களுக்குப் பாக்கிகளை வசூலிப்பவரான அமுல்தார், régisseur [காரியஸ்தர்] சீக்கிரத்திலேயே homme d'affaires [தொழில் செய்பவராக] ஆனார்; இவர் பல வந்தப் பறிமுதல், மோசடி முதலானவற்றின் மூலம் புரட்டல் வேலை செய்து முதலாளியானார். இந்த régisseurs சில நேரங்களில் தாமே பிரபுக்குலத்தினராய் இருந்தனர். உதாரணமாக, ''பெசன்ஸோனில் உள்ள கோட்டையின் பிரபு ஜாக் டெ டொரேஸ் தன்னுடைய எஜமானனுக்கு (இவர் டிஷோனில் புர்கோன் கோமகன், பிரபுவிற்குக் கீழ்ப்பட்டவர்) 1359 டிசம்பர் 25 முதல் 1360 டிசம்பர் 28 வரையிலான காலகட்டத்திற்கு மேற்கூறிய கோட்டைப் பிரதேசத்திலிருந்து வரும் வாடகை சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்கிறார்.'' (Alexis Monteil, *Traité des Matériaux Manuscrits etc.*, pp. 234, 235.) சமுதாய வாழ்க்கையின் சகல துறைகளிலும் பெரிய பங்கு இடைத்தரகனுக்கே கிடைப்பது எப்படி என்பது இங்கு ஏற்கெனவே தெளிவாக உள்ளது. பொருளாதார மண்டலத்தில் உதாரணமாக, நிதிக்கடனளிப்போர், பங்குச் சந்தை ஹேஷ்யபேரக்காரர்கள், வியாபாரிகள், கடைக்காரர்கள் சாற்றினைப் பிழிந்து கொள்கின்றனர்; சிவில் விவகாரங்களில் வழக்கறிஞர் தன் கட்சிக்காரர்களை அடித்துச் சாப்பிடுகிறார்; அரசியலில், வோட்டர்களை விட பிரதிநிதி, முடிமன்னரை விட மந்திரி அதிக முக்கியத்துவமுடையவராய் இருக்கிறார்; மதத்தில் ''தபசி'' கடவுளைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறார்; திரும்பவும் தபசி, நல்லாயனுக்கும் அவனது ஆடுகளுக்கும் இடையிலுள்ள தவிர்க்க முடியாத இடைத்தரகர்களான பாதிரிமார்களால் பின்னுக்குத் தள்ளப்படுகிறார். இங்கிலாந்தில் போலவே பிரான்சிலும், பெரிய நிலப்பிரபுத்துவப் பிரதேசங்கள் எண்ணற்ற சிறு குடிப் பண்ணைகளாக பிரிக்கப்பட்டன; ஆனால் மக்களுக்கு ஒப்பிட முடியாத அளவு அதிகம் பாதகமான நிலைமைகளின் கீழ் இது நடந்தது. 14ம் நூற்றாண்டின் போது பண்ணைகள் அல்லது terriers பிறந்தன. அவற்றின் எண்ணிக்கை 1,00,000த்தையும் மிகத்

அத்தியாயம் XXX

தொழில்துறையின் மீது விவசாயப் புரட்சியின் பிரதிபலிப்பு. தொழில் மூலதனத்துக்காக உள்நாட்டுச் சந்தையைச் சிருஷ்டித்தல்

நாம் பார்த்தது போலவே, விட்டு விட்டு நிகழ்வதும், ஆனால் திரும்பத் திரும்பப் புதிதாக நிகழ்த்தப்படுவதுமான விவசாய ஜனசமூகத்தின் பறிமுதலும் வெளியேற்றமும், கூட்டுமுறை கில்டுகளுடன் தொடர்பில்லாத, அக்கில்டுகளால் விலங்கிடப்படாத பாட்டாளிகளின் திரளொன்றை நகரத் தொழில்களுக்குச் சப்ளை செய்தன; பழைய ஏ. ஆண்டர்ஸன் (ஜேம்ஸ் ஆண்டர்ஸனுடு போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டாம்) வாணிபத்தின் வரலாற்றைப் பற்றிய தனது நூலில்[41] தெய்விகச் சக்தியின் நேரடித் தலையீட்டில் நம்பிக்கை வைக்குமாறு செய்கின்ற ஒரு அதிருஷ்டவசமான சூழ்நிலையாகும் இது. இன்னதும் நாம் ஆதித்திரட்சியின் இந்த அம்சம் குறித்துப் பார்த்திட ஒருக்கணம் நிற்க வேண்டும். ஜியோஃப்ராய் செயின்ட்-ஹிலேர் பிரபஞ்சரீகப் பொருள் ஒரிடத்தில் அடர்ந்து போவதைப் பிறிதோரிடத்தில் அது அடர்த்தி குறைந்து போவதைக் கொண்டு விளக்கிய

தாண்டி இடையறாது அதிகரித்தது. அவை உற்பத்திப் பொருளில் 1/12 முதல் 1/5 வரை பலவாறிருந்த குத்தகைகளைப் பண ரூபத்தில் அல்லது பொருள் ரூபத்தில் செலுத்தின. Terriers, ஜமீன்களின் மதிப்புக்கும் விஸ்தாரத்துக்கும் ஏற்ப மானிய நிலங்கள், உபமானிய நிலங்கள் (fiefs, arrière-fiefs) முதலானவையாக இருந்தன; இவற்றில் பல ஒரு சில ஏக்கர்கள் மட்டுமே கொண்டிருந்தன. ஆனால் நிலத்தில் உறைவோர் மீது ஓரளவு சட்டநீதி பரிபாலன உரிமைகள் இந்தப் பண்ணையார்களுக்கு இருந்தன; நான்கு தரவரிசைகள் இருந்தன. இந்தக் குட்டிக் கொடுங்கோலர்கள் அனைவரின் கீழும் விவசாய ஜனசமூகம் ஒடுக்கப்படுவதைப் புரிந்து கொள்ளலாம். இன்று சமாதானத்தின் நீதிமான்கள் உட்பட 4,000 நடுவர் மன்றங்கள் போதுமென்றுள்ள பிரான்சில், ஒரு காலத்தில் 1,60,000 நீதிபதிகள் இருந்ததாக மான்டேய் சொல்கிறார்.

விதத்தில்,[230] சுதந்திரமான, சுய ஆதார விவசாயிகள் சுருங்கிக் குறைந்ததானது தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் ஒன்றுக நெருங்கிக் கூடுமாறு செய்தது மட்டுமல்ல. சாகுபடியாளர்களின் எண்ணிக்கை குறைந்ததற்கு மாறுக, மண் முன்பிருந்த அளவுக்கே அல்லது அதை விட அதிகமாக விளைபொருள் கொடுத்தது; ஏனென்றால் நிலவுடமை நிலைமைகளிலான புரட்சி, அபிவிருத்தியடைந்த வேளாண்மை முறைகள், முன்னிலும் அதிகமான கூட்டுப் பணி, உற்பத்திச் சாதனங்களின் குவிதல் முதலானவற்றை உடன் கொணர்ந்தது. மேலும் ஏனென்றால் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் இன்னும் தீவிரமாக வாட்டப்பட்டது மட்டுமல்லாமல்,[231] அவர்கள் தமக்காகவே வேலை செய்த உற்பத்திக் களமும் மேலும் மேலும் சுருங்கிப் போனது. எனவே, விவசாயச் சமூகத்தில் ஒரு பகுதியை விடுவித்து விட்டதுடன், அவர்களது முந்தைய வாழ்க்கைச் சாதனங்களும் விடுவிக்கப்பட்டன. இப்போது அவை மாறும் மூலதனத்தின் பொருள் மூலகங்களாக மாற்றியமைக்கப்பட்டன. பறிமுதலுக்காளாக்கப்பட்டுத் திக்குத் தெரியாதவனுக்கப்பட்ட விவசாயி, அவற்றின் மதிப்பை, கூலியின் வடிவத்தில், தன் புதிய எஜமானுகிய தொழில் முதலாளியிடமிருந்து வாங்க வேண்டும். ஜீவனோபாயங்கள் விஷயத்தில் பொருந்துவது, உள்நாட்டு விவசாயத்தைச் சார்ந்துள்ள தொழில்துறையின் கச்சாப் பொருட்கள் விஷயத்திலும் பொருந்துகிறது. அவை மாறு மூலதனத்தின் ஓர் மூலகமாக மாற்றப்பட்டன.

உதாரணமாக, இரண்டாம் பிரெடெரிக்கின் காலத்தில் எல்லோருமாக ஃபிளாக்ஸ் நூற்பில் ஈடுபட்டவர்களான வெஸ்ட்ஃபேலிய விவசாயிகளில் ஒரு பகுதியினர், பலவந்தப் பறிமுதலுக்காளாக்கப்பட்டு நிலத்திலிருந்து விரட்டியடிக்கப் படுவதாகவும், மிஞ்சி நிற்கும் மறுபகுதி பெரும் பண்ணையார்களின் தினக்கூலித் தொழிலாளர்களாக மாற்றப்படு

---

230) அவரது *Notions de Philosophie Naturelle*, Paris, 1838 பார்க்க.

231) சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் அழுத்திச் சொல்கின்ற ஓர் விஷயமாகும் இது.[42]

வதாகவும் வைத்துக்கொள்ளுங்கள். அதே நேரத்தில் ஃபிளாக்ஸ் நூற்பு மற்றும் நெசவுக்கான பெரிய நிறுவனங்கள் பிறக்கின்றன; இவற்றில் இப்போது, ''விடுவிக்கப்பட்டு விட்ட'' ஆட்கள் கூலிக்காக வேலை செய்கின்றனர். ஃபிளாக்ஸ் சரியாக முன்பிருந்தது போலவே காணப்படுகிறது. அதன் ஒரு நூல் கூட மாறி விடவில்லை; ஆனால் ஒரு புதிய சமூக ஆன்மா அதனுள் எம்பிக் குதித்துள்ளது. இப்போது பட்டறைத் தொழில் எஜமானன் மாறு மூலதனத்தின் ஒரு பகுதியாக அது அமைகிறது. அதனைத் தாமே சாகுபடி செய்து தம் குடும்பத்தினருடன் சேர்ந்து சில்லறைப் பாணியில் நூற்ற பல சிறு உற்பத்தியாளர்கள் மத்தியில் முன்னதாகப் பிரிக்கப்பட்ட அது, இப்போது, மற்றவர்களைத் தனக்காக நூற்கவும் நெய்யவும் வைக்கின்ற ஒரு முதலாளியின் கையில் குவிகிறது. ஃபிளாக்ஸ் நூற்பில் செலவிடப்படும் கூடுதல் உழைப்பு, முன்னதாக ஏராளமான விவசாயக் குடும்பங்களுக்குக் கூடுதல் வருமானத்தில் அல்லது ஒருக்கால் இரண்டாம் பிரெடெரிக்கின் காலத்தில் pour le roi de Prusse* வரிகளில் அடையப் பெற்றது. இப்போது அது ஒரு சில முதலாளிகளுக்குக் கிடைக்கும் லாபத்தில் அடையப் பெறுகிறது. முன்னதாக நாட்டின் பரப்பெங்கிலும் சிதறிக் கிடந்த தக்களிகளும் தறிகளும் இப்போது ஒரு சில பெரும் உழைப்புப் பாளையங்களில் உழைப்பாளிகளுடனும் கச்சாப் பொருளுடனும் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. தக்களிகள், தறிகள், கச்சாப்பொருட்கள் இப்போது நூற்போர் மற்றும் நெசவாளர்களின் சுதந்திர வாழ்க்கைச் சாதனங்கள் என்ற நிலையிலிருந்து, அவர்களை அதிகாரம் செய்வதற்கும், அவர்களிடமிருந்து ஊதியமில்லாத உழைப்பை உறிஞ்சியெடுப்பதற்குமான சாதனங்களாக மாற்றப்படுகின்றன.[232] பெரிய பட்டறைகளையும் பெரிய பண்ணைகளையும் நோக்கும் போது,

---

* அதாவது பிரஷ்ய மன்னனுக்காக என்று நேரிடையாகப் பொருள்படும்; இந்த இட்டத்தில் வீணாக என்று பொருள்.—ப-ர்.

232) ''உங்களை அதிகாரம் செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வதற்காக உங்களிடம் இன்னமும் எஞ்சியுள்ள

அவை பல சிறு உற்பத்திக் கேந்திரங்களை ஒன்றுசுத் தூக்கிப் போட்டதிலிருந்து தோற்றமெடுத்திருக்கின்றன, பல சிறு சுதந்திர உற்பத்தியாளர்களைப் பறிமுதலுக்காளாக்கியதன் மூலம் எழுப்பப்பட்டுள்ளன என்பதை நாம் உணருவதில்லை. ஆயினும் மக்களின் உள்ளுணர்வு தவறிவிடவில்லை. புரட்சியின் சிங்கமான மிராபோவின் காலத்தில், பெரிய பட்டறைகள்—ஒன்றுகச் சேர்க்கப்பட்ட வயல்களைப் பற்றி நாம் பேசுவது போல—manufactures réunies, ஒன்றுகச் சேர்க்கப்பட்ட பணிமனைகளான பட்டறைத் தொழிற்குழுமங்கள் என்று இன்னமும் அழைக்கப்பட்டன. மிராபோ சொல்கிறார்: ''நூற்றுக்கணக்கான ஆட்கள் ஓர் இயக்குநரின் கீழ் வேலை செய்பவையும் ,சாதாரணமாகப் பட்டறைத் தொழிற் குழுமங்கள் (manufactures réunies) என்றழைக்கப்படுபவையுமான பெரிய பட்டறைகளிடம் மட்டுமே நாம் கவனம் செலுத்துகிறோம். மிகப்பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் தன் சொந்தப் பொறுப்பிலும் வேலை செய்கின்ற பட்டறைகள் கருத்தில் கொள்ளப்படுவது அரிதே; அவை மற்றவற்றிடமிருந்து எட்டாத் தொலைவில் வைத்துப் பார்க்கப்படுகின்றன. இவை ஒன்றுகச் சேர்ந்துதான் தேசிய செல்வத்தின் உண்மையிலேயே முக்கியமான பகுதியை உருவாக்குகின்றன என்பதால் இது பெருந்தவறுகும்.... பட்டறைத் தொழிற்சாலை (fabrique réunie) ஓரிரு தொழில் முயற்சியாளர்களைப் பிரமாதமாகச் செல்வந்தர்களாக்கும்; ஆனால் தொழிலாளர்கள், அதிகமாக அல்லது குறைவாக ஊதியம் பெறுகின்ற தகுதியாளர்களாக மட்டுமே இருப்பர்; தொழில் முயற்சியின் வெற்றியில் அவர்களுக்கு எந்தப் பங்குமிருக்காது. மாறுக, தனித்துள்ள பணிமனை (facrique séparée) யாரையுமே செல்வந்தர்களாக ஆக்காது, ஆனால் பல தொழிலாளர்கள் வசதியாக இருப்பர்; சேமிப்புக்குணமுள்ளோரும் சுறுசுறுப்புள்ளோரும் சிறிது மூலதனம் திரட்

சிறு பங்கைத் தந்தால் எனக்குச் சேவை செய்யும் கௌரவத்தை உங்களுக்குத் தருகிறேன்'' என்று முதலாளி கூறுகிறார். (J. J. Rousseau, *Discours sur l'Economie Politique.*)

டிட, ஒரு குழந்தையின் பிறப்புக்காக, உடல் நலக்குறைவுக் காக, தமக்காக அல்லது தம்மைச் சேர்ந்தோருக்காக, சிறிது ஒதுக்கி வைத்திட இயலும். சேமிப்பும் சுறுசுறுப்பும் கைவரப் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்; ஏனெனில் அவர்கள், நன்னடத்தையின், செயல் முனைப்பின் உரு வில், தங்கள் நிலைமையை அடிப்படையில் மேம்படுத்திக் கொள்வதற்கான ஒரு சாதனத்தைக் காண்பார்கள்; வருங் காலத்துக்கு முக்கியத்துவமேதுமுடையதாக ஒருக்காலும் இருக்க முடியாததும், நாளுக்கு நாள் என்ற ரீதியில் மட் டுமே சற்று மேம்பட்ட வாழ்நிலையில் ஆட்களை வைப்பது ஒன்றையே ஏகப்பயனைக் கொண்டதுமான ஒரு சிறு கூலி உயர்வைப் பெறுகின்ற சாதனத்தைக் காண மாட்டார்கள்.... தங்கள் ஆதாயத்துக்காக வேலை செய்வதற்குத் தொழி லாளர்களுக்கு நாளுக்கு நாள் ஊதியமளிக்கும் சில குறிப் பிட்ட தனியார்களின் தொழில் முயற்சிகளான பெரிய பணி மனைகளால், இத்தனிப்பட்ட தனிநபர்களை வசதியானவர் களாக்க இயலலாம்; ஆனால் அரசாங்கங்களின் கவனத்துக்குப் பொருத்தமான ஒரு இலக்காக அவை ஒருக்காலும் ஆக காட்டா. பெரும்பாலும் சிறு நிலவுடமைகளின் சாகுபடி யோடு ஒன்றிணைக்கப்பட்ட தனித்துள்ள பணிமனைகள் மட் டுமே சுதந்திரமானவை.[233] விவசாய ஜனசமூகத்தில் ஒரு பகுதியைப் பறிமுதலுக்காளாக்கியதும் நிலவெளியேற்றம் செய்ததும், தொழிலாளர்களையும் அவர்களது ஜீவனோபா யங்களையும் உழைப்புக்கான மூலப்பொருளையும் தொழில் மூலதனத்துக்கென விடுவித்தது மட்டுமல்லாமல், உள் நாட்டுச் சந்தையைச் சிருஷ்டித்தும் கொடுத்தன.

---

233) Mirabeau, முன்வந்தது, பாகம் III, பக்கங்கள் 20 —109, பல இடங்கள். தனித்துள்ள பணிமனைகள் ''ஒன் றிணைந்த'' பணிமனைகளை விட அதிகம் சிக்கனமானவையும் உற்பத்தித் திறனுள்ளவையும் ஆகுமென மிராபோ கரு துவதற்கும் ஒன்றிணைந்த பட்டறைகளை அரசாங்கப் பார்வை யின் கீழுள்ள வெறுமனே செயற்கையான விசித்திரங்கள் என்று பார்க்கிறார் என்பதற்கும், அந்த நேரத்தில் கண் டதுப் பட்டறைத் தொழில்களில் பெரியதோர் பகுதியின் நிலையே விளக்கமாகிறது.

உண்மையில், சிறு விவசாயிகளைக் கூலித்தொழிலாளர் களாகவும், அவர்களது ஜீவனோபாயங்கள் மற்றும் உழைப்புச் சாதனங்களை மூலதனத்தின் பொருளியல் மூலகங்களாக வும் மாற்றிய நிகழ்ச்சிகள் அதே நேரத்தில் மூலதனத்துக் கென்றே ஓர் உள்நாட்டுச் சந்தையையும் சிருஷ்டித்தன. முன்னதாக, விவசாயக் குடும்பம் ஜீவனோபாயங்களையும் கச்சாப்பொருட்களையும் உற்பத்தி செய்து அவற்றில் பெரும் பகுதியைத் தானே நுகர்ந்தது. இந்தக் கச்சாப்பொருட் களும் ஜீவனோபாயங்களும் இப்போது பண்டங்களாகிவிட் டன; பெரிய பண்ணையார் அவற்றை விற்கிறார்; பட்டறைத் தொழில்களில் அவருக்குச் சந்தை கிடைக்கிறது. நூல், லினன், மோட்டாக் கம்பளிப் பொருட்கள்—இவற்றின் கச்சாப்பொருட்கள் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்துக்கும் எட்டக் கூடியவையாய் இருந்தன, ஒவ்வொரு விவசாயக் குடும்பத்தாலும் அதன் சொந்த உபயோகத்துக்காக நூற் கப்பட்டு வந்தன—பட்டறைத் தொழிற்பொருட்களாக இப் போது மாற்றப்பட்டன; இவற்றுக்கு நாட்டுப்புற வட்டங் கள் சந்தைகளாக உடன்பயன்பட்டன. தம் சொந்தக் கணக் கில் வேலை செய்துகொண்டிருந்த ஏராளமான சிறு உற் பத்தியாளர்களின் உருவில் தனித்த கைவினைஞர்களுக்குக் கிடைத்த பல சிதறலான வாடிக்கையாளர்கள் இப்போது, தொழில் மூலதனத்தால் வழிவகை செய்யப்படும் ஒரு பெரும் சந்தையாகக் குவிதலடைகின்றனர்.[234] இவ்வாறு சுய ஆதார விவசாயிகள் பறிமுதலுக்காளாக்கப்படுவதுடன்,

---

[234] "ஒரு தொழிலாளியின் குடும்பம், வேறு வேலை யின் இடைவேளைகளில் தன் சொந்தத் தொழிலின் மூலம், மிகையாக அலட்டாமல் 20 ராத்தல் கம்பளியை வருடாந் திரத் துணிமணியாக மாற்றுகிறது; இதில் காட்சிக்குரிய தொன்றுமில்லை; ஆனால் அதனைச் சந்தைக்குக் கொண்டு வாருங்கள், தொழிற்சாலைக்கும், அங்கிருந்து தரகனுக்கும், அங்கிருந்து வியாபாரிக்கும் அனுப்புங்கள்; பெரும் வாணிப நடவடிக்கைகளையும், அதன் மதிப்பைப் போல் இருபது மடங்கு அளவுக்கு ஈடுபடுத்தப்படும் பெயரளவு மூலதனத் தையும் நீங்கள் காண்பீர்கள்.... இவ்வாறு, ஒரு மோசமான தொழிற்சாலை ஜனசமூகத்தையும் புல்லுருவித்தனமான கடைக்காரர் வர்க்கத்தையும், ஒரு பொய்யான வர்த்தக,

அவர்களது உற்பத்திச் சாதனங்களிடமிருந்து அவர்கள் பிரிக்கப்படுவதுடன் சேர்ந்தாற்போல், கிராமப்புற வீட்டுத் தொழிலின் அழிவு, பட்டறைத் தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான பிரிவினைச் செய்முறை நடைபெறுகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறைக்குத் தேவைப்படுகின்ற விஸ்தாரத்தையும் முரணிலா நீடிப்பையும் ஒரு உள்நாட்டுச் சந்தைக்குத் தரக் கூடியது கிராமப்புற வீட்டுத் தொழிலின் அழிவு மட்டுமே.

இருந்தும், பட்டறைத் தொழிற்காலமென அழைப்பதற்குப் பொருத்தமான பட்டறைத் தொழிற்காலம் இந்த மாற்றத்தை அடிப்படையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதில் வெற்றி காண்பதில்லை. பட்டறையுற்பத்தி முறை என்றழைப்பதற்குப் பொருத்தமான பட்டறையுற்பத்தி முறை தேசிய உற்பத்தியின் அதிகார மண்டலத்தைப் பகுதியாகவே வெல்கிறது, எப்போதுமே தன் இறுதி அடிப்படையாக நகரக் கைத்தொழில்கள் மீதும் கிராமப்புற வட்டங்களின் வீட்டுத் தொழிலின் மீதும் கால் பதித்து நிற்கிறது என்பது நினைவிருக்கும். அது இவற்றை ஒரு வடிவத்தில், குறிப்பிட்ட கிளைகளில், சில குறிப்பிட்ட இடங்களில் அழிக்கிறது என்றால், வேறிடத்தில் மீண்டும் அழைத்துக்கொள்கிறது; ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரைக்கும் கச்சாப்பொருள் தயாரிப்புக்கு அவை அதற்குத் தேவை. எனவே, நிலத்தில் சாகுபடி செய்வதை ஒரு துணைத் தொழிலாகப் பின்பற்றும் அதே நேரத்தில் தொழில் உழைப்பில் தங்கள் தலையாய வேலையைக் காண்கின்ற சிறு கிராமவாசிகளின் ஒரு புதிய வர்க்கத்தை அது உண்டாக்குகிறது. இத் தொழில் உழைப்பின் உற்பத்திப் பொருட்களை அவர்கள் பட்டறைத் தொழில் அதிபர்களிடம் நேரடியாகவோ வியாபாரிகளை இடையில் வைத்தோ விற்கின்றனர். ஆங்கிலேய வரலாற்றைப் பயிலும் மாணவரின் மண்டையை முதலில் குழப்பும் ஒரு விசித்திர நிகழ்வுக்கான—பிரதானக் காரணம்

பண, நிதி அமைப்பையும் ஆதரிக்குமாறு தொழிலாளி வர்க்கம் நிர்ப்பந்திக்கப்படுகிறது.'' (David Urquhart, **முன்வந்தது, பக்கம் 120.**)

அல்லவென்றாலும் ஒரு காரணம் இதுவாகும். 15ம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியிலிருந்து, நாட்டுப்புற வட்டாரங்களில் முதலாளித்துவப் பண்ணைத் தொழிலின் ஆக்கிரமிப்பு மற்றும் விவசாயச் சமூகத்தின் தொடர்ச்சியான அழிவு பற்றிய—சில குறிப்பிட்ட இடைவேளைகளில் மட்டுமே இல்லாது போகின்ற—புகார்களை அவர் இடைவிடாமல் காண்கிறார். மறுபுறம், இந்த விவசாயச் சமூகம்—குறைந்த எண்ணிக்கையிலும், எப்போதுமே இன்னும் மோசமான நிலைமைகளிலுமே என்றாலும்—மீண்டும் முன் வந்து நிற்பதை அவர் எப்போதுமே காண்கிறார்.[235] முக்கியக் காரணம் வருமாறு: இங்கிலாந்து ஒரு நேரத்தில் பிரதானமாகத் தானியத்தைச் சாகுபடி செய்வதாகவும், இன்னொரு நேரத்தில் பெரும்பாலும் கால்நடைவளர்ப்புத் தொழில் புரிவதாகவும் மாறி மாறி வரும் காலக் கட்டங்களில் உள்ளது; இவற்றோடு விவசாயச் சாகுபடியின் விஸ்தாரம் ஏறி இறங்குகிறது. தற்காலத் தொழில் மட்டுமே, இறுதியாக, இயந்திரங்களின் உருவில் முதலாளித்துவ விவசாயத்தின் நீடித்த அடிப்படையை வழங்குகிறது; விவசாய ஜனசமூகத்தில் மிகப் பெரும்பான்மையைத் தீவிரமான விதத்தில் பறிமுதலுக்காளாக்குகிறது; விவசாயத்துக்கும் கிராமப்புற வீட்டுத் தொழிலுக்கும் இடையிலான பிரிவினையைப் பூர்த்தி செய்கிறது; இவ்வீட்டுத் தொழிலின் வேர்களை—நூற்பையும் நெசவையும்—அது கிழித்தெறிகிறது.[236] ஆதலால், முதல் தடவை

---

235) குரோம்வெல்லின் காலம் ஒரு விதிவிலக்காக அமைகிறது. குடியரசு நீடித்திருந்த வரை, சகல தரவரிசைகளையும் சேர்ந்த திரளான ஆங்கிலேய மக்கள், தாங்கள் டியூடர்களின் காலத்தில் அமிழ்த்தப்பட்டிருந்த சீரழிவிலிருந்து எழுந்தனர்.

236) தற்காலக் கும்பளித் தொழிலானது, இயந்திரங்களைப் புகுத்தியதோடு, முறையான பட்டறைத் தொழிலிலிருந்தும் கிராமப்புற மற்றும் வீட்டுத் தொழில்களின் அழிவிலிருந்தும் உதித்தெழுந்துள்ளன என்பதை டக்கெட் அறிவார். (Tuckett, முன்வந்தது, பாகம் I, பக்கங்கள் *139—144*.)"கலப்பை, நுகத்தடி ஆகியவை கடவுளர்களின் கண்டுபிடிப்பாகவும் நாயகர்களின் அலுவலாகவும் இருந்தன; தறி, தக்களி, நூலுருளை ஆகியவற்றின் கண்டுபிடிப்புகள்

யாக அது உள்நாட்டுச் சந்தை முழுவதையும் தொழில் மூலதனத்துக்கென்று வென்றும் கொடுக்கிறது.[237]

மகத்துவம் குறைந்தவையா என்ன! நூலுருளையையும் கலப்பையையும், தக்களியையும் நுகத்தடியையும் பிரித்து விடுங்கள்; தொழிற்சாலைகளும் வறியோர் இல்லங்களும், கடனும் பேரச்சங்களும், விவசாய தேசம், வாணிப தேசம் என்ற இரு பகையான தேசங்களும் உங்களுக்குக் கிடைக்கின்றன.'' (David Urquhart, முன்வந்தது, பக்கம் 122.) ஆனால் இப்போது வருகிறார் கேரி; இங்கிலாந்து, சகல வேற்று நாடுகளையும் விவசாயத் தேசங்களாக்கி விட்டு, அவற்றுக்குப் பட்டறை உற்பத்தியாளனாகத் தான் இருக்க முயன்றுகொண்டிருக்கிறது என்று அவர் கூறுகிறார்; நிச்சயமாக இதில் நியாயமில்லாமலில்லை. இவ்விதத்தில் துருக்கி நாசமாக்கப் பட்டிருக்கிறது, ஏனென்றால் ''நிலத்தின் சொந்தக்காரர்களும் அனுபோகதாரர்களும், கலப்பைக்கும் தறிக்குமிடையிலான, சுத்தியலுக்கும் பரம்புப் பலகைக்குமிடையிலான அந்த இயற்கையான நேச அணியை அமைப்பதன் மூலம் தங்களை வலுப்படுத்திக்கொள்வதற்கு'' இங்கிலாந்து ''ஒரு போதும் அனுமதித்ததில்லை'' என்று இவர் சிணுங்குகிறார். (*The Slave Trade*, p. 125.) இவரது கருத்தப்படி, உர்கார்ட் துருக்கியின் நாசத்தில் பிரதான காரியஸ்தர்களில் ஒருவராவார்; அங்கே ஆங்கிலேய நலனை முன்னிட்டு உர்கார்ட் சுதந்திரத் தொழில் முறைப் பிரச்சாரம் செய்திருந்தார். பிரிவினைச் செய்முறையைத் துரிதப்படுத்துவதான அதே காப்பு முறையால் அச்செய்முறையை கேரி—இவர் ஒரு பெரிய ருஷ்ய தாசர் என்பதைப் போகிறபோக்கில் சொல்லி வைக்கலாம்—தடுக்க விரும்புகிறார் என்பது இதில் மிகச் சிறந்த அம்சமாகும்.

[237] மில், ரோஜர்ஸ், கோல்டுவின் ஸ்மித், ஃபாசெட் முதலானோர் போன்ற பரோபகார ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர்களும் ஜான் பிரைட் வகையறுக்கள் போன்ற மிதவாதத் தொழிலதிபர்களும்—கெய்னைப் பார்த்து ஆபெலைப் பற்றி கடவுள் கேட்டது போல—ஆங்கிலேய நிலவுடமையாளர்களைப் பார்த்துக் கேட்கின்றனர்: நமது ஆயிரக்கணக்கான சுதந்திர நிலமுடையோர் எங்கே போய்விட்டார்கள்? ஆனால் அப்புறம், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? அந்தச் சுதந்திர நிலமுடையோரின் அழிவிலிருந்தே. நீங்கள் மேலும் இப்படிக் கேட்காதது ஏன்? சுதந்திரமான நெசவாளர்களும் நூற்போரும் கைவினைஞர்களும் எங்கே போனார்கள்?

அத்தியாயம் XXXI

தொழில் முதலாளியின் மூலத்தோற்றம்

தொழில்[238] முதலாளியின் மூலத்தோற்றம் பண்ணையாரின் மூலத்தோற்றத்தைப் போன்று படிப்படியானதொரு வழியில் நடந்தேறவில்லை. சந்தேகத்துக்கிடமின்றி, பல சிறு கில்டு எஜமானர்களும் இன்னும் அதிகம் சுதந்திரமான சிறு கைவினைஞர்களும், அல்லது ஏன், கூலித் தொழிலாளர்களுங்கூட, சிறு முதலாளிகளாகவும் (கூலியுழைப்புச் சுரண்டலையும் அதற்கிணையான மூலதனத் திரட்சியையும் படிப்படியாக விரிவுபடுத்துவதன் மூலம்) sans phrase [முழுமலர்ச்சியடைந்த] முதலாளிகளாகவும் தம்மை மாற்றிக் கொண்டனர். தப்பிச் சென்ற பண்ணையடிமைகளில் எவர் எஜமானராக இருக்க வேண்டும், எவர் வேலைக்காரராக இருக்க வேண்டும் என்ற பிரச்சினை பெரும்பாலும், அவர்கள் தப்பியோடி வந்த தேதி முன்னுல் வருகிறதா அல்லது பின்னுல் வருகிறதா என்பதைக் கொண்டு முடிவு செய்யப்பட்ட மத்திய கால நகரங்களின் குழந்தைப் பருவத்தில் நிகழ்ந்தது போலவே, முதலாளித்துவ உற்பத்தியின் குழந்தைப் பருவத்திலும் அடிக்கடி காரியங்கள் நடந்தன. இந்த முறையின் ஆமைவேகமானது, 15ம் நூற்றுண்டின் படிவுக்காலத்தில் மாபெரும் கண்டுபிடிப்புகள் சிருஷ்டித்த புதிய உலகச் சந்தையின் வாணிபத் தேவைபாடுகளுக்கு எவ்விதத்திலும் ஒத்தமையவில்லை. ஆனுல் மத்திய காலம் இரு வேறுபட்ட மூலதன வடிவங்களைப் பரம்பரைச் சொத்தாகக் கொடுத்திருந்தது; இவ்வடிவங்கள் மிக வெவ்வேருன பொருளாதாரச் சமுதாய அமைப்புகளில் முதிர்ச்சியடைகின்றன. இவையே, முதலாளித்துவ உற்பத்தி முறையின் சகாப்தத்திற்கு முன்னர் quand même [உண்மையான] மூலதனமாக—கந்துவட்டிக்காரனின் மூலதனமும் வணிகனின் மூலதனமும்—கருதப்படுகின்றன.

---

238) இங்கே தொழில் என்று சொல்வது விவசாயத்துக்கு எதிரிடை ஒப்பு நோக்கிலாகும். ''இன ரீதியான'' அர்த்தத்தில் பண்ணையார் பட்டறைத் தொழிலதிபரின் அளவுக்கே ஒரு தொழில் முதலாளியாவார்.

''தற்போது, சமுதாயத்தின் செல்வம் அனைத்தும் முதலில் முதலாளியின் வசத்துக்குள் செல்கிறது.... அவன் நிலச் சொந்தக்காரனுக்கு வாடகையும், தொழிலாளிக்குக் கூலியும், வரி மற்றும் காணிக்கை வசூலிப்போருக்கு அவர்கட்குரியதையும் கொடுக்கிறான்; உழைப்பின் ஆண்டு உற்பத்திப் பொருளில் ஒரு பெரிய, உள்ளபடியே மிகப் பெரிய, தொடர்ந்து பெருகிக் கொண்டே போகின்ற பங்கைத் தனக்கென்று வைத்துக்கொள்கிறான். முதலாளி இப்போது சமூகத்தின் செல்வம் அனைத்தின் முதல் சொந்தக்காரன் என்று சொல்லப்படலாம்; இந்தச் சொத்துக்கான உரிமையை எந்தச் சட்டமும் அவன் மீது சுமத்தவில்லை என்றாலும், இப்படிச் சொல்லப்படலாம்.... மூலதனத்தின் மீது வட்டி எடுப்பதன் மூலம் இம்மாற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளது.... ஐரோப்பாவைச் சேர்ந்த சகல சட்டமளிப்போரும் சட்டங்களின் மூலம், அதாவது கந்துவட்டி முறைக்கெதிரான சட்டங்களின் மூலம் இதனைத் தடுக்கப் பிரயாசைப்பட்டனர் என்பதில் விளைதம் கொஞ்சமில்லை.... நாட்டின் செல்வம் முழுவதும் முதலாளியின் அதிகாரம் சொத்துரிமையில் ஒரு பூரண மாற்றமாகும்; இது நிகழ்த்தப்பட்டது எந்தச் சட்டம் அல்லது சட்டத்தொடரின் மூலம்?''[239] புரட்சிகள் சட்டங்களால் சாதிக்கப்படுவதில்லை என்பது இந்நூலாசிரியருக்கு நினைவிலிருந்திருக்க வேண்டும்.

கந்துவட்டியைக் கொண்டும், வாணிபத்தைக் கொண்டும் உருவாக்கப்பட்ட பண மூலதனம் தொழில் மூலதனமாக மாற விடாமல் நாட்டுப்புறத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பும் நகரங்களில் கில்டு ஸ்தாபனமும் தடுத்தன[240] நிலப்பிரபுத்துவப் பணியாள் குழுக்களின் மறைவோடு, நாட்டுப்

---

239) *The Natural and Artificial Right of Property Contrasted*, London, 1832, pp. 98—99. தாமஸ் ஹோட்ஸ்கின், இந்த அனாமதேய நூலின் ஆசிரியர் ஆவார்.

240) 1794ம் ஆண்டின் அளவுக்குப் பிற்காலத்திலேயே கூட, எந்த வணிகனும் ஒரு பட்டறைத் தொழிலதிபராக ஆகாது தடுக்கும் சட்டமொன்றை கோரி லீட்சைச் சேர்ந்த சிறு ஜவுளி தயாரிப்பாளர்கள் ஒரு மகஜருடன் பாராளுமன்றத்துக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பினர். (Dr. Aikin, முன்வந்தது.)

புற ஜனக்கூட்டத்தைப் பறிமுதலுக்காளாக்கியது, பகுதி வெளியேற்றம் செய்தது ஆகியவற்றோடு, இந்த வில்லங்கள் மறைந்து போயின. புதிய பட்டறைத் தொழில்கள் கடல் துறைமுகங்களிலோ, பழைய நகராட்சிகளுடையவும் அவற்றின் கில்டுகளுடையவும் கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட உட்பகுதி மையங்களிலோ நிறுவப்பட்டன. இங்கிலாந்தில் இப்புதிய தொழில் வார்ப்பிடங்களுக்கெதிராக corporate towns [கில்டு ஆட்சி அமைப்புள்ள நகரங்களின்] கடுமையான போராட்டம் இதனாலேயே.

அமெரிக்காவில் தங்கம், வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டது, பூர்விக ஜனங்களை வேரறுத்து அடிமைப்படுத்தி சுரங்கங்களில் சமாதி செய்தது, இந்தியாவை வென்று சூறையாடியதன் துவக்கம், கறுப்புத்தோல்களை வாணிப வேட்டையாடுவதற்கான ஒரு முயற்காடாக ஆப்பிரிக்காவை மாற்றியது ஆகியவை முதலாளித்துவ உற்பத்திச் சகாப்தத்தின் எழிலார்ந்த அருணோதயத்துக்குக் கட்டியங்கூறின. இந்த ரம்மியான நிகழ்ச்சிப்போக்குகள் ஆதித்திரட்சியின் தலையாய முடுக்கு விசைகளாகும். பூமியை அரங்கமாகக் கொண்டு ஐரோப்பிய தேசங்களின் வாணிபச் சமரம் இந்நிகழ்ச்சிகளை நெருங்கிப் பின்பற்றியே நடைபோடுகிறது. அது, ஸ்பெயினிலிருந்து நெதர்லாந்து கலகம் செய்து பிரிவதுடன்[13] ஆரம்பித்து, இங்கிலாந்தின் ஜக்கோபின் எதிர்ப்புப் போரில்[14] அசுரப் பரிமாணங்களை எட்டி, சீனவுக்கெதிரான அபினி யுத்தங்கள்[15] முதலானவற்றில் இன்னமும் நடந்தவண்ணமுள்ளது.

ஆதித்திரட்சியின் வெவ்வேறு முடுக்கு விசைகள் இப்போது, ஏறக்குறைய காலக் கிரம வரிசையில், குறிப்பாக ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவற்றின் மீது பகிர்ந்து பரவுகின்றன. இங்கிலாந்தில் 17ம் நூற்றாண்டு முடிவில் அவை காலனிகளையும் தேசியக் கடனையும், தற்கால வரிவிதிப்பு முறையையும் காப்புக்கொள்கை முறையையும் தழுவி நிற்கின்ற திட்டமிட்டாற் போன்றதொரு ஒன்றிணைப்பை வந்தடைகின்றன. இந்த முறைகள் (உதாரணமாக காலனியாதிக்க முறை) பகுதி

முரட்டுப் பலத்தைச் சார்ந்துள்ளன. ஆனல் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றும் செய்முறையைச் செயற்கை வெப்பக் கூட பயிர் வளர்ப்புப் பாணியில் துரிதப்படுத்தவும் மாறுதல் காலத்தைக் குறுக்கவும், சமுதாயத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட சக்தியான அரசின் அதிகாரத்தை அவை அனைத்தும் பிரயோகிக்கின்றன. ஒரு புதிய சமுதாயத்தைக் கருத்தரித்துள்ள ஒவ்வொரு பழைய சமுதாயத்துக்கும் வன்முறையே மருத்துவச்சி. அதுவே ஒரு பொருளாதாரச் சக்தியாகும்.

கிறிஸ்தவக் காலனியாதிக்க முறை பற்றி, கிறிஸ்தவ தர்மத்தைச் சிறப்பு முறையில் பயில்பவரான டபிள்யூ. ஹோவிட் சொல்கிறார்: ''உலகத்தின் சகல பிராந்தியங்கள் பூராவிலும் அவர்களால் அடிமைப்படுத்த முடிந்த சகல மக்கள் சமூகங்கள் மீதும் கிறிஸ்தவ இனம் என்று சொல்லப்படுவது புரிந்துள்ள காட்டுமிராண்டித்தனங்கள் மற்றும் நிதானமிழந்த கொடுஞ்செயல்களுக்கு, பூமியின் எந்தக் காலத்திலும், எவ்வளவுதான் மூர்க்கமானதென்றாலும், எவ்வளவுதான் படிப்பறிவில்லாததென்றாலும், எவ்வளவுதான் கருணை, வெட்கம் பார்க்காததென்றாலும் வேறெந்த இனத்தினுடையவும் இம்மாதிரிச் செயல்கள் இணையாக முடியாது.''[241] ஹாலந்தின் காலனியாதிக்கப் பரிபாலனத்தின் வரலாறு — 17ம் நூற்றாண்டின் முதலாளித்துவத் தலைமையான தேசமாக ஹாலந்த இருந்தது — ''துரோகத்தனம், லஞ்சலாவண்ணியம், கொலைபாதகம், சல்லித்தனம் ஆகி

---

241) William Howitt, *Colonization and Christianity. A Popular History of the Treatment of the Natives by the Europeans in all their Colonies*, London, 1838, p. 9. அடிமைகளை நடத்திய விதம் பற்றிய நல்லதொரு தகவல் திரட்டு பின்வரும் நூலில் உள்ளது: Charles Comte, *Traité de Législation*, 3ème éd., Bruxelles, 1837. முதலாளி தன் சொந்த முகலட்சணத்துக்கொப்பாக உலகத்தைத் திருத்தியமைத்துக்கொள்ளத் தங்குதடையின்றி இயலுகின்ற இடங்களிலெல்லாம் தன்னை வைத்தும் தொழிலாளியை வைத்தும் செய்துக் கொள்வதென்ன என்பதைப் பார்க்க இவ்விஷயத்தை விவரமாகப் பயில வேண்டும்.

யவை நிறைந்த மிகமிக அசாதாரணமான உறவுகளின் வரலாறுகும்''.[242] ஜாவாவுக்கு அடிமைகளைப் பெறும் பொருட்டு செலிபசில் மனிதர்களைத் திருடுகின்ற அவர்களது முறையை விட சிறப்பாக அவர்களது குணத்தைக் குறிப்பது வேறொன்றுமில்லை. ஆள்திருடர்கள் இந்தக் காரியத்திக்காகப் பயிற்றுவிக்கப்பட்டனர். திருடனும் மொழிபெயர்ப்பாளனும் விற்பனையாளனும் இந்தத் தொழிலில் முக்கியக் காரியஸ்தர்களாக இருந்தனர், சுதேச இளவரசர்கள் முக்கிய வியாபாரிகளாக இருந்தனர். திருடப்பட்ட இளைஞர்கள் அடிமைக் கப்பல்களுக்கு அனுப்பப்படத் தயாராகும் வரை செலிபசைச் சேர்ந்த ரகசியக் குகைகளுள் வீசப்பட்டனர். ஒரு அதிகாரப் பூர்வ அறிக்கை கூறுகிறது: ''உதாரணமாக, மாக்காஸர் என்ற இந்த ஒரு நகரமே ரகசியச் சிறைகள் நிறைந்ததாயுள்ளது; கொடூரத்தில் இவை ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல; பேராசைக்கும் கொடுங்கோன்மைக்கும் இரையான துரதிருஷ்டசாலிகள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, தம் குடும்பத்தினரிடமிருந்து பலவந்தமாகப் பிரிக்கப்பட்டு, இச்சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.'' மலாக்காவைப் பிடிப்பதற்காக, டச்சுக்காரர்கள் போர்ச்சுகீசிய கவர்னரை ஊழல் செய்து மயக்கினர். அவர் அவர்களை 1641ல் நகருக்குள் வரவிட்டார். அவர்கள் உடனே அவரது வீட்டுக்கு விரைந்து சென்று, அவரது துரோகத்தின் விலையான 21, 875 பவுன்களைக் கொடுப்பதிலிருந்து ''துறவு'' கொள்வதற்காக அவரைப் படுகொலை செய்தனர். அவர்கள் கால்வைத்த இடமெல்லாம் பெருநாசமும் ஜனக்குறைப்பும் நடந்தன. ஜாவாவைச் சேர்ந்த ஒரு மாகாணமான பாஞ்சுவாங்கி 1750ல் 80,000 வாசிகளுக்கும் அதிகமாகக் கொண்டிருந்தது; 1811ல் 8,000 பேர் மட்டுமே இருந்தனர். இதோ, doux commerce [வாணிபத்தின் இனிமையே இனிமை]!

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி[46] இந்தியாவில், அரசியல் ஆட்சியன்னியில், தேயிலைத் தொழிலிலும், அதே போல் பொதுவாகச் சீன வர்த்தகத்திலும் ஐரோப்பாவிற்

242) Thomas Stamford Raffles, late Leiut. Gov. of that island, *The History of Java*, London, 1817.

கும் ஐரோப்பாவிலிருந்தும் சரக்குகளின் போக்குவரத்திலும் பிரத்தியேகமான ஏகபோகத்தை ஈட்டியதென்பது நன்கு தெரிந்ததே. ஆனல் இந்தியாவினுடைய கடற்கரை வர்த்தகமும் தீவுகளிடையிலான கடலோர வர்த்தகமும் அதே போல் இந்திய உள்நாட்டு வர்த்தகமும் கம்பெனியின் உயர் மட்ட அதிகாரிகளின் ஏகபோகமாக இருந்தன. உப்பு, அபின், பாக்கு, மற்ற சரக்குகளிலான ஏகபோகங்கள் அள்ள அள்ள வற்றுத செல்வ ஊற்றுகளாக இருந்தன. அதிகாரிகள் தாமே விலேயை நிர்ணயித்து வருத்தமிக்க இந்துக்களே இஷ்டம் போல் சூறையாடினர். இந்தத் தனியார் இழிவர்த்தகத்தில் கவர்னர் ஜெனரல் பங்கு பெற்றூர். அவரது சலுகைக்கு ரியோர் ரசவாதிகளே விட கெட்டிக்காரத் தனமாக ஒன்று மில்லாததிலிருந்து தங்கம் எடுக்கக் கூடிய நிபந்தனைகளின் கீழ் கன்டிராக்ட்டுகள் பெற்றனர். பெரும் ஐஸ்வரியங்கள் ஒரே நாளில் காளான்கள் போல் முளைத்தன; ஒரு ஷில்லிங் முன்னீடு கூட இல்லாமல் ஆதித்திரட்சி தொடர்ந்து நடந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் விசாரணையில் இவ் வாருன விவகாரங்கள் புற்றீசல் போல் கிளம்புகின்றன. இதோ ஓர் எடுத்துக்காட்டு: அபினுக்கான ஒரு கன்டிராக்ட், இந்தியாவில் அபின் வட்டாரத்திலிருந்து தொலேவாகவுள்ள ஒரு பகுதிக்கு உத்தியோகப் பூர்வக் காரிய நிமித்தம் அவர் புறப்பட்டுக் கொண்டிருந்த தருணத்தில் சுல்லிவன் என்ற ஒரு குறிப்பிட்ட ஆசாமிக்குக் கொடுக்கப்பட்டது. சுல்லிவன் தனது கன்டிராக்ட்டை பின் என்ற ஒருவரிடம் 40,000 பவுன் களுக்கு விற்றூர்; அதனே அதே தினத்தில் பின் 60,000பவுன் களுக்கு விற்றுவிட்டார்; இறுதியாக அதனே வாங்கிக் கன்டி ராக்ட்டை நிறைவேற்றியவர், எல்லாம் போகத் தனக்குப் பெரும்பாலும் கிடைத்ததாக அறிவித்தார். பாராளு மன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் ஒன் றின்படி, கம்பெனியும் அதன் உத்தியோகஸ்தர்களும் 1757 முதல் 1766 வரை இந்தியர்களிடமிருந்து அன்பளிப்புகளாக 60,00,000 பவுன்களேப் பெற்றனர். 1769க்கும் 1770க்கு மிடையில் ஆங்கிலேயர்கள் அரிசி முழுவதையும் வாங்கி, மீண்டும் அதனே நம்ப முடியாத அதித விலைகளுக்கன்றி விற்க

மறுத்ததன் மூலம் ஒரு பஞ்சத்தை உருவாக்கி விட்டனர்.[213])

இயல்பாகவே, மேற்கிந்தியத் தீவுகள் போன்று ஏற்று மதி வர்த்தகத்துக்கென்றே விதிக்கப்பட்ட தோட்டத் தொழில் காலனிகளிலும், கொள்ளைத் தேவனிடம் ஒப் படைக்கப்பட்ட மெக்ஸிகோ மற்றும் இந்தியா போன்ற செல் வம் மிக்க, கணிச ஜனத்தொகையுள்ள நாடுகளிலும் பூர் விகக் குடிகளை நடத்திய விதம் குலை நடுங்கச் செய்வதாய் இருந்தது. ஆனல் காலனிகள் என்று அழைப்பதற்குப் பொருத்தமுள்ள இடங்களிலுங்கூட, ஆதித்திரட்சியின் கிறிஸ்தவ குணம் பொய்க்கவில்லை. 1703ல், நியூ இங்கிலாந் தின் சுத்தவான்களான புராட்டெஸ்டன்ட் கொள்கையின் அந்த நிலைகுலையாத நற்குணவான்கள், தங்கள் Assembly [பேர வையின்] ஆணைகள் மூலம் இந்திய மண்டை ஓடு ஒவ்வொன் றுக்கும், பிடிபடும் ஒவ்வொரு சிவப்புத் தோலனுக்கும் 40 பவுன் பரிசு நிர்ணயித்தனர். 1720ல் ஒவ்வொரு மண்டை ஓட்டுக்கும் 100 பவுன்கள் பரிசு; 1744ல், மாஸாச்சுஸெட்ஸ்-பே ஒரு குறிப்பிட்ட இனத்தைக் கலகக்காரர்கள் என அறி வித்த பின்னர், விலைகள் பின்வருமாறு: 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒரு ஆணின் மண்டை ஓட்டுக்கு 100 பவுன்கள் (புதிய செலாவணி), ஒரு ஆண் கைதிக்கு 105 பவுன்கள், பெண் மற்றும் குழந்தைக் கைதிக்கு 50 பவுன் கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் மண்டை ஓடுகளுக்கு 50 பவுன்கள். சில பத்தாண்டுகள் கழித்து, இடைக்காலத்தில் துரோகத்தனமேறியிருந்த, piligrim fathers [யாத்திரைத் தந்தைகளின்] வழி வந்தோரைக் காலனியாதிக்க முறை பழிக்குப் பழி வாங்கியது. ஆங்கிலேயத் தூண்டுதலின் பேரி லும் ஆங்கிலேய பூர்டுக்காகவும் சிவப்புத் தோலினர் அவர் களைக் கோடரியால் கொன்றனர். வேட்டை நாய்களும்

---

213) 1866ம் வருடத்தில் ஓரிசா மாகாணத்தில் மட் டும் பத்து லட்சத்துக்குமதிகமான இந்துக்கள் பட்டினியால் மாண்டனர். எவ்வாருயினும், இந்திய கஜானாவைத் தனம் கொழிக்கச் செய்வதற்கான முயற்சி, பட்டினியால் துடித்த மக்களிடம் வாழ்க்கையின் அவசியப் பொருட்கள் விற்கப் பட்ட விலையைக் கொண்டு செய்யப்பட்டது.

மண்டை ஓடு சேர்த்தலும் ''கடவுளும் இயற்கையும் தன் கையில் கொடுத்துள்ள சாதனங்கள்'' என்று பிரிட்டிஷ் பாராளுமன்றம் அறிவித்தது.

காலனியாதிக்க முறை செயற்கை வெப்பப் பயிர்க்கூடம் போன்று வர்த்தகத்தையும் நீர்வழிப் போக்குவரத்தையும் பழுக்கச் செய்தது. லூதரின் ''ஏகபோக சங்கங்கள்'' மூலதனக் குவியலுக்கான சக்தி வாய்ந்த நெம்பு கோல்களாக இருந்தன. காலனிகள் மொட்டு நிலையிலிருந்து பட்டறைத் தொழில்களுக்காக ஒரு சந்தையையும், சந்தை ஏகபோகத்தின் மூலமாக ஓர் அதிகரித்த திரட்சியையும் ஈட்டிக் கொடுத்தன. ஒளிவு மறைவில்லாத சூறை, அடிமைப் படுத்தல், கொலை ஆகியவற்றின் மூலம் ஐரோப்பாவுக்கு வெளியே பிடித்த பொக்கிஷங்கள் தாய்நாடு நோக்கிக் கடல் வழிவந்து அங்கே மூலதனமாக்கப்பட்டன. முதன் முதல் காலனியாதிக்க முறையை முழு அளவில் வளர்த்தெடுத்த ஹாலந்து 1648லேயே வாணிப மேன்மையின் சிகரத்தில் நின்றுகொண்டிருந்தது. ''கிழக்கிந்திய வர்த்தகமும் ஐரோப்பாவின் தென்மேற்குக்கும் வடகிழக்குக்கும் இடையிலான வாணிபமும் கிட்டத்தட்டப் பிரத்தியேகமாகவே அதன் வசத்திலிருந்தன. அதன் மீன் வளங்கள், வியாபாரக் கப்பல்கள், பட்டறைத் தொழில்கள் வேறெந்த நாட்டினையும் மிஞ்சுபவையாக இருந்தன. அக்குடியரசின் மொத்த மூலதனம் ஐரோப்பாவின் மீதப்பகுதி அனைத்தின் ஒன்று சேர்த்த மூலதனத்தை விட அநேகமாக அதிகம் முக்கியமானதாய் இருந்தது.''[47] ஹாலந்து நாட்டு மக்கள் ஐரோப்பாவின் மீதப்பகுதி அனைத்தினுடையவும் ஒன்று சேர்த்த மக்களை விட அதிகம் மிகைவேலை வாங்கப்பட்டோராயும், அதிகம் ஏழைகளாயும், அதிகம் மிருகத்தனமாய் ஒடுக்கப்பட்டோராயும் 1648க்குள் ஆகியிருந்தனர் என்பதையும் சேர்த்துச் சொல்ல கூலிஹ் மறந்துவிடுகிறார்.

இன்று தொழில் முதன்மை வாணிப முதன்மையைக் குறிக்கிறது. மறுபுறம், உண்மையான பட்டறைத் தொழிற் காலத்தில் தொழில் மேன்மையைத் தருவது வாணிப முதன்மையே. அந்த நேரத்தில் காலனியாதிக்க முறை வகிக்

கின்ற முதன்மையான பாத்திரம் இதனுலேயே. ஐரோப்பாவின் பழைய கடவுளர்களோடு உரசிக்கொண்டு, பலிபீடத்தின் மீது அமர்ந்து, திடீரென ஒருநாள் ஒரு குத்து, ஒரு உதை கொடுத்து அவர்களனேவரையும் ஒரே குவியலாகச் சுண்டித் தள்ளிவிட்ட ''விசித்திரக் கடவுள்'' அதுவாகும். உபரி மதிப்பு உண்டாக்குவதே மனித குலத்தின் ஏக முடிவும் நோக்கமும் என்று அது பிரகடனப்படுத்தியது.

பொதுக் கடனின், அதாவது தேசியக் கடன்களின் அமைப்பு முறை—இதன் தோற்றுவாயை ஜெனேவாவிலும் வெனிசிலும் மத்திய காலத்திலேயே நாம் கண்டுகொள்கிறோம்—பொதுவாகப் பட்டறைத் தொழிற்காலத்தின் போது ஐரோப்பாவை வசப்படுத்திக்கொண்டது. தன் கடல் வழி வர்த்தகம் மற்றும் வாணிபப் போர்களுடன் கூடிய காலனியாதிக்க முறை அதை ஊட்டி வளர்க்கும் மூடுதோட்டமாகப் பயன்பட்டது. இவ்வாறு அது முதலில் ஹாலந்தில் வேர் பிடித்தது. தேசியக் கடன்கள், அதாவது அரசின்—கொடுங்கோலரசானலும், அரசியலமைப்புச் சட்டப் பூர்வ அரசானலும், குடியரசானலும்—பராதீனம் முதலாளித்துவ சகாப்தத்தை முத்திரை குத்திக் குறித்தன. தேசியச் செல்வம் எனப்படுவதில் வாஸ்தவத்தில் தற்கால மக்கள் சமூகங்களின் கூட்டு உடமைகளுள் நுழையும் ஒரே பகுதி அவர்களது தேசியக் கடனுகும்.[243*] இதனுலேயே, ஒரு அவசியவினேவாக, ஒரு தேசம் எவ்வளவு ஆழமாகக் கடன்படுகிறதோ அவ்வளவு பணக்காரத் தேசமாக ஆகின்றதென்ற தற்காலக் கோட்பாடு உள்ளது. பொதுக் கடன் மூலதனத்தின் மந்திரவாக்கு ஆகிறது. தேசியக் கடன்படுதலின் உதயத்தோடு, புனித ஆவிக்கெதிரான மன்னிக்கப்படலாகாத தெய்வ சிந்தனேயின் இடத்தைத் தேசியக் கடனிலான விசுவாசக்குறைவு பிடித்துக் கொள்கிறது.

பொதுக் கடன் ஆதித்திரட்சியின் மிகமிகச் சக்தி வாய்ந்த

243*) இங்கிலாந்தில் எல்லாப் பொது நிறுவனங்களும் ''முடியரசின்'' என்று பட்டம் பெறுகின்றன என வில்லியம் கோபெட் குறிப்பிடுகிறார்; ஆயினும் இதற்கான நஷ்டஈடாகத் ''தேசியக்'' கடன் (national debt) உள்ளது.

நெம்பு கோல்களில் ஒன்றுக ஆகிறது. ஒரு ஜாலவித்தைக் காரன் மந்திரக்கோலின் வீச்சைக்கொண்டு செய்வது போன்று, இது மலட்டுப் பணத்துக்கு இனப்பெருக்கச் சக்தியை அருளி இவ்விதத்தில் அதனை மூலதனமாக மாற்று கிறது. இதன் மூலம் இது தொழில்துறையில் பணத்தைப் போடுவதுடனும், ஏன் வட்டிக்கு விடும் நடவடிக்கைகளு டனும் இடையறாது தொடர்பு கொண்ட ஆபத்துகள், இடர்ப் பாடுகளுக்கு உள்ளாகும் சகலவித அவசியத்தையும் அகற்று கிறது. அரசுக் கடனீவோர், வாஸ்தவத்தில் எதையுமே கையைவிட்டுக் கொடுப்பதில்லை; ஏனென்றால் கடன் தரப் படும் பணம் ரொக்கப் பணத்தின் அளவுக்கே அவர்களது கைகளில் தொடர்ந்து பணிபுரியக் கூடிய, சுலபமாக மாற் றிக்கொள்ளத் தக்க பொதுப் பத்திரங்களாக மாற்றப் படுகிறது. ஆனால் மேற்கொண்டு இவ்விதத்தில் சிருஷ்டிக் கப்படும் சோம்பேறித்தனமான வாடகை வருமானக்காரர் களின் வர்க்கமன்னியிலும், அரசாங்கத்துக்கும் தேசத்துக்கு மிடையில் இடைத்தரகர்களான நிதியாளர்களின் முன் தயாரிப்பில்லாத செல்வமன்னியிலும்—மேலும் விண்ணுல கிலிருந்து இறங்கிவந்த ஒரு மூலதனத்தின் சேவையை ஒவ் வாரு தேசியக் கடனிலும் கணிசமானதொரு பகுதி யாருக்கு வழங்குகிறதோ அந்த வரிப் பண்ணையார்கள், வணிகர்கள், தனிப்பட்ட பட்டறைத் தொழிலதிபர்களின்னியிலும்— தேசியக் கடனைது, கூட்டுப் பங்குக் கம்பெனிகளுக்கும் சகல வகைப்பட்ட மாற்றத் தக்க உடமைகளிலும் நடக்கின்ற வியாபாரங்களுக்கும் பதற்றங்களுக்கும், ஒரு வார்த்தையில் சொல்லப்போனால் பங்குச் சந்தை சூதாட்டத்துக்கும் தற்கால வங்கியாதிக்கத்துக்கும் இட்டுச் சென்றது.

பெரிய வங்கிகள் தேசியப் பட்டங்களைச் சூடிப் பிறக் கையில், தனிப்பட்ட ஹேஷ்ய பேரக்காரர்களின் சங்கங் களாகவே இருந்தன. இவர்கள் அரசாங்கங்களின் பக்கத் தில் இருந்துகொண்டு, தமக்குக் கிடைத்த தனிச் சலுகை களின் விளைவாக, அரசுக்குப் பணம் கொடுக்கும் நிலை லிருந்தனர். எனவே தேசியக் கடனின் திரட்சி, இந்த வங்கி களின் இருப்பிலான அடுத்தடுத்த உயர்வைப் போலவே

இழைபிசகா அளவுகோலுடையதல்ல; இவ்வங்கிகளின் முழு வளர்ச்சி 1694ல் பேங்க் ஆஃப் இங்கிலாந்து ஸ்தாபிக்கப் பட்டதிலிருந்து ஆரம்பிக்கிறது. பேங்க் ஆஃப் இங்கிலாந்து அரசாங்கத்துக்குத் தன் பணத்தை 8% வட்டிக்குக் கொடுப் பதுடன் ஆரம்பித்து, அதே நேரத்தில் அதே மூலதனத்தை வங்கி நோட்டுகளின் வடிவத்தில் பொது ஜனங்களிடம் மீண்டும் கடன் கொடுப்பதன் மூலம் அதிலிருந்து நாணயப் பணம் தயாரிக்கப் பாராளுமன்றம் அதற்கு அதிகாரமளித் தது. உண்டிகளைத் தள்ளுபடி பிடித்து ரொக்கமாக்கித் தரு வதற்கும், பண்டங்களின் ஆதாரத்தில் முன்பணங்கள் கொடுக்கவும், விலையுயர்ந்த உலோகங்களை வாங்குவதற்கும் இந்த நோட்டுகளைப் பயன்படுத்த அது அனுமதிக்கப்பட்டது. வங்கியாலேயே தயாரிக்கப்பட்ட இந்தக் கடன் பணம், பேங்க் ஆஃப் இங்கிலாந்து அரசுக்குக் கடன்கள் கொடுப் பதற்கும் பொது ஜனங்களிடம் பெற்ற கடனுக்கு அரசின் கணக்கில் வட்டி செலுத்துவதற்குமான நாணயமாக ஆவ தற்கு அதிக காலம் பிடிக்கவில்லை. வங்கி ஒரு கையால் கொடுத்து, மறு கையால் அதை விட அதிகமாகத் திரும்பப் பெற்றுக்கொண்டது போதவில்லை; வரவு பெறும் நேரத்தி லுங்கூட, முன்னீடு செய்யப்படும் கடைசி ஷில்லிங்வரைக் கும் தேசத்தின் நித்திய கடனீவோனாகவே அது இருந்து வந்தது. படிப்படியாக அது நாட்டின் உலோகச் செல்வத் தின் வரவுத் தொட்டியாகவும், வாணிபக் கடன் அனைத்தின் ஈர்ப்பு மையமாகவும் தவிர்க்க முடியாமலே ஆனது. ஆங் கிலேயர்கள் சூனியக்காரிகளை நெருப்புக்குப் பலியாக்கு வதை நிறுத்திய போது கள்ளப் பணம் செய்பவர்களைத் தூக்கிலிட ஆரம்பித்தனர். வங்கி மன்னர்கள், நிதியாளர் கள், வாடகை வருமானக்காரர்கள், தரகர்கள், ஹெஷ்ய பேரக்காரர்கள், பங்கு வியாபாரிகள் முதலானோரடங்கிய இந்தக் குஞ்சுக் கூட்டத்தின் திடீர் எழுச்சி அவர்களின் சமகாலத்தவர் மீது ஏற்படுத்திய விளைவு என்ன என்பதை அக்காலத்திய எழுத்துக்கள், உதாரணமாக போலிங்புரோக் கின் எழுத்துக்கள் நிரூபிக்கின்றன.[243**)]

243**) "நம் காலத்தில் தாத்தார் இனத்தவர்கள்

தேசியக் கடன்படுதலோடு, ஒரு சர்வதேசக் கடனளிப்பு அமைப்பு உருவாகியது; இது பல நேரங்களில் ஏதாவதொரு மக்கள் சமூகத்தில் ஆதித்திரட்சியின் ஊற்றுக்கண்களில் ஒன்றை மறைத்துக்கொள்கிறது. இவ்வாறு வெனீசியத் திருட்டு முறையின் குற்றத்தன்மைகள் ஹாலந்தின் மூலதனச் செல்வத்தின் ரகசியத் தளங்களில் ஒன்றுக அமைந்தன; ஹாலந்துக்கு வெனிஸ் தன் நசிவு நிலையில் பெருமளவு பணத்தைக் கடன் கொடுத்தது. ஹாலந்திற்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான உறவுகளும் இப்படிப்பட்டவையே. 18ம் நூற்றாண்டின் துவக்கத்துக்குள் டச்சுப் பட்டறைத் தொழில்கள் வெகுவாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. ஹாலந்து வாணிபத்திலும் தொழிலிலும் முதன்மையான தேசமென்ற நிலை பழங்கதையாகி விட்டது. எனவே 1701 முதல் 1776 வரை அதன் பிரதான தொழில் புரியும் வழிகளில் ஒன்று, ஏராளமான அளவு மூலதனத்தை, குறிப்பாக அதன் பெரிய போட்டி நாடான இங்கிலாந்துக்குக் கடன் கொடுப்பதாகும். இதே காரியம் இன்று இங்கிலாந்துக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குமிடையே நடந்துகொண்டிருக்கிறது. இன்று பிறப்புச் சான்றதழின்றி அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோன்றுகின்ற ஏராளமான மூலதனம் நேற்று இங்கிலாந்தில் மூலதனமாக்கப்பட்ட குழந்தை ரத்தமாக இருந்தது.

தேசியக் கடன் பொது வருவாயைத் தன் ஆதாரமாகக் கொள்கிறதென்பதால்—பொது வருவாய், வட்டிக்கான வருடாந்தரச் செலுத்துதல்கள் முதலானவற்றை உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும்—தற்கால வரிவிதிப்பு முறை தேசியக் கடன்கள் முறையின் அவசிய நிறைவு செய்காரணியாக இருந்தது. வரி செலுத்துவோர் உடனடியாக உணராமலே, அசாதாரண செலவுகளை அரசாங்கம் சந்திக்கக் கடன்கள் உதவுகின்றன; ஆனால் இதன் விளைவாக, அவை அதிகரித்த வரிகளை அவசியமாக்குகின்றன. மறுபுறம், ஒன்

ஐரோப்பாவைப் பிடித்திருந்தால், நம் மத்தியில் நிதியாளருக்கு உள்ள பாத்திரத்தை அவர்களுக்கு விளக்குவது மிகக் கடினமானதாக இருந்திருக்கும்.'' (Montesquieu, *Esprit des lois*, t. IV, p. 33, éd. Londres, 1769.)

றன்பின் ஒன்றுக ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் கடன் களின் திரட்சியின் காரணத்தால் வரிவிதிப்பை உயர்த்து வது, எப்போதுமே புதிய அசாதாரண செலவுகளுக்காகப் புதிய கடன்களை நாடுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கிறது. இவ்வாறு, தற்காலப் பொது வருவாய் முறை—மிகமிக அவசியமான ஜீவனோபாயங்கள் மீது விதிக்கப்படும் வரிகள் (இதன் மூலம் அவற்றின் விலையை அதிகரித்து) இதன் அச் சாக அமைகின்றன—தன்னியக்க முன்னேற்றத்தின் கருவைத் தன்னுள் அடக்கியுள்ளது. மிகை வரிவிதிப்பு ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல, ஆனால், இன்னும் சரியாகச் சொல்வதானால், ஒரு வழிமுறைக் கொள்கையாகும். எனவே இந்த முறை முதலில் துவக்கி வைக்கப்பட்ட ஹாலந்தில், மாபெரும் தேசபக்தரான டெ விட் தனது நிதி மொழிகளில்[18] அதனை, கூலித் தொழிலாளியை படிந்து நடப்பவனாகவும் செட்டான வனாகவும் சுறுசுறுப்புள்ளவனாகவும்... மிகையுழைப்புச் சுமை யேறியவனாகவும் ஆக்குவதற்கான மிகச் சிறந்த முறையென மெச்சியுள்ளார். ஆயினும், கூலித் தொழிலாளியின் நிலைமை மீது அது செலுத்தும் நாசகரமான செல்வாக்கை விட அதி கமாக, அதன் விளைவாக விவசாயிகளையும் கைவினைஞர் களையும், ஒரு வார்த்தையில் சொல்வதானால், கீழ் நடுத்தர வர்க்கத்தின் சகல பிரிவினரையும் பலவந்தப் பறிமுதலுக் காளாக்கியதே இங்கு நமது அக்கறைக்குரியதாகும். இது பற்றி பூர்ஷ்வாப் பொருளாதார அறிஞர்கள் மத்தியிலேயே கூட இரு வேறு அபிப்பிராயங்களில்லை. அதன் உள்ளமைந்த பகுதிகளில் ஒன்றுக அமைகின்ற காப்பு முறை அதன் பறி முதற்செயலாற்றலை மேலும் உயர்த்துகிறது.

பொதுக் கடன்படுதலும் அதற்கிணையான பொது வரு வாய் முறையும் செல்வத்தை மூலதனமாக்குவதிலும் வெகு ஜனங்களை ஓட்டாண்டிகளாக்குவதிலும் வகித்துள்ள பெரும் பங்கு, தற்கால மக்கள் சமூகங்களின் துயரநிலைக்கான அடிப்படைக் காரணத்தை—சரியல்லாத விதத்தில்—இதில் தேடும் நிலைக்கு கோபெட், டபிள்டே போன்ற பல எழுத் தாளர்களை இட்டுச் சென்றுள்ளது.

காப்பு முறையானது பட்டறைத் தொழிலதிபர்களை

உண்டாக்குவதற்கு, சுதந்திரத் தொழிலாளர்களைப் பறிமுதலுக்காளாக்குவதற்கு, தேசிய உற்பத்திச் சாதனங்களையும் ஜீவனோபாயங்களையும் மூலதனமாக்குவதற்கு, மத்திய கால உற்பத்தி முறையிலிருந்து தற்கால உற்பத்தி முறைக்கு மாறிச் செல்வதைப் பலவந்தமாகக் குறுக்குவதற்கு ஓர் செயற்கைச் சாதனமாக இருந்தது. இந்தக் கண்டுபிடிப்பின் பாத்தியத்தைப் பற்றி ஐரோப்பிய அரசுகள் ஒன்றை ஒன்று துண்டுத் துண்டுகளாகக் கிழித்துக்கொண்டன; உபரி மதிப்புத் தயாரிப்பாளர்களின் சேவையிலிறங்கியதுமே அவை, மறைமுகமாகக் காப்புத் தீர்வைகளின் மூலமும், நேரடியாக ஏற்றுமதிப் பரிசுகளின், இன்னும் பிறவற்றின் மூலமும் இந்த நோக்கத்தைக் கடைப்பிடிப்பதில் தம் சொந்த மக்களைப் பங்கு செலுத்த வைத்தது மட்டுமல்ல. அவை, தம் சார்பு நாடுகளிலும் தொழிலனைத்தையும் பலவந்தமாக வேரறுத்தன. ஐரிஷ் பட்டறைவழிக் கம்பளியுற்பத்தியின் விஷயத்தில் இங்கிலாந்து செய்தது இதற்கு உதாரணமாகும். ஐரோப்பாக் கண்டத்தில், கொல்பேரின் உதாரணத்தைப் பின்பற்றி, இச்செய்முறை அதிகம் எளிமையானதாக்கப்பட்டது. இங்கே ஆதித்தொழில் மூலதனம், பகுதி, அரசு கஜானாவிலிருந்து நேரடியாக வந்தது. மிராபோ கூவுகிறார்: ''போருக்கு[49] முன்னர் சாக்ஸனியின் பட்டறைத் தொழிற் புகழின் காரணத்தைத் தேடுவதற்கு ஏன் அவ்வளவு தூரம் செல்ல வேண்டும்? திருவரசர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்கள் 18,00,00,000!''[244])

காலனியாதிக்க முறை, பொதுக் கடன்கள், கடுமையான வரிகள், காப்பு முறை, வாணிபப் போர்கள் முதலான, உண்மையான பட்டறைத் தொழிற்காலத்தின் இந்தக் குழந்தைகள், தற்காலத் தொழிலின் பால்யத்தின் போது விசுவரூபமெடுத்து வளர்கின்றன. தற்காலத் தொழிலின் பிறப்புக்குப் பாமரர்களின் கொடூரப் படுகொலை கட்டியங் கூறுகிறது. முடியரசின் கடற்கரைக்கு ஆள் சேர்த்தது போன்று, தொழிற்சாலைகளுக்கும் அடியாட்படைகொண்டு ஆள் சேர்க்

244) Mirabeau, முன்வந்தது, பாகம் IV, பக்கம் 101.

கப்பட்டது. விவசாய ஜன சமூகத்திடமிருந்து 15ம் நூற்றுண்டின் கடைசி மூன்றும் பகுதி முதல் தன் சொந்தக் காலம் வரை (18ம் நூற்றுண்டின் கடைசி வரை) நிலம் பறிமுதல் செய்யப்பட்டதன் பயங்கரங்கள் சர் எஃப். எம். ஈடனுக்குத் திகட்டிப் போய்விட்டன; முதலாளித்துவ விவசாயத்தையும் ''பயிர் நிலத்துக்கும் மேய்ச்சல் நிலத்துக்குமிடையில் தக்க விகிதாச்சாரத்தையும்'' நிறுவுவதற்கு ''அத்தியாவசியமான'' இந்தச் செய்முறையில் சுயதிருப்தியடைந்து குதூகலிக்கிறார் அவர்; ஆயினும், பட்டறைத் தொழிற் சுரண்டலைத் தொழிற்சாலைச் சுரண்டலாக மாற்றியமைப்பதற்கும், மூலதனத்துக்கும் உழைப்புச் சக்திக்குமிடையிலான உண்மையான உறவை நிறுவுவதற்கும் குழந்தைத் திருட்டும் குழந்தை அடிமைத்தனமும் அவசியமாவது தொடர்பாக அதே பொருளாதார ஆழ்நோக்கை அவர் காட்டவில்லை. அவர் சொல்கிறார்: ''ஏழைக் குழந்தைகளுக்கான குடிசைகளும் வேலையில்லங்களும் கொள்ளையிடப்பட வேண்டும்; இரவு பெரும் பகுதி நேரத்துக்கு அவர்களை முறை வைத்து வேலை வாங்க வேண்டும்; சகலருக்கும் இன்றியமையாததென்றாலும் பிஞ்சு வயதினருக்கு மிகமிக அவசியமானதான ஓய்வினைப் பறித்துக்கொள்ள வேண்டும்; இரு பாலாரும் வெவ்வேறு வயதும் நாட்டமும் உடையோருமான நபர்கள் (உதாரணத்தின் தொற்றுநோய் தியொழுக்கத்துக்கும் விபசாரத்துக்கும் இட்டுச் செல்லாமலிருக்க முடியாது என்னும் விதத்தில்) ஒன்று கூட்டப்பட வேண்டும்—இப்படியெல்லாம் செய்தால்தான் தொழில் வெற்றிகரமாக நடக்கும் என்ற நிலையிலுள்ள பட்டறைத் தொழிலேதும் தனிநபரின் அல்லது தேச பலத்தின் மொத்த அளவைக் கூட்டுமா என்பதைப் பரிசீலிப்பது பொதுஜனங்களின் கவனத்துக்குரியதாய் இருக்கலாம்.''[245]) ஃபீல்டன் சொல்கிறார்: ''டெர்பிஷயர், நாட்டிங்காம்ஷயர் ஆகிய மாவட்டங்களிலும் இன்னும் குறிப்பாக லங்காஷயரிலும், நீர்ச்சக்கரத்தை இயக்கவல்ல நீரோடைகளுக்குப் பக்கமாகக் கட்டி எழுப்பட்ட பெரிய தொழிற்

245) Eden, முன்வந்தது, புத்தகம் II, அத்தியாயம் I, பக்கம் 421.

சாலைகளில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. நகரங்களிலிருந்து தொலைவாக ஒதுங்கியிருந்த இந்த இடங்களில் திடீரென ஆயிரக்கணக்கான கைகள் தேவைப்பட்டன; குறிப்பாக, அப்போது வரை ஒப்பீட்டு ரீதியில் ஜன நெருக்கமற்றதாகவும் மலட்டுத்தனமாகவும் இருந்த லங்காஷயருக்கு இப்போது வேண்டியிருந்ததெல்லாம் ஒரு ஜனத்தொகையே. சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சு விரல்களே மிகப் பெரும்பாலும் அதிகம் தேவைப்பட்டதால், லண்டன், பர்மிங்காம், மற்றுமுள்ள இடங்களின் வெவ்வேறு வட்டார வேலையில்லங்களிலிருந்து பழகுத் தொழிலாளர்களைக் (!) கொள்முதல் செய்கின்ற பழக்கம் உடனே பிறந்தது. அனேதரவான இப்பச்சிளம் ஜீவிகளில் பலப்பல ஆயிரக்கணக்கானோர், 7 முதல் 13 அல்லது 14 வயதுடையோர், வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தன் புதுமுக ஆட்களுக்கு எஜமானர் உடையளிப்பதும், தொழிற்சாலையின் அருகே ஓர் பழகுத் தொழிலாளர் இல்லத்தில் உணவு மற்றும் உறைவிடமளிப்பதும் வழக்கமாய் இருந்தது; வேலைகள் நடக்குமாறு பார்த்துக்கொள்ளக் கங்காணிகள் நியமிக்கப்பட்டனர்; குழந்தைகளை ஆனமட்டும் வேலை வாங்குவது அவர்களின் குறியாக இருந்தது; ஏனென்றால் அவர்களது ஊதியம், அவர்களால் கறக்க முடிந்த வேலையின் அளவுக்கேற்ற விகிதாச்சாரத்திலிருந்தது. இதன் விளைவு கொடுமைதான்.... பட்டறைத் தொழில் வட்டங்கள் பலவற்றில், மிகமிக மனம் பதைக்கச் செய்யும் அட்டூழியங்கள் பட்டறைத் தொழில் எஜமானர்களின் பொறுப்பில் இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஒரு பாவமுமறியாத, உறுதிணையில்லாத ஜீவன்களுக்கெதிராக இழைக்கப்பட்டன; ஆனால் இவ்வட்டுழியங்கள் குறிப்பாக, குற்றம் உறைகின்ற என் சொந்த மாவட்டத்தில் (லங்காஷயரில்) இழைக்கப்பட்டனவென்று நான் அஞ்சுகிறேன்; உழைப்பின் அதீதத்தால் அவர்கள் இறப்பின் முகட்டை எட்டும் வரை துன்புறுத்தப்பட்டனர்.... மிகமிக நுணுக்கமான நவீனம் பொருந்திய கொடூரபாணியில் சவுக்காலடிக்கப்பட்டனர்; சங்கிலியால் பிணைக்கப்பட்டனர்; சித்திரவதை செய்யப்பட்டனர்,... அடித்து

வேலை வாங்கப்படுகையில் பல நேரங்களில் எலுப்பு தெரியும் வரை பட்டினி போடப்பட்டனர்.... சில நேரங்களில் தற் கொலை செய்துகொள்ளும் நிலைக்குக் கூட தள்ளப்பட்டனர்.... டெர்பிஷயர், நாட்டிங்காம்ஷயர், லங்காஷயர் போன்ற வனப்பும் சிறப்பும் பொருந்திய பள்ளத்தாக்குகள், பொது ஜனப் பார்வையிலிருந்து ஒதுங்கி சித்திரவதையும் கொலை பலவும் நடக்கின்ற சோகம் ததும்பும் ஏகாந்தங்களாயின. தொழிலதிபர்களின் லாபங்கள் ஏராளம், ஏராளம்; ஆனல் இது தீர்த்திருக்க வேண்டிய பசியைக் கிளறிவிடவே செய்தது; எனவே வரம்பின் சாத்தியமென்பதேயில்லாமல் அந்த லாபங் களைத் தமக்கு ஈட்டித் தந்ததாகத் தோன்றிய ஒரு உபாயத் தைத் தொழிலதிபர்கள் நாடினர்; 'இரவு வேலை செய்தல்' என்ற பெயருடைய நடைமுறையை அவர்கள் துவக்கினர்; அதாவது ஒரு தொகுதிக் கைகளைப் பகல் பூராவிலும் வேலை வாங்கிக் களைப்புறச் செய்ததும், இரவு பூராவிலும் தொடர்ந்து வேலை செய்ய இன்னெரு தொகுதியைத் தயா ராக வைத்துக்கொண்டனர்; இரவுத் தொகுதி சற்று முன் னரே விட்டுப்போயிருந்த படுக்கைகளில் பகல் தொகுதி உறங்கச் சென்றது, மற்றும் vice versa படுக்கைகள் ஒரு போதும் சும்மா கிடப்பதில்லை என்பது லங்காஷயரில் ஒரு பொதுவான பாரம்பரியமாகும்.''[246])

---

[246] John Fielden, முன்வந்தது, பக்கங்கள் 5, 6. தொழிற் சாலை அமைப்பின் ஆரம்ப காலத்திய அவலங்கள் பற்றி அறிய, ஒப்புநோக்குக. Dr. Aikin (1795), முன்வந்தது, பக் கம் 219; மேலும் Gisborne, *Enquiry into the Duties of Men*, 1795, Vol. II. நீராவி எஞ்சின் தொழிற்சாலைகளை நாட்டுப்புற நீர் வீழ்ச்சிப் பகுதிகளிலிருந்து நகரங்களின் நடுமையத்துக்கு மாற்றிய போது, ''நிதான புத்தியுள்ள'' உபரி மதிப்புத் தயாரிப்பாளர், வேலையில்லங்களிலிருந்து அடிமைகளைத் தேடிப்பெறும் நிர்ப்பந்தமில்லாமல், குழந்தை மூலப்பொ ருள் கைக்கு மெய்யாய் இருக்கக் கண்டார்; 1815ல் சர் ஆர். பீல் (''வஞ்சகப் புகழ்ச்சி மேதையின்'' தந்தை) குழந்தை களின் காப்புக்கான தன் மசோதாவைக் கொண்டு வந்த போது, பிலியன் கமிட்டியின் lumen [பிரகிருதி]யும் ரிக்கார்

பட்டறைத் தொழிற்காலத்தின் போது, முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியோடு ஐரோப்பாவில் பொதுஜன அபிப்பிராயம் மானம் மற்றும் மனசாட்சியின் கடைசி அடையாளத்தையும் உதிர்த்து விட்டது. முதலாளித்துவத் திரட்சிக்கான ஒரு வழியாகத் தங்களுக்குப் பயன்பட்ட ஒவ்வொரு கேவலம் குறித்தும் தேசங்கள் சுரணையில்லாமல் பிற்றிக் கொண்டன. உதாரணமாக, மதிப்பிற்குரிய ஏ. ஆண்டர்ஸனின் வெகுளித்தனமான வாணிப வரலாற்றேடுகளைப் படித்துப் பார்க்கவும். உட்ரெக்ட் சமாதானத்தில், அப்போது வரை ஆப்பிரிக்காவுக்கும் ஆங்கிலேய மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையில் மட்டுமே நடந்துவந்த நீக்ரோ வர்த்தகத்தை ஆப்பிரிக்காவுக்கும் ஸ்பானிய அமெரிக்காவுக்குமிடையில் நடத்துவதற்கும் அனுமதி பெறும் தனிச் சலுகையை இங்கிலாந்து ஸ்பெயின் நாட்டினரிடமிருந்து

டோவின் ஆப்த நண்பருமான பிரான்சிஸ் ஹார்னர் காமன்ஸ் சபையில் கூறினார்: ''ஒரு திவாலானவனின் உடமைகளோடு இந்தக் குழந்தைகளடங்கிய கோஷ்டி என்ற சொல்லை அவன் பயன்படுத்தலாமென்றால்—கோஷ்டி ஒன்றும் விற்பனைக்கு வைக்கப்பட்டு, அந்தச் சொத்தின் பகுதியாக வெளிப்படையாக விளம்பரப்படுத்தப்பட்டதென்பது நாற்றமெடுத்த செய்தியாகும். ஈராண்டுகளுக்கு முன்னதாக'' (1813) "King's Bench [மன்னர் தர்பாரின் நியாய சபை] முன்பு மிகமிக ஆக்கிரமமான ஒரு நிகழ்ச்சி கொண்டு வரப்பட்டது; இதில், இந்தப் பையன்களில் பலர் ஒரு தொழிலதிபருக்கு லண்டனிலுள்ள ஒரு வட்டார நிர்வாகத்தால் பழகுத் தொழிலுக்குச் சேர்க்கப்பட்டனர், பிறகு அவர்கள் இன்னொரு தொழிலதிபருக்கு மாற்றியனுப்பப்பட்டு முழுமையான பஞ்ச (absolute famine) நிலையில் இருப்பதைச் சில நல்லிதயம் கொண்ட நபர்கள் கண்டுள்ளனர். அவர் ஒரு பாராளுமன்ற கமிட்டியில் இருந்த நேரத்தில் இன்னும் பயங்கரமான இன்னொரு நிகழ்ச்சி அவருக்குத் தெரிய வந்தது.... அதாவது, சில ஆண்டுகள் முன்னர்தான், லண்டன் வட்டார நிர்வாகம் ஒன்றுக்கும் லங்காஷயர் தொழிலதிபர் ஒருவருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது; இதன்படி 20 நல்ல குழந்தைகள் எடுத்துக்கொள்ளப்பட்டால் ஒரு ஊனமுற்ற குழந்தை எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது.''

ஆஸிண்ட்டோ[50] ஒப்பந்தத்தின் மூலம் கறந்தது என்பது ஆங்கிலேய அரசுக் கலையின் ஓர் வெற்றியென இவ்வரலாற்றேடுகளில் தம்பட்டமடிக்கப்படுகிறது. அதன் மூலம் இங்கிலாந்து ஸ்பானிய அமெரிக்காவுக்கு 1743 வரை ஆண்டொன்றுக்கு 4,800 நீக்ரோக்களைச் சப்ளை செய்யும் உரிமையைச் சம்பாதித்தது. அதே நேரத்தில் இது பிரிட்டிஷ் கள்ளக்கடத்தல் தொழிலை மறைத்திட, அதன் மீது அதிகார பூர்வ மேலாடையொன்றைப் போர்த்தியது. லிவர்பூல் அடிமை வர்த்தகத்தைத் தனியாகக் கொண்டு கொழுகொழுவென்று பெருத்தது. அதன் ஆதித்திரட்சி முறை இதுவே. இந்த நாள் வரையிலுங்கூட, லிவர்பூலின் ''மதிப்பு மிகுதன்மை'' அடிமை வர்த்தகத்தின் பின்டர் ஆகும்; இது—ஏற்கெனவே மேற்கோள் காட்டப்பட்ட அய்க்கினின் நூலைப் பார்க்கவும் (1795)—''லிவர்பூல் வர்த்தகத்தின் குணக் குறியாய்த் திகழ்ந்திருப்பதும், தற்போதைய செழிப்பான நிலைக்கு அதைத் துரிதமாகக் கொண்டு வந்து சேர்ந்திருப்பதுமான அந்தத் தைரிய சாகச உணர்வோடு ஒன்றிணைந்துள்ளது; கப்பல் தொழிலுக்கும் மாலுமிகளுக்கும் விரிவான வேலை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது; நாட்டின் தொழிலுற்பத்திப் பொருட்களுக்கான கிராக்கியை அதிகம் பெருக்கியுள்ளது.'' அடிமை வர்த்தகத்தில் லிவர்பூல் ஈடுபடுத்திய கப்பல்களின் எண்ணிக்கை 1730ல் 15, 1751ல் 53, 1760ல் 74, 1770ல் 96, 1792ல் 132 ஆகும்.

இங்கிலாந்தில் பருத்தித் தொழில் குழந்தையடிமைத்தனத்தைப் புகுத்திய அதே நேரத்தில், அமெரிக்க ஐக்கிய நாட்டிலோ இன்னும் முந்தைய, ஏறக்குறைய தந்தைவழிச் சமுதாய ரீதியான அடிமைத்தனம் ஒரு வாணிபச் சுரண்டல் முறையாக மாறுவதற்கு அத்தொழில் ஊக்குவிசை கொடுத்தது. உள்ளபடியே, ஐரோப்பாவில் கூலித் தொழிலாளர்களின் முகத்திரையணிந்த அடிமைத்தனத்துக்குப் பாதபீடமாகப் புதிய உலகத்தில் sans phrase [சுத்த சுயம் பிரகாசமான] அடிமைத்தனம் தேவைப்பட்டது.[247]

[247] 1790ல் ஆங்கிலேய மேற்கிந்தியத் தீவுகளில் ஒரு சுதந்திர மனிதனுக்குப் பத்து அடிமைகளும், பிரெஞ்சு

Tantae molis erat[51] முதலாளித்துவ உற்பத்தி முறையின் ''சாசுவதமான இயற்கை விதிகளை'' நிலைநாட்டுவது, தொழிலாளர்களுக்கும் உழைப்பு நிலைமைகளுக்கும் இடையிலான பிரிந்து போகும் செய்முறையைப் பூர்த்தி செய்வது, ஒரு துருவத்தில் சமுதாய உற்பத்திச் சாதனங்களையும் ஜீவனோபாயங்களையும் மூலதனமாக மாற்றுவது, எதிர்த் துருவத்தில் ஜனத்திரளைக் கூலித் தொழிலாளர்களாக, தற்கால சமுதாயத்தின் செயற்கைப் படைப்பான சுதந்திர ''உழைப்பாளி ஏழைகளாக''[248] மாற்றுவது. ஒழியேரின் கருத்

மேற்கிந்தியத் தீவுகளில் பதினைந்து அடிமைகளும், டச்சு மேற்கிந்தியத் தீவுகளில் இருபத்து மூன்று அடிமைகளும் இருந்தனர். (Henry Brougham, *An Inquiry into the Colonial Policy of the European Powers*, Edinburgh, 1803, Vol. II, p. 74.)

[248] கூலித் தொழிலாளர்கள் வர்க்கம் கவனத்துக்குரியதாகின்ற அக்கணமுதலே ஆங்கிலேயச் சட்ட நடைமுறையில் "labouring poor" [''உழைப்பாளி ஏழைகள்''] எனும் சொற்றொடர் காணப்படுகிறது. இப்பதமானது, ஒருபுறம் பிச்சைக்காரர்கள், முதலான "idle poor" [''சோம்பேறி ஏழைகளுக்கும்''], மறுபுறம் இறக்கை வெட்டப்படாத புருக்களாகத் தம் சொந்த உழைப்புச் சாதனங்களை இன்னமும் வைத்திருக்கும் உழைப்பாளர்களுக்கும் எதிர்ப்பதமாகப் பயன்படுத்தப்படுகிறது. சட்டப் புத்தகத்திலிருந்து அது அரசியல் பொருளாதாரத்துக்கு வந்தது; கல்பெப்பர், ஜே. சைல்டு முதலானோர் ஆடம் ஸ்மித்துக்கும் ஈடனுக்கும் அதனைக் கொடுத்துச் சென்றனர். இதன் பின்னர், "execrable political cantmonger" [''வெறுக்கத் தக்க அரசியல் பஜனை வியாபாரி''] எட்மன்டு பர்க் "labouring poor" என்ற பதத்தை "execrable political cant" [''வெறுக்கத் தக்க அரசியல் பஜனை'' என்ற பழைத்தாரென்றால் அவரது bonne foi [நேர்மையைக்] கணித்துக்கொள்ள முடியும். அமெரிக்கத் தொல்லைகளின் துவக்கத்தில் வட அமெரிக்கக் காலனிகளிடம் கூலி பெற்றுக் கொண்டு ஆங்கிலேய ஆதிக்கச் சிறு குழுவிற்கெதிராக லிபரலாகப் பாத்திரமேற்றது போலவே, ஆங்கிலேய ஆதிக்கச் சிறு குழுவிடம் கூலி பெற்றுக்கொண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கெதிராகக் காலத்துக்கேற்ப நாடகமாடும் புகழ்ச்சிக்காரன் என்ற காவியப் பாத்திரமேற்ற இந்தக் காக்காய்ப் பேர்வழி முழுக்க முழுக்கக் கொச்சைத்தனமான பூர்ஷ்வா ஆவார். ''வாணிபத்தின் விதிகள் இயற்கையின் விதிகளா

துப்படி, பணம் ''ஒரு கன்னத்தில் பிறவி ரத்தக்கறையுடன் உலகினுள் வருகிறது''[249] என்றும், மூலதனம் தலை முதல் கால் வரை உடலின் ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் ரத்தமும் அழுக்கும் சொட்டிய வண்ணம் வருகிறது.[250]

கும்; எனவே கடவுளின் விதிகளாகும்.'' (E. Burke, முன்வந்தது, பக்கங்கள் 31, 32.) கடவுளின் விதிகளுக்கும் இயற்கையின் விதிகளுக்கும் உண்மையுள்ளவராக, அவர் எப்போதுமே மிகச் சிறந்த சந்தையில் தன்னை விற்றுக்கொண்டார் என்பதில் வியப்பில்லை. இந்த எட்மன்டு பர்க் லிபரலாக இருந்த காலத்தில் அவரைப் பற்றிய மிக நல்ல படப்பிடிப்பொன்றை மறைதிரு டக்கரின் எழுத்துக்களில் காணலாம்; டக்கர் ஒரு பாதிரியாளராகவும் டோரியாகவும் இருந்தார்; ஆனால் மற்றப்படி மாண்பு மிக்கவராகவும் தகைசான்ற அரசியல் பொருளாதார அறிஞராகவும் இருந்தார். இன்று கோலோச்சுவதும் ''வாணிபத்தின் விதிகளில்'' மிகமிக பக்திசிரத்தையோடு நம்பிக்கை வைப்பதுமான கேவலமான கோழைத்தனத்தின் எதிரே, தங்களையடுத்து வருவோரிடமிருந்து திறமை என்ற ஒரு விஷயத்தில் மட்டுமே வேறுபடுகின்ற பார்க்குகளுக்கு மீண்டும் மீண்டும் சூடு போடுவதும் கட்டாயக் கடமையாகும்.

249) Marie Augier, *Du Crédit Public.*

250) ''மூலதனம் கொந்தளிப்பையும் பூசலையும் விசிறி விடுவதாகவும், கோழைத்தனமாக இருப்பதாகவும்'' *Quarterly Reviewer* சொல்கிறது; ''இது மிகவும் உண்மையே, ஆனால் இது பிரச்சினையை மிகவும் முழுமையின்றிச் சொல்வதாகும். இயற்கை ஓர் வெற்றிடத்தை வெறுப்பதாக முன்னர் கூறப்பட்டது போல் மூலதனம் லாபமெதுவும் இல்லாமல் போகுமோ அல்லது மிகச் சிறு லாபம் மட்டுமே கிடைக்குமோ என்று அஞ்சுகிறது. போதுமான லாபமிருந்தால் மூலதனம் மிகவும் தைரியம் பெறுகிறது. நிச்சயம் 10 சதவீதம் லாபம் கிடைத்தால் எங்கானலும் அது ஈடுபடுத்தப்படுவது உறுதி; நிச்சயம் 20 சதவீதம் கிடைத்தால் ஆவல் தூண்டப்படும்; 50 சதவீதமென்றால் திட்டமான போக்கிரித்தனம் தோன்றும்; 100 சதவீதம் லாபங்கிடைத்தால் சகல மனித விதிகளையும் துவம்சம் செய்ய அது தயாராகி விடும்; 300 சதவீதமென்றால் அதன் மனச்சாட்சி உறுத்தக் கூடிய குற்றச் செயலே மிச்சமிருக்காது. அதன் சொந்தக்காரர் தூக்கிலிடப்படும் அபாயம் இருந்தாலுங்கூட அது இறங்கிப் பார்க்காத விஷப்பரீட்சையேதும் பாக்கி நிற்காது. கொந்தளிப்பும் குமுறலும் லாபமளிக்குமென்றால், அது இரண்

அத்தியாயம் XXXII

முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கு

மூலதனத்தின் ஆதித்திரட்சி, அதாவது அதன் வரலாற்று ரீதியான மூலத்தோற்றம் என்னவாக உருக்கொள்கிறது? அது அடிமைகளையும் பண்ணையடிமைகளையும் கூலித் தொழிலாளர்களாக உடனடி மாற்றம் செய்வதல்லவென்பதால், அதாவது எளிய வடிவங்களின் மாற்றம் அல்ல என்பதால், நேரடி உற்பத்தியாளர்களைப் பறிமுதலுக்காளாக்குவதென்பதே, அதாவது தனிச் சொத்துரிமையாளரின் உழைப்பின் அடிப்படையிலான தனிச் சொத்தின் குலைவு என்பதே அதன் பொருளாகிறது.

சமுதாய ரீதியான, கூட்டு ரீதியான சொத்துக்கு எதிர் நிலை என்ற விதத்தில் தனிச் சொத்தானது, உழைப்புச் சாதனங்களும் உழைப்பின் புற நிலைமைகளும் தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமாயுள்ள இடங்களில் மட்டுமே நிலவுகிறது. ஆனால் இந்தத் தனிப்பட்ட நபர்கள் உழைப்பாளர்களா அல்லவா என்பதற்கேற்பத் தனிச் சொத்துக்கு வித்தியாசமான ஒரு தன்மையுள்ளது. அது முதலில் காட்டுகின்ற எண்ணற்ற சாயல்கள் இந்த இரண்டு கடைக்கோடிகளுக்குமிடையே இருக்கின்ற இடைநிலைக் கட்டங்களுக்குரியவை.

உழைப்பாளியின் உற்பத்திச் சாதனங்களில் இருக்கின்ற அவனது தனிச் சொத்து, விவசாயத்தினுடையதானாலும் பட்டறைத் தொழிலினுடையதானாலும், அல்லது இரண்டினுடையதுமேயானாலும் குட்டித் தொழிலின் அஸ்திவாரமாகும்; மேலும் சமுதாய உற்பத்தியினுடையவும் உழைப்பாளியின் சுதந்திரமான தனித்தன்மையினுடையவும் வளர்ச்சிக்கான ஒரு அத்தியாவசிய நிபந்தனையாகக் குட்டித்

டையுமே இஷ்டம் போல் ஊக்கப்படுத்தும். இங்குக் கூறப்படுவதனைத்தையும் கள்ளக்கடத்தலும் அடிமை வர்த்தகமும் நன்கு நிரூபிக்கின்றன.'' (T. J. Dunning, முன்வந்தது, பக்கங்கள் 35, 36.)

தொழில் உள்ளது. இந்தக் குட்டியுற்பத்தி முறை அடிமைத் தனம், பண்ணையடிமைத்தனம், மற்ற சார்பு நிலைகளின் கீழும் நிலவுவது உண்மையே. ஆனால் உழைப்பாளி தானே செயல்படுத்துகின்ற தன் சொந்த உழைப்புச் சாதனங்களின் தனிப்பட்ட சொந்தக்காரனாக—தான் சாகுபடி செய்கின்ற நிலத்துக்குரிய விவசாயியாக, தொழில் மேதையைப் போலத் தான் கையாளுகின்ற கருவிக்குரிய கைவினைஞனாக—இருக்குமிடத்தில் அது பூத்துக் குலுங்குகிறது, தன் முழு ஆற்றலையும் கட்டவிழ்த்து விடுகிறது, பொருத்தமான ஆதர்ச வடிவத்தை எட்டுகிறது.

இந்த உற்பத்தி முறை, நிலம் துண்டு துண்டாகப் பிரிவினை செய்யப்படுவதையும் மற்ற உற்பத்திச் சாதனங்கள் சிதறலாகிப் போவதையும் முன்தேவையாகக் கொண்டுள்ளது. இது இவ்வுற்பத்திச் சாதனங்களின் குவிதலைத் தவிர்ப்பது போலவே, கூட்டுப் பணி, ஒவ்வொரு தனித்தனி உற்பத்திச் செய்முறைக்குள்ளேயும் வேலைப் பிரிவினை, இயற்கைச் சக்திகளின் மீது சமுதாயக் கட்டுப்பாடு, இச்சக்திகளைச் சமுதாயம் உற்பத்திக்குரிய விதத்தில் பிரயோகிப்பது, சமுதாய உற்பத்தியாற்றல்களின் சுதந்திர வளர்ச்சி ஆகியவற்றையும் தவிர்க்கிறது. குறுகலான, ஏறக்குறைய ஆதிநிலைக்குரிய எல்லைகளுக்குள் இயங்குகின்ற ஓர் உற்பத்தியமைப்போடும் சமுதாயத்தோடும் மட்டுமே பொருந்திவரக் கூடியதாகும் இது. அதனை நிரந்தரமாக்குவதென்பது, பெக்கியோர் சரியாகக் கூறுவது போல, ''சர்வ வியாபக இரண்டாந்தர நிலைக்கு ஆணையிடுவதாகும்.''[52] ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில், தன் சொந்தக் கலைப்புக்கான பொருளியல் காரியாதிகளை அது கொண்டுவந்து சேர்க்கிறது. அத்தருணமுதல் சமுதாயத்தின் மார்பகத்தில் புதிய சக்திகளும் புதிய உணர்ச்சிகளும் சுரக்கின்றன; ஆனால் பழைய சமுதாய ஸ்தாபனம் அவற்றுக்கு விலங்கிட்டு அமுக்கி வைக்கிறது. அதனை ஒழித்தாக வேண்டும்; அது ஒழிக்கப்படுகிறது. அதன் ஒழிப்பு,—தனிநபர் ரீதியாக்கப்பட்ட, சிதறலாக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களைச் சமுதாய ரீதியில் குவிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களாக மாற்றியமைப்பது, பல

ரது சிறு சொத்தைச் சிலரது பெருஞ்சொத்தாக மாற்றியமைப்பது, பெருந்திரளான மக்களிடமிருந்து நிலத்தையும் ஜீவனோபாயங்களையும் உழைப்புச் சாதனங்களையும் பறிமுதல் செய்வது, இவ்விதத்தில் மக்கள் திரளைப் பயங்கரமாகவும் வேதனைக்குரிய விதத்திலும் ஓட்டாண்டிகளாக்குவது—மூலதனத்தின் வரலாற்றுக்கு முன்னுரையாக அமைகிறது. அதில் பலவந்த முறைகளின் ஒரு வரிசையே அடங்கியுள்ளது; இவற்றில் மூலதனத்தின் ஆதித்திரட்சி முறைகள் என்ற விதத்தில் வரலாறு படைப்பனவாக இருந்துள்ள முறைகளை மட்டுமே நாம் பரிசீலித்துள்ளோம். உடனடி உற்பத்தியாளர்களின் பறிமுதலானது, ஈவிரக்கமற்ற சிதைப்பு வேலையைக் கொண்டும், மிகமிகத் தீய, மிகமிகக் கேவலமான, மிகமிக அற்பத்தனமான, மிகமிக நீசத்தனமான விதத்தில் வெறுக்கத் தக்க உணர்ச்சிகளின் தூண்டு விசையின் கீழும் நிறைவேற்றப்பட்டது. தனித்த, சுதந்திரமான உழைக்கும் தனிநபரை அவனது உழைப்பின் நிலைமைகளுடன்—இப்படிச் சொல்வதானால்—ஒன்றுக உருக்கிக் கலப்பதன் அடிப்படையிலான சுயமாகச் சம்பாதித்த தனிச் சொத்தின் இடத்துக்கு, பெயரளவில் சுதந்திரமாயுள்ள மாற்றூர் உழைப்பைச் சுரண்டுவதைச் சார்ந்துள்ள, அதாவது கூலியுழைப்பைச் சார்ந்துள்ள முதலாளித்துவத் தனிச் சொத்து வருகிறது.[251])

இந்த மாற்றச் செய்முறையானது உச்சி முதல் உள்ளங்கால் வரை பழைய சமுதாயத்தைப் போதுமான அளவு சிதைத்ததுமே, உழைப்பாளிகள் பட்டாளிகளாக, அவர்களது உழைப்புச் சாதனங்கள் மூலதனமாக ஆக்கப்பட்டதுமே முதலாளித்துவ உற்பத்தி முறை தன் சொந்தக் காலில் நின்றதுமே, மேற்கொண்டு உழைப்பைச் சமுதாயமயமாக்குவதும், மேற்கொண்டு நிலத்தையும் மற்ற உற்பத்திச் சாதனங்களையும் சமுதாய ரீதியில் பயன்படுத்தப்படுபவையும்,

---

251) ''நாம் முற்றிலும் புதிய ஒரு சமுதாய அமைப்பில் நுழைந்திருக்கின்றோம்.... நாம் சகலவித சொத்துடமைகளையும் சகலவித உழைப்பிலிருந்தும் பிரிக்க முயலுகின்றோம்.'' (Sismondi, *Nouveaux Principes de l'Économie Politique*, t. II, p. 434.)

எனவே பொதுவானவையுமான உற்பத்திச் சாதனங்களாக மாற்றுவதும், அதேபோல் மேற்கொண்டு தனிச் சொத்துரிமைகளைப் பறிமுதலுக்காளாக்குவதும் புது வடிவெடுக்கிறது. இப்போது பறிமுதலுக்காளாக்கப்பட வேண்டியது தனக்குத் தான் வேலை செய்கின்ற உழைப்பாளியல்ல, பல உழைப்பாளிகளைச் சுரண்டுகின்ற முதலாளியே.

இப்பறிமுதலானது முதலாளித்துவ உற்பத்தியின் உள்ளார்ந்த விதிகளின் செயலாலேயே, மூலதனம் மையப்படுவதாலேயே நிறைவேற்றப்படுகிறது. எப்போதுமே ஒரு முதலாளி பல முதலாளிகளை விழுங்கி ஏப்பம் விடுகிறான். இந்த மையப்படுதலோடு, அல்லது சில முதலாளிகள் பல முதலாளிகளை இவ்வாறு பறிமுதலுக்காளாக்குவதோடு சேர்ந்தாற்போல், உழைப்புச் செய்முறையின் கூட்டுச் செயல் வடிவமும், விஞ்ஞானத்தை உணர்வு பூர்வமாகத் தொழில்நுட்பப் பிரயோகம் செய்வதும், நிலத்தின் முறை பழிச் சாகுபடியும், உழைப்பாயுதங்களைப் பொதுவில் மட்டுமே பயன்படுத்தத் தக்க உழைப்பாயுதங்களாக மாற்றியமைப்பதும், சகல உற்பத்திச் சாதனங்களையும் ஒன்றிணைந்த, சமுதாயமயமாக்கப்பட்ட உழைப்பின் உற்பத்திச் சாதனங்களாக உபயோகிப்பதன் மூலம் அவை அனைத்தையும் சிக்கனப்படுத்துவதும், உலகச் சந்தை என்னும் வலையில் சகல மக்கள் சமூகங்களையும் சிக்க வைப்பதும், இதோடு முதலாளித்துவ ஆளுகையின் சர்வதேசியத் தன்மையும் என்றும் பெருகும் அளவில் வளர்கின்றன. இந்த மாற்றச் செய்முறையின் அனுகூலங்களனைத்தையும் அபகரித்து ஏகபோகமாக்கிக்கொள்ளும் மூலதனப் பெருமுதலைகளின் எண்ணிக்கை இடையறாது குறைவதோடு கூட, துன்பம், ஒடுக்குமுறை, அடிமைத்தனம், சீரழிவு சுரண்டல் ஆகியவற்றின் அளவும் அதிகரிக்கிறது; ஆனால் இதோடு, எப்போதுமே எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டிருப்பதும் முதலாளித்துவ உற்பத்திச் செய்முறையின் இயங்கமைப்பாலேயே கட்டுப்பாடுடையதாக்கப்பட்டு ஒன்றுபடுத்தப்பட்டு ஸ்தாபன ரீதியாக்கப்படுவதுமான தொழிலாளி வர்க்கத்தின் எதிர்ப்புக் கிளர்ச்சியும் வளர்கிறது. மூலதனத்தின் ஏகபோகம்,

அதனோடு சேர்ந்து அதன் கீழ் பிறந்து மலர்ந்துள்ள உற்பத்திச் செய்முறைக்குப் பூட்டியதோர் விலங்காகிறது. உற்பத்திச் சாதனங்கள் மையப்படுவதும் உழைப்புச் சமுதாய ரீதியாவதும், அவற்றின் முதலாளித்துவ ஓட்டுக்குப் பொருந்தி வராத ஒரு கட்டத்தைக் கடைசியில் எட்டுகின்றன. இவ்வாறு ஓடு உடைத்தெறியப்படுகிறது. முதலாளித்துவத் தனிச் சொத்தின் சாவுமணி ஒலிக்கிறது. பறிமுதல்காரர்கள் பறிமுதல் செய்யப்படுகின்றனர்.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவான முதலாளித்துவத் தன்வயப்படுத்தல் முறை முதலாளித்துவத் தனியுடமையை உண்டாக்குகிறது. உரிமையாளரின் உழைப்பை அஸ்திவாரமாகக் கொண்ட, தனிநபர் ரீதியான தனியுடமையின் முதல் மறுப்பாகும் இது. ஆனால் முதலாளித்துவ உற்பத்தியானது ஓர் இயற்கை விதியின் விட்டுக்கொடுக்காத் தன்மையுடன் தன் சொந்த மறுப்பைப் பிரசவிக்கிறது. அது மறுப்பின் மறுப்பாகும். இது உற்பத்தியாளனுக்காகத் தனியுடமையை மீண்டும் நிலைநாட்டுவதில்லை, ஆனால் முதலாளித்துவச் சகாப்தத்தின் சுவாதீனங்களின் அடிப்படையிலான, அதாவது கூட்டுப் பணி, நிலத்தையும் உற்பத்திச் சாதனங்களையும் பொதுவில் வைத்துக்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையிலான தனிநபர் உடமையை அவனுக்களிக்கிறது.

தனிநபர் உழைப்பிலிருந்து பிறக்கின்ற சிதறலான தனியுடமையை முதலாளித்துவத் தனியுடமையாக மாற்றியமைப்பதென்பது இயல்பாகவே, ஏற்கெனவே நடைமுறையில் சமுதாய ரீதியாக்கப்பட்ட உற்பத்தியைச் சார்ந்து நிற்கும் முதலாளித்துவத் தனியுடமையைச் சமுதாய ரீதியாக்கப்பட்ட தனியுடமையாக மாற்றியமைப்பதை விட, ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகம் நீண்ட நெடியதும், பலாத்காரமானதும், சிரமமிக்கதுமான ஓர் செய்முறையாகும். முதலில் சொன்ன மாற்றத்தில், மக்கள் திரளை ஒரு சில கொள்ளைப்போர்வழிகள் பறிமுதலுக்காளாக்குவதைக் கண்டோம்; இரண்டாவதாகச் சொன்ன மாற்றத்தில், ஒரு சில

கொள்ளைப்போர்வழிகளை மக்கள் திரள் பறிமுதலுக்காளாக்குவதைக் காண்கிறோம்.[252])

K. Marx, *Das Kapital. Kritik der politischen Oekonomie*, Erster Band, Hamburg, *1867* இல் முதல் தடவையாகப் பிரசுரிக்கப்பட்டது

ஆங்கிலப் பதிப்பின்படி *(1887)* அச்சிடப்பட்டது

எங்கெல்சால் சரிபார்த்துப் பதிப்பிக்கப்பட்டது

---

252) ''தொழிலின் முன்னேற்றமானது—இதன் இஷ்டப் பூர்வமில்லாத வளர்ப்பாளர் பூர்ஷ்வா வர்க்கமாகும்—போட்டியின் விளைவாகத் தொழிலாளர்கள் பிரிந்து தனிமைப்படுவதனிடத்தில், சகவாசத்தின் விளைவாக அவர்களின் புரட்சிகர ஒன்றிணைப்பைக் கொணர்கிறது. எனவே தற்காலத் தொழிலின் வளர்ச்சியானது, எந்த அடித்தளத்தின் மீது நின்று பூர்ஷ்வா வர்க்கம் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து தன்வயப்படுத்துகிறதோ அந்த அடித்தளத்தையே உருவி எறிந்து விடுகிறது. எனவே, அனைத்துக்கும் மேலாக பூர்ஷ்வா வர்க்கம் உற்பத்தி செய்வது தன் சொந்த சவக்குழியைத் தோண்டுவோரையே. அதன் வீழ்ச்சியும், பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் ஒரே மாதிரியாகத் தவிர்க்க முடியாதவை.... இன்று பூர்ஷ்வா வர்க்கத்தோடு நேருக்கு நேராக நிற்கின்ற வர்க்கங்கள் அனைத்திலும் பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் எதார்த்தத்திலேயே புரட்சிகரமான வர்க்கமாகும். தற்காலத் தொழிலினெதிரே மற்ற வர்க்கங்கள் மடிந்து மறைகின்றன; பாட்டாளி வர்க்கம் அந்தத் தற்காலத் தொழிலின் விசேஷமான, அத்தியாவசிய விளைபயனாகும்.... நடுத்தர வர்க்கங்கள்—சிறு தொழிலதிபர்கள், கடைக்காரர்கள், கைவினைஞன், விவசாயி இவர்கள் எல்லோருமே நடுத்தர வர்க்கத்தின் பகுதிகளாக தாங்கள் ஜீவிப்பது முடிந்து விடாமல் காப்பாற்றிக்கொள்வதற்காக பூர்ஷ்வா வர்க்கத்துக்கெதிராகப் போராடுகின்றனர்....அவர்கள் பிற்போக்கானவர்கள்; ஏனென்றால் அவர்கள் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னேக்கிச் சுழற்ற முயல்கின்றனர்.'' (Karl Marx und Friedrich Engels, *Manifest der Kommunistischen Partei*, London, 1848, pp. 11, 9.)

பி. எங்கெல்ஸ்

கா. மார்க்ஸ், "மூலதனம்", முதல் பாகம்பற்றிய மதிப்புரை

*Demokratisches Wochenblatt*க்கு எழுதப்பட்டது[53]

மார்க்ஸ் எழுதிய "மூலதனம்"*

1

முதலாளிகளும் தொழிலாளிகளும் நிலவி வந்துள்ள இவ் வுலகில் இது காலம் வரை தோன்றியுள்ள நூல்களில், நம் முன் உள்ள இந்த நூல் போன்று தொழிலாளிகளுக்கு இந் தளவு முக்கியத்துவம் வாய்ந்த நூல் எதுவும் தோன்றிய தில்லை. நமது இன்றைய சமூக அமைப்பு முழுவதும் எதை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறதோ மூலதனத் திற்கும் உழைப்பிற்கும் இடையே உள்ள அந்த உறவைப் பற்றி முதன் முதலில் விஞ்ஞான பூர்வமாகவும், ஒரு ஜெர் மானியனுக்கு மட்டுமே சாத்தியமான முறையில் முழுமை யாகவும் கூர்மையாகவும் இங்கு இது விளக்கப்படுகிறது. ஓவன், சான்-சிமோன், ஃபூரியே ஆகியோரின் படைப்புகள் என்றென்றும் பெருமதிப்பு வாய்ந்தவை என்பதில் சந்தேக மில்லை. எனினும், மிக உயர்ந்த சிகரத்தின் மீதிருந்து பார்க் கும் ஒருவருக்கு கீழேயிருக்கிற மலைக் காட்சிகள் எவ்வளவு தெளிவாகவும் பூரணமாயும் தெரியுமோ, அதே போல நவீன கால சமூக உறவுகள் சம்பந்தப்பட்ட முழுக் களத்தினையும் தெளிவாகவும், பூரணமாகவும் பார்க்கக்கூடிய ஒரு சிகரத் தினை நோக்கி முதலில் ஏறும் பேறு ஒரு ஜெர்மானியனுக்கு மட்டுமே வைக்கப்பட்டிருந்தது.

உழைப்பே எல்லாச் செல்வங்களுக்கும் ஊற்று என்றும், எல்லா மதிப்புகளுக்கும் அளவுகோலாகும் என்றும் இது

---

* *Das Kapital. Kritik der politischen Oekonomie*, von Karl Marx. *Erster Band. Der Produktionsprozeß des Kapitals*, Hamburg, O. Meissner, 1867.

வரை நிலவிய அரசியல் பொருளாதாரம் நமக்கு போதித் திருக்கிறது. ஆகவே உற்பத்தி செய்வதற்கு ஒரே உழைப்பு நேரம் பிடித்துள்ள இரு பொருள்கள் ஒரே மதிப்புடையன, ஒன்றுக் கொன்று மாற்றிப் பரிவர்த்தனை செய்யப்படக் கூடி யவை. ஏனெனில், சராசரியான சமமதிப்பு உள்ளவை மட் டுமே ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்யப்படக் கூடியவை. அத்துடன் சேமித்து வைக்கப்பட்ட உழைப்பின் விசேஷ வகை ஒன்று இருக்கிறது, அதன் பெயர்தான் மூலதனம் என்றும் அது போதிக்கிறது. அந்த அரசியல் பொருளா தாரத்தின்படி, அந்த மூலதனத்தில் துணை ஆதார சக்திகள் அடங்கி இருப்பதால் அது உழைப்பாளியின் மெய்யான உழைப்பின் உற்பத்தித் திறனை நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு அதிகப்படுத்துகிறது. அதற்குப் பலனாக ஒரு குறிப் பிட்ட நஷ்ட ஈட்டை மூலதனம் கோருகிறது. இதுவே லாபம் எனப்படுவது. எதார்த்தத்தில் என்ன நடக்கிறது? ஏற்கெ னவே சேமித்து வைக்கப்பட்ட, தெண்ட உழைப்பு மூலமான லாபம் மிகப்பெரும் அளவில் அதிகரித்துப் பெருகவும், முத லாளிகளின் மூலதனங்கள் எவ்வளவோ அதிகமாக ராட்ச சத்தன்மை அடையவும் வழி செய்கிற முறையில் இது நடைபெறுகிறது. மறுபக்கத்தில் மெய்யான உழைப்பிற் கான கூலி தொடர்ந்து குறைந்து கொண்டே போகிறது. கூலியை மட்டும் நம்பி வாழும் தொழிலாளிகளின் எண் ணிக்கை மேலும் மேலும் பெருகி அவர்கள் வறுமைக் கொடு மைக்கு ஆளாகின்றனர். இதை நாம் அறிவோம். அந்த முரண்பாட்டைத் தீர்ப்பதெப்படி? ஒரு தொழிலாளி தான் உற்பத்தி செய்கிற பொருளுக்கு எவ்வளவு உழைப்பைக் கொடுக்கிறானே அதற்கான மதிப்புப் பூராவையும் அவன் திரும்பப் பெறும் பட்சத்தில் முதலாளிக்கு லாபம் எப்படி இருக்க முடியும்? சம மதிப்புகள் மட்டுமே பரிவர்த்தனை செய்யப்பட முடியும் என்பதனால் அப்படித்தான் நடக்க வேண்டும். மறுபுறத்தில், பொருளாதார நிபுணர்கள் பலர் ஏற்றுக் கொள்வது போல், உற்பத்தியான இந்தப் பொருள் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்றால், சம மதிப்பின் பரிவர்த்தனை

எப்படி சாத்தியமாகும்? தொழிலாளி தான் உற்பத்தி செய்த பொருளின் முழு மதிப்பையும் எப்படிப் பெற முடியும்? முந்தைய அரசியல் பொருளாதாரம் இதுவரை இந்த முரண் பாட்டை எதிரிட இயலாமல் இருந்தது, சக்தியற்றிருந்தது; அர்த்தமற்ற குழப்பமான சொல்லடுக்குகளை எழுதி திக்கு முக்காடிக் கூறியது. சோஷலிச அடிப்படையிலிருந்து இதற்கு முன் அரசியல் பொருளாதாரத்தை விமர்சனம் செய்தவர் களும்கூட இம்முரண்பாட்டை வலியுறுத்தி சுட்டிக் காட்டு வதைத் தவிர எதுவும் மேற்கொண்டு செய்ய முடியவில்லை. அந்த முரண்பாட்டை யாராலும் தீர்க்க முடியவில்லை. கார்ல் மார்க்ஸ்தான் இந்த லாபம் என்பது எங்கிருந்து முளைக் கிறது, அது ஏற்படும் முறையென்ன என்பதை அதன் பிறப் பிடம் வரையில் சென்று தேடிப் பிடித்து அதன் மூலம் அனைத் தையும் இறுதியாகத் தெளிவாக்கி விட்டார்.

மார்க்ஸ், மூலதனம் பற்றிய ஆராய்ச்சியில், முதலாளிகள் தங்கள் மூலதனத்தைப் பரிவர்த்தனை மூலம் அதிகப்படுத்து கின்றனர் என்ற சாமான்யமான ஊரறிந்த கண்கூடான மெய்விவரத்தில் இருந்து தொடங்குகிறார்; அவர்கள் தங்கள் பணத்துக்குப் பண்டங்களை வாங்கி, பிற்பாடு தங்கள் அடக்க விலையை விட அதிகப் பணத்திற்கு விற்கிறார்கள். உதாரண மாக, ஒரு முதலாளி 1,000 தேலருக்குப்* பருத்தி வாங்கி அதை 1,100 தேலருக்கு விற்பதன் மூலம் 100 தேலர் லாபம் ''சம்பாதிக்கிறான்.'' ஆரம்ப முதலீட்டை விட அதிகமாகக் கிடைக்கும் 100 தேலர் மதிப்புள்ள மீதத்தை **உபரி மதிப்பு** என்று மார்க்ஸ் கூறுகிறார். இந்த உபரி மதிப்பு எங்கிருந்து கிடைக்கிறது? பொருளியலாளர்களின் கூற்றுக்களின்படி சம மதிப்புகள் மட்டுமே பரிவர்த்தனையாகின்றன. சூக்கும மான தத்துவத் துறையில் இது சரிதான். ஒரு வெள்ளித் தேலரைக் கொடுத்து விட்டு முப்பது வெள்ளி குரோஷன்** நாணயங்களைப் பெறுவதாலோ, அல்லது இந்த சிறு நாணயங் களைக் கொடுத்து அதற்கேற்ற வெள்ளித் தேலரை திரும்பப் பெறுவதாலோ, ஒருவன் பணக்காரனாகவோ, ஏழையாகவோ

* தேலர்—ஆஸ்திரிய வெள்ளி நாணயம்.—ப-ர்.

** குரோஷன்—வெள்ளி காசு.—ப-ர்.

ஆவதில்லை. இந்தப் பரிவர்த்தனையில் உபரி மதிப்பு விளைந்து வருவதில்லை. அதேபோல பருத்தியை வாங்கிய பின்னர் அதே பருத்தியை விற்பதில் உபரி மதிப்பு கிடைத்திருக்காது. மேலும் விற்பவன் தனது பண்டங்களின் மதிப்பைவிட அதிகமான விலைக்கு அவற்றை விற்பதாலோ, அல்லது வாங்குபவன் அதன் மதிப்பைவிடக் குறைந்த விலைக்கு வாங்குவதாலோ உபரி மதிப்பு உண்டாகிவிடுவதில்லை. ஒவ்வொருவரும் ஒரு சமயத்தில் விற்பவராகவும், பிறிதொரு சமயத்தில் வாங்குபவராகவும் இருக்கிறார்கள். அதனால் ஒன்றையொன்று சரிக்கட்டிப் போய்விடுகிறது. ஒருவரை ஒருவர் விஞ்சிவிடுகிற போதும் புதிய மதிப்போ, உபரி மதிப்போ உண்டாவதில்லை. ஏனெனில் இது, இருக்கும் மூலதனத்தை வேறு விதமாக முதலாளிகளுக்குள் வினியோகிப்பதாகத் தான் இருக்கும். முதலாளி பண்டங்களை அதற்குண்டான மதிப்பிற்கு ஏற்ப வாங்கி அதே மதிப்பிற்கு ஏற்ப அவற்றை விற்றாலும்கூட முதலாளிக்கு அவர் அதில் போட்ட மதிப்பைவிட அதிகமான மதிப்பு கிடைக்கிறது. இது எப்படி நிகழ்கிறது?

இன்றைய சமூக நிலைமைகளில், பண்ட மார்க்கெட்டில் ஒரு பிரத்தியேக குணம் படைத்த பண்டத்தை முதலாளி கண்டு பிடிக்கிறான். அப்பண்டத்தைப் பயன்படுத்துவது புதிய மதிப்பிற்கு ஓர் ஊற்றாகவும் புதிய மதிப்பைப் படைப்பதாகவும் இருக்கிறது. அந்தப் பண்டம்தான் உழைப்பு சக்தி என்பது.

உழைப்பு சக்தியின் மதிப்பு என்ன? ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பின் அளவைக் கொண்டு அளவிடப்படுகின்றது. உழைப்பு சக்தி என்பது உயிர்வாழும் உழைப்பாளியின் உருவத்தில் இருக்கின்றது. அந்த உழைப்பாளிக்குத் தனக்கும் அவன் இறந்த பின்னும் உழைப்பு சக்தி தொடர்ந்து கிடைப்பதை உத்தரவாதம் செய்யும் அவன் குடும்பத்துக்கும் வேண்டி. ஒரு குறிப்பிட்ட அளவு வாழ்க்கைத் தேவைகள் அவசியமாகின்றன. எனவே அத்தேவைகளை உற்பத்தி செய்ய எவ்வளவு உழைப்பு நேரம் அவசியப்படுகிறதோ அந்த உழைப்பு நேரம்தான் உழைப்பு சக்தியின் மதிப்பு ஆகிறது.

முதலாளி ஒரு வாரக் கூலியைக் கொடுத்து அதன் மூலம் ஒரு தொழிலாளியின் ஒரு வார உழைப்பை விலைக்கு வாங்கிக் கொள்கிறான். பொருளியலாளர் கனவான்கள், உழைப்பு சக்தியின் மதிப்பு பற்றி இந்த அளவுக்கு நாம் சொல்வதை பெரும்பாலும் ஒப்புக் கொள்வார்கள்.

முதலாளி, அந்தத் தொழிலாளியிடம் வேலை வாங்குகிறான். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அத்தொழிலாளி தன் வாரக் கூலிக்குச் சமமான அளவு உழைப்பைக் கொடுத்து விட்டிருப்பான். உதாரணமாக, தொழிலாளிக்குக் கொடுக்கப் பட்ட வாரக் கூலி மூன்று நாள் வேலைக்குச் சமம் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் திங்கட்கிழமை வேலை ஆரம்பித்தால் புதன் மாலையுடன் தனக்குக் கொடுத்த கூலியின் முழு மதிப்பையும் தொழிலாளி முதலாளிக்கு ஈடு செய்திருப்பான். ஆனால் அத்துடன் அவன் வேலை செய்வதை நிறுத்திக் கொள்கிறானா? இல்லவே இல்லை. முதலாளி தொழிலாளியினுடைய ஒரு வார உழைப்பை அல்லவா விலைக்கு வாங்கியிருக்கிறான். வாரத்தில் கடைசி மூன்று நாட்களும் கூட தொழிலாளி தொடர்ந்து வேலை செய்ய வேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட கூலிக்கு ஈடு செய்யத் தேவையானதை விட அதிகமான இந்த உபரி உழைப்புத்தான் உபரி மதிப்பிற்கும், லாபத்திற்கும், தொடர்ந்து பெருகிக் கொண்டே போகும் மூலதனத் திரட்சிக்கும் தோற்றுவாய்.

தனக்குக் கொடுக்கப்பட்ட கூலியைத் தொழிலாளி மூன்று நாட்களில் சம்பாதித்து விடுகின்றான், மற்ற மூன்று நாட்களில் முதலாளிக்காக வேலை செய்கிறான் என்பது ஏதோ தன்னிச்சையான கற்பனைப் புனைவு என்று கருத வேண்டாம். தனது சம்பளத்தை ஈடு செய்ய, தொழிலாளி சரியாக மூன்று நாட்கள் எடுத்துக் கொள்கிறானா, இரண்டு அல்லது நான்கு நாட்கள் எடுத்துக் கொள்கிறானா என்பது இங்கு முற்றிலும் முக்கியமல்ல. அது பல்வேறு சூழ்நிலைமைகளையும் பொறுத்தது. முக்கியமான விஷயம் என்னவென்றால், தான் கொடுக்கும் உழியத்தின் அளவுக்கு முதலாளி உழைப்பைப் பெறுவதுடன் தான் உழியம் கொடுக்காத உழைப்பையும் சேர்த்துப் பெற்றுக் கொள்ளுகிறான். இது தன்னிச்சையான கற்

பனைப் புனைவு அல்ல. ஏனென்றால், தான் கூலியாகக் கொடுக்கிற அளவுக்குரிய உழைப்பை மட்டும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து தொழிலாளியிடமிருந்து பெற்றால், முதலாளி தனது தொழிற்சாலையை மூடிவிடுவான், ஏனெனில் அவனது லாபம் முழுதும் இல்லாமற் போய்விடும்.

மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் அனைத்திற்கும் இங்குதான் ஒரு முடிவைக் காண முடிகிறது. இப்போது உபரி மதிப்பின் (முதலாளியின் லாபம் இதில் முக்கியப் பகுதியாகிறது) தோற்றுவாய் உள்ளபடியே மிகவும் தெளிவாகப் புலப்படுகிறது. உழைப்பு சக்தியின் மதிப்பிற்கு விலை கொடுக்கப்படுகிறது, ஆனால் அப்படிக் கொடுக்கப்படுகிற மதிப்பானது முதலாளி உழைப்பு சக்தியிலிருந்து பிழிந்து எடுக்கும் மதிப்பை விட மிகக் குறைவானது. இந்த வித்தியாசந்தான், விலை கொடுக்கப்படாத உழைப்பு தான் முதலாளியின், ஏன் கறாராகக் கூறப்போனால் முதலாளி வர்க்கத்தின் பங்காக அமைகிறது. மேலே சொன்ன உதாரணத்தில், பருத்தி வியாபாரத்தில் விற்பனையாளனுக்குக் கிடைத்த லாபங்கூட, பருத்தி விலை உயராமலிருந்திருந்தால், விலை கொடுக்கப்படாத உழைப்பைக் கொண்டதாகத்தானிருக்கும். வியாபாரி தனது சரக்கை பஞ்சாலை முதலாளிக்கு விற்றிருக்க வேண்டும். அந்த முதலாளி தனது உற்பத்திப் பொருளிலிருந்து, மேற்சொன்ன 100 தேலர் கிட்டியதற்கும் மேல் தனக்கென ஒரு லாபத்தையும் பெற்றிருக்க வேண்டும். இதன் மூலம் முதலாளி தான் எடுத்துக் கொண்டுள்ள விலை கொடுக்கப்படாத உழைப்பை வியாபாரியுடன் பங்கு போட்டுக் கொள்கிறான். பொதுவாக இந்த சமூகத்தில் உழைக்காத நபர்களையெல்லாம் பராமரித்து வருவது இந்த விலை கொடுக்கப்படாத உழைப்புத்தான். முதலாளி வர்க்கத்தின் மீது போடப்படுகிற அரசாங்க, ஊராட்சி வரிகள், நிலப்பிரபுக்களுக்கான நிலவரி முதலியனவெல்லாம் இந்த விலை கொடுக்கப்படாத உழைப்பில் இருந்துதான் கொடுக்கப்படுகின்றன. இன்று நிலவி வரும் சமுதாய அமைப்பு முழுவதும் இதன் மீதுதான் நிற்கிறது.

மேலும், ஒருபுறம் முதலாளிகளும் மறுபுறம் கூலித்

தொழிலாளிகளும் பொருள்களை உற்பத்தி செய்கிற இன்றைய சமூக சூழ்நிலைமையில்தான் விலை கொடுக்கப்படாத உழைப்பு தோன்றியது என்று நினைப்பது முட்டாள்தனமாகும். அதற்கு மாறாக, ஒடுக்கப்பட்ட வர்க்கம் எல்லாக் கால கட்டங்களிலும் விலை தரப்படாத உழைப்பைச் செய்து வர வேண்டியிருந்தது. அடிமை முறை உழைப்பு ஒழுங்கமைப்பின் முக்கிய வகையாக அமுலில் இருந்த நீண்ட காலகட்டம் முழுவதிலும் அடிமைகள் தங்கள் வாழ்க்கைத் தேவைகள் வடிவில் திரும்பப் பெற்றதை விடவும் அதிகமாக உழைக்க வேண்டி இருந்தது. பண்ணையடிமை முறையின் கீழும், விவசாயிகள் கூலியில்லாமல் கட்டாய உழைப்பு செலுத்த வேண்டும் எனும் முறை ஒழிக்கப்படுகிற காலம் வரை இதே நிலைதான். அதன் கீழ் விவசாயி தன்னுடைய ஜீவனத்துக்காக வேலை செய்யும் நேரமும், மேற்கொண்டு நிலப்பிரபுவிற்காக உபரியாக உழைக்கும் நேரமும் வெவ்வேறுகத் தெட்டத்தெளிவாகக் காண முடிகிறது. நிலப்பிரபுவிற்கென வேலை செய்வது தனக்கென வேலை செய்வதிலிருந்து வேறுகத் தனித்து செய்யப்படுவதாலேயே இது தெளிவாகிறது. இப்போது வடிவம் மாற்றப்பட்டு விட்டது. ஆனல் சாரம் அப்படியே இருக்கிறது. ''சமுதாயத்தின் ஒரு பகுதி உற்பத்திச் சாதனங்களின் ஏகபோக உடைமையை'' வைத்திருக்கிற வரையில், ''உழைப்பாளர் சுதந்திரமாக இருந்தாலும் சரி, அப்படி இல்லாவிட்டாலும் சரி, அவன் தன்னைப் பராமரித்துக் கொள்வதற்கு அவசியமான உழைப்பு நேரத்துடன், உற்பத்தி சாதனங்களின் உடைமையாளர்கள் வாழ்வதற்காக, அவர்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் அதிகப்படி நேர உழைப்பைக் கொடுத்தாக வேண்டும்'' (Marx, S. 202)*.

2

முதலாளியால் வேலைக்கமர்த்தப்படுகிற ஒவ்வொரு தொழிலாளியும் இருவகையான உழைப்பைச் செய்கிறுன்

* Karl Marx, *Capital*, Vol. I, Moscow, 1954, p. 235.—ப-ர்.

என்பதை முந்திய கட்டுரையில் பார்த்தோம். வேலை நேரத்தின் ஒரு பகுதியின் போது தொழிலாளி, முதலாளியால் தனக்குக் கொடுக்கப்பட்ட கூலியை ஈடுகட்டுகிறான். இப் பகுதியைத்தான் மார்க்ஸ் **அவசியமான உழைப்பு** என்று கூறுகிறார். ஆனால், அதற்குப் பின்னரும் தொழிலாளி தொடர்ந்து வேலை செய்ய வேண்டும். அச்சமயத்தில் முதலாளிக்கு **உபரி மதிப்பை** உற்பத்தி செய்து கொடுக்கிறான். இதில் ஒரு கணிசமான பகுதி லாபம் ஆகிறது. இந்தப் பகுதிக்குத் தான் **உபரி உழைப்பு** என்று பெயர்.

தொழிலாளி தனது கூலியை ஈடு கட்டுவதற்காக மூன்று நாட்கள் வேலை செய்வதாகவும், முதலாளிக்கு உபரி மதிப்பை உற்பத்தி செய்ய மூன்று நாட்கள் வேலை செய்வதாகவும் வைத்துக் கொள்வோம். வேறு வகையில் சொல்வதானால் இதன் பொருள், பன்னிரண்டு மணி நேரம் கொண்ட வேலை நாளில், தினசரி தன் கூலிக்காக ஆறு மணி நேரமும், உபரி மதிப்பு உற்பத்திக்காக ஆறு மணி நேரமும் அவன் வேலை செய்கிறான். வாரத்திலோ ஆறு நாட்களுக்குத்தான் உழைப்பைப் பெற முடியும்; ஞாயிற்றுக்கிழமையைச் சேர்த்துக் கொண்டாலும், ஏழு நாட்களுக்குத்தான் பெறலாம். ஆனால் ஒரு வேலை நாளிலோ, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினைந்து மணி நேரத்திற்கும் அவற்றிற்கு மேலும் உழைப்பைக் கறக்க முடியும். முதலாளியிடம் தொழிலாளி தன் ஒரு நாள் கூலிக்காக ஒரு வேலை நாளை விற்கிறான். ஒரு வேலை நாள் என்றால் என்ன? எட்டு மணி நேரமா அல்லது பதினெட்டு மணி நேரமா?

வேலை நாளை அதிக நேரம் கொண்டதாக எவ்வளவு நீட்டிக் கொண்டு போக முடியுமோ அவ்வளவு நீடிப்பது முதலாளிக்குச் சாதகமானது. எவ்வளவுக்கெவ்வளவு வேலை நாள் நீண்டதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உபரி மதிப்பு உற்பத்தியாகிறது. தனக்குக் கிடைக்கும் கூலியை ஈடு செய்த பின், அதற்கு மேலும் அவன் வேலை செய்யும் ஒவ்வொரு மணி நேர உழைப்பும், அநியாயமாக அவனிடமிருந்து அபகரிக்கப்படுகிறது என்று தொழிலாளர் நினைப்பது நியாயமானதே. அளவுக்கு அதிகமான நேரம்

வேலை செய்வது என்ன என்பதை தனது சொந்த உடல் சலிப்பால் உணர்கின்றான். முதலாளி தனது லாபத்திற்காகப் போராடுகிறான். தொழிலாளியோ தன் தேக ஆரோக்கியத் திற்காகவும், தினசரி சில மணி நேர ஓய்வுக்காகவும் அவன் வேலை செய்வது, தூங்குவது, சாப்பிடுவது தவிர ஒரு மனித ஜீவன் என்ற முறையில் இதர துறைகளில் அலுவல்களைச் செய்வதற்கு சாத்தியப்படுவதற்காகவும் போராடுகிறான். இந்த இடத்தில் தனிப்பட்ட முதலாளிகள் இம்மாதிரி யான போராட்டத்தில் ஈடுபட விரும்புகிறார்களா இல்லையா என்பது அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பொறுத்ததல்ல என்று போகிற போக்கில் கூறிவிடுவது நல்லது. போட்டி யானது, அவர்களில் மிகவும் உதாரகுணம் படைத்தவர் களையும் தனது சகாக்களுடன் சேர்ந்து நிற்கும்படி செய்து, வேலை செய்யும் நேரத்தை அவர்கள் எவ்வளவு நீண்டதாக ஆக்கிக் கொள்கின்றனரோ அவ்வளவு நீண்டதாகத் தாங் களும் ஆக்கிக்கொள்ள விதி செய்யுமாறு கட்டாயப்படுத்து கிறது.

வேலை நாளை நிர்ணயம் செய்வதற்கான போராட்டம் சுதந்திரமான தொழிலாளிகள் வரலாற்றில் முதலில் தோன் றிய காலமுதல் இன்று வரை தொடர்ந்து நடந்து வந்திருக் கிறது. பல்வேறு தொழில்களில் மரபு முறையில் நிர்ண யிக்கப்பட்ட வெவ்வேறு வேலை நாட்கள் நிலவுகின்றன. ஆனால் உண்மையில் அவை பெரும்பாலும் பின்பற்றப்படு வதில்லை. எங்கு சட்டத்தின் மூலம் வேலை நாள் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படு கின்றதோ அங்குதான் உண்மையில் வரம்புக்குட்பட்ட வேலை நாள் அமுலிலிருக்கிறது எனக் கூற முடியும். ஆனால் இது வரை இந்த நிலை இங்கிலாந்தில் தொழிற்சாலை மாவட்டங் களில் மட்டுமே இருக்கிறது. இங்கு எல்லாப் பெண்களுக் கும், 13க்கும் 18க்கும் இடையிலான வயதுடைய வாலி பர்களுக்கும் பத்து மணி நேரம் கொண்ட வேலை நாள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது (5 நாட்களுக்கு $10^1/_2$ மணி நேர மும், சனிக்கிழமை $7^1/_2$ மணியும்). இவர்கள் இல்லாமல் ஆண்கள் வேலை செய்ய முடியாதாகையால் அவர்களுக்கும்

10 மணி நேர வேலை நாள் அமுலாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் பிரிட்டிஷ் ஆலைத் தொழிலாளிகள் பல்லாண்டுகள் கொடுமைகளை சகித்து, ஆலை சொந்தக்காரர்களுடன் நடத்திய உறுதியான, விடாப்பிடியான போராட்டத்தினுல்தான் பெறப்பட்டது, பத்திரிகை சுதந்திரம், சங்கம் சேரும் உரிமை, கூட்டம் கூடும் உரிமை, அதேபோல் ஆளும் வர்க்கத்திற்குள் இருக்கும் முரண்பாடுகளைச் சாமர்த்தியமாக உபயோகித்துக் கொள்வது ஆகியவற்றுல்தான் இது சாத்தியமாயிற்று. இச்சட்டம் பிரிட்டிஷ் தொழிலாளிகளின் பாதுகாப்பு அரணாக விளங்குகிறது. அது படிப்படியாக பெருமளவு தொழில் துறையின் எல்லா பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. சென்ற வருடம் ஏறக்குறைய எல்லாத் தொழில்துறை நிறுவனங்களுக்கும், குறைந்த பட்சம் பெண்களும் குழந்தைகளும் வேலை பார்க்கும் தொழில்துறை நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இங்கிலாந்தில் வேலை நாள் பற்றி சட்டபூர்வமான ஒழுங்கு விதிகளின் வரலாற்றைப் பற்றி மிக விரிவான தகவல்களைக் கொண்டுள்ளது இந்நூல். அடுத்துக் கூடும் வடக்கு ஜெர்மானிய ரைஹ்ஸ்டாக் தொழிற்சாலை விதித்தொகுப்பை இயற்றவிருக்கிறது, அதோடு ஆலைத்தொழிலாளரின் உழைப்பு ஒழுங்கு விதிகளைப் பற்றி விவாதிக்கப் போகிறது. ஜெர்மானியத் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவரும் மார்க்சின் நூலைப் பூரணமாகப் படித்து முன்கூட்டியே புரிந்து கொள்ளாமல், அந்த மசோதாவை விவாதிக்கச் செல்ல மாட்டார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அங்கே நிறைய சாதிக்க முடியும். இங்கிலாந்தில் என்றுமே இல்லாதிருந்த அளவில் ஜெர்மானிய ஆளும் வர்க்கத்தினருக்குள் உள்ள பிளவு தொழிலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறது. ஏனென்றுல் பொது வாக்குரிமை தொழிலாளிகளின் தயவை நாடும்படி ஆளும் வர்க்கத்தை நிர்ப்பந்திக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் நான்கைந்து பிரதிநிதிகள் இச்சூழ்நிலைமையில் தங்கள் ஸ்தானத்தை எப்படி உபயோகித்துக் கொள்வது என்று தெரிந்திருந்தால், விவாதிக்கப்படும் பிரச்சினை பற்றித் தெரிந்திருந்தால் முதலாளி வர்க்கத்தினருக்குத் தெரியாததை அவர்கள் அறிந்திருந்தால், பெரும்

சக்தியாக விளங்குவார்கள். இதற்குத் தேவையான எல்லா விஷயங்களையும் மார்க்சினுடைய நூல் தயாராகத் தொகுத்துத் தந்திருக்கிறது.

பெரும்பாலும் தத்துவார்த்த முறையில் அக்கறைக்குரிய இதர பல சிறந்த ஆராய்ச்சிகளை விட்டு விட்டு மூலதனத் திரட்சி பற்றியதான கடைசி அத்தியாயத்திற்கு வருவோம். முதலாளித்துவ உற்பத்தி முறை, அதாவது ஒரு புறம் முதலாளிகளும் மறுபுறம் கூலித் தொழிலாளிகளும் இருப்பதை முன்னிபந்தனையாகக் கொண்டுள்ள முறையானது, முதலாளியின் மூலதனத்தை மீண்டும் மீண்டும் இடைவிடாது மறு உற்பத்தி செய்து கொள்வதுடன் அதே சமயத்தில் தொழிலாளிகளுடைய ஏழ்மையை மீண்டும் மீண்டும் இடைவிடாது மறு உற்பத்தி செய்கின்றது என்பது இங்கு முதன் முதலாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இதனால், வாழ்க்கைத் தேவைக்கான சாதனங்கள், மூலப் பொருள்கள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றுக்கு உடைமையாளர்களாக இருக்கும் முதலாளிகள் ஒரு புறத்திலும், தாம் வேலை செய்து வாழ்வதற்கும், உழைக்க வல்ல உடல் படைத்த புதிய தலைமுறை பாட்டாளிகளை வளர்த்து ஆளாக்க மட்டுமே போதும் போதாதென்ற வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுவதற்குமெனத் தம் உழைப்பு சக்தியை அம்முதலாளிகளுக்கு விற்கும்படியான கட்டாயத்திலுள்ள தொழிலாளிகளைக் கொண்டுள்ள பெரும் திரள் மறு புறத்திலும் எப்போதும் நிலைத்து வருவது உத்திரவாதம் செய்யப்படுகின்றது. ஆனால் மூலதனம் மறு உற்பத்தி செய்யப்படுவது மட்டுமல்ல, அது தொடர்ந்து பெருகுகிறது, பன்மடங்காகிறது. அதற்கேற்றாற்போல சொத்தற்ற வர்க்கமான தொழிலாளிகளின் மீது அதனுடைய ஆதிக்கமும் பெருகுகிறது. மேலும் மேலும் அதிகமான அளவில் மூலதனம் மறு உற்பத்தி செய்யப்படுவதைப் போலவே, நவீன முதலாளித்துவ உற்பத்தி முறையானது, மேலும் மேலும் அதிகமான அளவிலும் எண்ணிக்கையிலும் சொத்தற்ற தொழிலாளிகளைச் சிருஷ்டிக்கிறது. ''மூலதனத் திரட்சி முதலாளித்துவ உறவை மேலும் அதிகமான அளவில் மறு உற்பத்தி செய்கிறது: ஒரு துருவத்தில் அதிகமான

முதலாளிகளும், பெரும் முதலாளிகளும், மறு துருவத்தில் அதிகமான கூலித் தொழிலாளிகளும் சிருஷ்டியாகிறார்கள்... எனவே மூலதனத் திரட்சி என்பது பாட்டாளி வர்க்கம் பெருகுவது என்பதாம்'' (S. 600)*. எனினும் இயந்திரத் தொழிலின் வளர்ச்சியால், வளர்ச்சி பெற்ற விவசாயத் தால், இவைபோன்ற பிறவற்றால், முன்னால் உற்பத்தி செய்த அதே அளவுப் பொருள்களை உற்பத்தி செய்ய மேலும் மேலும் குறைவான தொழிலாளிகளே தேவைப்படுகிறார் கள். தொழிலாளிகள் எண்ணிக்கை தேவை கடந்த அள வுக்குச் செல்வது என்ற நிகழ்ச்சி மூலதன வளர்ச்சியை விட வேகமாக நடக்கிறது. இந்த முடிவின்படி எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டே போகும் தொழிலாளர்கள் என்ன ஆகிறார்கள்? அவர்கள் தொழில்துறையில் சேமப் பட்டாள மாக ஆகிறார்கள். தொழில்துறையில் மந்தம் அல்லது சோமாசமான நிலை ஏற்படும் போது அவர்களுக்கு உழைப்பின் விதிப்பைவிடக் குறைவாகக் கூலி கொடுக்கப்படுகிறது; அவர் கள் தொடர்ந்தாற்போல் அல்லாமல் விட்டுவிட்டு வேலைக்க மர்த்தப்படுகிறார்கள் அல்லது ஏழையர் உதவிச் சட்டப் படியுள்ள பராமரிப்பு ஏற்பாடுகளின் கீழ் வருகிறார்கள். இங்கிலாந்தில் தெளிவாகத் தெரிவதைப் போல, தொழில் விசேஷமாக சுறுசுறுப்பு அடையும் போது, முதலாளிகளின் வர்க்கத்துக்கு இந்தச் சேமப் பட்டாளம் நிச்சயமாக இன் றியமையாததாகிறது. பொதுவாக எல்லா சூழ்நிலைமைகளிலும் முறைப்படி வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளிகளின் எதிர்ப்பு பலத்தை உடைக்கவும் அவர்கள் கூலி உயராமல் தடுக்கவும் இந்தச் சேமப் பட்டாளம் உபயோகப்படுகிறது. ''எவ்வளவுக்கெவ்வளவு சமூகச் செல்வம் அதிகரிக்கிறதோ... அந்த அளவுக்குத் தொழில் துறையில் சேமப் பட்டாளம் (ஒப்பளவில் உபரி ஜனத்தொகை) பெருகுகிறது. ஆனால், செயல் தன்மையுள்ள முறைப்படி வேலைக்கமர்த்தப்பட் டுள்ள தொழிலாளர் பட்டாளத்தை விட இந்த சேமப் பட் டாளம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகுமோ, தமது

* Karl Marx, *Capital*, Vol. I, Moscow, 1954, pp. 613-14.—ப-ர்.

வாழ்க்கை வறுமையானது உழைப்பு வாதனைக்கு எதிர் விகிதத்தில் அதிகமாய் உள்ள நிரந்தரமான தொழிலாளர் உபரி ஜனத்தொகை அந்த அளவுக்குப் பெருகுகிறது. முடிவாக, இந்தப் பஞ்சைகளான தொழிலாளர் வர்க்கப் பகுதியும், தொழில்துறை சேமப் பட்டாளமும் எவ்வளவுக்கு விரிவடைகிறதோ அவ்வளவுக்கு அதிகார பூர்வமான தரித்திரம் அதிகமாகிறது. இதுதான் முதலாளித்துவத் திரட்டலின் பொதுவான முழுமையான விதியாகும்'' (S. 631)*.

இவையே திட்டவட்டமான விஞ்ஞான அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட, தற்போதைய முதலாளித்துவ சமூக அமைப்பின் சில முக்கியமான விதிகள். ஆளும் வர்க்கத்தின் அதிகார பூர்வமான பொருளியலாளர்கள், இவைகளை மறுப்பதற்கு முயற்சி செய்வதைக் கூடச் சர்வ ஜாக்கிரதையாகத் தவிர்த்து விடுகிறார்கள். ஆனால் இத்துடன் எல்லாம் சொல்லி முடித்தாகி விட்டதாகக் கருத முடியுமா? இல்லை. மார்க்ஸ் முதலாளித்துவ உற்பத்தியின் தீய அம்சங்களை எவ்வளவு கூர்மையாகச் சுட்டிக்காட்டுகிறாரோ, அதேபோல சமுதாயத்தின் உறுப்பினர் அனைவரும் மானுட ஜீவிகள் என்ற தகுதியுடன் வாழச் சமமான வளர்ச்சியை சாத்தியமாக்கக் கூடிய தரத்துக்கு சமூகத்தின் உற்பத்தி சக்திகளை வளர்க்க, இந்த சமூக அமைப்பு அவசியமாகிறது என்பதையும் தெளிவாக நிரூபிக்கிறார். இதற்கு முன்பிருந்த எல்லா சமூக அமைப்புகளும் இந்தப் பணியை நிறைவேற்ற வலுவற்றவையாக இருந்தன. முதன் முதலாக முதலாளித்துவ உற்பத்தி முறையானது இதற்கு அவசியமான செல்வத்தையும் உற்பத்தி சக்திகளையும் உருவாக்குகிறது. அதே சமயம், இந்த செல்வாதாரங்களும் உற்பத்தி சக்திகளும் இன்று இருப்பதைப் போல ஏகபோக வர்க்கத்திற்கு மட்டும் உடைமையாக இல்லாமல் சமுதாயம் முழுவதற்கும் பயன்பட வேண்டுமென்று வற்புறுத்தும் கட்டா

---

* Karl Marx, *Capital*, Vol. I, Moscow, 1954, p. 644.—ப-ர்.

யத்திலிருக்கிற அடக்கப்பட்ட தொழிலாளர்கள் என்னும் சமூக வர்க்கத்தையும் உருவாக்குகிறது.

1868, மார்ச் 2-13ல் எழுதப்பட்டது

செய்தித்தாள் வாசகப்படி அச்சிடப்பட்டது

Demokratisches Wochenblatt, இதழ்கள் 12-13ல், 1868 மார்ச் 21, 28ல் அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

கா.மார்க்ஸ், ''மூலதனம்'', இரண்டாவது பாகத்திற்கு எழுதிய முன்னுரையிலிருந்து

உபரி மதிப்பைப் பற்றி மார்க்ஸ் புதிதாகக் கூறியது என்ன? ரொட்பேர்டஸ் உள்பட அவருக்கு முந்திய சோஷலிஸ்டுகளின் தத்துவங்கள் எந்த விளைவையும் ஏற்படுத்தாமல் மறைந்த பொழுது நாகரிகம் பெற்ற எல்லா நாடுகளிலும் மார்க்சின் உபரி மதிப்புத் தத்துவம் தெளிவான வானத்திலிருந்து விழுந்த இடியைப் போலத் தாக்கியது எப்படி?

இதை விளக்கக்கூடிய உதாரணத்தை இரசாயனத்தின் வரலாறு தருகிறது.

ஒரு பொருள் எரிகின்ற பொழுது புளோஜிஸ்டன் என்ற முற்றிலும் எரிந்து விடக்கூடிய கற்பனையான பொருள் அதிலிருந்து பிரிகின்றது. இதுவே எல்லாவிதமான எரிதலின் சாராம்சம் என்று கூறுகின்ற புளோஜிஸ்டன் தத்துவம் சென்ற நூற்றாண்டின் கடைசி வரை நிலவியதை நாம் அறிவோம். அன்றைக்கு அறியப்பட்டிருந்த இரசாயன நிகழ்வுகளில் பெரும்பான்மையானவற்றை விளக்குவதற்கு இது போதுமானதாக இருந்தது. எனினும் பல உதாரணங்களில் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு நிர்ப்பந்தம் அவசியமாக இருந்தது. ஆனால் 1774ம் வருடத்தில் பிரீஸ்ட்லி ஒருவிதமான காற்றைத் தயாரித்தார்; அது ''அதிகமான அளவுக்குத் தூய்மையானதாக, அல்லது புளோஜிஸ்டனே சிறிதும் இல்லாததாக இருந்தது. அதனுடன் ஒப்பிடும் பொழுது சாதாரணக் காற்று அசுத்தமாகத் தோன்றுவதைக் கண்டார்''. அவர் அதை புளோஜிஸ்டன் இல்லாத

காற்று என்றார். அதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு ஷேலெ இதே மாதிரியான காற்றை ஸ்வீடனில் தயாரித்தார்; காற்று மண்டலத்தில் அது இருப்பதை விளக்கிக் காட்டினார். அதில் அல்லது சாதாரணக் காற்றில் ஏதாவது ஒரு பொருளை எரித்தால் இக்காற்று மறைந்து விடுவதைக் கண்டார்; ஆகவே அதற்கு நெருப்புக் காற்று [Feuerluft] என்று பெயரிட்டார்.

''காற்றின் உட்கூறுகளில் ஒன்றுடன் புளோஜிஸ்டன் சேரும் பொழுது'' (அதாவது எரிகின்ற பொழுது)''ஏற்படுகின்ற கூட்டுப் பொருள் நெருப்பு அல்லது வெப்பத்தைத் தவிர வேறெதுவுமில்லை—அது கண்ணுடி வழியாக வெளியேறுகிறது—என்று இந்த விவரங்களிலிருந்து அவர் முடிவு செய்தார்.''*

பிரீஸ்ட்லியும் ஷேலெயும் பிராணவாயுவை உற்பத்தி செய்தார்கள், ஆனால் அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் ''தங்கள் காலத்திய'' புளோஜிஸ்டன் ''வகையினங்களில் சிக்கியிருந்தார்கள்''. புளோஜிஸ்டன் என்ற கருதுகோளைக் கவிழ்த்து இரசாயனத்தில் புரட்சியைக் கொண்டுவரப் போகின்ற மூலகத்தை அவர்களால் உபயோகிக்க முடியவில்லை. ஆனால் அதன் பிறகு பிரீஸ்ட்லி தன்னுடைய கண்டுபிடிப்பைப் பாரிசிலிருந்த லவுவஸியேருக்குத் தெரிவித்திருந்தார்; அவர் இப்புதிய உண்மையைப் பயன்படுத்தி புளோஜிஸ்டிய இரசாயனம் முழுவதையும் ஆராய்ந்தார். அந்தப் புதுவிதமான காற்று ஒரு புதிய இரசாயன மூலகம், எரிதல் என்பது மர்மமான புளோஜிஸ்டன் எரிகின்ற பொருளை விட்டுப் பிரிதல் அல்ல, இந்தப் புதிய மூலகம் அந்தப் பொருளுடன் இணைவதே என்பதை முதலில் கண்டுபிடித்தார். ஆகவே புளோஜிஸ்டிய வடிவத்தில் தலைகீழாக நின்று கொண்டிருந்த அனைத்து இரசாயனவியலையும் நேராக நிறுத்திய முதல் நபர் அவரே. மற்றவர்கள்

---

*Roscoe und Schorlemmer, *Ausführliches Lehrbuch der Chemie*, Braunschweig, 1877, I, S. 13, 18.

பிராணவாயுவை உற்பத்தி செய்த அதே சமயத்தில், அவர்களிடமிருந்து சுதந்திரமான முறையில் அவர் பிராணவாயுவைத் தயாரிக்கவில்லை என்றாலும்—பிற்காலத்தில் அவர் சொல்லிக் கொண்டதைப் போல்—மற்ற இருவருடனும் ஒப்பிடுகின்ற பொழுது உண்மையில் பிராணவாயுவைக் கண்டுபிடித்தவர் அவரே. அவர்கள் அதைத் தயாரித்தார்களே தவிர தாங்கள் தயாரித்தது என்ன என்பதைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை.

லவுவஸியே பிரீஸ்ட்லிக்கும் ஷேலெயுக்கும் இருந்த அதே உறவுநிலையில் உபரி மதிப்புத் தத்துவத்தைப் பொறுத்த மட்டில் மார்க்ஸ் தமக்கு முந்தியவர்களிடம் இருக்கிறார். உற்பத்திப் பொருளின் மதிப்பில் நாம் இப்பொழுது உபரி மதிப்பு என்று சொல்கின்ற பகுதி இருப்பது மார்க்சுக்கு நெடுங்காலத்துக்கு முன்னரே அறியப்பட்டிருந்தது. அதில் அடங்கியிருப்பது என்ன, அதாவது உழைப்பை சுவீகரிக்கின்ற நபர் கூலி கொடுக்காத உழைப்பின் உற்பத்திப் பொருள் என்பதும் ஓரளவுக்குத் திட்டவட்டமாக எடுத்துக் கூறப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் அதற்கு மேல் போகவில்லை. முதலாளி வர்க்கத்தின் மூலச் சிறப்புடைய பொருளியலாளர்களைக் கொண்ட ஒரு குழு செய்ததெல்லாம் உழைப்பின் உற்பத்திப் பொருள் தொழிலாளிக்கும் உற்பத்திச் சாதனத்தின் உடைமையாளருக்கும் இடையில் எந்த அளவுவிகிதத்தில் பிரித்துக் கொள்ளப்படுகிறது என்பதை ஆராய்ந்ததே. சோஷலிஸ்டுகளைக் கொண்ட மற்றொரு குழு இந்தப் பிரிவினை அநீதியானது என்று கூறி இந்த அநீதியை ஒழிப்பதற்குக் கற்பனாவாத வழிகளைத் தேடியது. இரு தரப்பினரும் தம் காலத்திய பொருளாதார இனங்களுக்கு அடிமைப்பட்டிருந்தார்கள்.

பிறகு மார்க்ஸ் முன்னே வந்தார். அவர் தனக்கு முன்பிருந்தவர்கள் அனைவருக்கும் நேரடியான எதிர்நிலையில் முன்னேறினார். அவர்கள் எங்கே நிற்வைக் கண்டார்களோ அங்கே அவர் பிரச்சினையைக் கண்டார். இங்கே புளோஜிஸ்டன் இல்லாத காற்று அல்லது நெருப்புக் காற்று கிடையாது, இது

பிராணவாயு என்று கண்டார். ஆனல் அது பொருளாதார உண்மையை வெறுமளவில் பதிவு செய்கின்ற விவகாரமாக அல்லது நிலேபேறுடைய நீதி மற்றும் உண்மையான ஒழுக்க நெறியுடன் இந்த உண்மை முரண்படுவதைப் பற்றிய விவ காரமாக இருக்கவில்லே. அது அனேத்து அரசியல் பொரு ளாதாரத்தையும் புரட்சிகரமாக்கக் கூடிய உண்மையைப் பற்றியது; அதை உபயோகிக்கத் தெரிந்தவர்களுக்கு முதலா ளித்துவ உற்பத்தி முழுவதையும் புரிந்து கொள்வதற்குரிய திறவுகோலேக் கொடுத்தது. லவுவஸியே பிராணவாயுவைத் தன்னுடைய தொடக்க நிலேயாகக் கொண்டு தனக்குக் கிடைத்த புளோஜிஸ்டிய இரசாயனத்தின் இனங்களே ஆராய்ந்ததைப் போல மார்க்ஸ் இந்த உண்மையைத் தொடக்கநிலேயாகக் கொண்டு தனக்குக் கிடைத்த எல்லா இனங்களேயும் ஆராய்ந்தார். உபரி மதிப்பு என்றல் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றல் மதிப்பைப் பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் ரிக்கார்டோவின் மதிப்புத் தத்துவத்தை விமர் சனம் செய்ய வேண்டும். ஆகவே மார்க்ஸ் உழைப்பை அதன் மதிப்பைப் படைக்கின்ற தன்மை குறித்து ஆராய்ச்சி செய்தார், எந்த உழைப்பு மதிப்பைப் படைக்கிறது, அது ஏன், எப்படி இதைச் செய்கிறது, மதிப்பு என்பது இந்த ரகத்தைச் சேர்ந்த உழைப்பின் கட்டியாக்கப்பட்ட வடிவம் என்பதைத் தவிர வேறென்றுமல்ல—இந்த உண்மையை ரொட்பேர்டஸ் தன்னுடைய வாழ்க்கையின் கடைசிவரை புரிந்துகொள்ளவேயில்லே—என்பதை முதல் தடவையாக நிறுவினர். மார்க்ஸ் பிறகு பண்டங்களுடன் பணத்தின் உறவை ஆராய்ந்தார், பண்டங்கள் மற்றும் பண்டப் பரி வர்த்தனே அவற்றின் உள்ளார்ந்த மதிப்பு குணம்சத்தினல் பண்டங்கள் மற்றும் பணத்தின் எதிர்நிலேயை உற்பத்தி செய்வது எப்படி, ஏன் என்பனவற்றை எடுத்துக்காட்டினர். இந்த அடிப்படையின் மீது நிறுவப்பட்ட அவருடைய பணத் தத்துவமே முதல் விரிவான தத்துவமாகவும் இப் பொழுது குறிப்பறிந்து பொதுவாக ஒத்துக்கொள்ளப்பட்ட

தத்துவமாகவும் இருக்கிறது. அவர் பணம் மூலதனமாக மாறுவதை ஆராய்ந்து இம்மாற்றம் உழைப்புச் சக்தியை வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று நிரூபித்தார். உழைப்புக்கு பதிலாக மதிப்பை உற்பத்தி செய்கின்ற சக்தியான உழைப்புச் சக்தியை ஏற்படுத்தியதன் மூலம் அவர் ரிக்கார்டோ மரபு நொறுங்கிப் போன நெருக்கடிகளில் ஒன்றை—மூலதனம் மற்றும் உழைப்பின் பரஸ்பரப் பரிவர்த்தனையை உழைப்பின் மதிப்பை நிர்ணயிக்கின்ற ரிக்கார்டோ விதியுடன் இசைவு படுத்த இயலாமை—ஒரே அடியில் தீர்த்தார். நிலையான மூலதனத்துக்கும் மாறுகின்ற மூலதனத்துக்கும் இடையில் வேறுபாட்டை நிறுவியதன் மூலம் உபரி மதிப்பின் உருவாக்கத்தின் உண்மையான போக்கை நுணுக்கமான விவரம் வரை தொடர்ந்து செல்ல முடிந்த, ஆகவே அதை விளக்க முடிந்த முதல் நபர் அவர்தான். அவருக்கு முன்னால் இருந்த ஒருவரால் கூட இதைச் செய்ய முடியவில்லை. ஆகவே அவர் மூலதனத்துக்குள்ளாகவே ஒரு வேறுபாட்டை நிறுவினர், ரொட்பேர்டசோ அல்லது முதலாளி வர்க்கப் பொருளியலாளர்களோ இதைப் பற்றி எதுவுமே செய்ய முடியவில்லை என்ற போதிலும் மிகவும் சிக்கலான பொருளாதாரப் பிரச்சினைகளில் பெரும்பான்மையானவற்றின் தீர்வுக்கு அது திறவுகோலைத் தருகிறது. இதை மறுபடியும் இரண்டாம் தொகுதி குறிப்பிடத்தக்க முறையில் நிரூபிக்கிறது, மூன்றும் தொகுதி இன்னும் அதிகமாகவே நிரூபிக்கிறது என்பதை நாம் எடுத்துக் காட்டுவோம். அவர் உபரி மதிப்பை இன்னும் அதிகமாகப் பகுப்பாய்வு செய்து தனிமுதலான உபரி மதிப்பு, சார்புநிலையான உபரி மதிப்பு என்று இரண்டு வடிவங்களைக் கண்டுபிடித்தார்; முதலாளித்துவ உற்பத்தியின் வரலாற்று ரீதியான வளர்ச்சியில் அவை ஒவ்வொன்றும் வகித்திருக்கும் வெவ்வேறான ஆனால் தீர்மானகரமான பாத்திரங்களை எடுத்துக் காட்டினர். உபரி மதிப்பை அடிப்படையாகக் கொண்டு கூலிகளைப் பற்றி நமக்குக் கிடைத்திருக்கின்ற முதல் அறிவுபூர்வமான தத்துவத்தை வளர்த்துக் கூறி

னர்; முதலாளித்துவத் திரட்சியின் அடிப்படையான கூறுகள் மற்றும் அதன் வரலாற்றுப் போக்குகளை முதல் தடவையாக அளித்தார்.

எங்கெல்சினால் *1885* மே 5ந் தேதியன்று எழுதப்பட்டது

புத்தகத்தின் வாசகப்படி அச்சிடப்பட்டது

K. Marx, *Das Kapital. Kritik der politischen Oekonomie*, Zweiter Band, Herausgegeben von Friedrich Engels, Hamburg, *1885* என்ற புத்தகத்தில் முதன் முறையாக வெளியிடப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கவுன்சில் ஜினீவாவில் இருக்கும் ருஷ்யப் பிரிவின் கமிட்டி உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதம்[54]

குடிமக்களே,

உங்களுடைய செயல்திட்டமும் விதிமுறைகளும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிமுறைகளுடன் பொருந்தியிருக்கின்றன என்று பொதுக் கவுன்சில் மார்ச் 22ந் தேதிக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்தது. அது உடனடியாக உங்கள் பிரிவை அகிலத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறது. பொதுக் கவுன்சிலில் உங்களுடைய பிரதிநிதியாக நான் இருக்க வேண்டும் என்று நீங்கள் முன்மொழிந்திருக்கிறீர்கள். இந்த கௌரவத்தை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன்.

''...போலந்தை ஒடுக்கிக் கொண்டிருக்கின்ற பேரரசுநுகத்தடி இரண்டு தேசிய இனங்களின்—போலிஷ் இனத்தைப் போல அதே அளவுக்கு ருஷ்ய இனத்தின்—அரசியல் மற்றும் சமூக சுதந்திரத்தை சம அளவுக்குத் தடுக்கின்ற தடையாகும்'' என்று உங்களுடைய செயல்திட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ருஷ்யா போலந்தை பலவந்தமாகக் கைப்பற்றியிருப்பது ஜெர்மனியிலும் அதன் விளைவாக மொத்த ஐரோப்பாக் கண்டத்திலும் இராணுவ ஆட்சிக்கு ஆபத்தான ஆதரவாகவும் மெய்யான காரணமாகவும் இருக்கிறது என்பதையும் நீங்கள் சேர்த்துக் கொள்ளலாம். எனவே ருஷ்யாவின் சோஷலிஸ்டுகள் போலந்தின் அடிமைச் சங்கிலிகளை நொறுக்குவதற்குப் பாடுபடுகின்ற பொழுது இராணுவ ஆட்சி

முறையை அழிக்கின்ற மேன்மையான கடமையையும் மேற் கொண்டிருக்கிறார்கள்; அது ஐரோப்பியப் பாட்டாளி வர்க் கத்தின் பொது விடுதலைக்கு அவசியமான முன்நிபந்தனை யாகும்.

சில மாதங்களுக்கு முன்னால் ஃப்லெரோவ்ஸ்கி எழுதிய ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற புத்தகம் பீட்டர்ஸ்பர்கிலிருந்து எனக்கு வந்தது. இப்புத்தகம் ஐரோப் பாவுக்கு உண்மையிலேயே புதுமையாக இருந்தது. புரட்சிக் காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கூட ஐரோப் பாக் கண்டத்தில் பரப்புகின்ற ருஷ்ய நம்பிக்கையை இப்புத்த கம் ஈவிரக்கமில்லாமல் அம்பலப்படுத்துகிறது. வெறும் தத் துவக் கோணத்தில் விமர்சனம் செய்து, இப்புத்தகம் ஓரிரு இடங்களில் முழுமையான திருப்தியளிக்கவில்லை என்று நான் கூறினால் அது இந்நூலின் சிறப்பைக் குறைப்பதாகாது. இது அக்கறையுள்ள பார்வையாளரால், களைப்படையாத உழைப் பாளியால், பாரபட்சமில்லாத விமர்சகரால், ஒரு மாபெரும் கலைஞரால், எல்லாவற்றுக்கும் மேலாக ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் எல்லாவித தேசிய கீதங்களையும் சகித்துக் கொள்ள முடியாத, உற்பத்தி செய்கின்ற வர்க்கத் தின் அனைத்துத் துன்பங்களையும் விருப்பார்வங்களையும் தீவிரமாகப் பகிர்ந்து கொள்கின்ற ஒருவரால் எழுதப்பட்ட புத்தகம்.

ஃப்லெரோவ்ஸ்கியின் இப்புத்தகத்தையும் உங்களுடைய ஆசான் செர்னிஷேவ்ஸ்கியின் எழுத்துக்களையும் போன்ற நூல்கள் ருஷ்யாவை உண்மையில் கௌரவிக்கின்றன, நம் காலத்தின் இயக்கத்தில் உங்கள் நாடும் பங்கெடுக்கத் தொடங்கியிருப்பதை நிரூபிக்கின்றன.

சகோதர வாழ்த்துக்கள்,
கார்ல் மார்க்ஸ்

லண்டன், மார்ச் 24, 1870

நரோத்னயே டியேலோ என்னும் செய்தித்தாளின் எண் 1, ஜினீவா, 1870, ஏப்ரல் 15ந் தேதிய இதழில் பிரசுரிக் கப்பட்டது

செய்தித்தாள் வாசகப்படி அச்சிடப்பட்டது

மூலம் ருஷ்ய மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

அந்தரங்கமான செய்தி யிலிருந்து[55]

4. பொதுக் கவுன்சிலே இங்கிலாந்தின் பிரதேசக் கவுன்சிலி லிருந்து பிரிக்கின்ற பிரச்சினை.

L'Égalité[56] நிறுவப்படுவதற்கு நெடுங் காலத்துக்கு முன்பே பொதுக் கவுன்சிலின் ஆங்கில உறுப்பினர்களில் ஒரி ருவர் அவ்வப்பொழுது பொதுக் குழுவில் இதைப் பிரேரணை செய்வதுண்டு. அது எப்பொழுதுமே அநேகமாக ஏகமன தாக நிராகரிக்கப்பட்டது.

புரட்சிகரமான முன்முயற்சி அநேகமாக பிரான்சி லிருந்தே வரும் என்றூலும் தீவிரமான பொருளாதாரப் புரட் சிக்கு நெம்புகோலாக இங்கிலாந்து மட்டுமே பயன்பட முடி யும். ஏற்கெனவே விவசாயிகள் இல்லாத நாடு, நிலவுடைமை ஒரு சில நபர்களிடம் குவிக்கப்பட்டிருக்கின்ற நாடு அது ஒன்று மட்டுமேதான். முதலாளித்துவ வடிவம், அதாவது முதலாளித்துவ எசமானர்களின் கீழ் பெரிய அளவில், ஒன்று திரண்ட உழைப்பு அநேகமாக உற்பத்தி முழுவதிலுமே நடைபெறுகின்ற நாடு அது ஒன்று மட்டுமேதான். மக்கள் தொகையினரில் மிகவும் அதிகமான பெரும்பான்மையினர் கூலித் தொழிலாளர்களாக (wages labourers) இருக்கின்ற நாடு அது ஒன்று மட்டுமேதான். வர்க்கப் போராட்டமும் தொழிற் சங்கங்களின் மூலமாகத் தொழிலாளி வர்க்க ஸ்தாபனமும் ஓரளவுக்கு முதிர்ச்சியையும் முழுதளாவிய தன்மையையும் பெற்றிருக்கின்ற நாடு அது ஒன்று மட்டுமேதான். உலகச் சந்தையில் தலைமையான ஆதிக்கத்தை வகிப்பதால் பொரு ளாதார விவகாரங்களில் நடைபெறுகின்ற ஒவ்வொரு புரட்

சியும் உடனடியாக உலக முழுவதிலும் தாக்கம் செலுத்துகின்ற நாடு அது ஒன்று மட்டுமேதான். இங்கிலாந்தில் பண்ணை முறையும் முதலாளித்துவமும் மூலச் சிறப்பான உதாரணங்கள் என்றால், மறு பக்கத்தில் அவற்றை அழிப்பதற்குரிய பொருளாயத நிலைமைகளும் இங்கேதான் மிகவும் அதிகமாக முதிர்ச்சி அடைந்திருக்கின்றன. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இந்த மாபெரும் நெம்புகோலை நேரடியாகக் கையிலே வைத்திருக்கின்ற நல்ல சந்தர்ப்பம் இப்பொழுது பொதுக் கவுன்சிலுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நெம்பு கோல் முற்றிலும் ஆங்கிலேயர்களிடம் சிக்கிவிட அனுமதிப்பது எத்தகைய முட்டாள்தனம், எத்தகைய குற்றம் என்று கூட நாம் சொல்லலாம்!

சமூகப் புரட்சிக்கு அவசியமான எல்லாப் பொருளாயத முன்தேவைகளும் ஆங்கிலேயர்களிடம் இருக்கின்றன. பொதுமைப்படுத்துகின்ற உணர்ச்சியும் புரட்சிகர உத்வேகமுமே அவர்களிடம் இல்லாதவை. பொதுக் கவுன்சில் மட்டுமே இவற்றை அவர்களுக்குத் தர முடியும், அதன் பலனை இங்கும், அதன் விளைவாக எங்கும் உண்மையான புரட்சிகர இயக்கத்தைத் துரிதப்படுத்த முடியும். நாம் ஏற்கெனவே சாதித்துள்ள மிகப் பெரும் விளைவு ஆளும் வர்க்கத்தினருடைய பத்திரிகைகளில் மிகவும் அறிவுடைய, செல்வாக்கு நிரம்பியவற்றில், உதாரணமாக, *Pall Mall Gazette*, *Saturday Review*, *Spectator*, *Fortnightly Review*[57] ஒத்துக்கொள்ளப்படுகிறது. பிரிட்டிஷ் காமன்ஸ் சபையிலும் பிரபுக்கள் சபையிலும் உள்ள தீவிரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களைப் பற்றி—அவர்கள் சிறிது காலத்துக்கு முன்பு வரை கூட ஆங்கிலத் தொழிலாளர்களின் தலைவர்கள் மீது அதிகமான செல்வாக்குக் கொண்டிருந்தார்கள்—இங்கே குறிப்பிடத் தேவையில்லை. தொழிலாளி வர்க்கத்தினருக்கு நாம் நஞ்சைக் கொடுத்து விட்டோம், அவர்களுடைய ஆங்கில உணர்ச்சியை நாம் அநேகமாக ஒழித்து விட்டோம், அவர்களைப் புரட்சிகர சோஷலிசத்துக்குள் தள்ளி விட்டோம் என்று அவர்கள் பகிரங்கமாக நம்மீது குற்றம் சாட்டுகிறார்கள்.

இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு ஒரே வழி சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கவுன்சிலைப் போன்று இயங்குவதே. பொதுக் கவுன்சில் என்ற முறையில் நாம் நடவடிக்கைகளை (உதாரணமாக, நிலம் மற்றும் தொழிலாளர் சங்கம்[58]) ஆரம்பிக்க முடியும், நிறைவேற்றப்பட்ட பிறகு அவை ஆங்கிலத் தொழிலாளி வர்க்கத்தின் தன்னியல்பான இயக்கங்களாகப் பொது மக்களுக்குத் தோன்றும்.

பொதுக் கவுன்சிலுக்கு வெளியே ஒரு பிரதேசக் கவுன்சிலை அமைத்தால் அதன் உடனடியான விளைவுகள் எப்படியிருக்கும்?

அகிலத்தின் பொதுக் கவுன்சிலுக்கும் தொழிற்சங்கங்களின் பொதுக் கவுன்சிலுக்கும் இடையில் வைக்கப்படுகின்ற பிரதேசக் கவுன்சிலுக்கு ஒரு அதிகாரமும் இருக்காது. மறுபக்கத்தில் அகிலத்தின் பொதுக் கவுன்சில் இந்த மாபெரும் நெம்புகோலை இழந்து விடும். பொதுக் கவுன்சில் ''கடமைகளை இணைக்கின்ற இந்தக் கடுஞ்சுமையை'' ஏன் மேற்கொள்ள வேண்டும் என்று *L'Égalité* கேட்கிறது. திரைகளுக்குப் பின்னல் தீவிரமான நடவடிக்கைகளுக்கு பதிலாக கூத்தாடியின் வம்பளப்பை நாம் அதிகமாக விரும்பினால் இக்கேள்விக்கு பகிரங்கமாக பதிலளிக்கின்ற தவறைச் செய்வோம்.

இங்கிலாந்தை மற்ற நாடுகளுடன் சேர்த்து இன்னொரு நாடாக நாம் கருத முடியாது. மூலதனத்தின் தலைமை நாடு என்ற முறையில்தான் அதை நடத்த வேண்டும்.

5. அயர்லாந்தின் பொது மன்னிப்பைப் பற்றிய பொதுக் கவுன்சிலின் நிர்மானம்.

இங்கிலாந்து பண்ணை முறைக்கும் ஐரோப்பாவின் முதலாளித்துவத்துக்கும் அரணாக இருக்கிறது என்றால் அதிகார பூர்வமான இங்கிலாந்தை நாம் உண்மையிலேயே முழு பலத்தோடு தாக்கக் கூடிய ஒரே இடம் அயர்லாந்துதான்.

முதலாவதாக, ஆங்கிலப் பண்ணை முறையின் அரண் அயர்லாந்து. அது அயர்லாந்தில் வீழ்ச்சியடையுமானால் இங்கிலாந்திலும் வீழ்ச்சி அடையும். அயர்லாந்தில் இது நூறு மடங்கு சுலபமாக இருக்கும்; ஏனென்றால் அங்கே

நடைபெறுகின்ற பொருளாதாரப் போராட்டம் நிலவுடைமைச் சொத்தின் மீது முற்றிலும் குவிக்கப்பட்டிருக்கிறது, ஏனென்றால் இந்தப் போராட்டம் அதே சமயத்தில் தேசியப் போராட்டமாகவும் இருக்கிறது, மற்றும் ஏனென்றால் அங்கேயுள்ள மக்கள் இங்கிலாந்து மக்களைக் காட்டிலும் அதிகமான புரட்சி உணர்வும் எரிச்சலும் உள்ளவர்கள். இங்கிலாந்தின் இராணுவம் ஒன்றுதான் அயர்லாந்தில் பண்ணை முறையைப் பாதுகாக்கிறது. இருநாடுகளுக்கும் இடையில் பலவந்தமான இணைப்பு[59] எந்த விளைவில் முடிவடைந்தாலும் உடனே அயர்லாந்தில் சமூகப் புரட்சி—அது காலாவதியான வடிவங்களில் இருக்குமென்றாலும்—உடனடியாக வெடிக்கும். ஆங்கிலப் பண்ணை முறை திரண்ட செல்வத்தின் பிறப்பிடத்தை இழந்து விடுவதுடன் அதன் மிகப் பெரிய தார்மிக சக்தியை, அதாவது அயர்லாந்தின் மீது இங்கிலாந்தின் ஆதிக்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சக்தியை இழந்து விடும். மறு பக்கத்தில், அயர்லாந்தில் தங்களுடைய நிலக்கிழார்களின் சக்தியைப் பாதுகாக்கும் பொழுது ஆங்கிலப் பாட்டாளி வர்க்கம் இங்கிலாந்திலும் அவர்களுக்கு ஆபத்தேற்படாமற் செய்யும்.

இரண்டாவதாக, இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தை அடக்குவதற்காக அயர்லாந்தின் ஏழை மக்களை இங்கிலாந்துக்குள் கட்டாயமாகக் கொண்டு வருவதன் மூலம் ஆங்கில முதலாளி வர்க்கம் அயர்லாந்தின் ஏழ்மையைச் சுரண்டுவது மட்டுமின்றி பாட்டாளி வர்க்கத்தையும் இரண்டு பகை முகாம்களாகப் பிரித்திருக்கிறது. கெல்டிக் தொழிலாளியின் புரட்சிக் கனல் அழுத்தமாக, ஆனால் மெதுவாகச் செல்கின்ற ஆங்கில-சாக்சானியத் தொழிலாளியின் இயல்புடன் ஒத்து வரவில்லை. அதற்கு மாறாக, இங்கிலாந்தின் பெரிய தொழில்துறைக் கேந்திரங்கள் எல்லாவற்றிலும் அயர்லாந்தின் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஆங்கிலப் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் ஆழமான பகைமை இருக்கிறது. சராசரி ஆங்கிலத் தொழிலாளி கூலிகளையும் வாழ்க்கைத் தரத்தையும் (standard of life) குறைத்துவிடக் கூடிய போட்டியாளன் என்ற முறையில் அயர்லாந்தின் தொழி

லாளியை வெறுக்கிறான். அவன் ஐரிஷ் தொழிலாளியிடம் தேசிய மற்றும் மத ரீதியான வெறுப்பைக் கொண்டிருக்கிறான். வட அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களில் உள்ள ஏழை வெள்ளையர்கள் (*poor whites*) தங்களுடைய கறுப்பு அடிமைகளைப் பற்றி நினைப்பதைப் போல அவன் அயர்லாந்தின் தொழிலாளியைப் பற்றி நினைக்கிறான். இங்கிலாந்திலுள்ள பாட்டாளி வர்க்கத்தினர் மத்தியில் இத்தகைய பகைமையை முதலாளி வர்க்கம் செயற்கையாக வளர்க்கிறது, ஆதரிக்கிறது. தன்னுடைய அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இந்தப் பிரிவினை உண்மையான பலம் என்பது அதற்குத் தெரியும்.

இப்பகைமை அட்லாண்டிக் பெருங்கடலின் மறுபக்கத்தில் புனருற்பத்தி அடைந்திருக்கிறது. தங்களுடைய பிறந்த மண்ணிலிருந்து காளைமாடுகளினாலும் ஆட்டு மந்தைகளினாலும் விரட்டியடிக்கப்படுகின்ற அயர்லாந்தினர் வடக்கு அமெரிக்காவில் மறுபடியும் சேருகிறார்கள். அங்கே அவர்கள் மக்கள் தொகையில் மாபெரும் பகுதியாக, மென்மேலும் அதிகரிக்கின்ற பகுதியாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஒரே சிந்தனை, ஒரே உணர்ச்சி இங்கிலாந்தை வெறுப்பதே. இங்கிலாந்து மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் (அல்லது அவை பிரதிநிதித்துவம் செய்கின்ற வர்க்கங்கள்) அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் நடைபெறுகின்ற நாடுகளுக்கு இடையிலான போராட்டத்தை நிரந்தரமாக்குவதற்காக இந்த உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன. ஆகவே அவை அட்லாண்டிக் மாகடலின் இரண்டு பக்கங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கு இடையில் மனப்பூர்வமான, நிரந்தரமான கூட்டணி ஏற்படுவதைத் தடுக்கின்றன, அதன் மூலம் தொழிலாளர்களுடைய விடுதலையைத் தடுக்கின்றன.

மேலும், இங்கிலாந்தின் அரசாங்கம் ஒரு மாபெரும் நிரந்தர இராணுவத்தை வைத்திருப்பதற்கு அயர்லாந்துதான் ஒரே சாக்காக இருக்கிறது. அயர்லாந்தில் இராணுவப் பயிற்சி முடிந்த பிறகு அந்த இராணுவத்தை ஆங்கிலத் தொழிலாளர்களுக்கு எதிராக உபயோகிக்க முடியும், முன்

னர் அப்படி நடைபெற்றிருக்கிறது. கடைசியாக, பண்டைக் காலத்தில் ரோம் நகரத்தில் பேரளவில் நடைபெற்றவை இன்றைய இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேறொரு நாட்டை ஒடுக்குகின்ற நாடு தனக்கே அடிமைச் சங்கிலிகளைத் தயாரித்துக் கொள்கிறது.

ஆகவே ஐரிஷ் பிரச்சினையில் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் அணுகுமுறை மிகவும் தெளிவானது. முதல் அவசியம் இங்கிலாந்தில் சமூகப் புரட்சியை ஊக்குவிப்பதாகும். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அயர்லாந்தில் தீர்மானகரமான அடியைக் கொடுக்க வேண்டும்.

அயர்லாந்தின் பொது மன்னிப்பைப் பற்றிய பொதுக் கவுன்சிலின் தீர்மானம்[60], சர்வதேச நீதி ஒரு பக்கத்திலிருக்க, இன்றைய பலவந்தமான இணைப்பை, அதாவது அயர்லாந்து அடிமைப்பட்டிருத்தலை, சாத்தியமானால் சமத்துவ மற்றும் சுதந்திரமான கூட்டாட்சியாக, அவசியமென்றால் முழுமையான பிரிவினையாக மாற்றுவது ஆங்கிலத் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு முன்நிபந்தனை என்று உறுதிப்படுத்துகின்ற மற்ற தீர்மானங்களுக்கு அறிமுகம் என்ற அளவில் இருக்கும்.

முதலாவது அகிலத்தின் பொதுக் கவுன்சில்.

அநேகமாக 1870 மார்ச் 28இல் மார்க்சினால் எழுதப்பட்டது
Die Neue Zeit, Bd. 2 எண் 15, 1902இல் முதல் தடவையாகப் பிரசுரிக்கப்பட்டது

1868—1870 நடவடிக்கைக் குறிப்புகள் என்ற நூலில் "பொதுக் கவுன்சிலிடமிருந்து ரோமன் ஸ்விட்சர்லாந்தின் பிரதேசக் கவுன்சிலுக்கு" என்ற ஆவணத்தின் வாசகத்தின்படி பிரசுரிக்கப்பட்டது

பி. எங்கெல்ஸ்

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி

சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின்
லண்டன் மாநாட்டில் நிகழ்த்திய
சொற்பொழிவைப் பற்றி ஆசிரியருடைய
குறிப்பு,
செப்டெம்பர் 21, 1871[61]

அரசியல் விஷயங்களில் முற்றிலும் ஒதுங்கியிருப்பதென்பது முடியாது. எனவே ஒதுங்கியிருக்கின்ற பத்திரிகைகள் அனைத்துமே உண்மையில் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இதை எப்படிச் செய்ய வேண்டும், எந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது ஒன்றே பிரச்சினை. இது தவிர, நாம் தலையிடாதிருக்கவும் முடியாது. பெரும்பான்மையான நாடுகளில் தொழிலாளர் கட்சி ஏற்கெனவே ஒரு அரசியல் கட்சியாக இருக்கிறது. நாம் அரசியலில் தலையிடாமையை போதித்து இதை அழிக்கக் கூடாது. யதார்த்தமான வாழ்க்கையின் அனுபவம், அரசியல் அல்லது சமூகக் காரணங்களுக்காக இன்றுள்ள அரசாங்கங்கள் தொழிலாளர்கள் மீது திணிக்கின்ற அரசியல் ஒடுக்குமுறை தொழிலாளர்கள்—அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—அரசியலில் ஈடுபடும்படி நிர்ப்பந்திக்கின்றன. அவர்களிடம் அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்குமாறு போதிப்பது முதலாளி வர்க்க அரசியலின் கரங்களுக்குள் அவர்களை விரட்டுவதைப் போன்றதாகும். குறிப்பாக, பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையை நிகழ்ச்சி நிரலில் சேர்த்து

விட்ட பாரிஸ் கம்யூனுக்குப் பிறகு ஒதுங்கி நிற்றல் முற்றிலும் இயலாததே.

வர்க்கங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதை நிறைவேற்றுகின்ற வழி எது? பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம் ஒன்றே வழியாகும். இது எங்குமே அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பொழுது, அரசியலில் தலையிட வேண்டாம் என்று நம்மிடம் சொல்கிறார்கள்! தலையிடாமையைப் பின்பற்றுகின்ற எல்லோரும் தங்களைப் புரட்சியாளர்கள் என்று—எல்லாவற்றுக்கும் மேலான புரட்சியாளர்கள் என்று கூட—சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் புரட்சி என்பது தலைமையான அரசியல் நடவடிக்கை; புரட்சியை விரும்புபவர் அதை நிறைவேற்றக் கூடிய வழியையும், அதாவது அரசியல் நடவடிக்கையையும் விரும்ப வேண்டும். அது புரட்சிக்குத் தயாரிப்பதுடன் தொழிலாளர்களுக்குப் புரட்சிப் பயிற்சியைக் கொடுக்கிறது. அது இல்லையென்றால் போராட்டத்துக்கு அடுத்த நாளிலேயே தொழிலாளர்கள் ஃபாவ்ர்களாலும் பியாக்களாலும் ஏமாற்றப்படுவார்கள். ஆனால் நாம் நடத்த வேண்டிய அரசியல் தொழிலாளி வர்க்கத்தின் அரசியலாகும். தொழிலாளர்களுடைய கட்சி எந்த முதலாளி வர்க்கக் கட்சியின் ஒட்டுப் பகுதியாகவும் ஒரு போதும் இருக்கக் கூடாது. அது சொந்த இலட்சியத்தையும் சொந்தக் கொள்கையையும் கொண்ட சுதந்திரமான கட்சியாக இருக்க வேண்டும்.

அரசியல் சுதந்திரங்கள், கூட்டம் நடத்துவதற்கு சுதந்திரம், சங்கம் அமைப்பதற்கு சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம்—இவை நம்முடைய ஆயுதங்கள். இவற்றை நம்மிடமிருந்து பறிக்க யாராவது முயற்சி செய்யும் பொழுது நாம் கைகளைக் கட்டிக் கொண்டு ஒதுங்கி நிற்க முடியுமா? நம் தரப்பில் எந்த அரசியல் நடவடிக்கையுமே இன்றுள்ள நிலைமையை அங்கீகரிப்பதை உள்ளடக்கியிருக்கிறது என்று நம்மிடம் கூறுகிறார்கள். ஆனால் இந்த நிலைமை அதை எதிர்ப்பதற்குரிய சாதனங்களை நம்மிடம் கொடுக்கும் பொழுது

நாம் அவற்றை உபயோகிக்கிறோம். இது இன்றைக்கிருக்கும் நிலைமையை அங்கீகரிப்பதென்று அர்த்தமல்ல.

கம்யூனிஸ்ட் அகிலம், எண் 29, 1934 இதழில் முதல் தடவையாக முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டது

கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது

மூலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

பாரிஸ் கம்யூன் ஆண்டு விழாக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்[62]

1

1871 மார்ச் 18ந் தேதியின் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நடைபெறுகின்ற இக்கூட்டம் 1871 மார்ச் 18ந் தேதியன்று தொடங்கிய மகத்தான இயக்கம் மனித குலத்தை வர்க்க சமூகத்திலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப் போகின்ற மாபெரும் சமூகப் புரட்சியின் உதயம் என்று கருதுகிறது.

2

தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராகத் தம்முடைய வெறுப்பிலும் ஐரோப்பா முழுவதிலும் ஒன்றுசேர்ந்த பூர்ஷ்வா வர்க்கங்களுடைய திறமையின்மையும் குற்றங்களும் பழைய சமூகத்தின்—அது முடியாட்சி வடிவத்திலோ அல்லது குடியரசு வடிவத்திலோ எப்படி இருந்தாலும்—அழிவுக்குத் தீர்ப்பு வழங்கிவிட்டன என்று அறிவிக்கிறது.

3

அகிலத்துக்கு எதிராக எல்லா அரசாங்கங்களும் நடத்துகின்ற புனிதப் போரும் வெர்சேய் கொலைகாரர்கள்[63] மற்றும் அவர்களுடைய பிரஷ்ய வெற்றியாளர்களுடைய அடக்குமுறையும் அவர்களுடைய வெற்றிகளின் ஓட்டைத் தன்மையையும் தியேர் மற்றும் வில்ஹெல்மின் ஒன்று

திரண்ட சக்திகளினுல் நசுக்கப்பட்ட வீரம் நிறைந்த முன் னணிப் படையின் பின்புறத்தில் உலகப் பாட்டாளி வர்க் கத்தின் ஆவேசம் நிறைந்த படை திரண்டிருப்பதையும் நிரூ பிக்கின்றன என்று அறிவிக்கிறது.

1872 மார்ச் 13-18
தேதிகளுக்கு இடையில்
எழுதப்பட்டது

The International Herald
வாசகத்தின்படி
அச்சிடப்பட்டது

La Liberté, எண் 12இல்
1872 மார்ச் 24ந் தேதியிலும்
The International Herald, எண் 3இல்
1872 மார்ச் 30ந் தேதியிலும்
பிரசுரிக்கப்பட்டது

கா. மார்க்ஸ்

நிலத்தைத் தேசவுடைமையாக்குதல்[64]

எல்லாச் செல்வங்களுக்கும் ஆதிப்பிறப்பிடம் நிலத்தில் உள்ள உடைமையே. இந்த மாபெரும் பிரச்சினையைத் தீர்ப்பதைப் பொறுத்தே தொழிலாளி வர்க்கத்தின் எதிர்காலம் இருக்கிறது.

நிலத்தில் தனிச் சொத்துடைமையை ஆதரிப்பவர்கள்—சட்டவியலாளர்கள், தத்துவஞானிகள் மற்றும் அரசியல் பொருளியலாளர்கள்—முன்வைக்கின்ற அனைத்து வாதங்களையும் விவாதிப்பது இங்கே என்னுடைய உத்தேசமல்ல; ஆனால் அவர்கள் ''இயற்கையான உரிமை'' என்ற போர்வையில் நிலப்பறி என்ற பூர்விகமான உண்மையை மறைப்பதற்கு மிகவும் பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை முதலில் குறிப்பிடுவதுடன் நின்றுவிடுகிறேன். அந்தச் சிலருடைய தரப்பில் கொள்ளை என்பது இயற்கையான உரிமையாக இருக்குமானால் எண்ணிக்கையில் அதிகமான பலர் தங்களிடமிருந்து பறிக்கப்பட்டதை மீண்டும் பெறுகின்ற இயற்கையான உரிமையை அடைவதற்குப் போதுமான சக்தியைத் திரட்டுவதே ஒரே வழியாகும்.

நிலப்பறியில் வெற்றியாளர்களின் முதல் உரிமை மிருக பலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் வரலாற்றுப் போக்கில் தாங்களே திணித்த சட்டங்களின் உதவியுடன் அந்த உரிமைக்கு ஒரு வகையான சமூக அந்தஸ்தைக் கொடுப்பது நன்மையென்று கண்டனர்.

கடைசியாகத் தத்துவஞானி வந்து இச்சட்டங்கள் மனிதகுலத்தின் முழுதளாவிய ஒப்புதலே உள்ளடக்கியிருக்கின்றன,

வெளிப்படுத்துகின்றன என்று விளக்கிக் காட்டுகிறார். நிலத்தில் தனியுடைமை இத்தகைய முழுமையான ஒப்புதலின் மீது நிறுவப்பட்டிருக்குமாஞல் சமூகத்தின் பெரும்பான்மையினர் அதற்கு மறுப்புக் கூறுகின்ற விஞடியிலேயே அது இல்லாமற்போய் விடுவது வெளிப்படையாகும்.

எனினும் உடைமையின் ''உரிமைகள்'' என்று சொல்லப்படுவனவற்றை ஒதுக்கி வைத்து விட்டு, சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி, மக்கள் தொகை அதிகரிப்பும் குவிப்பும்—முதலாளித்துவ விவசாயி விவசாயத்தில் கூட்டு மற்றும் அமைப்பு ரீதியான உழைப்பையும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளையும் பயன்படுத்துவதை அவசியமாக்குகின்ற சந்தர்ப்பங்களே—நிலத்தை தேசவுடைமையாக்குவதை மென்மேலும் ''சமூக அவசியமாகச்'' செய்யும் என்று நான் வலியுறுத்துகிறேன். அதற்கு எதிராக உடைமையின் உரிமைகளைப் பற்றி எவ்வளவு பேசினாலும் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. சமூகத்தின் கட்டாயமான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், அவை பூர்த்தி செய்யப்படும். சமூக அவசியத்தினால் வற்புறுத்தப்படுகின்ற மாற்றங்கள் தமக்குரிய வழியில் ஈடேற்றமடையும், அவை சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ தமது நலனுக்குரிய சட்டங்களை இயற்றிக் கொள்ளும்.

நாள்தோறும் அதிகரிக்கின்ற உற்பத்தி நமக்கு அவசியம். அதன் தேவைகளை ஒரு சில நபர்கள் தங்களுடைய விருப்பங்களுக்கும் தனிப்பட்ட நலன்களுக்கும் ஏற்றபடி இந்த உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதை அல்லது நிலத்தின் சக்தியை முட்டாள்தனமாகச் சூறையாடுவதை அனுமதிப்பதன் மூலம் அவற்றைப் பூர்த்தி செய்ய முடியாது. நீர்ப்பாசனம், வடிகால், நீராவிக் கலப்பை, இரசாயன உரம் மற்றும் இதர நவீன முறைகள் அனைத்தும் விரிந்த அளவில் விவசாயத்தில் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் நம்மிடமுள்ள விஞ்ஞான அறிவு, விவசாயத்தில் நாம் பயன்படுத்தக் கூடிய தொழில் நுட்பக் கருவிகள், உதாரணமாக, இயந்திரங்கள் இதரவை, பெரிய அளவில் நிலத்தில் விவசாயம் செய்தால் தவிர ஒரு போதும் வெற்றிகரமாக உபயோகிக்கப்பட முடியாது.

பெரிய அளவு விவசாயம் (விவசாயியை வெறும் பிராணியாகத் தரம் குறைக்கின்ற அதன் இன்றைய முதலாளித்துவ வடிவத்தில் கூட) சிறு துண்டுதுக்காணி விவசாயத்துடன் ஒப்பிடும் பொழுது பொருளாதாரக் கோணத்தில் மிகவும் உயர்வாக இருப்பது நிரூபிக்கப்படும் பொழுது அதை தேசிய அளவில் பின்பற்றினால் அது உற்பத்திக்குக் கூடுதலான ஊக்கத்தைக் கொடுக்காதா?

ஒரு பக்கத்தில் மென்மேலும் அதிகரிக்கின்ற மக்கள் தேவைகளும் மறு பக்கத்தில் விவசாய உற்பத்திப் பொருட்களின் மென்மேலும் அதிகரிக்கின்ற விலைகளும் நிலத்தை தேசவுடைமையாக்குதல் சமூக அவசியமாகி விட்டது என்பதை மறுக்க முடியாதபடி நிரூபிக்கின்றன.

தனி நபருடைய குறையினால் ஏற்படுகின்ற விவசாய உற்பத்திக் குறைவு தேசத்தின் கட்டுப்பாட்டில் தேசத்துக்காக எங்கெங்கே விவசாயம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் இருக்க முடியாது என்பது உண்மையே.

இந்தப் பிரச்சினையைப் பற்றி இங்கே நடைபெற்ற விவாதத்தில் பேசிய குடிமக்கள் அனைவரும் நிலத்தை தேசவுடைமையாக்குவதை ஆதரித்தார்கள்; ஆனால் அவர்கள் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களைக் கூறினர்கள்.

பிரான்ஸ் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டது; ஆனால் அங்கே விவசாய நிலவுடைமை இருக்கின்ற படியால் பண்ணை முறை இருக்கின்ற இங்கிலாந்தைக் காட்டிலும் அது தேசவுடைமைக்கு மிகவும் தள்ளியே இருக்கிறது. பிரான்சில் பணம் கொடுத்து வாங்கக் கூடியவர்களுக்கு இன்னும் நிலம் கிடைக்கிறது என்பது உண்மையே. ஆனால் இந்த வசதியின் விளைவாக மிகவும் குறைந்த சாதனங்களைக் கொண்டு பிரதானமாக, தாங்களும் தங்களுடைய குடும்பத்தினரும் நிலத்தில் பாடுபடுவதை நம்பியிருக்கின்ற மனிதர்களால் விவசாயம் செய்யப்படும் துண்டுதுக்காணியாக நிலம் பிரிக்கப்பட்டிருக்கிறது. நிலவுடைமையின் இந்த வடிவமும் அதன் விளைவாக ஏற்படுகின்ற துண்டுதுக்காணி விவசாயமும் நவீன விவசாயக் கருவிகளைக் கையாள்வதை ஒதுக்குவதுடன் விவசாயியை சமூக முன்னேற்றத்துக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக

நிலத்தை தேசவுடைமையாக்குவதற்கும் மிகவும் உறுதியான எதிரியாக மாற்றுகின்றன. ஒப்பீட்டளவில் சிறு பலனைப் பெறுவதற்காக அவன் தன்னுடைய ஜீவாதாரமான சக்தி அனைத்தையும் பயன்படுத்துகின்ற நிலத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறான்; அவனுடைய உற்பத்திப் பொருளில் பெரும் பகுதியை அரசுக்கு வரிகளாகவும் நீதிமன்றக் கும்பலுக்கு நீதிமன்றச் செலவுகளாகவும் லேவாதேவிக்காரனுக்கு வட்டியாகவும் கட்டிவிட்டுத் தன்னுடைய அற்பமான உழைப்புத் துறைக்கு வெளியே நடைபெறுகின்ற சமூக இயக்கங்களைப் பற்றிச் சிறிதும் அறிவில்லாதவனாக இருக்கிறான். ஆனால் இன்னும் அவன் வெறித்தனமான ஆசையுடன் தன்னுடைய துண்டு நிலத்தையும் அதன் மீது அவனது பெயரளவிலான உடைமையையும் பிடித்துத் தொங்குகிறான். இவ்விதத்தில் பிரெஞ்சு விவசாயி தொழில்துறைத் தொழிலாளி வர்க்கத்துக்கு மிகவும் ஆபத்தான எதிர்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறான்.

விவசாய நிலவுடைமை நிலத்தை தேசவுடைமையாக்குவதற்கு மிகப் பெரிய தடையாக இருக்கின்ற படியால் இந்த மாபெரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேட வேண்டிய இடம் பிரான்ஸ்—அதன் இன்றைய நிலையில்—அல்ல என்பது நிச்சயம்.

தனி நபர்களுக்கோ அல்லது தொழிலாளர்களின் சங்கங்களுக்கோ சிறு நிலப் பகுதிகளாக விடுவதற்காக நிலத்தை தேசவுடைமையாக்குவது முதலாளி வர்க்க அரசாங்கத்தின் கீழ் அவர்கள் மத்தியில் வெறித்தனமான போட்டியை மட்டுமே ஏற்படுத்தும், அதன் பலனாக வாரம் தொடர்ச்சியாக அதிகரிக்கும், அதை சுவீகரிப்பவர்கள் உற்பத்தியாளர்களைச் சுரண்டி புதிய வசதிகளைப் பெறுவார்கள்.

1868இல் பிரஸ்ஸல்சில் நடைபெற்ற சர்வதேச காங்கிரசில்[65] நம்முடைய நண்பர்களில் ஒருவர்* பின்வருமாறு கூறினார்.

''தனியார் சிறு நிலவுடைமை அழியும் என்பது விஞ்ஞானத்தின் தீர்ப்பு. பெரும் நிலவுடைமை அழியும் என்பது

* செஸார் டெ பாப்.—ப-ர்.

நீதியின் தீர்ப்பு. இதற்கு ஒரே ஒரு மாற்று மட்டுமே இருக்கிறது. நிலம் கிராமச் சங்கங்களின் உடைமையாக வேண்டும் அல்லது தேச முழுமைக்கும் உடைமையாக வேண்டும். எதிர்காலம் இந்தப் பிரச்சினையை முடிவு செய்யும்.''

நான் இதற்கு மாறுகக் கூறுவேன்: நிலம் தேசத்தின் உடைமையாக மட்டுமே இருக்க முடியும் என்ற முடிவுக்கு சமூக இயக்கம் இட்டுச் செல்லும்.

நிலத்தை தேசவுடைமையாக்குதல் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே உள்ள உறவுகளில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தும், கடைசியில் முதலாளித்துவ உற்பத்தி முறையை—தொழில்துறையிலும் விவசாயத்துறையிலும்—ஒழித்துவிடும். பின்னர் வர்க்க வேறுபாடுகளும் தனிச் சலுகைகளும், அவற்றுக்கு ஆதாரமாக இருக்கின்ற பொருளாதார அடிப்படையுடன் சேர்ந்து மறைந்துவிடும். அடுத்தவருடைய உழைப்பைச் சுரண்டி வாழ்வது கடந்த காலக் கதையாகிவிடும். சமூகத்திலிருந்து தனியாக இருக்கின்ற எந்த அரசாங்கமோ அல்லது அரசு அதிகாரமோ இனி இருக்காது! விவசாயம், சுரங்கத் தொழில், பாக்டரி உற்பத்தி, சுருக்கமாகச் சொல்வதென்றால் உற்பத்தியின் எல்லாத் துறைகளும் மிகச் சாத்தியமான முறையில் படிப்படியாக அமைக்கப்படும். உற்பத்திச் சாதனங்களின் தேசிய மத்தியப்படுத்தல் சமூக நடவடிக்கையைப் பொதுவான மற்றும் அறிவுபூர்வமான திட்டத்தின்படி நடத்துகின்ற சுதந்திரமான, சமத்துவமான உற்பத்தியாளர்களின் சங்கங்களைக் கொண்ட சமூகத்தின் தேசிய அடிப்படையாக மாறும். 19ம் நூற்றாண்டின் மாபெரும் பொருளாதார இயக்கம் இந்த மனிதாபிமான இலட்சியத்தை நோக்கியே முன்னேறிக் கொண்டிருக்கிறது.

1872 மார்ச்—ஏப்ரலில்
மார்க்சினால் எழுதப்பட்டது

The International Herald,
எண் 11, ஜூன் 15, 1872
இதழில் வெளியிடப்பட்டது

பத்திரிகை வாசகத்தின்படி,
கையெழுத்துப் பிரதியுடன்
சரிபார்த்துப்
பிரசுரிக்கப்பட்டது

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

ஹேகில் நடைபெற்ற பொதுக் காங்கிரசின் தீர்மானங்களிலிருந்து

செப்டெம்பர் 2-7, 1872[66]

1

விதிகளைப் பற்றிய தீர்மானம்

லண்டன் மாநாட்டின் (1871 செப்டெம்பர்) தீர்மானம் IXஇன் உள்ளடக்கத்தைத் தொகுத்துக் கூறுகின்ற பின்வரும் ஷரத்தை 7ஆவது ஷரத்துக்குப் பிறகு விதிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஷரத்து 7 (அ). உடைமை வர்க்கங்களின் கூட்டு பலத்துக்கு எதிரான போராட்டத்தில், உடைமை வர்க்கங்களால் உருவாக்கப்பட்ட பழைய அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் எதிரான தனிவகையான அரசியல் கட்சியாகத் தன்னை அமைத்துக் கொள்வதன் மூலமாக மட்டுமே பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கமாக இயங்க முடியும்.

பாட்டாளி வர்க்கம் இப்படி ஒரு அரசியல் கட்சியாகத் தன்னை அமைத்துக் கொள்வது சமூகப் புரட்சியிலும் அதன் இறுதி லட்சியமாகிய வர்க்கங்களை ஒழிப்பதிலும் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமாகும்.

பொருளாதாரப் போராட்டத்தின் மூலம் ஏற்கெனவே சாதிக்கப்பட்டுள்ள தொழிலாளி வர்க்க சக்திகளின் கூட்டணி அதைச் சுரண்டுபவர்களின் அரசியல் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் இந்த வர்க்கத்தின் கைகளில் ஒரு நெம்புகோலாகப் பயன்பட வேண்டும்.

நிலம் மற்றும் மூலதனத்தின் உடைமையாளர்கள் தம் முடைய பொருளாதார ஏகபோகங்களை நிரந்தரமாக்கு

வதற்கும் உழைப்பை அடிமைப்படுத்துவதற்கும் தமது அரசியல் சலுகைகளை எப்பொழுதும் பயன்படுத்துவதால் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பது பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் கடமையாக இருக்கிறது.

ஆதரவாக 29 வாக்குகள், எதிர்த்து 5 வாக்குகள், 8 வாக்குகள் தவிர்க்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது...

மார்க்ஸ் மற்றும் எங்கெல்சினால் எழுதப்பட்டது

Résolutions du congrès général tenu a la Haye du 2 au 7 septembre 1872, Londres, 1872 என்ற தலைப்பில் பிரசுரமாக வெளியிடப்பட்டது
La Emancipacion, எண் 72, நவம்பர் 2, 1872 மற்றும் *The International Herald*, எண் 37, டிசம்பர் 14, 1872 இதழ்களிலும் பிரசுரிக்கப்பட்டது

பிரசுர வாசகத்தின்படி, எங்கெல்சின் கையெழுத்துப் பிரதியுடன் சரிபார்த்து அச்சிடப்பட்டது

மூலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

ஹேக் காங்கிரஸ்

ஆம்ஸ்டர்டாம் பொதுக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் நிருபர் பதிவுக்குறிப்பு செப்டெம்பர் 8, 1872[67]

பதினெட்டாம் நூற்றுண்டில் அரசர்களும் ஆளுநர்களும் ஹேகில் கூடித் தம்முடைய அரச மரபுகளின் நலன்களைப் பற்றி விவாதிப்பது வழக்கம் என்று அவர் கூறினர்.

எங்களைப் பயமுறுத்துவதற்குப் பலரும் முயற்சி செய்த போதிலும் தொழிலாளர்களின் காங்கிரசை இங்கேதான் நடத்த வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம். மிகவும் அதிகமான பிற்போக்குத்தனத்தைக் கொண்ட மக்கள் மத்தியில், இந்த மாபெரும் சங்கம் இருப்பதைப் பற்றி, அதன் விஸ்தரிப்பையும் எதிர்காலத்துக்கு அதன் நம்பிக்கைகளையும் பற்றி வலியுறுத்த வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம்.

எங்கள் முடிவைப் பற்றித் தெரிந்து கொண்டதும் நாங்கள் இடத்தைத் தயாரிப்பதற்காக தூதர்களை அனுப்பி வைத்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. எங்களுடைய தூதர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களில் பெரும்பான்மையினரை எங்களுக்குத் தெரியாது. ஹேகில் முதுகொடியப் பாடுபடுகின்ற தொழிலாளர்களே எங்களுடைய தூதர்கள். ஆம்ஸ்டர்டாமிலும் எங்களுடைய தூதர்கள் தொழிலாளர்களே, அவர்கள் நாள்தோறும் பதினறு மணி நேரம் பாடுபடுகின்ற தொழிலாளர்கள். அவர்கள்தான் எங்களுடைய தூதர்கள்; வேறு தூதர்கள் எங்களிடம் இல்லை. நாங்கள் போகின்ற எல்லா நாடுகளிலும் அவர்கள் எங்களை நட்புடன் வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய நிலைமையை மேம்படுத்துவதற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம் என்பதை அவர்கள் மிகச் சீக்கிரமாக உணர்ந்து விடுகிறார்கள்.

ஹேக் காங்கிரஸ் மூன்று முக்கியமான காரியங்களை நிறை வேற்றியது:

தொழிலாளி வர்க்கம் பழைய சமூகத்துக்கு, சீரழிந்து கொண்டிருக்கும் சமூகத்துக்கு எதிராகச் சமூகத் துறையைப் போலவே அரசியல் துறையிலும் போராட வேண்டிய அவ சியத்தை அது பிரகடனம் செய்தது. இந்த லண்டன் மாநாட் டுத் தீர்மானம் இப்பொழுது முதல் நம் விதிகளில்* சேர்க் கப்பட்டிருப்பதைப் பார்க்க நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். தொழிலாளர்கள் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்க வேண் டும் என்று வற்புறுத்துகின்ற ஒரு கோஷ்டி எமக்கிடையில் ஏற்பட்டிருந்தது. இந்தக் கோட்பாடுகள் நமது இலட்சியத் துக்கு எந்த அளவுக்கு மிகவும் ஆபத்தானவை, அழிவை ஏற் படுத்தக் கூடியவை என்பதைச் சுட்டிக் காட்டுவது முக் கியம் என்று நாங்கள் கருதினோம். உழைப்பைப் புதிய வழி களில் அமைப்பதற்காகத் தொழிலாளி என்றுவது ஒரு நாள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க வேண்டும்; பழைய ஸ்தாபனங்களை ஆதரிக்கின்ற பழைய கொள்கையை அவன் முறியடிக்க வேண்டும். இல்லையென்றால் பண்டைக் காலக் கிறிஸ்தவர்களைப் போல—அவர்கள் அரசியலைப் புறக்கணித் தார்கள், வெறுப்புடன் ஒதுக்கினார்கள்—தங்களுடைய சாம் ராஜ்யத்தை இந்த பூமியில் ஒருபோதும் பார்க்க முடியாமல் ஆகிவிடும்.

ஆனால் இந்த இலட்சியம் ஒரே விதமான வழிகளின் மூலம் நிறைவேற்றப்படும் என்று நாம் எவ்விதத்திலும் கூறவில்லை. பல்வேறு நாடுகளின் அமைப்புகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என் பதை நாங்கள் அறிவோம். தொழிலாளிகள் சமாதான பூர் வமான வழிகளின் மூலம் தங்களுடைய இலட்சியத்தைச் சாதிக்கக் கூடிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் —உங்களுடைய ஸ்தாபனங்களைப் பற்றி இன்னும் சிறப்பாக எனக்குத் தெரிந்திருந்தால் ஹாலந்தையும் இங்கே சேர்த்துக் கொள்வேன்—இருக்கின்றன என்பதை நாங்கள் மறுக்க

* இந்தத் தொகுதி, பக்கங்கள் 169—170ஐப் பார்க்க.—ப-ர்.

வில்லை. அது உண்மையென்றால் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த மிகப் பெரும்பான்மையான நாடுகளில் பலாத்காரமே நம்முடைய புரட்சியின் நெம்புகோலாக இருக்கும் என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்; உழைப்பின் ஆட்சியை ஏற்படுத்துவதற்காக என்றாவது ஒரு நாள் நாம் பலாத்காரத்தில் ஈடுபட வேண்டியிருக்கும்.

ஹேக் காங்கிரஸ் பொதுக் கவுன்சிலுக்குப் புதிய, கூடுதலான அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறது. அரசர்கள் பெர்லின், நகரத்தில் கூடியிருக்கின்ற இச்சமயத்தில்[68], நிலப் பிரபுத்துவ அமைப்பு மற்றும் கடந்த காலங்களின் வலிமை மிக்க பிரதிநிதிகள் நடத்தும் இக்கூட்டத்தில் நமக்கெதிராகப் புதிய மற்றும் கடுமையான ஒடுக்குமுறை நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்ற பொழுது, அடக்குமுறை ஆரம்பிக்கப்படுகின்ற பொழுது பொதுக் கவுன்சிலின் அதிகாரத்தை அதிகரிப்பதும் தொடங்கப் போகிற போராட்டத்திற்கு நடவடிக்கையை மத்தியப்படுத்துவதும்—தனித்திருப்பது அந்த நடவடிக்கையைப் பலவீனப்படுத்தும்—அறிவுபூர்வமானது, அவசியமானது என்று ஹேக் காங்கிரஸ் முடிவு செய்தது. மேலும், பொதுக் கவுன்சிலின் அதிகாரம் நம்முடைய எதிரிகளைத் தவிர வேறு யாரிடம் கவலையைத் தூண்டப் போகிறது? அப்படியானால் பொதுக் கவுன்சில் தன் சித்தத்தைத் திணிப்பதற்கு அதிகார வர்க்கத்தையும் ஆயுதம் தாங்கிய போலீஸ் படையையும் வைத்திருக்கிறதா? அதன் அதிகாரம் முற்றிலும் தார்மிக ரீதியானது அல்லவா? அதன் முடிவுகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பைக் கொண்ட சம்மேளனங்களிடம் தானே அது தன் முடிவுகளைச் சமர்ப்பிக்கிறதல்லவா? இப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் இராணுவம், போலீஸ், நீதித்துறை அதிகார வர்க்கம் இல்லாத இராஜாக்கள்—அவர்கள் தங்களுடைய ஆட்சியைத் தார்மிக செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டே காப்பாற்றித் தீர வேண்டிய நிலைக்கு என்றேனும் இறக்கப்பட்டார்கள் என்றால்—புரட்சியின் முன்னேற்றத்துக்கு பலவீனமான தடைகளாக மட்டுமே இருப்பார்கள்.

கடைசியாக, ஹேக் காங்கிரஸ் பொதுக் கவுன்சிலின்

தலைமையிடத்தை நியூயார்க் நகரத்துக்கு மாற்ற முடிவு செய்திருக்கிறது. நம்முடைய நண்பர்களில் கூட ஏராள மானவர்கள் இந்த முடிவைப் பற்றி ஆச்சரியப்படுவதாகத் தோன்றுகிறது. அமெரிக்கா பிரதானமாக, தொழிலாளர் களைக் கொண்ட உலகமாக மாறிக் கொண்டிருக்கிறது, வரு டந்தோறும் ஐந்து லட்சம் தொழிலாளர்கள் அந்தக் கண் டத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள், தொழிலாளி ஆதிக்கம் செலுத்துகின்ற அந்த மண்ணில் அகிலம் உறுதியாக வேரூன்ற வேண்டும் என்பதை அவர்கள் மறந்து விட்டார் களா? மேலும் பொது இலட்சியத்தின் நன்மைக்கு அவசியமான, பயன்படக் கூடிய உறுப்பினர்களைப் பொதுக் கவுன்சில் இணைத்துக் கொள்வதற்குரிய அதிகாரத்தைக் காங் கிரஸ் அதற்குக் கொடுத்திருக்கிறது. தமது கடமையைச் சிறப்பான முறையில் நிறைவேற்றக் கூடிய நபர்களை, ஐரோப் பாவில் நம் சங்கத்தின் பதாகையை உயர்த்திப் பிடிக்கக் கூடிய நபர்களைத் தேர்ந்தெடுக்கின்ற அளவுக்குப் பொதுக் கவுன்சில் நுண்ணறிவுடன் நடந்து கொள்ளும் என்று நாம் கருதுவோம்.

குடிமக்களே! அகிலத்தின் அடிப்படையான கோட்பா டாகிய ஒருமைப்பாட்டைப் பற்றி நாம் சிந்திப்போம். உயி ரூட்டுகின்ற இக்கோட்பாட்டை எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் அனைவர் மத்தியிலும் உறுதியான அடிப் படையில் நிறுவுவதன் மூலமாகத்தான் நாம் நம்முன் வைத் துள்ள மாபெரும் இலட்சியத்தைச் சாதிக்க முடியும். புரட் சிக்கு ஒருமைப்பாடு அவசியம். பாரிஸ் கம்யூன் அதற்கு மிகச் சிறந்த உதாரணம். பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தின் அந்த மாபெரும் எழுச்சியோடு பொருந்துகின்ற ஒரு மாபெரும் புரட்சிகர இயக்கம் எல்லா மையங்களிலும், பெர்லின், மாட்ரிட் மற்றும் இதர இடங்களில் ஏற்படாத படியால் பாரிஸ் கம்யூன் வீழ்ச்சியடைந்தது.

என்னைப் பொறுத்த மட்டில் நான் என்னுடைய முயற்சி களைத் தொடர்வேன், எதிர்காலத்தில் எல்லா தொழிலா ளர்கள் மத்தியிலும் இந்தப் பலனுள்ள ஒருமைப்பாட்டை நிறுவுவதற்கு இடைவிடாது பாடுபடுவேன். நான் அகிலத்

திலிருந்து சிறிதும் விலகவில்லை; என் கடந்த காலத்திய முயற்சிகளைப் போலவே என்னுடைய எஞ்சிய வாழ்க்கையும் பாட்டாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வெற்றிக்கு—நாங்கள் அதை உறுதியாக நம்பலாம்—என்றைக்காவது ஒரு நாள் நடைபெறப் போகின்ற சமூகக் கருத்துக்களின் வெற்றிக்கு அர்ப்பணிக்கப்படும்.

La Liberté, எண் 37, 1872 செப்டெம்பர் 15ந் தேதி, *Der Volksstaat*, எண் 79, 1872 அக்டோபர் 2ந் தேதிய பத்திரிகைகளில் வெளியிடப் பட்டது

Liberté வாசகத்தின்படி, *Der Volksstaat*, வாசகத்துடன் சரிபார்த்துப் பிரசுரிக்கப் பட்டது
மூலம் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது.

கா. மார்க்ஸ்

ஹனேவரிலிருந்த லு. குகெல்மனுக்கு எழுதிய கடிதம்

லண்டன், ஜூலை 11, 1868

...Centralblattஐப்[69] பொறுத்த மட்டில் மதிப்பு என் பதைப் பற்றி ஒருவர் எப்படி அர்த்தப்படுத்திக் கொண் டாலும் நான் வருவிக்கின்ற முடிவுகளை ஏற்றுக்கொள்ள வேண் டும் என்பதை அந்த நபர் ஒத்துக்கொள்கின்ற பொழுது சாத் தியமான மிகப் பெரிய சலுகையைச் செய்கிறார். என் னுடைய புத்தகத்தில் ''மதிப்பைப்'' பற்றி ஒரு அத்தியாயம்[70] எழுதப்படவில்லை என்றால் கூட உண்மையான உறவுகளைப் பற்றி நான் கொடுத்திருக்கின்ற பகுப்பாய்வு உண்மையான மதிப்பு உறவின் நிரூபணத்தையும் விளக்கத்தையும் கொண் டிருக்கும் என்பதை அந்த அப்பாவி பார்க்கவில்லை. மதிப்பு என்ற கருத்தினத்தை நிரூபிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிய ஆரவாரமான பேச்சு எல்லாம் ஆராயப்படுகின்ற பொருள், விஞ்ஞான முறை ஆகிய இரண்டையும் பற்றி முழு மையான அறியாமையிலிருந்து வருகிறது. ஒரு நாடு—ஒரு வருட காலத்துக்கு என்று நான் கூற மாட்டேன்—சில வாரங் களுக்குக் கூட வேலையை நிறுத்திவிடுமானால் அழிந்துவிடும் என்பது குழந்தைக்குக் கூடத் தெரியும். வெவ்வேறு தேவை களுக்கு அவசியமான உற்பத்திப் பொருள்கள் சமூகத்தின் மொத்த உழைப்பின் வெவ்வேறான மற்றும் அளவு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட தொகுதிகள் அவசியம் என்பதும் கூட ஒவ்வொருவருக்கும் தெரியும். திட்டவட்டமான அளவுகளில் சமூக உழைப்பை வினியோகிக்கின்ற இந்த அவசியம் சமூக உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தினால் ஒழிக்கப்படுவது சாத்தியமல்ல, ஆனால் அது தோன்றுகின்ற முறை மட்டுமே

மாற முடியும் என்பது சுய வெளிப்படையாகும். எந்த இயற்கை விதியையும் ஒழிக்க முடியாது. வரலாற்று ரீதியில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் என்ன மாற முடியும் என்றால் இந்த விதிகள் தம்மை வலியுறுத்துகின்ற வடிவம் மட்டுமே மாறும். சமூக உழைப்பின் இடைத் தொடர்பு உழைப்பின் தனிப்பட்ட உற்பத்திப் பொருள்களின் தனிப்பட்ட பரிவர்த்தனையில் இந்த உழைப்பின் அளவு விகித வினியோகம் தன்னை வலியுறுத்துகின்ற வடிவம் துல்லியமாக உற்பத்திப் பொருள்களின் பரிவர்த்தனை மதிப்புதான்.

மதிப்பு விதி எப்படித் தன்னை வலியுறுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டுவதில்தான் துல்லியமாக விஞ்ஞானம் அடங்கியிருக்கிறது. அந்த விதிக்கு முரண்படுவதாகத் தோன்றுகின்ற எல்லா நிகழ்வுகளையும் ஒருவர் ஆரம்பத்திலேயே ''விளக்க'' விரும்பினால் அவர் விஞ்ஞானத்துக்கு முன்னால் விஞ்ஞானத்தை வைக்க வேண்டியிருக்கும். ரிக்கார்டோ மதிப்பைப் பற்றி எழுதியிருக்கின்ற முதல் அத்தியாயத்தில்,[71] சாத்தியமான, இன்னும் வளர்க்கப்பட வேண்டிய கருத்தமைப்புகளை—மதிப்பு விதியுடன் அவை பொருந்துவதை நிரூபிப்பதற்காக — கொடுக்கப்பட்டிருப்பதாக எடுத்துக்கொள்வதே துல்லியமாக அவர் செய்கின்ற தவறாகும்.

மறு பக்கத்தில், நீங்கள் சரியாக அனுமானித்ததைப் போலவே மதிப்பு உறவு என்ற கருத்தமைப்பு எப்பொழுதும் ஒரே மாதிரியாக, அநேகமாகத் தெளிவானதாக, பிரமைகளில் பொதிந்ததாக, அல்லது விஞ்ஞான ரீதியில் அநேகமாகத் திட்டவட்டமானதாக இருந்தது என்பதை அத்தத்துவத்தின் வரலாறு நிச்சயமாக எடுத்துக்காட்டுகிறது. சிந்தனை நிகழ்வுப் போக்கு நிலைமைகளிலிருந்து வளர்ச்சியடைவதால், அது இயற்கை நிகழ்வுப் போக்காக இருப்பதால், உண்மையில் புரிந்து கொள்கின்ற சிந்தனை எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருக்க வேண்டும்; அது சிந்தனைச் செயலை நிறைவேற்றுகின்ற உறுப்பின் வளர்ச்சியை உள்ளிட்ட வளர்ச்சியின் முதிர்ச்சிக்குத் தகுந்தவாறு மட்டுமே வேறுபட முடியும். மற்றவை அனைத்தும் பிதற்றலே.

கொச்சையான பொருளியலாளர் மெய்யான அன்றுடப் பரிவர்த்தனை உறவுகள் மதிப்பின் அளவுகளுடன் நேரடியாக முற்றிருருமை கொண்டிருக்க முடியாது என்பதைச் சிறிதும் புரிந்து கொள்ளவில்லை. a priori* உற்பத்தியை சமூக ரீதியில் உணர்வுபூர்வமாக ஒழுங்குபடுத்தல் இல்லை என்பதில் தான் துல்லியமாக முதலாளித்துவ சமூகத்தின் சாராம்சம் அடங்கியிருக்கிறது. அறிவுபூர்வமானது, இயற்கையிலேயே அவசியமானது குருட்டுத்தனமான சராசரி என்ற முறையில்தான் தன்னை வலியுறுத்துகிறது. கொச்சையான பொருளியலாளர் பொருள்களின் உள் இடை இணைப்பை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, பொருள்கள் தோற்றத்தில் வேறுவிதமாக இருக்கின்றன என்று ஆணவமாக வற்புறுத்தும் பொழுது அவர் ஒரு மாபெரும் கண்டுபிடிப்பைச் செய்துவிட்டதாக நினைக்கிறார். உண்மையில், நான் தோற்றத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கிறேன், அதையே இறுதிநிலையாக எடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று அவர் பெருமையோடு சொல்கிறார். அப்படியானால், விஞ்ஞானம் எதற்கு வேண்டும்?

ஆனால் இந்த விஷயத்துக்கு இன்னொரு பின்னணியும் இருக்கிறது. இடையிணைப்பைப் புரிந்து கொண்டதும் இருக்கின்ற நிலைமைகளின் நிரந்தரமான அவசியத்தைப் பற்றி எல்லாத் தத்துவ ரீதியான நம்பிக்கைகளும்—அவை நடைமுறையில் வீழ்ச்சியடைவதற்கு முன்பே—வீழ்ச்சி அடைந்து விடுகின்றன. ஆகவே இந்த முட்டாள்தனமான குழப்பத்தை நிரந்தரமாக்குவது ஆளும் வர்க்கத்தினரின் நலன்களுக்கு முற்றிலும் உகந்ததே. அரசியல் பொருளாதாரத்தில் சிந்திக்கக் கூடாது என்று கூறுவதைத் தவிர வேறு எவ்விதமான விஞ்ஞானத் துருப்புச் சீட்டும் இல்லாத அடிமைத்தனமான உளறுவாயர்களுக்குக் கூலி கொடுப்பது வேறு எந்த நோக்கத்துக்காக?

ஆனால் satis superque**. தொழிலாளர்களும் சிறு தயாரிப்

---

* மனநிச்சயவாத முறையில்.—ப-ர்.

** இதுவே போதும்.—ப-ர்.

பாளர்களும் வர்த்தகர்களும் என்னுடைய புத்தகத்தைப்* புரிந்து கொள்ளும் பொழுது அதன் தர்க்கத்தை உணருகின்ற பொழுது, நான் எழுதியிருப்பதைப் புரிந்து கொள்ள அதிக மாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது என்று ''அறிவுமிக்க எழுத்தாளர்கள்'' (!) புகார் செய்தால் முதலாளி வர்க்கத் தின் இந்தப் பூசாரிகள் எவ்வளவு கீழே இறங்கிவிட்டார்கள் என்பதையே அது எடுத்துக்காட்டுகிறது....

முதன் முறையாக சுருங்கிய வடிவத்தில் *Die Neue Zeit*, Bd. 2, No. 7, 1901-1902 இதழிலும் குகெல்மனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதங்கள், 1928 என்ற ருஷ்ய மொழிப் புத்தகத்தில் முழுமையாகவும் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி பிரசுரிக்கப்படுகிறது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

* கார்ல் மார்க்ஸ், மூலதனம்.—ப-ர்.

கா. மார்க்ஸ்

நியூயார்க்கிலிருந்த பி. போல்டேக்கு எழுதிய கடிதம்

[லண்டன்], நவம்பர் 23, 1871

....போராட்டத்தில் சோஷலிஸ்டு அல்லது அரை சோஷலிஸ்டுக் குறுங்குழுக்களுக்குப் பதிலாகத் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான அமைப்பை ஏற்படுத்துவதற்காக அகிலம் நிறுவப்பட்டது. அசல் விதிகளும் ஸ்தாபக அறிக்கையும் இதை எடுத்த எடுப்பிலேயே காட்டுகின்றன. மறு பக்கத்தில் வரலாற்று நிகழ்வுப் போக்கு ஏற்கெனவே குறுங்குழுவாதத்தை நொறுக்கியிராவிட்டால் அகிலம் நீடித்திருக்க முடியாது. சோஷலிஸ்டுக் குறுங்குழுவாத வளர்ச்சியும் உண்மையான தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியும் எப்பொழுதுமே ஒன்றுக்கொன்று எதிர்மறை விகிதத்தில் இருக்கின்றன. தொழிலாளி வர்க்கம் சுயேச்சையான வரலாற்று இயக்கத்துக்கு இன்னும் பக்குவமடையாதிருக்கின்ற வரை குறுங்குழுக்கள் (வரலாற்று ரீதியில்) நியாயமானவையே. தொழிலாளி வர்க்கம் இந்தப் பக்குவத்தைப் பெற்ற உடனே எல்லாக் குறுங்குழுக்களும் அடிப்படையிலேயே பிற்போக்காகி விடுகின்றன. எனினும் வரலாற்றில் எல்லா இடங்களிலும் காணப்படுவது அகிலத்தின் வரலாற்றில் மறுபடியும் நடைபெற்றது. எது காலாவதியாகி விட்டதோ அது புதிதாக உருவாக்கப்பட்ட வடிவத்துக்குள் தன்னை நிறுவிக் கொள்வதற்கும் தன்னுடைய நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் முயற்சிக்கிறது.

அகிலத்திற்குள் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான இயக்கத்திற்கு எதிராகத் தம்மை பலப்படுத்திக் கொள்ள முயற்சி செய்த குறுங்குழுக்கள் மற்றும் அமைச்சூர் பரிசோ

தனைகளுக்கு எதிராகப் பொதுக் கவுன்சிலின் தொடர்ச்சியான போராட்டமாகவே அகிலத்தின் வரலாறு இருந்தது. இந்தப் போராட்டம் காங்கிரசுகளில் நடைபெற்றது. ஆனல் பொதுக் கவுன்சிலுக்கும் தனிப்பட்ட பிரிவுகளுக்கும் இடையில் நடைபெற்ற அந்தரங்கமான பேச்சுவார்த்தைகளின் போது அதைக் காட்டிலும் மிக அதிகமாக நடைபெற்றது.

பாரிசில் புரூதோன்வாதிகள் (மியூச்சுவலிஸ்டுகள்)[72] சங்கத்தின் கூட்டு நிறுவகர்களாக இருந்தபடியால், அவர்கள் அங்கே ஆரம்பத்தில் சில வருடங்கள் இயக்கத்தின் தலைமையில் இருந்தது இயற்கையே. அதற்குப் பிறகு அங்கே அவர்களுக்கு எதிரான கூட்டுவாத, நேர்க்காட்சிவாத மற்றும் இதர குழுக்கள் அமைக்கப்பட்டன.

ஜெர்மனியில்—லஸ்ஸால் ஆதரவாளர்களின் கோஷ்டி. அவப்பெயர் பெற்ற ஷ்வைட்ஸருக்கு நானே இரண்டு வருடங்கள் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தேன். லஸ்ஸால் ஆதரவாளர்களின் அமைப்பு ஒரு குறுங்குழுவாத ஸ்தாபனம்; ஆகவே அந்த முறையில் அகிலம் பாடுபட்டு வருகின்ற உண்மையான தொழிலாளர்கள் இயக்கத்தின் ஸ்தாபனத்துக்கு விரோதமானது என்று மறுக்க முடியாத முறையில் நிரூபித்தேன். அவருக்குப் புரியவில்லை. அதற்குக் ''காரணங்கள்'' உண்டு.

அகிலத்திற்குள் "*Alliance de la Démocratie Socialiste*" என்ற பெயரில் தன்னைத் தலைவராகக் கொண்ட இரண்டாவது அகிலத்தை ஏற்படுத்துகின்ற நோக்கத்துடன் ருஷ்யரான பக்கூனின் 1868ம் வருடக் கடைசியில் அகிலத்தில் சேர்ந்தார். எல்லா வகையிலும் தத்துவ அறிவு இல்லாதவரான பக்கூனின் அந்தத் தனி ஸ்தாபனத்திற்கு அகிலத்தின் விஞ்ஞானப் பிரச்சாரத்தைச் செய்கின்ற உரிமை அளிக்கப்பட வேண்டுமென்று கோரினர். அத்தகைய பிரச்சாரத்தை அகிலத்திற்குள் இரண்டாவது அகிலத்தின் விசேஷமான பிரச்சார வேலையாகச் செய்ய வேண்டுமென்று விரும்பினர்.

வலதிலிருந்தும் இடதிலிருந்தும் மேலெழுந்தவாரியாகச் சுரண்டிச் சேர்க்கப்பட்ட அவியல்தான் அவருடைய செயல் திட்டம்: வர்க்கங்களின் சமத்துவம் (!), மரபுரிமையை

ஒழித்தலைச் சமூக இயக்கத்தின் தொடக்க நிலையாகவும் (இது சான்-சிமோன்வாதப் பிதற்றல்), நாத்திகவாகத்தை உறுப்பினர்களுக்கு வற்புறுத்தும் கோட்பாடாகவும், இதரவை, அரசியல் இயக்கத்திலிருந்து ஒதுங்கியிருப்பதை (புரூதோன்வாதம்) பிரதான கோட்பாடாகவும் கொண்டிருந்தது.

அவருடைய குழந்தை அரிச்சுவடி தொழிலாளர் இயக்கத்துக்கு அவசியமான உண்மையான நிலைமைகள் இன்னும் குறைவாகவே வளர்ச்சி அடைந்துள்ள இத்தாலியிலும் ஸ்பெயினிலும் ஆதரவைப் பெற்றது (அங்கே இன்னும் ஓரளவுக்குப் பிடிப்பு இருக்கிறது). அதே போல லத்தீன் சுவிட்சர்லாந்திலும் பெல்ஜியத்திலும் சில அகம்பாவமான, பேராசை கொண்ட, ஓட்டைச் சித்தாந்தவாதிகள் மத்தியில் ஆதரவைப் பெற்றது.

திரு. பக்கூனினுக்குக் கோட்பாடு (புரூதோன், சான்-சிமோன் மற்றும் இதரர்களிடமிருந்து எடுத்துக்கொண்ட பகுதிகளைக் கொண்டு அவர் தயாரித்திருக்கும் சரக்கு) என்பது இரண்டாந்தரமான விஷயமாகவே, தன்னுடைய தற்பெருமையை வற்புறுத்துவதற்குரிய சாதனமாக மட்டுமே இருந்தது. இன்றும் அப்படித்தான் இருக்கிறது. தத்துவாசிரியர் என்ற முறையில் அவர் ஒரு பூஜ்யம் என்ற போதிலும் சதிகாரர் என்ற முறையில் அவர் சக்தி வாய்ந்தவர்.

பொதுக் கவுன்சில் பல வருட காலம் அவருடைய சதியை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது (பிரெஞ்சுப் புரூதோன்வாதிகள், குறிப்பாக பிரான்சின் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரையிலும் அதற்கு ஆதரவு கொடுத்தார்கள்). கடைசியில் பொதுக் கவுன்சில் மாநாட்டுத் தீர்மானங்கள் 1, 2, மற்றும் 3, IX, XVI மற்றும் XVII மூலம் நீண்ட காலமாகத் தயாரிக்கப்பட்டு வந்த எதிரடியைக் கொடுத்தது.[73]

பொதுக் கவுன்சில் ஐரோப்பாவில் எதை எதிர்த்துப் போராடுகிறதோ அதை அமெரிக்காவில் ஆதரிக்காது என்று எடுத்துக் கூறுவது அவசியமல்ல. எல்லா வகையான குறுங்குழுவாதத்துக்கும் அமெச்சூர் கோஷ்டிகளுக்கும் முடிவு கட்டுவதற்கும், அவசியமேற்பட்டால் அவற்றை வெளியேற்று

வதற்கும் தீர்மானங்கள் 1, 2, 3 மற்றும் 9 இப்பொழுது நியூயார்க் கமிட்டிக்குச் சட்டபூர்வமான ஆயுதங்களைக் கொடுக்கின்றன...

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கம் இந்த வர்க்கத்துக்கு அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதைத் தன்னுடைய இறுதிக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. இது தொழிலாளி வர்க்கம் ஸ்தாபன ரீதியாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஏற்கெனவே வளர்ச்சியடைந்திருப்பதையும் அதன் பொருளாதாரப் போராட்டத்திலிருந்தே தோன்றியிருப்பதையும் அவசியமாக்குவது இயற்கையே.

எனினும், மறுபக்கத்தில், தொழிலாளி வர்க்கம் ஒரு வர்க்கம் என்ற முறையில் ஆளும் வர்க்கங்களை எதிர்த்து நடத்துகின்ற, அவை மீது வெளியிலிருந்து நிர்ப்பந்தம் கொண்டு வர முயற்சிக்கின்ற ஒவ்வொரு இயக்கமும் அரசியல் இயக்கமே. உதாரணமாக, ஒரு தொழிற்சாலையில் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழில் துறையில் கூட, ஒரு நாளில் வேலை செய்யும் நேரத்தைக் குறைப்பதற்காகத் தனிப்பட்ட முதலாளிகள் மீது வேலைநிறுத்தங்கள், இதரவைகளின் மூலம் நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருகின்ற முயற்சி முற்றிலும் பொருளாதார இயக்கமே. மறு பக்கத்தில், எட்டு மணி நேர வேலை நாள், இதரவை பற்றிய சட்டத்தை இயற்றும்படி நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்ற இயக்கம் அரசியல் இயக்கமாகும். இவ்வாறு தொழிலாளர்களின் தனித்தனியான பொருளாதார இயக்கங்களிலிருந்து எல்லா இடங்களிலும் ஒரு அரசியல் இயக்கம், அதாவது பொதுவான வடிவத்தில், பொதுவான சமூக ரீதியில் கட்டாயப்படுத்தும் சக்தியைக் கொண்டிருக்கும் வடிவத்தில் தன்னுடைய நலன்களை நிர்ப்பந்தமாக ஏற்படுத்துகின்ற வர்க்கத்தின் இயக்கம் வளர்ச்சி அடைகிறது. இந்த இயக்கங்கள் ஒரு அளவுக்கு முன்பே ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனத்தை முன்னனுமானித்தாலும் அவை சம அளவுக்கு இந்த ஸ்தாபனத்தை வளர்க்கின்ற சாதனங்களே.

தொழிலாளி வர்க்கம் கூட்டு ஆட்சிக்கு, அதாவது ஆளும் வர்க்கங்களின் அரசியல் ஆட்சிக்கு எதிராகத் தீர்மானகர

மான தாக்குதலே நடத்தக் கூடிய அளவுக்குப் போதுமான ஸ்தாபன ரீதியான வளர்ச்சியை இன்னும் பெறுதிருக்கின்ற இடங்களில் எப்படியாவது இந்த ஆட்சிக்கு எதிராகத் தொடர்ச்சியான கிளர்ச்சியின் மூலம் மற்றும் ஆளும் வர்க்கங்களின் கொள்கைக்கு எதிரான விரோதமான அணுகுமுறையின் மூலம் தொழிலாளி வர்க்கத்துக்கு இதற்குத் தேவையான பயிற்சியைக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் தொழிலாளி வர்க்கம் அவற்றின் கைகளில் ஒரு விளையாட்டுச் சாமானைத்தான் இருக்கும். இதை பிரான்சில் செப்டெம்பர் மாதத்தில் நடைபெற்ற புரட்சி[74] எடுத்துக்காட்டியது. இங்கிலாந்தில் திரு கிளாட்ஸ்டன், கம்பெனியினர் இன்று வரை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் விளையாட்டும் ஓரளவுக்கு இதையே நிரூபிக்கிறது.

Briefe und Auszüge aus Briefen von Joh. Phil. Becker, Jos. Dietzgen, Friedrich Engels, Karl Marx u. A. an F. A. Sorge und Andere, Stuttgart, 1906 என்னும் புத்தகத்தில் முதல் தடவையாகச் சுருக்கமாகவும் கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, முதல் பதிப்பு, 26ம் தொகுதி, 1935இல் முழுமையாகவும் வெளியிடப்பட்டது

கையெழுத்துப்படியுடனும் புத்தகத்துடனும் சரிபார்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

மிலானிலிருந்த தி. குனே வுக்கு எழுதிய கடிதம்

லண்டன், ஜனவரி 24, 1872

...1868ம் வருடம் வரையிலும் அகிலத்துக்கு எதிராகச் சதி செய்து கொண்டிருந்த பக்கூனின் பெர்ன் சமாதானக் காங்கிரசில்[75] படுதோல்வி அடைந்த பிறகு அகிலத்தில் சேர்ந்தார். உடனே உள்ளேயிருந்து பொதுக் கவுன்சிலுக்கு எதிராகத் தமது சதிகளைத் தொடங்கினர். பக்கூனின் தனக் கென்று பிரத்யேகமான தத்துவத்தை—புரூதோன்வாதமும் கம்யூனிசமும் அடங்கிய கலப்படத்தை—வைத்துக் கொண் டிருக்கிறார். முன்னதைப் பொறுத்த வரை முக்கியமான விஷ யம் என்னவென்றால் மூலதனத்தை, அதாவது சமூக வளர்ச்சி யின் விளைவாக முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர் களுக்கும் இடையில் உருவாகியிருக்கின்ற வர்க்க முரணி யல்பை ஒழிக்கப்பட வேண்டிய முக்கியமான தீமையாகக் கருதாமல் அரசே அத்தகைய தீமை என்று அவர் கருதுகிறார். அரசு அதிகாரம் என்பது ஆளும் வர்க்கங்கள்—நிலவுடை மையாளர்களும் முதலாளிகளும்—தங்களுடைய சமூகச் சலுகைகளைப் பாதுகாப்பதற்குத் தமக்கென்று ஏற்படுத்திக் கொண்டுள்ள அமைப்பு முறை என்பதைக் காட்டிலும் கூடு தலான வேறு ஒன்றல்ல என்ற நம்முடைய கருத்தை சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களில் மிகப் பெரிய பகுதியினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பக்கூனின் அரசுதான் மூலதனத்தைத் தோற்றுவித்திருக்கிறது, அரசின் தயவில் மட் டுமே முதலாளி மூலதனத்தைப் பெற்றிருக்கிறார் என்று கூறு கிறார். ஆகவே அரசுதான் முக்கியமான தீமை, முதலில் அர சைத்தான் ஒழிக்க வேண்டும், பிறகு மூலதனம் தானாகவே

அழிந்துவிடும் என்கிறார். இதற்கு மாறாக நாம் பின்வருமாறு கூறுகிறோம்: மூலதனத்தை—உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் ஒரு சிலரிடம் குவிந்திருப்பதை—ஒழிக்க வேண்டும்; அரசு தானாகவே அழிந்துவிடும். இந்த வேறுபாடு முக்கியமானதாகும். ஏற்கெனவே சமூகப் புரட்சி ஏற்பட்டால் தவிர அரசை ஒழிப்பதென்பது பிதற்றலே; மூலதனத்தை ஒழிப்பதே நுல்லியமான முறையில் சமூகப் புரட்சி ஆகும். அது மொத்த உற்பத்தி முறையிலும் மாற்றத்தை உள்ளடக்கியிருக்கிறது. பக்கூனினுக்கு அரசே முக்கியமானதீமை என்பதால் அரசை, அதாவது எந்த அரசையும்—அது குடியரசாக, முடியரசாக அல்லது வேறு எந்த ஒன்றாக இருந்தாலும்—உயிரோடு வைத்திருக்கக் கூடிய எதையும் செய்யக் கூடாது. ஆகவே எல்லா அரசியலிலிருந்தும் முற்றிலும் ஒதுங்கி நிற்க வேண்டும். ஒரு அரசியல் நடவடிக்கையை நிறைவேற்றுவது—குறிப்பாக, ஒரு தேர்தலில் பங்கெடுப்பது—இந்தக் கோட்பாட்டுக்கு துரோகம் செய்வதாகும். பிரச்சாரம் செய்ய வேண்டும், அரசு மீது வசவுகளைக் கொட்ட வேண்டும், ஸ்தாபனங்களைக் கட்ட வேண்டும், எல்லாத் தொழிலாளர்களும் (ஆகவே பெரும்பான்மையினர்) வென்றெடுக்கப்பட்ட பிறகு எல்லா அதிகார உறுப்புகளையும் அகற்ற வேண்டும், அரசை ஒழிக்க வேண்டும், அதனிடத்தில் அகிலத்தின் ஸ்தாபனத்தை நிறுவ வேண்டும். இந்த மகத்தான நடவடிக்கைக்கு சமூகக் கலைப்பு என்று பெயர். இதிலிருந்து புதிய ஊழி தொடங்குகிறது.

இவை அனைத்துமே மிகவும் தீவிரமான கருத்துக்களாக ஒலிக்கின்றன; மேலும் இவை மிகவும் சுலபமாக இருப்பதால் இவற்றை ஐந்து நிமிடங்களில் உருப்போட்டுவிட முடியும். அதனால்தான் பக்கூனினுடைய தத்துவம் இத்தாலியிலும் ஸ்பெயினிலும் இளம் வழக்குரைஞர்கள், டாக்டர்கள் மற்றும் இதர கோட்பாட்டுவாதிகளின் வேகமான ஆதரவைப் பெற்றிருக்கிறது. ஆனால் நாடுகளின் பொது விவகாரங்கள் தங்களுடைய சொந்த அக்கறைக்குரிய விவகாரங்கள் அல்ல என்று சொல்லப்படுவதைப் பெருந்திரளான தொழிலாளர்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள்

இயற்கையாகவே அரசியல் சிந்தனை உடையவர்கள். அரசியலைக் கைவிட வேண்டும் என்று அவர்களை நம்ப வைப்பதற்கு யாராவது முயற்சி செய்தால் அவர் கடைசியில் தன்னந்தனியாக விடப்படுவார். எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்க வேண்டும் என்று தொழிலாளர்களுக்குப் போதிப்பது மதகுருக்களிடம் அல்லது முதலாளி வர்க்கக் குடியரசுவாதிகளிடம் போய் சேரும் படி அவர்களை விரட்டுவதாகும்.

அகிலம் அரசியல் போராட்டத்துக்காக அமைக்கப்படவில்லை, சமூகக் கலைப்பு நடைபெற்றவுடன் பழைய அரசின் இடத்தைப் பெறுவதற்காகவே அது அமைக்கப்பட்டிருக்கிறது என்று பக்கூனின் கூறுகிறார். ஆகவே எதிர்கால சமூகத்தைப் பற்றிய பக்கூனின்வாத இலட்சியத்துக்கு அது இயன்ற அளவுக்கு மிகவும் நெருங்கியிருக்க வேண்டும். இந்த சமூகத்தில், எல்லாவற்றுக்கும் மேலாக, அதிகாரம் என்பது இருக்காது; ஏனென்றால் அதிகாரம்—அரசு—முற்றிலும் தீமை. (கடைசிக் கட்டத்தில் முடிவுகள் எடுக்கக் கூடிய சித்தம் என்பது இல்லாமல், ஒற்றை நிர்வாகம் என்பது இல்லாமல் இந்த நபர்கள் தொழிற்சாலைகளை எப்படி நடத்தப் போகிறார்கள், இரயில்வேக்களை எப்படி இயக்கப் போகிறார்கள் அல்லது கப்பலை எப்படி ஓட்டப் போகிறார்கள் என்பதை அவர்கள் நமக்குத் தெரிவிப்பதில்லை.) சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினருடைய அதிகாரமும் நின்று விடும். ஒவ்வொரு தனி நபரும் ஒவ்வொரு சமூகப் பிரிவும் சுயாட்சியைக் கொண்டிருக்கும். ஆனால் ஒரு சமூகத்தில் இரண்டு நபர்கள் மட்டுமே இருந்தாலும் அதில் ஒவ்வொருவரும் தன்னுடைய சுயாட்சியில் சிறிதளவையாவது விட்டுக் கொடுக்காமல் எந்தச் சமூகமும் எப்படிச் சாத்தியம் என்பதைப் பற்றியும் பக்கூனின் மறுபடியும் மௌனம் சாதிக்கிறார்.

ஆகவே அகிலமும் இந்த முன்மாதிரிக்குத் தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவும்—ஒவ்வொரு பிரிவில் ஒவ்வொரு தனி நபரும்—சுயாட்சியைக் கொண்டிருக்கும். பொதுக் கவுன்சிலிடம்—அதற்கும்கூட மனச்

சோர்வை உண்டாக்குகின்ற—பெருங்கேடான அதிகாரத்தை வழங்கும் பாஸெல் தீர்மானங்கள்[76] நாசமாய்ப் போகட்டும்! இந்த அதிகாரம் விருப்பபூர்வமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது ஒழிய வேண்டும்—ஏனென்றால் அது அதிகாரம்!

இந்த மோசடியின் முக்கியமான கருத்துக்களை இங்கே சுருக்கமாகக் கூறியிருக்கிறேன். ஆனால் இந்த பாஸெல் தீர்மானங்களின் கர்த்தாக்கள் யார்? ஆம். திரு. பக்கூனினும் அவர் கம்பெனியினரும்தான்!

பொதுக் கவுன்சிலை ஜெனீவாவுக்கு மாற்றுகின்ற தங்களுடைய திட்டம், அதாவது அதைக் கைப்பற்றுகின்ற திட்டம் நிறைவேறுது என்பதை இந்த கனவான்கள் பாஸெல் காங்கிரசில் கண்ட பொழுது அவர்கள் வேறு உபாயத்தைப் பின்பற்றினார்கள். அவர்கள் சோஷலிஸ்ட் ஜனநாயகக் கூட்டணியை, பெரிய அகிலத்திற்கு உள்ளே ஒரு சர்வதேசச் சங்கத்தை நிறுவினர்கள். அதற்காக அவர்கள் கூறிய பொய்ச்சாக்கை நீங்கள் இன்று மறுபடியும் இத்தாலிய பக்கூனின்வாதப் பத்திரிகைகளில், உதாரணமாக, *Proletario* மற்றும் *Gazzettino Rosa*[77] ஆகியவற்றில் பார்க்க முடியும்: உணர்ச்சியற்ற, மெதுவாக இயங்குகின்ற வடக்குப் பிரதேசத்தினரைக் காட்டிலும் உணர்ச்சி முறுக்குடைய லத்தீன் இனத்தவர்களுக்கு இன்னும் தீவிரமான செயல்திட்டம் அவசியம். இக்கச்சிதமான, பரிதாபகரமான திட்டம் பொதுக் குழுவின் எதிர்ப்பின் காரணமாக முறியடிக்கப்பட்டது. அது அகிலத்திற்கு உள்ளே ஒரு தனியான சர்வதேச சங்கத்தைச் சகித்துக் கொள்ள இயலாது என்பது உண்மையே. அகிலத்தின் செயல்திட்டத்துக்கு பதிலாக பக்கூனினுடைய செயல்திட்டத்தை ஏற்படுத்துவதற்கு பக்கூனினும் அவருடைய கோஷ்டியினரும் செய்த முயற்சிகளின் தொடர்பாக ஒவ்வொரு உருவத்திலும் வடிவத்திலும் அது மறுபடியும் வெளிப்பட்டிருக்கிறது. மறு பக்கத்தில் ஜூல் ஃபாவ்ர் மற்றும் பிஸ்மார்க் முதல் மாஜினி வரை பிற்போக்காளர்கள் அகிலத்தைத் தாக்குகின்ற பிரச்சினை என்றால் எப்பொழுதுமே பக்கூனின்வாதிகளின் சாரமில்லாத வாய்ச்சவடாலைத் துல்லியமாக எதிர்த்தார்கள். அதனால்தான் மாஜினி மற்றும்

பக்கூனினுக்கு எதிராக டிசம்பர் 5ந் தேதி நான் அறிக்கை வெளியிடுவது அவசியமாயிற்று. அந்த அறிக்கை *Gazzettino Rosa*விலும் வெளியிடப்பட்டது.

பக்கூனின் கோஷ்டியின் கரு ஜுராவில் உள்ள சில டஜன் நபர்களே. அவர்களுடைய ஆதரவாளர்களின் மொத்த எண்ணிக்கை 200 தொழிலாளர்களுக்கு மேல் இருக்காது. அவர்களுடைய முன்னணிப்படை இத்தாலியின் இளம் வழக்குரைஞர்கள், டாக்டர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள்; இப்பொழுது எங்குமே இவர்கள்தான் இத்தாலியத் தொழிலாளர்களுக்காகப் பேசுகிறார்கள். இந்த ரகத்தைச் சேர்ந்த சிலர் பார்செலோனவிலும் மாட்ரிட்டிலும் இருக்கிறார்கள்; அவ்வப்பொழுது லியோனில் அல்லது பிரஸ்ஸல்சில் இவர்களில் யாராவது ஒருவரை—அவர் அநேகமாகத் தொழிலாளியாக இருக்க மாட்டார்—நீங்கள் பார்க்க முடியும். இங்கே இந்த ரகத்தின் பிரதிநிதியாக ஒருவர்—ரொபேன்—இருக்கிறார்.

சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தினுல் காங்கிரசைக் கூட்ட முடியவில்லை, அதற்கு பதிலாக நடத்தப்பட்ட மகாநாடு அவர்களுக்குப் போலிச் சாக்காக உதவியது. ஸ்விட்சர்லாந்தில் இருந்த பிரெஞ்சு அகதிகளில் மிகவும் அதிகமானவர்கள் (புரூதோன்வாதிகளாக இருந்ததனுல்) பக்கூனின் வாதிகளுடன் ஒத்த உணர்ச்சி உடையவர்களாக இருந்ததனுலும் மற்றும் சொந்தக் காரணங்களுக்காகவும் அவர்கள் தரப்பில் சேர்ந்து கொண்டபடியால் அவர்கள் தங்களுடைய இயக்கத்தைத் தொடங்கினர்கள். அதிருப்தியுடைய சிறுபான்மையினரையும் அங்கீகரிக்கப்படாத மேதைகளையும் அகிலத்தில் எங்குமே பார்க்கக் கூடும் என்பது இயற்கையே. இவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அது காரணமில்லாமல் அல்ல. தற்பொழுது அவர்களுடைய போராடும் பலம் பின்வருமாறு:

1) பக்கூனின்—இந்த இயக்கத்தின் நெப்போலியன்.

2) 200 ஜுராவாசிகளும் பிரெஞ்சுப் பிரிவின் 40-50 உறுப்பினர்களும் (ஜினீவாவில் அகதிகளாக இருப்பவர்கள்).

3) பிரஸ்ஸல்சில் Libertéஇன்[78] ஆசிரியர் ஹின்ஸ்—ஆனால் அவர் பகிரங்கமாக இவர்களை ஆதரித்து வருவதில்லை.

4) இங்கே 1871ம் வருட பிரெஞ்சுப் பிரிவின்[79] மிச்சங்கள்; நாம் இதை ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை, இது ஏற்கெனவே மூன்று பரஸ்பர விரோதம் உடைய பகுதிகளாகப் பிரிந்துவிட்டது; பிறகு ஹெர் வான் ஷ்வைட்ஸரின் ரகத்தைச் சேர்ந்த 20 லஸ்ஸால்வாதிகள். இவர்கள் அனைவருமே (அகிலத்திலிருந்து மொத்தமாக விலகிக்கொள்வதென்ற அவர்களுடைய பிரேரணையின் விளைவாக) ஜெர்மன் பிரிவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். அவர்கள் மிகவும் அதிகமான மத்தியப்படுத்தலையும் கட்டிறுக்கமான ஸ்தாபனத்தையும் ஆதரிப்பதால் அராஜகவாதிகள் மற்றும் சுயாட்சிவாதிகளின் கழகத்தில் நன்கு பொருந்துகிறார்கள்.

5) ஸ்பெயினில் பக்கூனினுடைய தனிப்பட்ட நண்பர்களும் அவருடைய ஆதரவாளர்களும்; இவர்கள் தொழிலாளர்களிடம்—குறிப்பாக, பார்செலோனாவில்—நல்ல செல்வாக்கு உடையவர்கள், குறைந்த பட்சம் தத்துவ ரீதியிலாவது. ஆனால் ஸ்பெயின் நாட்டினர் ஸ்தாபனத்தில் அதிகமான அக்கறை உள்ளவர்கள், மற்றவர்களிடம் அது இல்லையென்றால் உடனே அதை சுவனித்து விடுவார்கள். பக்கூனின் இங்கே எந்த அளவுக்கு வெற்றியை எதிர்பார்க்க முடியும் என்பது ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஸ்பெயின் காங்கிரஸ் வரை தெரியாது. அங்கே தொழிலாளர்கள் ஏராளமாக இருப்பார்கள் என்பதால் நான் கவலையடையக் காரணமில்லை.

6) கடைசியாக, இத்தாலியில் துரீன், பொலோன்யா மற்றும் ஜிர்ஜென்டி பிரிவுகள் எனக்குத் தெரிந்த வரையிலும் காங்கிரசை முன்னதாகவே கூட்டுகின்ற பிரேரணைக்கு ஆதரவை அறிவித்திருக்கின்றன. இருபது இத்தாலியப் பிரிவுகள் இப்படி அறிவித்திருப்பதாக பக்கூனின்வாதப் பத்திரிகைகள் சொல்கின்றன. எனக்கு அவற்றைப் பற்றித் தெரியாது. எப்படி இருந்தாலும், அநேகமாக எங்குமே பக்கூனினுடைய நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் தலைமை இருக்கிறது, இவர்கள் பயங்கரமான கூச்சலை எழுப்பிக் கொண்

டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகமல்ல என்பது நெருங்கிப் பார்க்கும் பொழுது அநேகமாகத் தெரிய வரும். ஏனென்றால் இத்தாலியத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இன்னும் மாஜினிவாதிகளே; அங்கே அகிலத்தின் கொள்கை அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்கும் கொள்கையாக இருக்கின்ற வரை அப்படியே நீடிப்பார்கள்.

எப்படி இருந்தாலும் தற்பொழுது இத்தாலியில் பக்கூனின் கோஷ்டிதான் அகிலத்தில் முக்கியமாக இருக்கிறது. அதைப் பற்றிப் புகார் செய்கின்ற உத்தேசம் பொதுக் கவுன்சிலுக்குக் கிடையாது. இத்தாலியர்கள் விரும்புகின்ற எல்லா அசட்டுத்தனங்களையும் செய்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு; பொதுக் கவுன்சில் சமாதான பூர்வமான விவாதம் என்ற முறையில் மட்டுமே அவர்களை எதிர்க்கும். இந்த நபர்களும் ஜூராஸ்ஸிய அர்த்தத்தில் ஒரு காங்கிரசுக்குத் தங்களுடைய ஆதரவை அறிவிப்பதற்கு உரிமை உடையவர்களே. ஆனால் என்ன இருந்தாலும் சற்று முன்பே இணைப்புப் பெற்ற, இன்னும் எதையும் அறிந்திராத பிரிவுகள் இப்படிப்பட்ட விவகாரத்தில் உடனே ஒரு தரப்பைக் குறிப்பாக, இத்தகராறில் சம்பந்தப்பட்டிருக்கின்ற இரு தரப்பினருடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு முன்னரே ஆதரிப்பது மிகவும் விசித்திரமே! இந்த விவகாரத்தைப் பற்றி முழு உண்மையை நான் தூரின் பிரிவினருக்குத் தெரிவித்திருக்கிறேன்; இதைப் போன்ற அறிவிப்புகளை வெளியிட்ட மற்ற பிரிவுகள் குறித்தும் இதையே நான் செய்ய விருக்கிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட ஒவ்வொரு அறிவிப்பும் சுற்றறிக்கையில்[80] பொதுக் கவுன்சிலுக்கு எதிராகச் சொல்லப்பட்டிருக்கின்ற தவறான குற்றச்சாட்டுகளுக்கும் பொய்களுக்கும் ஆதரவு கொடுப்பதாகும். பொதுக் கவுன்சில் இந்த விவகாரத்தைப் பற்றி விரைவில் தன்னுடைய சுற்றறிக்கையை வெளியிடும். இச்சுற்றறிக்கை வெளியாவதற்குள் மிலான் பிரிவு அத்தகைய அறிவிப்பை வெளியிடாமல் நீங்கள் தடுக்க முடியுமானால் எம் விருப்பங்கள் அனைத்தையும் நீங்கள் நிறைவேற்றியதாகும்.

இதில் அதிகமான வேடிக்கை என்னவென்றால் ஜூரா வாசிகளுக்கு ஆதரவு கொடுக்கின்ற, ஆகவே இங்கே எங்கள் மீது சர்வாதிகாரக் குற்றம் சாட்டுகின்ற அதே துரீன் பிரிவு, துரீனில் உள்ள Federazione Operaia[81] என்ற போட்டிப் பிரிவின் மீது பொதுக் கவுன்சில் இதற்கு முன்பு ஒருபோதும் எடுத்திராத சர்வாதிகார நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், *Ficcanaso*வைச்[82] சேர்ந்த பெகேலியை—அவர் அகிலத்தைச் சேர்ந்தவரே அல்ல என்றாலும்—வெளியேற்ற வேண்டும், இதரவை என்று இப்பொழுது திடீரென்று கோருகிறது. அதிலும் Federazione Operaia அதைப் பற்றி என்ன சொல்லப் போகிறது என்பதைக் கூட நாங்கள் தெரிந்து கொள்வதற்கு முன்பே இவை அனைத்தையும் செய்ய வேண்டும்!

கடந்த திங்கட்கிழமையன்று நான் உங்களுக்கு ஜூரா சுற்றறிக்கையுடன் *Révolution Sociale*[83], ஜினீவா *Egalité*இன்[84] பிரதி (ஜூரா நபர்களைக் காட்டிலும் இருபது மடங்கு தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஜினீவா பெடரல் கமிட்டி[85] கொடுத்த பதில் பிரசுரிக்கப்பட்ட பிரதிகள் ஒன்று கூட என்னிடம் இல்லாதது துரதிர்ஷ்டமே) மற்றும் *Volksstaat* இன்[86] ஒரு இதழ்—இந்த விவகாரத்தைப் பற்றி ஜெர்மனியில் உள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்த இதழ் உங்களுக்குத் தெரிவிக்கும்—ஆகியவற்றை அனுப்பினேன். 60 ஸ்தலங்களிலிருந்து 120 பிரதிநிதிகள் பங்கு கொண்ட சாக்ஸன் பிராந்தியக் காங்கிரஸ் ஏகமனதாகப் பொதுக் கவுன்சிலுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது[87].

பெல்ஜியக் காங்கிரஸ் (டிசம்பர் 25 — 26) விதிமுறைகளைத் திருத்த வேண்டும், ஆனால் அதை முறையான காங்கிரசில் (செப்டெம்பரில்) செய்ய வேண்டும் எனக் கோருகிறது.[88] பிரான்சிலிருந்து ஒப்புதலைத் தெரிவிக்கின்ற அறிக்கைகள் நாள்தோறும் எமக்கு வந்து கொண்டிருக்கின்றன. இங்கே, இங்கிலாந்தில் இந்த சூழ்ச்சிகளுக்கு எத்தகைய ஆதரவும் கிடைக்கவில்லை என்பது உண்மையே. தன்முனைப்புடைய சூழ்ச்சிக்காரர்கள் ஒரு சிலரைத் திருப்தி செய்வதற்காகப் பொதுக் கவுன்சில் ஒரு விசேஷ காங்கிரசைக் கூட்

டாது என்பது உறுதி. இந்த கனவான்கள் சட்ட வரையறை களுக்குள் இருக்கின்ற வரை அவர்கள் விருப்பம் போல நடந்து கொள்வதற்குப் பொதுக் கவுன்சில் மகிழ்ச்சியோடு அனுமதிக்கும். பல்வேறு ரகங்களைச் சேர்ந்த இந்தச் சக்தி யினரின் கூட்டணி வெகு சீக்கிரத்தில் உடையும்; ஆனால் அவர்கள் விதிமுறைகளுக்கு அல்லது காங்கிரஸ் தீர்மானங் களுக்கு விரோதமாக ஏதாவது செய்யத் தொடங்கிய உடனே பொதுக் கவுன்சில் தன்னுடைய கடமையைச் செய் யும்.

அகிலத்தை எதிர்த்துப் பொதுவான கூக்குரல் எழுப்பப் படுகின்ற அதே நேரத்தில் இந்த நபர்கள் தங்களுடைய சதியைத் தொடங்கியிருக்கிறார்கள் என்ற உண்மை குறித்து நீங்கள் சிந்தித்தால் இந்த விளையாட்டில் சர்வதேசப் போலீஸ் உளவாளிகளுக்குப் பங்கு இருக்க வேண்டும் என்று முடிவு செய்யாதிருக்க முடியாது. அதுதான் உண்மை. பெஸி யேரில் ஜினீவா பக்கூனின்வாதிகள் மத்திய போலீஸ் கமிஷ னரை* தங்களுடைய நிருபராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் கள். லியோனிலிருந்து அல்போர் ரிஷார் மற்றும் லெப்லான் என்ற பெயர்களைக் கொண்ட முக்கியமான பக்கூனின்வாதி கள் இங்கே வந்திருந்தார்கள். அவர்கள் ஷோல் என்ற தொழிலாளியை (அவரும் லியோனைச் சேர்ந்தவர்தான்) சந் தித்த பொழுது தியேரைத் தூக்கியெறிவதற்கு ஒரே வழி பிரெஞ்சு அரியணையில் போனப்பார்ட்டை மறுபடியும் அமர்த்துவதே என்று கூறினர்கள். போனப்பார்ட் மறுவரு கைக்கு ஆதரவாக அகதிகள் மத்தியில் பிரச்சாரம் நடத்து வதற்காக அவர்கள் போனப்பார்ட் பணத்தில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள்! இந்த கனவான்கள் இதைத்தான் அரசி யலிலிருந்து ஒதுங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள்! பெர்லினில் பிஸ்மார்க்கின் நிதி உதவியினால் நடத்தப்பட்டுவருகின்ற *Neuer Social-Demokrat*[89] இதே பாட்டைப் பாடுகிறது. இதில் ருஷ்யப் போலீஸ் எந்த அளவுக்கு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை நான் விவாதிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை

* புஸ்கே.—ப-ர்.

யாக விடுக்கிறேன்; பக்கூனின் நெச்சாயெவ் விவகாரத்தில் ஆழமாக சம்பந்தப்பட்டிருந்தார் (அவர் இதை மறுக்கிறார் என்பது உண்மையே; ஆனால் ருஷ்ய மூல ஆவணங்கள் எங்களிடம் இருக்கின்றன, மார்க்சுக்கும் எனக்கும் ருஷ்ய மொழி தெரியுமாதலால் அவர் எங்களை ஏமாற்ற முடியாது).[90] நெச்சாயெவ் ருஷ்ய போலீஸ் உளவாளியாக இருக்க வேண்டும் அல்லது ஏதோ அப்படி நடந்திருக்க வேண்டும். மேலும் பக்கூனினுடைய ருஷ்ய நண்பர்கள் மத்தியில் சந்தேகத்துக்குரிய பல ரகங்களையும் சேர்ந்த நபர்கள் இருக்கிறார்கள்.

நீங்கள் வேலையை இழந்துவிட்டதைப் பற்றி நான் மிகவும் வருத்தமடைகிறேன். அப்படி ஏற்படக் கூடிய எந்தக் காரியத்திலும் நீங்கள் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு பகிரங்கமான சொற்பொழிவுகளின் மூலம் ஏற்படக் கூடிய சிறு விளைவைக் காட்டிலும் நீங்கள் மிலானில் இருப்பது மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டது, இரகசியமாக இருப்பதனால் கூட அதிகமான காரியங்களை நிறைவேற்ற முடியும், இதரவை என்று நான் உங்களுக்கு வற்புறுத்தி எழுதியிருந்தேன். உங்களுக்கு மொழியெர்ப்புகள், இதரவைகளை. ஏற்பாடு செய்வதன் மூலம் நான் உங்களுக்கு உதவி செய்ய முடியுமானால் அதை மிகவும் மதிழ்ச்சியோடு செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். எந்த மொழிகளிலிருந்து எந்தெந்த மொழிகளுக்கு நீங்கள் மொழிபெயர்க்க முடியும் என்பதையும் நான் எப்படி உதவி செய்ய முடியும் என்பதைப் பற்றியும் எனக்குத் தெரிவியுங்கள்.

ஆகவே அந்த போலீஸ் பன்றிகள் என்னுடைய புகைப்படத்தையும் திருடியிருக்கிறார்கள். நான் உங்களுக்காக இன்னொரு படத்தை அனுப்பியிருக்கிறேன்; உங்கள் புகைப்படங்களில் இரண்டை அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அதில் ஒரு புகைப்படம் செல்வி மார்க்ஸ் தன் தகப்பனுடைய புகைப்படம் ஒன்றை உங்களுக்கு கொடுக்கும்படி செய்வதற்கு உதவும் (அவருடைய நல்ல புகைப்படங்களில் சில இன்னும் இருக்கின்ற ஒரே நபர் அந்தப் பெண்மணியே).

பக்கூனினுடன் தொடர்புடைய எல்லோரிடமும் தாங்கள் கவனத்தோடிருக்க வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒன்று கூடிச் சதிசெய்வது இத்தகைய குறுங்குழுக்கள் அனைத்திலும் உண்டு. அவர்களிடம் நீங்கள் தெரிவிக்கக் கூடிய எந்தத் தகவலும் உடனே பக்கூனினை எட்டிவிடும் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மற்றும் அவை போன்றவை வெறும் முதலாளி வர்க்கத் தப்பெண்ணங்களே, ஒரு உண்மையான புரட்சிக்காரன் தன்னுடைய இலட்சிய முன்னேற்றத்துக்கு அத்தகைய வாக்குறுதிகளைப்பற்றி அலட்சியமாக இருக்க வேண்டும் என்பது அவருடைய அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். ருஷ்யாவில் அவர் இதை பகிரங்கமாகக் கூறுகிறார், மேற்கு ஐரோப்பாவில் இது இரகசியம்.

கூடுமான விரைவில் கடிதம் எழுதுங்கள். மிலான் பிரிவு மற்ற இத்தாலியப் பிரிவுகளின் கூட்டிசையில் சேர்ந்து கொள்ளாமல் தடுப்பதில் நாம் வெற்றியடைவோமானால் அது மிகவும் நல்ல விஷயமாக இருக்கும்.

முதல் தடவையாக
இதன் சுருக்கம்
F. Engels, *Politisches Vermächtnis. Aus unveröffentlichten Briefen*, Berlin, 1920
என்ற நூலிலும் முழுப் பகுதி
Die Gesellschaft, No. 11, Berlin, 1925 இதழிலும்
வெளியிடப்பட்டது

கையெழுத்துப்
பிரதியுடன் சரிபார்த்து
அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன்
மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

ஹியுபெர்டுஸ்புர்கிலிருந்த ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதம்

லண்டன், ஜூன் 20, 1873

லீப்னெஹ்ட் எழுதிய கடிதம் இன்னும் மார்க்சிடம்தான் இருக்கிறது, அவரால் இப்பொழுது அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால்தான் நான் உங்கள் கடிதத்துக்கு முதலில் பதில் எழுதுகிறேன்.

துரதிர்ஷ்டவசமாக முற்றிலும் லஸ்ஸால்வாதிகளாக இருக்கின்ற கட்சித் தலைவர்கள் உங்களுடைய சிறைத் தண்டனையைப் பயன்படுத்திக் கொண்டு Volksstaatஐ ஒரு ''நேர்மையான'' Neuer Social-Demokratஆக மாற்றக் கூடும் என்ற அச்சத்தை எங்களிடம் ஏற்படுத்தியது ஹெப்னருடைய கடிதமல்ல, கமிட்டியினரின் கையெழுத்துடன் யார்க் அவருக்கு எழுதிய கடிதமே. அத்தகைய எண்ணம் தனக்கிருப்பதை யார்க் வெளிப்படையாகவே காட்டினார். ஆசிரியர்களை நியமிப்பதற்கும் அகற்றுவதற்கும் தனக்கு உரிமை இருப்பதாகக் கமிட்டி கோரியபடியால் நிச்சயமாகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருந்தது. ஹெப்னர் சிக்கிரத்தில் நாடு கடத்தப்படவிருந்ததும் இத்திட்டங்களை மேலும் பலப்படுத்தின. இத்தகைய சூழ்நிலையில் அங்கேயுள்ள நிலைமைகளை நாங்கள் அறிந்து கொள்வது முற்றிலும் அவசியமாயிற்று. அதனால்தான் இக்கடிதப் போக்குவரத்து...

லஸ்ஸால்வாதத்தைப் பொறுத்த மட்டில் கட்சியின் அணுகுமுறை, குறிப்பாக குறிப்பிட்ட உதாரணங்களில் எவ்விதமான செயல்தந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பற்றி நீங்கள்தான் இன்னும் சிறப்பாக முடிவு

செய்ய இயலும் என்பது உண்மையே. ஆனால் இன்னொரு விஷயத்தையும் நீங்கள் சிந்திக்க வேண்டும். ஓரளவுக்கு ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்துக்குப்[91] போட்டி என்ற நிலையில் ஒருவர் இருக்கும் பொழுது—உங்கள் நிலை இப்படிப்பட்டதே—தன்னுடைய போட்டியாளனைப் பற்றியே அதிகமாக நினைக்கிறார், முதலில் அவரைப் பற்றியே நினைக்கின்ற பழக்கத்துக்கு உட்படுகிறார். ஆனால் ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கம், சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சி ஆகிய இரண்டுமே இன்னும் ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தில் மிகவும் சிறிய சிறுபான்மையாக மட்டுமே இருக்கின்றன. எதிரியிடமிருந்து ஒரு சில தனிநபர்களையும் உறுப்பினர்களையும் இங்குமங்குமிருந்து இழுப்பதைக் காட்டிலும் இயக்கத்தில் இன்னும் பங்கெடுக்காத மாபெருந்திரளினர் மத்தியில் வேலை செய்வதுதான் பிரச்சாரத்தில் சரியான செயல்தந்திரம் என்பது எங்கள் கருத்து—நெடுங்கால நடைமுறையில் அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அனுபவமில்லாதவர்களிடமிருந்து ஒருவர் தானே உருவாக்கிய தனிநபரின் புதிய சக்திகட்சிக்குள் போலியான கருத்துக்களின் விஷக்கிருமிகளைத் தங்களுடன் எப்பொழுதுமே கொண்டுவருகின்ற பத்து லஸ்ஸால்வாத ஓடுகாலிகளைக் காட்டிலும் அதிகமான மதிப்புள்ளதாகும். ஸ்தலத் தலைவர்களை நீக்கிப் பெருந்திரளான மக்களை ஒருவர் திரட்ட முடியுமென்றால் அது இன்னும் சரியாகவே இருக்கும். ஆனால் ஒருவர் எப்பொழுதுமே இத்தலைவர்களின் மொத்தக் கூட்டத்தையும் சேர்த்தே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்களுடைய முந்திய கருத்துக்களைக் காட்டிலும் முந்திய மேடைப் பேச்சுக்கள் அவர்களைக் கட்டுப்படுத்துகின்றன. தங்களுடைய கோட்பாடுகளைக் கைவிட்டு விடவில்லை, அதற்கு மாறாக சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சி **உண்மையான** லஸ்ஸால்வாதத்தை போதிக்கிறது என்பதை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் இப்பொழுது நிரூபிக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இதுவே எய்ஸெனஹில் நடைபெற்றது.[92] ஒருவேளை அந்த சமயத்தில் இதைத் தவிர்க்க முடியாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் இந்த சக்திகள் அனைத்தும் கட்சிக்குத் தீமை செய்திருக்கின்றன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அந்த இணைப்பு இல்லாமல் கட்சி இன்று குறைந்தபட்சம் இதே பலத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதைப் பற்றி நான் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. எனினும் மற்றவை எப்படி இருந்தாலும், இந்த சக்திகளுக்கு மேலும் உதவிப்படைகள் கிடைக்குமானால் நான் அதை துரதிர்ஷ்டமாகக் கருதுவேன்.

''ஒற்றுமைக்'' கூச்சல் தனக்குத் தவறாக வழிகாட்டுவதற்கு ஒருவர் அனுமதிக்கக் கூடாது. இக்கோஷத்தைத் தங்களுடைய உதடுகளில் அடிக்கடி உச்சரிப்பவர்கள்தான் மிகவும் அதிகமான வேற்றுமையை விதைக்கிறார்கள், ஸ்விட்சர்லாந்தின் ஜூரா பக்கூனின்வாதிகள் எல்லாப் பிரிவினைகளையும் தூண்டிவிட்டார்கள், ஆனால் தற்பொழுது அவர்கள்தான் ஒற்றுமைக்கு மிக அதிகமாகக் கூச்சல் போடுகிறார்கள். இந்த ஒற்றுமை வெறியர்கள் குறைவான அறிவுள்ள நபர்களாக இருக்க வேண்டும், அவர்கள் எல்லாவற்றையும் ஒரே மாதிரியான குழம்பாகச் செய்ய முயற்சிக்கிறார்கள், அது படியும்படிவிட்ட விஷயங்களிலேயே மறுபடியும் எல்லா வேற்றுமைகளையும் அதிகக் கூர்மையாக எடுத்துக் காட்டும், ஏனென்றால் அவை அனைத்துமே ஒரே சட்டியில் இருக்கும் (ஜெர்மனியில் தொழிலாளர்களுக்கும் குட்டி முதலாளி வர்க்கத்தினருக்கும் இடையில் சமரசத்தை போதிக்கின்றவர்களை இதற்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்)— அல்லது அவர்கள் உணர்வில்லாமலேயே (உதாரணமாக, முல்பெர்கெர்) அல்லது உணர்வுடனே இயக்கத்தைக் கலப்படமாக்க விரும்புபவர்களாக இருக்க வேண்டும். இந்தக் காரணத்துக்காகவே மிகவும் அதிகமான குறுங்குழுவாதிகளும் மற்றும் மிகவும் அதிகமான சண்டைக்காரர்களும் போக்கிரிகளும் சில சமயங்களில் ஒற்றுமைக்காக அதிகமாகக் கூச்சலிடுகிறார்கள். நம்முடைய வாழ்க்கையில் ஒற்றுமைக்காகச் சத்தம் போடுபவர்களைக் காட்டிலும் வேறு எவரும் அதிகமாகத் தொல்லை தரவில்லை, அதிகமாக துரோகம் செய்யவில்லை.

ஒவ்வொரு கட்சித் தலைமையும் வெற்றிகளைக் காண விரும்புவது இயற்கையே. இது நல்லதே. ஆனல் மிகவும் முக்கியமான விஷயங்களுக்காக வினுடிநேர வெற்றியைத் தியாகம் செய்ய வேண்டிய துணிச்சல் அவசியமாகவுள்ள சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அதிலும் இறுதி வெற்றி முற்றிலும் நிச்சயமாக இருக்கின்ற, நம்முடைய வாழ்நாளின் போது நம்முடைய கண்களுக்கு முன்பாகவே மிகப் பெரும் வளர்ச்சியைச் சாதித்துள்ள நம்முடைய கட்சிக்கு வினுடி நேர வெற்றி எப்பொழுதும், முற்றிலும் அவசியமல்ல. உதாரணமாக, அகிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கம்யூனுக்குப் பிறகு அது மகத்தான வெற்றி அடைந்தது. ஒரே வீச்சில் அடிபட்ட முதலாளி வர்க்கம் அதற்கு சர்வவல்லமையைக் கொடுத்தது. அது எல்லாக் காலத்துக்கும் அப்படியே இருக்கப் போகிறது என்று உறுப்பினர்களில் மாபெரும் பகுதியினர் நம்பினர்கள். இந்த நீர்க்குமிழி உடைந்தேயாக வேண்டும் என்பது எமக்கு நன்றுகத் தெரியும். எல்லாவிதமான சுழிசடைகளும் அதில் ஒட்டிக் கொண்டார்கள். அதிலிருந்த குறுங்குழுவாதிகள் அகம்பாவமடைந்தார்கள்; மிகவும் தரக்குறைவான, முட்டாள்தனமான நடவடிக்கைகளைச் செய்ய அனுமதியுண்டு என்ற நம்பிக்கையில் அவர்கள் அகிலத்தைத் தவருகப் பயன்படுத்தினர்கள். நாம் அதை அனுமதிக்கவில்லை. நீர்க்குமிழி என்றுவது உடைந்துவிடும் என்பதை நாம் அறிந்திருந்தபடியால் அந்தப் பேராபத்தைத் தாமதப்படுத்துவதில் அல்ல, அதிலிருந்து அகிலம் தூய்மையுடனும் கலப்படமில்லாமலும் வெளிவர வேண்டும் என்பதில் அக்கறை காட்டினேம். ஹேகில் நீர்க்குமிழி உடைந்தது. அக்காங்கிரசில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஏமாற்றமடைந்து வீட்டுக்குத் திரும்பியது உங்களுக்குத் தெரியும். அகிலத்தில் சர்வதேச சகோதரத்துவம் மற்றும் ஒத்துழைப்பு இலட்சியத்தைக் காண முடியும் என்று கற்பனை செய்த, ஏமாற்றமடைந்த நபர்கள் வீட்டில் ஹேகில் ஏற்பட்டதைக் காட்டிலும் அதிகமான அளவுக்குக் கசப்பான சண்டைகளில் ஈடுபட்டார்கள்! குறுங்குழுவாதச் சண்டைவெறியர்கள் இப்பொழுது சமரசம்

பேசுகிறார்கள், நாங்கள் முரடர்கள், சர்வாதிகாரிகள் என்று பழித்துப் பேசுகிறார்கள்! நாங்கள் ஹேகில் சமரசமாக நடந்து கொண்டிருந்தால், வெடித்துக் கொண்டிருந்த பிளவைத் தடுத்திருந்தால்—அதன் விளைவு எப்படி இருந்திருக்கும்? அகிலத்தின் பெயரில் இன்னும் அதிகமான முட்டாள்தனங்களையும் அவச்செயல்களையும் செய்வதற்கு குறுங்குழுவாதிகளுக்கு, குறிப்பாக, பக்கூனின்வாதிகளுக்கு இன்னுமொரு வருடம் கிடைத்திருக்கும்; மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழிலாளர்கள் அருவருப்படைந்து ஒதுங்கிப் போயிருப்பார்கள்; நீர்க்குமிழி உடைந்திருக்காது, ஆனால் முட்களினுல் குத்தப்பட்டு அது மெதுவாக அழிந்திருக்கும். இந்த நெருக்கடி எப்படியும் வெடிக்க வேண்டிய அடுத்த காங்கிரசில் மிகவும் கீழ்த்தரமான ரகத்தைச் சேர்ந்த தனிப்பட்ட சண்டை நடைபெற்றிருக்கும், ஏனென்றால் கொள்கைகள் ஏற்கெனவே ஹேகிலேயே தியாகம் செய்யப்பட்டுவிட்டன. அப்பொழுது அகிலம் துண்டு துண்டாக நொறுங்கிப்போயிருக்கும் என்பது நிச்சயம்—''ஒற்றுமையின்'' மூலம் நொறுங்கியிருக்கும்! அதற்கு பதிலாக, நாம் இப்பொழுது நம் முடைய கௌரவத்தைக் காத்துக்கொண்டு அழுகிப் போன சக்திகளை அகற்றிவிட்டோம்—கடந்த கூட்டத்தில், தீர்மானகரமான கூட்டத்தில் பங்கெடுத்த சுவிஸ் உறுப்பினர்கள் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் துரோகிகள் மீது தீர்ப்புக் கூறிய இந்த விசாரணைமன்றத்தின் கூட்டம் தங்களிடம் ஏற்படுத்திய அசாதாரணமான மனப்பதிவைப் போல சுவிஸ் கூட்டம் எதுவுமே ஏற்படுத்தவில்லை என்று கூறுகிறார்கள். அவர்கள் பத்து மாதங்கள் தங்களுடைய சக்திகள் அனைத்தையும் பொய்கள், அவதூறு, சூழ்ச்சிகளில் செலவிடுவதற்கு நாம் அனுமதித்தோம்—அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள், அகிலத்தில் மிகவும் அதிகமான பெரும்பான்மையைக் கொண்டிருப்பதாகத் தங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டவர்கள், அடுத்த காங்கிரசிற்கு வரத் துணிய மாட்டோம் என்று அறிவிக்கிறார்கள் (இந்தக் கடிதத்துடன் Volksstaatக்காக இணைக்கப்பட்டிருக்கும் கட்டுரை

யில்* இன்னும் அதிகமான விவரங்கள் எழுதப்பட்டிருக் கின்றன). நாங்கள் இதை மறுபடியும் செய்ய வேண்டி யிருந்தால் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் பொழுது எவ்விதத்திலும் வேறுவிதமாக நடக்க மாட்டோம் —செயல் தந்திரத் தவறுகள் எப்பொழுதுமே இருக்கும் என்பது உண்மையே.

மற்றவை எப்படியிருந்தாலும், லஸ்ஸால்வாதிகள் மத் தியில் உள்ள செயல்திறமை உள்ள சக்திகள் காலப்போக்கில் தாமாகவே உங்களிடம் வந்துவிடும். எனவே ஒற்றுமைக் கும்பல் விரும்புவதைப் போல, பழம் கனிவதற்கு முன்பே பறிப்பது அறிவுடையோர் செயல் அல்ல.

மேலும் முதியவரான ஹெகல் நெடுங்காலத்துக்கு முன்பே கூறினர்: ஒரு கட்சி பிளந்து விடுவதன் மூலம், பிறகு அந்தப் பிளவைத் தாங்கிக் கொள்வதன் மூலம் தன்னுடைய ஜீவசக்தியை நிரூபிக்கிறது.[93] பாட்டாளி வர்க்க இயக்கம் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை அவசியமாகக் கடந்து வரு கிறது; ஒவ்வொரு கட்டத்திலும் மக்களில் ஒரு பகுதியினர் தங்கிவிடுகிறார்கள், அடுத்த முன்னேற்றங்களில் பங்கு கொள் வதில்லை. ''பாட்டாளி வர்க்கத்தின் ஒருமைப்பாடு'' ஒன்றுக் கொன்று ஜீவ-மரணச் சண்டைகளை நடத்துகின்ற வெவ்வேறு கட்சிக் குழுக்களினுள் எங்கும் உண்மையிலேயே ஈடேற்ற மடைவது ஏன் என்பதை விளக்குவதற்கு இது மட்டும் பே தும். ரோமானியப் பேரரசில் மிகமோசமான ஒடுக்குமுறை களின் போது கிறிஸ்துவக் குறுங்குழுக்கள் நடந்து கொண் டதைப் போன்றதே இதுவும்.

உதாரணமாக, *Volksstaat*ஐக் காட்டிலும் *Neuer Social-Demokrat*க்கு அதிகமான சந்தாதாரர்கள் இருக்கிறார்கள் என்றால், ஒவ்வொரு குறுங்குழுவும் அவசியமாகவே வெறியைக் கொண் டிருக்கிறது, அந்த வெறியின் மூலம், குறிப்பாக அது புதி தாக வேலை செய்யத் தொடங்குகின்ற பிரதேசங்களில் (ஷ்லெஸ்விக்-ஹோல்ஸ்டெயின் பிரதேசத்தில் ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் உதாரணத்தைப்

* F. Engels, *Aus der Internationalen*.—ப-ர்.

போல) எத்தகைய குறுங்குழுவாதத் திரிபுகளும் இல்லாமல் உண்மையான இயக்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சியைக் காட்டிலும் அதிகமான விரைவு நேர வெற்றிகளைப் பெறுகிறது என்ற உண்மையே இதற்குக் காரணம் என்பதையும் நீங்கள் மறக்கக் கூடாது. மறு பக்கத்தில், வெறியுணர்ச்சி நெடுங்காலம் இருக்காது.

தபால் எடுக்கின்ற நேரம் நெருங்கிவிட்ட படியால் இக் கடிதத்தை நான் முடிக்க வேண்டும். அவசரமாக ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு* முடிகின்றவரை (உத்தேசமாக ஜூலை மாத இறுதி) மார்க்சினுல்லஸ்ஸாலை[94] எடுத்துக்கொள்ள முடியாது; அதுவும் அவருக்கு ஓய்வு அவசியம், ஏனென்றால் அவர் கடுமையாக உழைத்திருக்கிறார்...

முதல் தடவையாக இதன் சுருக்கம் F. Engels, Politisches Vermächtnis. Aus unveröffentlichten Briefen, Berlin, 1920 என்ற நூலிலும் முழுப் பகுதி போல்ஷிவிக், எண் 10, 1932 என்ற இதழில் ருஷ்ய மொழியிலும் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியுடன் சரிபார்த்து அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

* மூலதனத்தின் முதல் தொகுதி.—ப-ர்.

பி. எங்கெல்ஸ்

ஹோபோக்கனிலிருந்த பி. அ. ஸோர்கேக்கு எழுதிய கடிதம்

லண்டன், செப்டெம்பர் 12—17, 1874

உங்கள் இராஜிநாமாவுடன்[95] பழைய அகிலம் எப்படியோ ஒருவிதமாக முற்றிலும் கலைக்கப்பட்டு முடிவடைந்து விட்டது. அதுவும் சரியானதே. அது இரண்டாவது பேரரசுக் காலத்தைச்[96] சேர்ந்தது. அப்பொழுது ஐரோப்பா முழுவதிலும் ஆட்சி செய்து கொண்டிருந்த ஒடுக்குமுறை, விழித்தெழுந்து கொண்டிருந்த தொழிலாளர் இயக்கம் ஒற்றுமையைப் பேண வேண்டும், எல்லாவிதமான உள்தகராறுகளிலிருந்தும் ஒதுங்கியிருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்தியது. பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான சர்வதேச நலன்கள் முன்னே வருகின்ற தருணம் அது. ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி மற்றும் டென்மார்க் அப்பொழுதுதான் இயக்கத்துக்குள் வந்திருந்தன அல்லது இயக்கத்துக்குள் வந்து கொண்டிருந்தன. 1864இல் இயக்கத்தின் தத்துவ ரீதியான தன்மை ஐரோப்பாவில் எங்கும், அதாவது பெருந்திரளான மக்கள் மத்தியில் இன்னும் அதிகமான அளவுக்குத் தெளிவில்லாமலிருந்தது உண்மையாகும். ஜெர்மானியக் கம்யூனிசம் இன்னும் ஒரு தொழிலாளர் கட்சியாக உருப்பெறவில்லை. புரூதோன்வாதம் மிகவும் பலவீனமாக இருந்தபடியால் அது தன்னுடைய பொய்க்கால் குதிரை ஆட்டத்தை ஆரம்பிக்கவில்லை. பக்கூனினது புதுக் கதம்பம் அவருடைய மூளையில் கூட இன்னும் உருவாகவில்லை; விதிமுறைகளின் முன்னுரையில் கொடுக்கப்பட்டிருந்த செயல்திட்டம்* இயக்கத்தில்

---

* இந்த நூல் நிரட்டு, தொகுதி 5ஐப் பார்க்க.—ப-ர்.

சேருவதற்கு ஒரு அடிப்படையைத் தருகிறது என்று ஆங்கிலத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் கூட நினைத்தார்கள். முதல் மாபெரும் வெற்றி இப்படிப் பலவிதமான கோஷ்டிகளின் வெகுளித்தனமான ஒத்துழைப்புக்கு வேட்டு வைக்கத்தானே வேண்டும். அந்த வெற்றிதான் கம்யூன். அகிலம் அதைத் தயாரிப்பதற்கு ஒரு விரலைக்கூட உயர்த்தவில்லை என்றாலும் அறிவுபூர்வமான முறையில் அது அகிலத்தின் குழந்தை என்பதில் எத்தகைய சந்தேகமும் இருக்க முடியாது. அதற்கு அகிலம் ஓரளவு பொறுப்பு என்று கருதப்பட்டது முற்றிலும் சரியானதே. கம்யூனின் விளைவாக அகிலம் ஐரோப்பாவில் ஒரு தார்மிக சக்தியாக வளர்ந்த பொழுது உடனே தகராறு தொடங்கியது. ஒவ்வொரு போக்கும் அந்த வெற்றியைத் தன்னுடைய சொந்த நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியது. சீர்குலைவு—அது தவிர்க்க முடியாதது—தொடங்கியது. பழைய விரிவான செயல்திட்டத்தின் அடிப்படையில் தொடர்ந்து பாடுபடுவதற்கு உண்மையிலேயே தயாராக இருந்த ஒரே குழுவினரான ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகளின் சக்தி ஓங்குவதைப் பற்றிய பொறுமை பெல்ஜியப் புரூதோன்வாதிகளை பக்கூனின்வாத தூர்ச்சாகசக்காரர்களிடம் ஓடும்படி துரத்தியது. ஹேக் காங்கிரஸ் உண்மையில் முடிவாகத்தான் இருந்தது—இருதரப்பினருக்குமே. அகிலத்தின் பெயரில் இன்னும் எதையாவது சாதிக்கக் கூடிய ஒரே நாடு அமெரிக்காதான். நல்ல வேளையாக நிர்வாகக் கமிட்டி அந்த நாட்டுக்கு மாற்றப்பட்டது. இப்பொழுது அங்கும் அதன் செல்வாக்கு முடிந்துவிட்டது. அதற்குப் புத்துயிர் கொடுப்பதற்குக் கூடுதலாகச் செய்யப்படுகின்ற எந்த முயற்சியுமே முட்டாள்தனமாக, சக்தியை வீணாக்குவதாகவே இருக்கும். பத்து வருட காலம் அகிலம் ஐரோப்பிய வரலாற்றின் ஒரு பக்கத்தில், எதிர்காலம் இருக்கின்ற பக்கத்தில் தலைமையான ஆதிக்கத்தைச் செலுத்தியது. அது தன்னுடைய கடந்த காலப் பணியைப் பெருமையுடன் திரும்பிப் பார்க்க முடியும். ஆனால் அதன் பழைய வடிவத்தில் அதன் உபயோகம் முடிந்துவிட்டது; பழைய உதாரணத்தைப் பின்பற்றி ஒரு புதிய அகிலத்தை,

எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் கூட்டணியைத் தயாரிப்பதற்கு 1849-64ம் வருடங்களில் இருந்ததைப் போல தொழிலாளர் இயக்கம் பொதுவான ஒடுக்குமுறைக்கு உட்படுதலும் அவசியமாக இருக்கும். இப் பொழுது பாட்டாளி வர்க்க உலகம் மிகவும் பெரியதாக, மிகவும் பரந்த அளவினதாக இருக்கிறது. மார்க்சின் எழுத் துக்கள் பல வருடங்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்திய பிறகு, அடுத்த அகிலம் நேரடியாகக் கம்யூனிஸ்ட் அகில மாக இருக்கும், துல்லியமாக நம்முடைய கோட்பாடுகளைப் பிரகடனம் செய்யும் என்று நான் நம்புகிறேன்...

Briefe und Auszüge aus Briefen von Joh. Phil. Becker, Jos. Dietzgen, Friedrich Engels, Karl Marx u. A. an F. A. Sorge und Andere, Stuttgart, 1906 என்ற நூலில் முதல் தட வையாக சுருங்கிய வடிவத்தில் வெளியிடப்பட்டது, கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, முதல் பதிப்பு, XXVI தொகுதி, 1935இல் ருஷ்ய மொழியில் முழுமையாக வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதி மற்றும் புத்தக வாசகத்துடன் சரிபார்த்துப் பிரசுரிக்கப்பட்டது மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

பதிப்பாளர் குறிப்புகள்

[1] மூலதனம்—கா. மார்க்சின் பிரதான படைப்பாகும். 40 ஆண்டு காலம், 1840க்களின் துவக்கத்திலிருந்து தன் வாழ்நாள் இறுதி வரை மார்க்ஸ் இந்நூலை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

1843ஆம் ஆண்டு இறுதியில் பாரிசில் மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய முறையான ஆராய்ச்சியில் இறங்கினார். ''1844ஆம் ஆண்டின் பொருளாதார-தத்துவஞான கையேடுகள்'', ''ஜெர்மானியத் தத்துவம்'', ''தத்துவஞானத்தின் வறுமை'', ''கூலியுழைப்பும் மூலதனமும்'' ''கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை'' போன்ற படைப்புகளில் இத்துறையில் இவருடைய முதல் ஆராய்ச்சிகள் பிரதிபலித்தன.

1848—1849ஆம் ஆண்டுகளின் புரட்சியால் ஏற்பட்ட இடைவெளியை அடுத்து லண்டனில்தான் (1849 ஆகஸ்டில் இவர் இங்கு குடியேறினார்) மார்க்சால் தன் பொருளாதார ஆராய்ச்சிகளைத் தொடர முடிந்தது.

1857—1858இல் மார்க்ஸ் 50க்கும் மேற்பட்ட அச்சிடப்பட்ட தாள்கள் அடங்கிய கையெழுத்து பிரதியை உருவாக்கினார். இதுதான் எதிர்கால ''மூலதனத்தின்'' முதற் குறிப்பு என்று கூறலாம். இது முதன் முதலாக 1939—1941இல் மாஸ்கோவில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கீழுள்ள மார்க்சிய-லெனினிய ஆராய்ச்சி கல்லூரியால் ஜெர்மன் மொழியில் *Grundrisse der Kritik der politischen Oekonomie* என்ற பெயரில்(''அரசியல் பொருளாதார விமரிசனத்தின் பிரதான அம்சங்கள்'') வெளியிடப்பட்டது. அதே நேரத்தில் மார்க்ஸ் மொத்தமாக தன் படைப்பு முழுவதையும் பற்றியமுதற் குறிப்பைத் தீட்டுவதில் ஈடுபட்டார். பின் வந்த மாதங்களில் இதைத் திட்டவட்டமாக்கி, 1858 ஏப்ர

லில், படைப்பு முழுவதையும் 6 புத்தகங்களாக வெளியிடுவது என்று முடிவு செய்தார். ஆனால் தன் படைப்பை பகுதி பகுதியாக, தனித் தனி வெளியீடுகளாக கொண்டு வர ஆரம்பிக்க வேண்டுமென விரைவிலேயே இவர் முடிவு செய்தார்.

1858இல் இவர் முதல் வெளியீட்டிற்கு ''அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை'' என்று பெயரிட்டு இதற்கான தயாரிப்புப் பணிகளில் இறங்கினர். 1859இல் நூல் வெளியாயிற்று.

மேற்கொண்டு தன் பணியைத் தொடர்ந்த போது மார்க்ஸ், தன் படைப்பின் ஆரம்பக் கால திட்டத்தை மாற்றினர். 6 நூல்களைப் பற்றிய திட்டத்திற்குப் பதில் ''மூலதனத்தின்'' 4 தொகுதிகளைப் பற்றிய திட்டம் வந்தது. 1863—1865இல் மார்க்ஸ் புதிய பெரும் கையெழுத்துப் பிரதியை உருவாக்கினர். இதுதான் ''மூலதனம்'' நூலின் மூன்று தத்துவார்த்த தொகுதிகளின் முதல் விரிவான மாதிரி வடிவமாகும். இப் படைப்பு முழுவதும் மொத்தமாக எழுதி முடிக்கப்பட்ட பின்தான் (1866 ஜனவரி) மார்க்ஸ் இதை இறுதியாக அச்சிற்குத் தயார்படுத்தும் பணியில் இறங்குகிறார். அதுவும் எங்கெல்சின் ஆலோசனையின்படி நூல் முழுவதையும் ஒட்டுமொத்தமாகத் தயார்படுத்தாமல் முதலில் ''மூலதனத்தின்'' முதல் தொகுதிக்கான பணியில் ஈடுபடுகிறார். இந்த இறுதி அழகுபடுத்தும் பணியை மார்க்ஸ் பரிபூரண ஆழத்துடன் செய்தார். எனவே சாராம்சத்தில் இது ''மூலதனத்தின்'' முதல் தொகுதியின் இன்னுமொரு மறு ஆய்வாக அமைந்தது.

''மூலதனத்தின்'' முதல் தொகுதி வெளிவந்த பின் (1867 செப்டெம்பர்), ஜெர்மானிய மொழியில் புது படைப்புகளும் அந்நிய மொழிபெயர்ப்புகளும் வெளிவர இருந்ததால் மார்க்ஸ் இதை மேலும் செழுமைப்படுத்துவதில் ஈடுபட்டார். இவர் இரண்டாம் பதிப்பில் (1872) பல மாற்றங்களைச் செய்தார், 1872இல் பீட்டர்ஸ்பர்கில் ருஷ்ய மொழிபெயர்ப்பு வந்ததையடுத்து (இதுதான் ''மூலதனத்தின்'' முதல் மொழிபெயர்ப்பாகும்) கணிசமான குறிப்புகளை எழுதினர், பிரெஞ்சு மொழிபெயர்ப்பை கணிசமான அளவு சரிபார்த்து, மேற்பார்வையிட்டார் (இது 1872—1875ஆம் ஆண்டுகளில் தனித் தனி வெளியீடுகளாக வந்தது).

மறுபுறம், ''மூலதனத்தின்'' முதல் தொகுதி வெளியான பின் நூல் முழுவதையும் விரைவிலேயே முடித்து விட

வேண்டுமென்ற நோக்கத்துடன் மற்ற தொகுதிகளுக்கான பணிகளைத் தொடர்ந்தார். ஆனால் அவரால் இது முடியவில்லை. முதலாம் அகிலத்தின் பொதுக் கவுன்சிலில் இவருடைய பன்முக நடவடிக்கை பெரும் நேரத்தை உறிஞ்சுகிறது. மோசமான உடல்நிலையின் காரணமாய் வேலையை அடிக்கடி நிறுத்த நேரிட்டது.

''மூலதனத்தின்'' அடுத்த இரண்டு தொகுதிகளும் மார்க்சின் மறைவிற்குப் பின் எங்கெல்சால் அச்சுக்குத் தயார்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டன (இரண்டாவது தொகுதி 1885இலும் மூன்றுவது தொகுதி 1894இலும் வெளியாயின). இதன் மூலம் எங்கெல்ஸ் விஞ்ஞானக் கம்யூனிச பொக்கிஷத்திற்கு விலைமதிப்பற்ற செல்வம் சேர்த்தார்.

இந்தத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள ''மூலதனத்தின்'' 24ஆம் அத்தியாயத்தில் குறிப்புகளின் எண்கள் மார்க்ஸ் பயன்படுத்திய அதே வரிசைக் கிரமத்தில் தரப்பட்டுள்ளன.—9.

2 ''மூலதனத்தின்'' முதல் தொகுதியின் முதல் ஜெர்மானியப் பதிப்பின் முதல் அத்தியாயத்தை (''பண்டமும் பணமும்'') மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். இந்தத் தொகுதியின் பிந்தைய வெளியீடுகளில் இது முதலாம் பகுதியாகும்.—9.

3 லஸ்ஸாலுடைய படைப்பின் மூன்றுவது அத்தியாயம் இங்கே குறிப்பிடப்படுகிறது: *Herr Bastiat-Schulze von Delitzsch, der ökonomische Julian, oder: Capital und Arbeit.* Berlin, 1864 (''கனவான் பாஸ்டியா ஷூல்ட்ஸெ-டெலிச், பொருளாதார யூலியான் அல்லது மூலதனமும் உழைப்பும்'', பெர்லின், 1864).—10.

4 ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான இங்கிலாந்தின் வட அமெரிக்கக் காலனிகளின் சுதந்திரப் போர் (1775—1783), சுதந்திரத்தின் மீதும் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான தடைகளை அழிப்பதன் மீதும் உருவாகிக் கொண்டிருந்த அமெரிக்க பூர்ஷ்வா தேசிய இனம் கொண்டிருந்த நாட்டத்தால் தூண்டப்பட்டது. வட அமெரிக்கர்களின் வெற்றியின் விளைவாய் அமெரிக்க ஐக்கிய நாடு எனும் சுதந்திர பூர்ஷ்வா அரசு ஏற்படுத்தப்பட்டது.—13.

5 அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861—1865)—இந்தப்

போர் வடக்கேயிருந்த தொழில்துறை மாநிலங்களுக்கும் கிளர்ந்தெழுந்த தென்பகுதி அடிமையுடைமை மாநிலங்களுக்கும் இடையே நடந்தது. தோட்டச் சொந்தக்காரர்கள்-அடிமைச் சொந்தக்காரர்களே ஆதரித்த ஆங்கிலேய முதலாளி வர்க்கத்தின் கொள்கையை எதிர்த்த இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கம், இங்கிலாந்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்நாட்டுப் போரில் தலையிடாதவாறு தடுத்தது. யுத்தம் வடக்கு மாநிலங்களின் வெற்றியில் முடிந்தது.—13.

6 ஸ்தாபித திருச்சபை—ஆங்கிலேய மாதாகோயிலின் ஒரு போக்கு, இதன் ஆதரவாளர்களில் பெரும்பாலோர் மேற்குடியினர்; கத்தோலிக்கத்துடன் உள்ள தொடர்ச்சியான உறவைக் கோடிட்டுக் காட்டிய இது பழைய ஆடம்பரச் சடங்குகளை அப்படியே வைத்திருந்தது.—15.

7 நீலப் புத்தகம் (Blue Books)—இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தின் வாதங்கள் மற்றும் அயல் விவகார அமைச்சகத்தின் ராஜதந்திர ஆவணங்கள் ஆகியவற்றின் பிரசுரங்களுக்கான பொதுப் பெயர். இதன் அட்டை நீல நிறமாயிருந்ததால் இப்பெயர் வந்தது.—15.

8 1870-1871ஆம் ஆண்டுகளின் பிராங்கோ-ஜெர்மன் யுத்தம்—ஐரோப்பிய கண்டத்தில் மேலாதிக்கத்தை தக்க வைத்து, ஜெர்மனியின் இறுதியான இணைப்பிற்குத் தடையாக இருக்க முயன்ற பிரான்சிற்கும் பிரஷ்யாவிற்கும் இடையிலான யுத்தம். யுத்தம் பிரான்சின் தோல்வியில் முடிந்தது.—19.

9 S. Mayer, *Die Sociale Frage in Wien. Studie eines "Arbeitgebers"*, Wien, 1871(எஸ். மேயர், ''வியன்னாவில் சமூகப் பிரச்சினை. ஒரு 'வேலைதருபவரின்' குறிப்பு,'' வியன்னா, 1871).—19.

10 புனிதக் கூட்டணி—1815ம் வருடத்தில், ஜாரிஸ்ட் ருஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகள் ஐரோப்பாவின் அரசர்களைச் சேர்த்து ஏற்படுத்திய பிற்போக்குக் கூட்டணி. ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகின்ற புரட்சிகர இயக்கத்தை நசுக்கி அங்கேயிருக்கும் நிலப்பிரபுத்துவ முடியாட்சியைப் பாதுகாப்பது இக்கூட்டணியினரின் நோக்கம்.—22.

11 அயல்நாட்டிலிருந்து தானியத்தைக் கொண்டு வருவதை மட்டுப்படுத்துவதை அல்லது தடை செய்வதை நோக்க

மாகக் கொண்ட தானியச் சட்டங்கள் என்றழைக்கப் பட்டவை பெரும் நிலக்கிழார்கள்-லேன்ட்லார்டுகளின் நலன்களுக்காக இங்கிலாந்தில் அமுலாக்கப்பட்டன. 1838ம் ஆண்டு தானியச் சட்டங்களுக்கு எதிரான சங் கம் அமைக்கப்பட்டது. அது தங்குதடையற்ற வர்த்தகம் என்ற கோரிக்கையை முன்வைத்தது. 1846ம் ஆண்டில் தானியச் சட்டங்களை ரத்து செய்யும் மசோதா நிறை வேற்றப்பட்டது. இது நில மேற்குடியினரின் மீது தொழில்துறை முதலாளி வர்க்கத்தினர் அடைந்த வெற் றியைக் குறித்தது.—22.

12 *Der Volksstaat* (''மக்கள் அரசு'')—ஜெர்மானிய சமூக-ஜன நாயகக் கட்சியின் (எய்ஸெனஹர்கள்) மத்தியப் பத்தி ரிகை, 1869 அக்டோபர் 2 முதல் 1876 செப்டெம்பர் வரை லேப்சிக்கில் வெளிவந்தது. இப்பத்திரிகையின் பொதுத் தலைமை லீப்னெஹ்டின் கையிலிருந்தது, பதிப் பகத்திற்கு பெபெல் தலைமை தாங்கினர். மார்க்சும் எங் கெல்சும் இதன் மேற்பார்வைக்கு இடையறாது உதவி நல்கினர். 1869 வரை இது *Demokratisches Wochenblatt* என்று அழைக்கப்பட்டது (53ஆம் குறிப்பைப் பார்க்க).

''கார்ல் மார்க்ஸ். 'மூலதனம். அரசியல் பொருளா தாரத்தின் விமரிசனம்'. ஹாம்பர்க், 1867'' என்ற டித்ஸ் கெனின் கட்டுரையைப் பற்றி இங்கே கூறப்பட்டுள்ளது. இது *Demokratisches Wochenblatt* செய்தித்தாளில் 1868ஆம் ஆண்டு 31, 34, 35, 36 இதழ்களில் வெளிவந்தது.—25.

13 *The Saturday Review of Politics, Literature, Science and Art* (''அர சியல், இலக்கியம், விஞ்ஞானம், கலை சம்பந்தமான சனிக் கிழமை குறிப்பு'')—பிரிட்டிஷ் கன்சர்வெட்டிவ் வார சஞ்சிகை. 1855 முதல் 1938 வரை லண்டனில் வெளி வந்தது.—25.

14 செயின்ட் பிட்டர்ஸ்பர்க் சஞ்சிகை — ருஷ்ய தினசரி, அதிகாரபூர்வமான அரசாங்கப் பத்திரிகை; இப்பெயரில் இது 1728—1914ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது; 1914—1917இல் ''பெத்ரொகிராத் செய்திகள்'' எனும் பெயரில் வந்தது.—25.

15 *La Philosophie positive Revue* (''நேர்க்காட்சிவாத தத்துவ ஞானம். குறிப்பு'') எனும் சஞ்சிகையைப் பற்றி பேசப் படுகிறது. இது 1867—1883இல் பாரிசில் வெளிவந்தது. 1868 நவம்பர்—டிசம்பருக்கான இதன் 3வது இதழில்

''மூலதனத்தின்'' முதல் தொகுதியைப் பற்றிய சுருக்கமான விமரிசனம் பிரசுரமானது. இது கோன்டின் நேர்க்காட்சிவாத தத்துவஞானப் போக்கின் சிடராகிய டெரொபேர்டியால் எழுதப்பட்டது.—26.

16 நி. ஸீபர் ''பிந்தைய பிற்சேர்க்கைகள் விளக்கங்களின் தொடர்பாக மதிப்பு மற்றும் மூலதனம் பற்றிய டே. ரிக்கார்டோவின் தத்துவம்''. கீவ், 1871, பக்கம் 170.—27.

17 வேஸ்த்னிக் யெவ்ரோப்பி—(''ஐரோப்பியத் தூதன்'') மிதவாத முதலாளித்துவ வகைப்பட்ட மாத சஞ்சிகை; வரலாற்று-அரசியல் மற்றும் இலக்கிய இதழ். இது செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 1866 முதல் 1918 வரையில் வெளிவந்தது.—27.

18 புஹ்னர், லாங்கே, டூரிங், ஃபேஹ்னர் இன்னும் பிற ஜெர்மானிய பூர்ஷ்வா தத்துவஞானிகள்.—32.

19 15ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து, நாடு கடந்து செல்லும் வர்த்தகத்தில் ஜெனோவா, வெனிஸ் மற்ற வட இத்தாலிய நகரங்களின் பங்கு வீழ்ச்சியடைந்ததுதான் இங்கு உலக சந்தையின் புரட்சி என்று குறிப்பிடப்படுகிறது. கியூபா, ஹாயிட்டி, பகாமாத் தீவுகள், வ அமெரிக்க கண்டம் கண்டுபிடிக்கப்பட்டன, ஆப்பிரிகாவின் இறுதி முனை வழியே இந்தியாவிற்கு கடல் மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டது, இறுதியாக தென் அமெரிக்க கண்டுபிடிப்பு போன்ற அக்காலத்தின் மகத்தான பூகோள கண்டுபிடிப்புகளின் பயனுய் மேலே கூறிய புரட்சி நடந்தது.—40.

20 1066ஆம் ஆண்டு நார்மான்டியின் கோமகன் வில்ஹெல்ம் பிரிட்டனை வெற்றி கொண்டது குறிப்பிடப்படுகிறது. இது பிரிட்டனில் நிலப்பிரபுத்துவ அமைப்பைத் தக்க வைக்க உதவியது.—42.

21 J. Steuart. *An Inquiry into the Principles of Political Economy*. Vol. 1, Dublin, 1770, p. 52. (ஜே. ஸ்டுவர்ட், ''அரசியல் பொருளாதார ஆரம்பங்களைப் பற்றிய ஆராய்ச்சி'', தொகுதி 1, தூப்ளின், 1770, பக்கம் 52).—43.

22 சிர்நிருத்த இயக்கம்—கத்தோலிக்க மதஸ்தாபனத்திற்கெதிரான பரவலான சமூக இயக்கம். 16ஆம் நூற்றாண்

டில் ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பரவியிருந்தது. எந்த நாடுகளில் இது வெற்றி பெற்றதோ அங்கேயெல்லாம் (பிரிட்டன், ஸ்காட்லாந்து, நெதர்லாந்து, ஜெர்மனியின் ஒரு பகுதி, ஸ்கான்டினேவிய நாடுகள்) மதரீதியான தொடர்ச்சியாக புதிய, புரோட்டஸ்டென்டு என்றழைக்கப்பட்ட மாதாக் கோயில்கள் தோன்றின.—49.

23 ''Pauper ubique jacet''(''எங்கும் ஏழைகள் பங்கிழந்தோர்'') —ஓவிட் என்ற ரோமானிய கவிஞரின் ''ஃபாஸ்டி'' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட வாக்கியம், முதலாம் பாகம், 218வது கவிதை.—49.

24 **ஸ்டுவர்ட் வம்ச ஆட்சியின் மீட்சி** —17ஆம் நூற்றாண்டின் பூர்ஷ்வா புரட்சியால் தூக்கியெறியப்பட்ட ஸ்டுவர்ட் ராஜ வம்சம் பிரிட்டனில் இரண்டாவது முறையாக ஆட்சி செய்த காலகட்டம் (1660—1689).—53.

போரிஸ் கோடுநோஃப் நடைமுறையில் ரஷ்யாவை ஆண்ட போது ஃபியோதர் இவானவிச்சின் ஆட்சிக் காலத்தில் 1597இல், ஓடிப்போன விவசாயிகளைத் தேடிப் பிடிப்பது சம்பந்தமாக வெளியான கட்டளை அனேகமாக இங்கு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இக்கட்டளைக்கேற்ப, தாங்க முடியாத கொடுமையினாலும் நிலவுடைமையாளர்களின் அடக்குமுறையினாலும் ஓடிப்போன விவசாயிகளை 5 ஆண்டிற்குள் தேடிப் பிடித்து அவர்களை வலுக்கட்டாயமாக முந்தைய எஜமானர்களிடம் அனுப்ப வேண்டும்.—53.

26 1688இல் நடந்த அரசுக் கவிழ்ப்புதான் பிரிட்டிஷ் வரலாற்று விஞ்ஞானத்தில் ''புகழ் மிக்க புரட்சி'' எனும் பெயரைப் பெற்றது. இதன் விளைவாய் பிரிட்டனில் ஸ்டுவர்டுகளின் ராஜ வம்சம் தூக்கியெறியப்பட்டு, நிலவுடைமை மேற்குடியினருக்கும் பெரும் முதலாளி வர்க்கத்தினருக்கும் இடையிலான சமரசத்தின் அடிப்படையில் வில்லெஹல்ம் ஒரான்ஸ்கி தலைமையில் சட்டபூர்வமான முடியாட்சி நிலைநாட்டப்பட்டது (1689).—54.

27 கி.மு. 367இல் லிசீனியஸ் மற்றும் சேக்ஸ்த் ரோமானிய கிளர்ச்சித் தலைவர்களால் ஏற்கப்பட்ட விவசாய விதி. இது அரசு நிலத்திலிருந்து 500 யுகெர்களுக்கு

(சுமாராக 125 ஹெக்டேர்) மேற்பட்ட அளவு நிலத்தை குடிமக்கள் வைத்திருப்பதைத் தடை செய்தது.—61.

28 ஸ்டுவர்ட் ராஜ வம்சத்தின் ஆதரவாளர்கள் 1745—1746இல் நடத்திய எழுச்சி இங்கு குறிப்பிடப்படுகிறது. இவர்கள் ''இளம் பிரிட்டென்டர்'' என்றழைக்கப்பட்ட சார்ல்ஸ் எட்வார்டை பிரிட்டிஷ் சிம்மாசனத்தில் அமர்த்த வேண்டுமென கோரினர்கள். இந்த எழுச்சி அதே நேரத்தில் லேன்ட்லார்டுகளின் கொடுமை மற்றும் பெருமளவில் நிலம் பிடுங்கப்பட்டது ஆகியவற்றிற்கு எதிரான ஸ்காட்லாந்து, பிரிட்டிஷ் மக்கள் திரளினரின் எதிர்ப்பை பிரதிபலித்தது. பிரிட்டனின் நிரந்தர இராணுவம் இந்த எழுச்சியை ஒடுக்கியதையடுத்து மலைப்புற ஸ்காட்லாந்தில் குலமரபு முறை விரைவாகச் சிதற ஆரம்பித்தது, நிலங்களிலிருந்து விவசாயிகள் துரத்தப்படுவதன் அளவு இன்னமும் பெருகியது.—64.

29 ஸ்காட்லாந்தில் குலமரபு முதியவர் முறை ஆதிக்கம் செலுத்திய போது குலமரபுக் குழுவின் தலைவனுக்கு, லோர்டுக்கு (''பெரிய மனிதன்'') கீழ்பட்டவர்கள் டேக்ஸ் மேன்கள் எனப்பட்டனர். லோர்ட் இந்த முதியவர்களுக்கு குலமரபு முழுவதுக்கும் சொந்தமான நிலத்தை (''டேக்'') வழங்கினன், லோர்டின் ஆட்சியை அங்கீகரிக்கும் முகமாக இவனுக்கு சிறு பரிசை வழங்கினர்கள். டேக்ஸ்மேன்கள் தம் பங்கிற்கு நிலங்களை தமக்கு உட்பட்டவர்களுக்கு பிரித்தளித்தார்கள். குலமரபு முறை அழிந்ததும் லோர்டுகள் லேன்ட்லார்டுகளாகவும் டேக்ஸ் மேன்கள் சாராம்சத்தில் முதலாளித்துவ பண்ணை சொந்தக்காரர்களாகவும் மாறினர். அதே நேரத்தில் முந்தைய பரிசு நில வாரத்துக்கு வழிவிட்டது.—65.

30 கேல்கள் வடக்கு மற்றும் மேற்கு ஸ்காட்லாந்தில் உள்ள மலைப் பிரதேசங்களின் பூர்வீகக் குடியினர், பண்டைய கெல்டுகளின் சந்ததியினர்.—65.

31 *1853* பிப்ரவரி 9இல் *New-York Daily Tribune* பத்திரிகையில் வெளியான ''தேர்தல்கள்.—நிதி குழப்பங்கள்.—சுதர்லாந்து கோமகளும் அடிமையுடைமையும்'' எனும் தன் கட்டுரையை மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

New-York Daily Tribune—1841இலிருந்து 1924 வரை வெளியிடப்பட்ட அமெரிக்க முற்போக்கான முதலாளிவர்க்க நாளிதழ். 1851 ஆகஸ்ட் முதல் 1862 மார்ச்

வரை மார்க்சும் எங்கெல்சும் இந்த நாளிதழில் கட்டுரைகள் எழுதினார்கள்.—68.

32 முப்பதாண்டுக்காலப் போர் (1618—1648)—புரோட்டஸ்டென்ட்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையேயான போராட்டத்தால் தோன்றிய பொது ஐரோப்பியப் போர். இந்தப் போராட்டத்தின் முக்கிய அரங்கமாகவும் இராணுவக் கொள்ளை மற்றும் போரில் கலந்து கொண்டவர்களின் ஆக்கிரமிப்புக் கோரிக்கைகளின் மையமாகவும் ஜெர்மனி ஆக்கப்பட்டது.—70.

33 கலைகள் சங்கம் (Society of Arts)—1754ம் ஆண்டு லண்டனில் தோற்றுவிக்கப்பட்ட பூர்ஷ்வா அறிவொளி மற்றும் பரோபகாரக் கழகம்.—72.

34 *The Economist* (''பொருளியலாளர்'')—ஆங்கில வாரப் பத்திரிகை; பொருளாதார, அரசியல் கட்டுரைகளை வெளியிட்டு வந்தது; பெரிய தொழில்துறை முதலாளிகளின் கருத்துக்களை வெளியிட்டு வந்த பத்திரிகை; 1843ஆம் வருடத்திலிருந்து லண்டனில் வெளியிடப்பட்டு வருகிறது.—73.

35 Petty Sessions (சிறு விசாரணை)—இங்கிலாந்தில் அற்பமான குற்றங்களைச் செய்தவர்களைத் தண்டிப்பதற்கும் இன்னும் மோசமான குற்றங்களைச் செய்தவர்கள் மீது பூர்வாங்க விசாரணை நடத்துவதற்கும் நடைபெறுகின்ற நீதிபதிகள் அமர்வு.—79.

36 A. Smith, *An Inquiry into the Nature and Causes of the Wealth of Nations*, Vol. I, Edinburgh, 1814, p. 237. (ஆ. ஸ்மித், ''மக்களினங்களின் செல்வத்தின் இயல்பையும் காரணங்களையும் பற்றிய ஓர் ஆராய்ச்சி'', தொகுதி 1, எடின்புர்க், 1814, பக்கம் 237).—82.

37 (Linguet, N.) *Théorie des loix civiles, ou Principes fondamentaux de la société*. T. I, Londres, 1767, p. 236. [லெங்கே, என்.] ''சிவில் விதிகளின் தத்துவம் அல்லது சமுதாயத்தின் பிரதான தூவக்கங்கள்'', தொகுதி 1, லண்டன், 1767, பக்கம் 236.—82.

38 எந்த ஒரு தொழிலாளர் ஸ்தாபனத்தையும் தோற்றுவிப்பதையும் இவற்றின் நடவடிக்கையையும் தடை செய்யும் தொழிலாளர்களின் கூட்டுகளுக்கெதிரான சட்டங்கள்

1799இலும் 1800இலும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன. 1824இல் நாடாளுமன்றம் இச் சட்டங்களை மாற்றியது, 1825இல் இது இன்னுமொரு முறை வலியுறுத்தப்பட்டது. ஆனால் இதற்குப் பின்னரும் கூட தொழிலாளர் கூட்டுகளின் நடவடிக்கை பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது. கூட்டுகளில் தொழிலாளர்களைச் சேரக் கோரியும் வேலைநிறுத்தங்களில் கலந்து கொள்ளுமாறு கேட்டும் நடந்த சாதாரண பிரச்சாரம் கூட ''நிர்ப்பந்தமாக'', ''வன்முறையாக'' கருதப்பட்டு பாதகமான குற்றமாக தண்டிக்கப்பட்டது.—83.

39 ''சதிவேலைக்கு'' எதிரான சட்டம் பிரிட்டனில் மத்தியக் கால நூற்றாண்டுகளிலேயே இருந்தது. இதன் அடிப்படையில், கூட்டுகளுக்கு எதிரான சட்டம் ஏற்கப்படும் முன்னும் இது அகற்றப்பட்ட பின்னும் தொழிலாளர்களின் ஸ்தாபனங்களும் வர்க்கப் போராட்டமும் ஒடுக்கப்பட்டன.—88.

40 1793 ஜூன் முதல் 1794 ஜூன் வரை பிரான்சில் இருந்த ஜாக்கொபின் சர்வாதிகார அரசாங்கம்.—89.

41 A. Anderson. *A Historical and Chronological Deduction of the Origin of Commerce, from the Earliest Accounts to the Present Time.* (ஆண்டர்சன், ''வர்த்தகத்தைப் பற்றி மிக ஆரம்பக் காலம் முதல் இன்று வரையிலான விவரங்களடங்கிய வரலாற்று மற்றும் காலவரிசையிலான குறிப்பு''). இதன் முதல் பதிப்பு 1764இல் லண்டனில் வெளிவந்தது.—95.

42 J. Steuart. *An Inquiry into the Principles of Political Economy.* Vol. 1, Dublin, 1770, First Book, Ch. XVI. (ஜ. ஸ்டுவர்ட், ''அரசியல் பொருளாதாரத்தின் ஆரம்பங்களைப் பற்றி ஆராய்ச்சி'', தொகுதி 1, தூப்லின், 1770, முதல் நூல், 16வது அத்தியாயம்).—96.

43 1566—1609ஆம் ஆண்டுகளின் பூர்ஷ்வா புரட்சியின் விளைவாய் ஸ்பெயினிடமிருந்து நெதர்லாந்து (இன்றைய பெல்ஜியம், ஹாலந்தின் பரப்பு) இப்புரட்சியில் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான முதலாளி வர்க்கம் மற்றும் மக்கள் திரளினரின் போராட்டமும் ஸ்பெயினின் ஆதிக்கத்திற்கு எதிரான தேசிய விடுதலை போரும் இணைந்திருந்தன. 1609இல் பல தோல்விகளுக்குப் பின் பூர்ஷ்வா ஹாலந்து குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும்படி ஸ்பெயின் நிர்ப்பந்திக்கப்பட்டது. இன்றைய

பெல்ஜியத்தின் பரப்பு ஸ்பெயினின் வசம் 1714 வரை யிருந்தது.—106.

44 1793 முதல் 1815 வரை பிரான்சிற்கு எதிராக பிரிட்டன் நடத்திய யுத்தங்களைப் பற்றி பேசப்படுகிறது.—106.

45 அபினி யுத்தங்கள்—1839—1842ஆம் ஆண்டுகளில் தனியாகவும் 1856—1858இலும் 1860இலும் பிரான்சுடன் சேர்ந்து சீனாவிற்கெதிராக பிரிட்டன் நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்கள். ஆங்கிலேயர்கள் அபினியைக் கொண்டு நடத்திய கள்ளக் கடத்தல் வர்த்தகத்திற்கெதிராக சீன ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளே முதல் யுத்தத்தின் ஆரம்பத்திற்கு சாக்காக அமைந்தன.—106.

46 கிழக்கிந்தியக் கம்பெனி—1600 முதல் 1858 வரை நிலவிய பிரிட்டிஷ் வர்த்தக கம்பெனி. இது இந்தியா, சீனா, மற்ற ஆசிய நாடுகளில் பிரிட்டனுடைய கொள்ளையடிக்கும் காலனி அரசியலின் கருவியாக விளங்கியது. இந்தியாவுடனான வர்த்தகத்தில் ஏகபோகமும் இந்நாட்டை நிர்வகிப்பதில் மிக முக்கியப் பணிகளும் நீண்ட காலமாக இக்கம்பெனிக்குச் சொந்தமானவையாக இருந்தன. 1857—1859ஆம் ஆண்டுகளின் இந்திய தேசிய விடுதலை எழுச்சி காலனியாதிக்க முறைகளை மாற்றுமாறும் 1858இல் கிழக்கிந்தியக் கம்பெனியைக் கலைத்து விடுமாறும் பிரிட்டனை கட்டாயப்படுத்தியது.—108.

47 *Geschichtliche Darstellung des Handels, der Gewerbe und des Ackerbaus der bedeutendsten handeltreibenden Staaten unser Zeit.* Bd. I, Jena, 1830, S. 371 என்ற கூலிஹின் படைப்பை மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிறார். (''நம் காலத்திய முக்கிய வர்த்தக அரசுகளின் வர்த்தகம், தொழிற்துறை மற்றும் பயிர்த்தொழில் பற்றிய வரலாற்று விளக்கம்'', தொகுதி 1, யேனா, 1830, பக்கம் 371).—111.

48 அனேகமாக மார்க்ஸ் யான் டெ விட்டுக்கு உரித்தானதாகக் கூறப்படும் *Aanwysing der heilsame politike Gronden en Maximen van de Republike van Holland en West-Friesland* என்ற நூலின் ஆங்கிலப் பதிப்பைக் குறிப்பிடக் கூடும் (''ஹாலந்து மற்றும் மேற்கு பிரிஸ்லாந்தின் முக்கிய அரசியல் கோட்பாடுகளும் நீதி மொழிகளும்''). இது முதன்முதலாக 1662இல் லேய்தெனில் பிரசுரிக்கப்பட்டது. இதில் யான் டெ விட் எழுதிய மூன்று அத்தி

யாயங்களைத் தவிர எஞ்சியவற்றின் ஆசிரியர் ஹாலந்து பொருளாதார நிபுணரும் ஆலை முதலாளியுமான பீட்டர் வான் டெர் ஹோரெ (இவரேதான் பீட்டர் டெ லா குர்) என்பது இப்போது நிலைநாட்டப்பட்டுள்ளது.—116.

49 ஏழாண்டுப் போர் (1756—1763)—நிலப்பிரபுத்துவ-முடியாட்சி அரசுகளின் ஆக்கிரமிப்பு நோக்கங்களாலும் பிரான்ஸ், பிரிட்டனின் காலனியாதிக்கப் போட்டியாலும் வெடித்த பொது ஐரோப்பியப் போர். இந்தப் போரின் விளைவாய் பிரான்ஸ் தனது மிகப் பெரும் காலனிகளை (கானடா, கிழக்கிந்தியாவிலிருந்த பிரதேசங்கள் போன்றவை) பிரிட்டனுக்கு விட்டுக் கொடுக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயிற்று; பிரஷ்யா, ஆஸ்திரியா, சாக்ஸனி ஆகிய நாடுகள் போருக்கு முன்னிருந்த தம் காலனிகளை அப்படியே வைத்திருந்தன.—117.

50 1713இல் ஒரு புறம் பிரான்சிற்கும் ஸ்பெயினிற்கும் மறு புறம் பிரெஞ்சு எதிர்ப்புக் கூட்டணியினருக்கு இடையே (பிரிட்டன், ஹாலந்து, போர்த்துகல், பிரஷ்யா, ஆஸ்திரிய காப்ஸ்பூர்குகள்) செய்து கொள்ளப்பட்ட **உத்ரேஹ்ட் சமாதான** ஒப்பந்தம் இங்கு குறிப்பிடப்படுகிறது. இந்த ஒப்பந்தம் ஸ்பெயினின் காலனிகளுக்கான நீண்ட யுத்தத்தை (இது 1701இல் ஆரம்பமாகியது) முடித்து வைத்தது. ஒப்பந்தத்தின்படி மேற்கிந்தியாவிலும் வட அமெரிக்காவிலும் இருந்த சில பிரெஞ்சு மற்றும் ஸ்பெயின் காலனிகளும் ஜிப்ரால்டரும் பிரிட்டனுக்கு வந்தன.

ஆஸிண்ட்டோ—இது சில ஒப்பந்தங்களின் பெயராகும். இதன்படி 16—18ஆம் நூற்றாண்டுகளில் ஸ்பெயின் அந்நிய அரசுகளுக்கும் தனிநபர்களுக்கும் தன் அமெரிக்கக் காலனிகளுக்கு நீக்ரோ அடிமைகளை விற்க விசேஷ உரிமையளித்தது.—122.

51 Tantae molis erat (எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது) —விர்ஜில் என்ற ரோமானிய கவிஞரின் ''எனெயிட்'' என்ற கவிதையில் வரும் வரிகள், முதலாவது நூல், 33வது கவிதை.—123.

52 C. Pecqueur, *Théorie nouvelle d'économie sociale et politiques, ou Etudes sur l'organisation des sociétés*, Paris, 1842, p. 435. (கா. பெக்கியோர், ''சமூக மற்றும் அரசியல் பொருளாதாரத்தின் புதிய தத்துவம் அல்லது சமுதாயங்களை ஒழுங்கமைப்பது

பற்றிய ஆராய்ச்சிகள்'', பாரிஸ், 1842, பக்கம் 435.)—126.

53 இந்தக் கட்டுரை, ''மூலதனம்'' நூலின் முக்கியக் கருத்து நிலைகளை பிரபலப்படுத்தும் பொருட்டு தொழிலாளர் மற்றும் ஜனநாயகப் பத்திரிகைகளில் எங்கெல்ஸ் இந்நூலின் முதல் தொகுதி பற்றி எழுதிய விமரிசனங்களில் ஒன்றாகும். எங்கெல்ஸ் சுமாராக 10 விமரிசனங்களை எழுதினார். தொழிலாளர்களுக்கான கட்டுரைகளைத் தவிர எங்கெல்ஸ் பூர்ஷ்வா பத்திரிகைகளுக்கான சில அனுமதேய விமரிசனங்களையும் எழுதினார். மார்க்சின் ''மூலதனம்'' வெளியானதை அதிகாரபூர்வமான பொருளாதார விஞ்ஞானமும் பூர்ஷ்வா பத்திரிகைகளும் ''மௌனம் எனும் சதியோடு'' எதிர்கொண்டதால் இந்த மௌனத்தை உடைப்பதற்காகவே இவை எழுதப்பட்டன. இவற்றில் எங்கெல்ஸ் இந்நூலை ஏதோ ''பூர்ஷ்வா நோக்கிலிருந்து'' விமரிசிப்பதைப் போல் விமரிசிக்கிறார். மார்க்சின் வார்த்தைகளில் சொன்னால் இந்த ''போர் சாதனத்தைப்'' பயன்படுத்தி பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களை இந்நூலைப் பற்றி பேசும்படி கட்டாயப்படுத்தவே எங்கெல்ஸ் இவ்வாறு செய்தார்.

Demokratisches Wochenblatt (''ஜனநாயக வார இதழ்'')—1868 ஜனவரி முதல் 1869 செப்டெம்பர் வரை லீப்னெஹ்டை பதிப்பாசிரியராகக் கொண்டு லெப்சிக்கில் வெளிவந்த ஜெர்மானிய தொழிலாளர் பத்திரிகை. ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியை தோற்றுவிப்பதில் பத்திரிகை கணிசமான பங்காற்றியது. 1869இல் நடந்த எய்ஸெனஹ் நிறுவன காங்கிரசில் இது சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் மத்திய பத்திரிகையாக அறிவிக்கப்பட்டு *Volksstaat* என்று புதிய பெயரைப் பெற்றது. இப்பத்திரிகையோடு மார்க்சும் எங்கெல்சும் ஒத்துழைத்தனர்.—131.

54 முதலாவது அகிலத்தின் ருஷ்யப் பிரிவு 1870 வசந்தத்தில் ஸ்விட்ஸர்லாந்தில் ருஷ்ய அரசியல் குடியேற்றக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு விதமான ஜனநாயக இளைஞர்களாக இருந்த இவர்கள் மாபெரும் புரட்சிகர ஜனநாயகவாதிகளான செர்னிஷேவ்ஸ்கி மற்றும் தப்ரலியூபவின் லட்சியங்களில் வளர்க்கப்பட்டிருந்தனர். 1870 மார்ச் 12இல் இப்பிரிவின் கமிட்டி பொதுக் கவுன்

சிலுக்கு தன் வேலைதிட்டத்தையும் விதிமுறைகளையும் அனுப்பியது, சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கவுன்சிலில் மார்க்சை தம் பிரதிநிதியாக இருக்கக் கோரும் ஒரு வேண்டுகோள் மார்க்சிற்கு அனுப்பப்பட்டது.

ருஷ்யப் பிரிவின் உறுப்பினர்கள் ஸ்விட்ஸர்லாந்து மற்றும் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தில் தீவிரப் பங்கேற்றனர். இப்பிரிவு, ருஷ்யாவிலிருந்த புரட்சி இயக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றது; 1872 இல் இது கலைந்தது.—151.

55 1870 மார்ச் 28 வாக்கில், அகிலத்தின் உள்ளே பொதுக் கவுன்சில், மார்க்ஸ், இவருடைய ஆதரவாளர்களுக்கு எதிரான பக்கூனின்வாதிகளின் போராட்டம் வலுத்த ஒரு சூழ்நிலையில் இந்த அந்தரங்கமான செய்தி மார்க்சால் எழுதப்பட்டது. 1870 ஜனவரி 1 லேயே பொதுக் கவுன்சிலின் விசேஷக் கூட்டத்தில் இதன் தொடர்பில் ஒரு ரகசிய சுற்றுக் கடிதம் ஏற்கப்பட்டது. பக்கூனின்வாதிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்த ரோமானிய ஸ்விட்ஸர்லாந்தின் பிரதேசக் கவுன்சிலுக்கு மார்க்ஸ் இக்கடிதத்தை எழுதியிருந்தார். ஜெர்மனியின் செயலாளர்-நிருபர் என்ற வகையில் மார்க்ஸ் ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சிக் கமிட்டிக்கு அனுப்பிய ''அந்தரங்கமான செய்தியில்'' சுற்றுக் கடிதம் சேர்க்கப்பட்டது.

இந்த பதிப்பில் ''அந்தரங்கமான செய்தியின்'' 4வது, 5வது அம்சங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. இவற்றில் பிரிட்டிஷ் தொழிலாளர் மற்றும் அயர்லாந்து தேசிய விடுதலை இயக்கத்தின் பால் (இவைதான் பக்கூனின்வாதிகளின் விசேஷ தாக்குதலுக்கு உள்ளாயின) பொதுக் கவுன்சிலின் உறவு முறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அக்காலகட்டத்தில் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான போராட்டத்தில் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்திற்குள்ள முக்கியத்துவத்தை ஆதாரமாகக் கொண்டும் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்திற்கு பொதுக் கவுன்சில் நேரடியாகத் தலைமை தாங்க வேண்டியது அவசியமாயிருந்ததாலும் மற்ற நாடுகளில் உள்ளதைப் போல் பிரிட்டனில் அகிலத்தின் பிரதேசக் கவுன்சிலைத் தோற்றுவிப்பது எப்படி விவேகமாகாது என்று மார்க்ஸ் 4வது அம்சத்தில் விளக்குகிறார்.

இச்செய்தியின் 5வது அம்சத்தில் மார்க்ஸ் இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தின் உதாரணத்தில், அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையிலுள்ள தொடர்பையும் பாட்டாளி வர்க்கத்தின் இயற்கையான கூட்டாளிகள் என்ற வகையில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பங்கையும் காட்டுகிறார்.—153.

56 *L'Égalité* (''சமத்துவம்'')—ஸ்விட்ஸர்லாந்து வாரப் பத்திரிகை, அகிலத்தினுடைய ரோமானியக் கிளையின் பத்திரிகை; 1868 டிசம்பர் முதல் 1872 டிசம்பர் வரை பிரெஞ்சு மொழியில் ஜினீவாவில் வந்தது. சிறிது காலம் பக்கூனினின் செல்வாக்கின் கீழிருந்தது. 1870 ஜனவரியில் பதிப்பாசிரியர் குழுவிலிருந்து பக்கூனின்வாதிகளை வெளியேற்றுவதில் ரோமானிய பிரதேசக் கவுன்சில் வெற்றி பெற்றது. இதன் பின் இது பொதுக் கவுன்சிலின் கொள்கையை ஆதரிக்கத் துவங்கியது.—153.

57 *The Pall Mall Gazette* (''பால்-மால்'' பத்திரிகை)—1865 முதல் 1920 வரை லண்டனில் வெளிவந்த தினசரி; 60—70ஆம் ஆண்டுகளில் பத்திரிகை கன்சர்வெட்டிவ் போக்கை பின்பற்றியது.

The Saturday Review 13ஆம் குறிப்பைப் பார்க்க.

The Spectator (''பார்வையாளன்'')—மிதவாதப் போக்குடைய பிரிட்டிஷ் வாரப் பத்திரிகை, 1828 முதல் லண்டனில் வெளிவந்தது.

The Fortnightly Review (''இருவார சுருக்கம்'')—வரலாறு, தத்துவஞானம், இலக்கியம் ஆகியவற்றின் பிரச்சினைகள் சம்பந்தமான பூர்ஷ்வா-மிதவாதப் போக்குடைய பிரிட்டிஷ் இதழ்; மேற்கூறிய பெயரில் 1865 முதல் 1934 வரை லண்டனில் வெளி வந்தது.—154.

58 நிலம் மற்றும் தொழிலாளர் சங்கம்—இது 1869 அக்டோபரில் பொதுக் கவுன்சிலின் பங்கேற்போடு லண்டனில் தோற்றுவிக்கப்பட்டது. நிலத்தை தேசவுடைமையாக்குதல், வேலை நேரத்தைக் குறைத்தல், சர்வபொது வாக்குரிமையை அளித்தல், கிராம சமூகங்களை ஏற்படுத்துதல் பற்றிய கோரிக்கைகள் இதன் வேலைதிட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.—155.

59 1801 ஜனவரி 1 முதல் அமலுக்கு வந்த ஆங்கில அயர்லாந்து பலவந்தமான இணைப்பு இங்கே குறிப்பிடப்படுகிறது.

இது அயர்லாந்து சுயாட்சியின் கடைசி சுவடுகளை அழித்தது, அயர்லாந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தது, அயர்லாந்தை முற்றிலுமாக பிரிட்டனுக்கு அடிமைப்படுத்தியது.—156.

60 விடுதலைப் போராட்டத்தில் கைதானவர்களுக்கு பொது மன்னிப்பு அளிப்பதற்காக 1869 கோடையிலும் இலையுதிர் காலத்திலும் அயர்லாந்தில் பரவிய இயக்கத்திற்கு பொதுக் கவுன்சில் அளித்த ஆதரவு குறிப்பிடப்படுகிறது.—158.

61 முதலாம் அகிலத்தின் லண்டன் மகாநாடு 1871 செப்டெம்பர் 17—23இல் நடந்தது. பாரிஸ் கம்யூனின் தோல்விக்குப் பின் அகிலத்தின் மீது கடுமையான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட சூழ்நிலையில் நடந்த இது ஒப்பீட்டளவில் சிறியதாக இருந்தது: இதன் பணியில் தீர்மானகரமான வாக்குரிமையுடன் 22 பிரதிநிதிகளும் கருத்தை வெளியிடும் வாக்குரிமையுடன் 10 பிரதிநிதிகளும் பங்கேற்றனர். எந்த நாடுகளால் மகாநாட்டிற்கு பிரதிநிதிகளை அனுப்ப முடியவில்லையோ அந்நாடுகள் பொதுக் கவுன்சிலின் செயலாளர்-நிருபர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன. மார்க்ஸ் மகாநாட்டில் ஜெர்மனியையும் எங்கெல்ஸ் இத்தாலியையும் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கத்தைப் பற்றிய பிரச்சினைதான் லண்டன் மகாநாட்டின் பணியில் மைய இடத்தை வகித்தது, மார்க்ஸ், எங்கெல்சின் உரைகளில் பன்முக நோக்கோடு பிரதிபலித்தது. ''தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றிய'' தீர்மானத்தை மகாநாடு ஏற்றது. இதில் முக்கியப் பகுதி ஹேக் காங்கிரசின் தீர்மானத்தின்படி சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் பொது விதிமுறைகளில் சேர்க்கப்பட்டது. மகாநாட்டின் ஒரு சில தீர்மானங்கள், அகிலத்தை பிளவுபடுத்த முயன்ற பக்கூனின்வாதிகளுக்கு எதிரானவையாக இருந்தன.—159.

62 1872 பிப்ரவரி 20இல் நடந்த பொதுக் கவுன்சிலின் கூட்டத்தில், பாரிஸ் கம்யூனின் முதலாண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக லண்டனில் மார்ச் 18ஆம் தேதி ஒரு பெரும் பொதுக்கூட்டத்தை நடத்துவதென்ற ஆலோசனை ஏற்கப்பட்டது. இடச் சொந்தக்காரர்

கடைசி நிமிடத்தில் அரங்கத்தைத் தர மறுத்ததால் பொதுக்கூட்டம் நடைபெறவில்லை. என்ருலும் முதலாம் அகிலத்தின் உறுப்பினர்களும் முந்தைய கம்யூன் உறுப்பினர்களும் மார்ச் 18இல் விழா கூட்டத்தை நடத்தினர். பொதுக்கூட்டத்திற்காக மார்க்ஸ் விசேஷமாக எழுதிய மூன்று சுருக்கமான தீர்மானங்கள் இதில் ஏற்கப்பட்டன.—162.

63 பாரிஸ் அருகேயுள்ள வெர்சேயில் கம்யூன் நிலவிய போது தியேரின் எதிர்ப்புரட்சி அரசாங்கம் இருந்தது. இது பாட்டாளி வர்க்கப் புரட்சியில் கலந்து கொண்டவர்கள் மீது கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது.—162.

64 நிலம் பற்றிய பிரச்சினையின் மிக முக்கிய மார்க்சிய ஆவணங்களில் ஒன்ருன நிலத்தை தேசவுடைமையாக்குதல் எனும் கையெழுத்துப் பிரதி, அகிலத்தின் மான்செஸ்டர் பிரிவில் நிலத்தை தேசவுடைமையாக்குவது பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட்டதன் தொடர்பாக மார்க்சால் எழுதப்பட்டது. பொதுக் கவுன்சிலின் உறுப்பினராகிய டுபோன் மார்ச் 3ஆம் தேதி எங்கெல்சிற்கு எழுதிய கடிதத்தில், நிலம் பற்றிய பிரச்சினையில் பிரிவு உறுப்பினர்களின் கண்ணோட்டங்களில் குழப்பம் இருப்பதாகக் குறிப்பிட்டு, பிரிவின் கூட்டத்தில் தான் நிகழ்த்த விருக்கும் உரையின் ஆய்வுகளைத் தெரிவித்து அவருடைய கருத்துகளைக் கேட்டார். நிலத்தை தேசவுடைமையாக்கும் பிரச்சினையில் தனது கருத்துகளைப் பற்றிய விரிவான விளக்கத்தை மார்க்ஸ் அளித்தார். டுபோன் இதை முழுமையாகத் தன் உரையில் பயன்படுத்திக் கொண்டார். மார்க்ஸ் நிலத்தை தேசவுடைமையாக்குவதை பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் சமுதாயம் முழுவதையும் சோஷலிச ரீதியாக மாற்றியமைப்பது பற்றிய கடமைகளுடன் நெருக்கமாகத் தொடர்பு படுத்துகிறார். —164.

65 1868 செப்டெம்பர் 6—13இல் நடந்த முதலாம் அகிலத்தின் பிரஸ்ஸல்ஸ் காங்கிரசில், இருப்புப் பாதைகள், இயற்கைச் செல்வங்கள், சுரங்கங்கள், கனிப்படிவங்கள், சாகுபடி நிலம் ஆகியவற்றை பொதுச் சொத்தாக்குவதன் அவசியம் பற்றிய தீர்மானம் ஏற்கப்பட்டது.—167.

66 முதலாவது அகிலத்தின் ஹேக் காங்கிரஸ் 1872 செப்

டெம்பர் 2—7 தேதிகளில் நடந்தது. இதில் 15 தேசிய ஸ்தாபனங்களைச் சேர்ந்த 65 பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்தக் காங்கிரஸ் வேலைகளின் தலைமையை மார்க்சும் எங்கெல்சும் மேற்கொண்டனர். பல ஆண்டுகளாக மார்க்சும் எங்கெல்சும் அவர்களது சக தோழர்களும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்த எல்லா வகையான குட்டி முதலாளித்துவ குறுங்குழுவாதப் போக்குகளையும் எதிர்த்து நடத்தி வந்த போராட்டம் இந்தக் காங்கிரசில் முடிவுற்றது. அராஜகவாதிகளின் பிளவுறுத்தும் செயல்கள் கண்டிக்கப்பட்டன. அவர்களது தலைவர்கள் (பக்கூனினும் கில்யோமும்) அகிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஹேக் காங்கிரசின் தீர்மானங்கள் பல்வேறு நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் சுயமான அரசியல் கட்சிகளை தோற்றுவிப்பதற்கான அடிப்படையாக மாறின.—169.

67 ஹேக் காங்கிரஸ் முடிவடைந்ததும் மார்க்ஸ் மற்ற பிரதிநிதிகளோடு, ஆம்ஸ்டர்டாமின் ஸ்தல அகிலப் பிரிவை சந்திப்பதற்காக அங்கு சென்றார். செப்டெம்பர் 8ஆம் தேதி இவர் ஹேக் காங்கிரசின் முடிவுகளைப் பற்றி கூட்டத்தில் உரையாற்றினார். தன்னுடைய உரையில் பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கருத்துகளை இடையறாது வலியுருத்திய மார்க்ஸ், திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகள், வர்க்க சக்திகளின் நிலவரம் ஆகியவற்றிற்கேற்ப பல்வேறு நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் வழிவகைகள் பற்றிய பிரச்சினையை ஆக்க பூர்வமாக அணுக வேண்டுமென மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டினார். புரட்சிகர வன்முறையோடு கூட—அந்தச் சூழ்நிலைகளில் மிகப் பெரும்பாலான நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டி தக்க வைக்க இது அவசியம்—ஒருசில நாடுகளில் (பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, ஒருவேளை ஹாலந்தில்) உருவாகியுள்ள திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளின் காரணமாக (அக்காலத்தில், வளர்ச்சியடைந்த அதிகார வர்க்கம், அதிகாரச் சடங்கு இயந்திரம், இராணுவ இயந்திரம் இல்லாமலிருந்தது) புரட்சிகர வன்முறையை நாடாமலேயே பாட்டாளி வர்க்கத்தினுல் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியும் எனும் ஆய்வுரையை மார்க்ஸ் முன்மொழிந்து, ஆதாரப்படுத்தினார்.—171.

68 1872 செப்டெம்பரில் பெர்லினில் நடைபெற்ற மூன்று பேரரசர்களின்—முதலாம் வில்ஹெல்ம் (ஜெர்மனி), பிரான்த்ஸ்-இயோசிப் (ஆஸ்திரோ-ஹங்கேரி), இரண்டாம் அலெக்சாந்தர் (ருஷ்யா)—சந்திப்பைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது; புரட்சி இயக்கத்திற்கெதிரான கூட்டுப் போராட்டத்தைப் பற்றிய பிரச்சினை இதில் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றாகும்.—173.

69 *Literarisches Centralblatt für Deutschland* (''ஜெர்மனிக்கான மத்திய இலக்கியக் குறிப்பு'')—ஜெர்மானிய விஞ்ஞான-செய்தி, மேற்குறிப்பு, விமரிசன வார சஞ்சிகை; 1850—1944இல் லேப்சிகில் வெளிவந்தது.—176.

70 ''மூலதனம்'' நூலின் முதலாவது தொகுதியின் முதல் ஜெர்மானிய பதிப்பின் முதல் அத்தியாயம் (''பண்டமும் பணமும்'').—176.

71 D. Ricardo, *On the Principles of Political Economy and Taxation*, London, 1821, p. 479. (ரிக்கார்டோ, ''அரசியல் பொருளாதாரம் மற்றும் வரி விதித்தலின் தொடக்கங்களைப் பற்றி'', லண்டன், 1821, பக்கம் 479).—177.

2 **மியூச்சுவலிஸ்டுகள்** (Mutuel—பரஸ்பரம் என்பதிலிருந்து)—பரஸ்பர உதவிக்கு (கூட்டுறவுகள், பரஸ்பர உதவிக் கழகங்கள் போன்றவற்றை ஏற்படுத்துவதன் மூலம்) ஏற்பாடு செய்வதன் மூலம் உழைப்பாளிகளை விடுவிக்கும் சீர்திருத்தல்வாத குட்டி முதலாளித்துவ திட்டத்தை முன்வைத்த புரூதோன்வாதிகள் 19ஆம் நூற்றாண்டின் 60ஆம் ஆண்டுகளில் தம்மை இப்படி அழைத்துக் கொண்டனர்.—181.

73 1871ஆம் ஆண்டு லண்டன் மகாநாட்டில் ஏற்கப்பட்ட தீர்மானங்கள் குறிப்பிடப்படுகின்றன: ''தேசிய கவுன்சில்கள், போன்றவற்றின் பெயர்களைப் பற்றி'' (2வது தீர்மானம், 1, 2, 3வது ஷரத்துக்கள்), ''தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி'' (9வது தீர்மானம்), ''சோஷலிச ஜனநாயகக் கூட்டைப் பற்றி'' (16வது தீர்மானம்), ''ரோமானிய ஸ்விட்ஸர்லாந்தில் ஏற்பட்ட பிளவு குறித்து'' (17வது தீர்மானம்).—182.

74 1870 செப்டெம்பர் 4ல், செடான் அருகே (பிராங்கோ-ஜெர்மன் யுத்தத்தில்) பிரெஞ்சு இராணுவம் முறியடிக்

கப்பட்டதைக் குறித்த செய்திகள் வந்ததும் மக்கள் திரளினரின் புரட்சிப் போராட்டம் நடந்தது. இதன் விளைவாய் மூன்றும் நெப்போலியனின் இரண்டாவது பேரரசு வீழ்த்தப்பட்டு குடியரசு பிரகடனப்படுத்தப் பட்டது. ஆனால் உருவாகிய தற்கால அரசாங்கத்தில் மிதவாத குடியரசுவாதிகளைத் தவிர முடியரசுவாதி களும் பங்கேற்றனர். பாரிசின் இராணுவ கவர்ன ராகிய த்ரொஷூ மற்றும் இவனுடைய நடைமுறை ஊக்குவிப்பாளனாகிய தியேரின் தலைமையிலான இந்த அரசாங்கம் பிரெஞ்சு முதலாளித்துவ-நிலவுடைமை வட்டங்களின் சரணடையும் மனநிலைகளை, மக்கள் திர ளினரின் முன் இவ்வட்டங்களுக்கு இருந்த அச்சத்தைப் பிரதிபலித்து தேசத் துரோகமாக வெளி எதிரியுடன் (பிரஷ்யா) சதி ஒப்பந்தம் செய்து கொண்டது.—184.

75 தான் உருவாக்கிய குழப்பமான சோஷலிச வேலை திட் டத்தை (''வர்க்கங்களை சமூக, பொருளாதார ரீதியாக சமப்படுத்துதல்'', அரசையும் வம்ச உரிமைகள் போன்ற வற்றையும் ஒழித்தல், போன்றவை), 1868 செப்டெம் பரில் பெர்னில் நடைபெற்ற சமாதான, சுதந்திர சங் கத்தின் காங்கிரசில் (பூர்ஷ்வா-சமரச மனபாங்கு ஸ்தா பனம்) ஏற்குமாறு செய்ய பக்கூனின் செய்த முயற்சி களைப் பற்றி இங்கே கூறப்படுகிறது. பெரும்பான்மையான வாக்குகளால் பக்கூனினின் வேலைத்திட்டம் நிராகரிக்கப் பட்ட பின் இவர் சங்கத்திலிருந்து வெளியேறி சோஷ லிஸ்டு ஜனநாயகத்தின் சர்வதேசக் கூட்டணியை ஏற் படுத்தினர்.—185.

76 1869 செப்டெம்பர் 6—11இல் நடைபெற்ற முதலாம் அகிலத்தின் பாஸெல் காங்கிரசில், ஸ்தாபன பிரச்சினை கள் சம்பந்தமாக (இவை பொதுக் கவுன்சிலின் உரிமை களை விரிவுபடுத்தின) ஏற்கப்பட்ட தீர்மானங்கள்.—188.

77 *Il Proletario* (''பாட்டாளி'')—1872 முதல் 1874 வரை துரீனில் வெளிவந்த இத்தாலியப் பத்திரிகை. பக்கூனின் வாதிகளுக்கு ஆதரவாக, முதலாம் அகிலத்தின் பொதுக் கவுன்சிலுக்கு எதிராகப் போராடியது.

Gazzettino Rosa (''சிவப்பு பத்திரிகை'')—1867 முதல் 1873 வரை மிலானில் வெளிவந்த இத்தாலிய தினசரி, 1871இல் பாரிஸ் கம்யூனை ஆதரித்து எழுதியது, அகி லத்தின் விவரங்களைப் பிரசுரித்தது; 1872 முதல் பக் கூனின்வாதிகளின் செல்வாக்கின் கீழிருந்தது.—188.

78 *La Liberté* (''விடுதலை'')—1865 முதல் 1873 வரை பிரஸ்ஸல்ஸில் வெளிவந்த பெல்ஜிய ஜனநாயக பத்திரிகை; 1867 முதல் பிரஸ்ஸல்ஸில் அகிலத்தின் பத்திரிகைகளில் ஒன்றாக இருந்தது.—190.

79 **1871 ஆம் ஆண்டின் பிரெஞ்சு பிரிவு** லண்டனில் 1871 செப்டெம்பரில், பிரான்சிலிருந்து வெளியேறிய பாரிஸ் கம்யூனின் உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டது. பிரிவின் தலைமை ஸ்விட்ஸர்லாந்திலிருந்த பக்கூனின்வாதிகளுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி, அவர்களுடன் சேர்ந்து இயங்கியது, அகிலத்தின் ஸ்தாபனக் கோட்பாடுகளை இவர்கள் தாக்கியதை ஆதரித்தது. பிரிவின் விதிமுறைகளில் சில ஷரத்துக்கள் பொது விதிமுறைகளுக்கு முரண்பாடானவையாக இருந்ததால் பிரிவு அகிலத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பின்னல் இப்பிரிவு சில குழுக்களாகப் பிரிந்தது.—190.

80 1871 நவம்பர் 12இல் சோன்வில்யேயில் (ஸ்விட்ஸர்லாந்து) பக்கூனின்வாத ஜூராப் பிரதேசக் கிளையின் காங்கிரசில் ஏற்கப்பட்ட ''சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் எல்லா கிளைகளுக்குமான சுற்றறிக்கை'' இங்கு குறிப்பிடப்படுகிறது. 1871ஆம் ஆண்டு லண்டன் மகாநாட்டின் தீர்மானங்களையும் பொதுக் கவுன்சிலின் உரிமைகளையும் மறுத்த சுற்றறிக்கை, பொதுக் கவுன்சில் தன் அதிகாரங்களை மீறுவதாக குற்றஞ்சாட்டி, அகிலத்தின் பொது விதிமுறைகளை மறுபரிசீலனை செய்யவும் பொதுக் கவுன்சிலைக் கண்டிக்கவும் காங்கிரசை உடனடியாகக் கூட்டுமாறு எல்லாப் பிரிவுகளுக்கும் சுற்றறிக்கை முன்மொழிந்தது.—191.

81 Federazione Operaia—1871 இலையுதிர்க் காலத்தில் நூரீனில் தோற்றுவிக்கப்பட்ட குடியரசு ஸ்தாபனம், பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளின் செல்வாக்கின் கீழிருந்தது.—192.

82 *Ficcanaso* (''தலையிடுவோன்'')—1868 முதல் 1872 வரை நூரீனில் வெளிவந்த குடியரசு நகைச்சுவை இத்தாலிய தினசரி.—192.

83 *La Révolution Sociale* (''சமூகப் புரட்சி'')—1871 அக்டோபர் முதல் 1872 ஜனவரி வரை பிரெஞ்சு மொழியில் ஜினீவாவில் வெளிவந்த வாரப் பத்திரிகை; 1871 நவம்பர் முதல்—அராஜகவாத ஜூராப் பிரதேச கிளையின் அதிகாரபூர்வமான பத்திரிகை.—192.

81 *Égalité*—56ஆம் குறிப்பைப் பார்க்க.—192.

85 ''சோன்வில்யே காங்கிரசில் கலந்து கொண்டவர்களில் 16 பேரின் சுற்றறிக்கைக்கு ரோமானியக் கிளையின் கமிட்டி அளித்த பதில்'' எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். —192.

86 12ஆம் குறிப்பைப் பார்க்க.—192.

87 ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகளின் சாக்ஸன் காங்கிரஸ் 1872 ஜனவரி 6—7இல் ஹெம்னிட்ஸில் நடந்தது. இது சோன்வில்யே சுற்றறிக்கை (80ஆம் குறிப்பைப் பார்க்க) மற்றும் அகிலத்தின் உள்ளே நடந்த அராஜகவாதிகளுக்கெதிரான போராட்டம் ஆகியவற்றின் பால் உள்ள உறவையும் விவாதித்தது. காங்கிரஸ், பொதுக் கவுன்சிலே ஒருமனதாக ஆதரித்து 1871ஆம் ஆண்டு லண்டன் மகாநாட்டின் தீர்மானங்களே ஆமோதித்தது. —192.

88 1871 டிசம்பர் 24—25இல் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற அகிலத்தின் பெல்ஜியக் கிளையின் காங்கிரஸ், சோன்வில்யே சுற்றறிக்கையை விவாதித்த போது, பொதுக் காங்கிரசை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்ற ஸ்விட்ஸர்லாந்து அராஜகவாதிகளின் கோரிக்கைகளே ஆதரிக்கவில்லே; ஆனல் அதே சமயம், நடைபெறவிருக்கும் ஹேக் காங்கிரசில் விவாதிப்பதற்காக அகிலத்தின் புதிய விதிமுறைகளின் நகலே உருவாக்குமாறு பெல்ஜிய கிளைக் கவுன்சிலுக்கு கட்டளேயிட்டது.—192.

89 *Neuer Social-Demokrat* (''புதிய சமூக-ஜனநாயகவாதி'') —1871 முதல் 1876 வரை பெர்லினில் வெளிவந்த ஜெர்மானியப் பத்திரிகை; லஸ்ஸால்வாத ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கப் பத்திரிகை; அகிலத் தலேமை மற்றும் ஜெர்மானிய சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சிக்கெதிராகப் போராடியது, பக்கூனின்வாதிகளே ஆதரித்தது.—193.

90 1869இல் பக்கூனினுடன் தொடர்பேற்படுத்திக் கொண்ட நெச்சாயெவ் ஒரு சில ருஷ்ய நகரங்களில் ''மக்களின் பழிக்குப் பழி'' எனும் சதி ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கான வேலேயில் இறங்கினர். ''முழு அழிவு'' என்ற அராஜகவாதக் கருத்துகள் இவர் ஏற்படுத்திய குழுக்களில் பிரச்சாரம் செய்யப்பட்டன. புரட்சிகர மனநிலேயைக் கொண்டிருந்த மாணவர்கள், ஜாரி

சத்தின் மீதான கடும் கண்டனம், இதற்கெதிரான உறுதியான போராட்ட அறைகூவல்கள் ஆகியவற்றுல் கவரப்பட்டு நெச்சாயெவ் ஸ்தாபனத்தில் சேர்ந்தனர். ''ஐரோப்பியப் புரட்சிக் கழகப்'' பிரதிநிதியாக தான் பக்கூனினிடமிருந்து பெற்ற அத்தாட்சியைப் பயன்படுத்திய நெச்சாயெவ் தன்னை அகிலத்தின் பிரதிநிதியாகக் காட்ட முயற்சித்தார், இதனுல் தன் ஸ்தாபனத்தில் இருந்தோரை குழப்பத்தில் ஆழ்த்தினர். நெச்சாயெவ் ஸ்தாபனம் முறியடிக்கப்பட்டு 1871 கோடையில் பீட்டர்ஸ்பர்கில் இதன் உறுப்பினர்கள் மீது நீதி விசாரணை நடந்ததையடுத்து, மக்களைக் கவர்ந்து, இரகசிய ஸ்தாபனத்தில் சேர்ப்பதற்காக இவர் பயன்படுத்திய அதி சாகச முறைகள் அம்பலப்படுத்தப்பட்டன.—194.

91 ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுக் சங்கம்—லஸ்ஸாலின் தீவிரப் பங்கேற்போடு 1863இல் தோற்றுவிக்கப்பட்ட ஜெர்மானியத் தொழிலாளர்களின் அரசியல் ஸ்தாபனம். இச்சங்கம் பொது வாக்குரிமைக்கான போராட்டம், சமாதானமான நாடாளுமன்ற நடவடிக்கை ஆகியவற்றூடு தன் லட்சியங்களை மட்டுப்படுத்திக் கொண்டு சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைபிடித்தது. வெளிநாட்டுக் கொள்கையில் இதன் தலைவர்கள் தேசியவாத நிலையைக் கடைபிடித்தனர்.—197.

92 1869 ஆகஸ்டு 7—9இல் எய்ஸெனஹில் ஜெர்மனி, ஆஸ்திரிய, ஸ்விட்ஸர்லாந்து சமூக-ஜனநாயகவாதிகளின் பொது ஜெர்மானியக் காங்கிரசில் ஜெர்மானியச் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சி நிறுவப்பட்டது; இதன் வேலைதிட்டம் மொத்தத்தில் அகில விதிமுறைகளின் மனப்பாங்கில் இருந்தாலும் இதில் லஸ்ஸால்வாதிகளுக்கான ஒரு சில இணக்கங்கள் இருந்தன.—197.

93 கி.வி.பி. ஹேகல், ''ஆன்மாவின் புலப்பாட்டு இயல்'', பத்தி ''அறிவொளியூட்டுதலின் உண்மை''.—201.

94 லஸ்ஸாலின் கண்ணேட்டங்களை விமரிசனம் செய்து Volksstaatஇற்கு கட்டுரையையோ அல்லது சிறு பிரசுரத்தையோ எழுதுமாறு 1872—1873இல் லீப்னெஹ்டும் ஹெப்னரும் மார்க்சை பன்முறை வேண்டினர்.—202.

95 1874 ஆகஸ்டில் ஸோர்கே பொதுக் கவுன்சிலிலிருந்து வெளியேறினர்.—203.

96 பிரான்சிலிருந்த மூன்றும் நெப்போலியனின் பேரரசு (1852—1870).—203.

பெயர்க் குறிப்பகராதி

அய்க்கின் [Aikin], ஜான் (1747—1822)—ஆங்கிலேய மருத்துவர், தீவிரவாதக் கட்டுரையாளர்.—105, 120, 122.

அர்பத்னுட் [Arbuthnot], ஜான்—ஆங்கிலேயப் பண்ணைச் சொந்தக்காரர், ''உணவுப் பொருட்களின் மீதான இன்றைய விலைகளுக்கும் பண்ணையின் அளவிற்கும் இடையிலான தொடர்பைப் பற்றிய ஆராய்ச்சி'' எனும் நூலின் ஆசிரியர்.—62.

ஆடிங்டன் [Addington], ஸ்திவென் (1729—1796)—ஆங்கிலேய பாதிரியார், பல பாட நூல்களின் ஆசிரியர்.—59.

ஆண்டர்ஸன் [Anderson], ஆடம் (சுமார் 1692—1765)—ஸ்காட்லாந்து பொருளாதார நிபுணர்.—95, 121.

ஆண்டர்ஸன் [Anderson], ஜேம்ஸ் (1739—1808)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர்.—59, 65, 95.

ஆப்பியன் (1ஆம் நூற்றாண்டின் இறுதி—2ஆம் நூற்றாண்டின் 70ஆம் ஆண்டுகள்)—பண்டைய ரோமானிய வரலாற்று அறிஞர்.—61.

ஆன் (1665—1714)—ஆங்கிலேய ராணி (1702—1714)—80.

ஈடன் [Eden], பிரெடெரிக் மோர்ட்டன் (1766—1809)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், ஸ்மித்தின் சீடர்.—52, 56—57, 60, 62, 118, 123,

உர்கார்ட் [Urquhart], டேவிட் (1805—1877)—ஆங்கிலேய ராஜதந்திரி, பிற்போக்குக் கட்டுரையாளர் மற்றும் அரசியல் பிரமுகர்.—68, 100—101, 103.

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் (1820—1895)—192—205.

எட்வார்டு III (1312—1377)—ஆங்கிலேய மன்னர் (1327—1377).—82.

எட்வார்டு VI (1537—1553)—ஆங்கிலேய மன்னர் (1547—1553).—76, 77.

எலிஸபெத் (1533—1603)—ஆங்கிலேய ராணி (1558—1603).—49, 77, 78, 84, 86.

என்ஸர் [Ensor], ஜார்ஜ் (1769—1843)—ஆங்கிலேயக் கட்டுரையாளர், மால்தஸ் தத்துவத்தை விமரிசித்தவர்.—66.

ஒழியே [Augier], மரி—பிரெஞ்சுப் பத்திரிகையாளர், பொருளாதார பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகளின் ஆசிரியர்.—124.

ஓவன் [Owen], ராபர்ட் (1771—1858)—ஆங்கிலேயக் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—131.

ஃபாசெட் [Fawcett], ஹென்ரி (1833—1884)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், ஜான் ஸ்டுவர்ட் மில்லின் சீடர்.—103.

ஃபாவ்ர் [Favre], ஜூல் (1809—1880)—பிரெஞ்சு வழக்குரைஞர், அரசியல்வாதி, மிதவாத பூர்ஷ்வா குடியரசுவாதிகளின் தலைவர்களில் ஒருவர், அகிலத்திற்கெதிரான போராட்டத்தை ஊக்குவித்தவர்களில் ஒருவர்.—160, 188.

ஃபிரெய்டக் [Freytag], கூஸ்தவ் (1816—1895)—ஜெர்மானிய எழுத்தாளர்.—85.

ஃபில்டன் [Fielden], ஜான் (1784—1849)—ஆங்கிலேய ஆலை முதலாளி, கொடை வள்ளல்.—116—120.

ஃபூரியே [Fourier], ஷார்ல் (1772—1837)—பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்ட்.—131.

ஃபோர்டெஸ்க்யூ [Fortescue], ஜான் (சுமார் 1394—சுமார் 1476)—ஆங்கிலேயச் சட்ட நிபுணர், பிரிட்டிஷ் அரசு அமைப்பு பற்றிய பல படைப்புகளின் ஆசிரியர்.—43.

ஃபோர்ஸ்டார் [Forster], நதேனியல் (சுமார் 1726—1790)—ஆங்கிலேய பாதிரி, பல பொருளாதாரப் படைப்பு

களின் ஆசிரியர், தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்தார். —57, 59.

ஃப்லெரோவ்ஸ்கி—போர்வி, வசிலி வசிலியெவிச் பார்க்க.

ஃப்ளெட்சர் [Fletcher], ஏன்ட்ரியூ (1655—1716)—ஸ்காட்லாந்து அரசியல்வாதி, ஸ்காட்லாந்தின் சுதந்திரத்திற்கு ஆதரவாகப் போராடினார்.—51.

கல்பெப்பர் [Calpeper], தாமஸ் (1578—1662)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், மெர்க்கன்டலிசத்தின் ஆதரவாளர்.—123.

காப்டென் [Cobden], ரிச்சார்டு (1804—1865)—ஆங்கிலேய ஆலை முதலாளி, தங்குதடையற்ற வர்த்தகத்தின் ஆதரவாளர்களில் ஒருவர், தானியச் சட்டங்களுக்கு எதிரான சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர்.—23.

கார்ல் V (1500—1558)—புனித ரோமானியப் பேரரசர் (1519—1556), முதலாம் கார்ல் எனும் பெயரில் ஸ்பெயின் மன்னர் (1516—1556).—80.

கார்ல் X (1622—1660)—ஸ்வீடன் மன்னர் (1654—1660). —55.

கார்ல் XI (1655—1697)—ஸ்வீடன் மன்னர் (1660—1697). —55.

கிளாட்ஸ்மிதன் [Gladstone], வில்லியம் யூவர்த் (1809—1898)—ஆங்கிலேய அரசுப் பிரமுகர், 19ம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் மிதவாதக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், பன்முறை பிரதம மந்திரியாக இருந்தார்.—87, 184.

கிஸ்பர்ன் [Gisborne], தாமஸ் (1758—1846)—ஆங்கிலேய இறை இயலர், கிறிஸ்துவ மன ஒழுக்கம் பற்றிய பல நூல்களின் ஆசிரியர்.—120.

குகெல்மன் [Kugelmann], லுட்விக் (1830—1902)—ஜெர்மானிய மருத்துவர், 1848—1849ம் ஆண்டுகளின் புரட்சியில் பங்கேற்றவர், முதலாம் அகிலத்தின் உறுப்பினர், மார்க்ஸ் குடும்பத்தின் நண்பர்.—17, 176.

குரோம்வெல் [Cromwell], ஒலிவெர் (1599—1658)—இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டில் நடைபெற்ற பூர்ஷ்வாப் புரட்சியின் போது முதலாளி வர்க்கத்தினருக்கும்

முதலாளித்துவப் போக்குள்ள பிரபுக்களுக்கும் தலைவராக இருந்தவர்; 1653ம் வருடத்திலிருந்து இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் உயர் பாதுகாவலராக (Lord Protector) இருந்தார்.—48, 52, 102.

குனே [Cuno], பிரெடெரிக் தெயொடோர் (1846—1934)—ஜெர்மானிய மற்றும் சர்வதேச தொழிலாளர் இயக்கப் பிரமுகர், சோஷலிஸ்டு; 1871—1872இல் இத்தாலியிலிருந்தார், எங்கெல்சுடன் முறையாகக் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். 1872இல் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தார், அங்கே அகிலத்தின் நடவடிக்கையிலும் அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத்திலும் தீவிரப் பங்கேற்றார்.—185, 191—195.

கூலிஷ் [Güllich], குஸ்தவ் (1791—1847)—ஜெர்மானியப் பொருளாதார நிபுணர், வரலாற்று அறிஞர், தேசியப் பொருளாதார வரலாறு பற்றிய படைப்புகளின் ஆசிரியர்.—19, 111.

கெண்ட் [Kent], நதேனியல் (1737—1810)—ஆங்கிலேய விவசாய நிபுணர், விவசாயம் பற்றிய பல படைப்புகளின் ஆசிரியர்.—59.

கெனே [Quesnay], பிரான்சுவா (1694—1774)—பிரெஞ்சு பொருளாதார நிபுணர், இயலாட்சி ஆதரவாளர் மரபின் ஸ்தாபகர்.—22.

கேரி [Carey], ஹென்ரி சார்லஸ் (1793—1879)—அமெரிக்க கொச்சைப் பொருளாதார நிபுணர்.—68, 103.

கொல்பேர் [Colbert], ஜான் பாப்ஸ்ட் (1619—1683)—பிரெஞ்சு அரசுப் பிரமுகர், நிதி பற்றிய பிரதம கண்காணிப்பாளர், முழு முதல் முடியாட்சியைப் பலப்படுத்தும் நோக்கங்களுடன் மெர்க்கன்டலிசக் கொள்கையைப் பின்பற்றினர்.—117.

கோடுநோஃப், போரிஸ் ஃபியோதரவிச் (சுமார் 1551—1605)—ருஷ்ய பேரரசர் (1598—1605).—53.

கோபெட் [Cobbett], வில்லியம் (1762—1835)—ஆங்கிலேய அரசியல்வாதி, கட்டுரையாளர், குட்டி முதலாளி வர்க்கத் தீவிரவாதி, பிரிட்டிஷ் அரசியல் அமைப்பை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று கோரியவர்.—50, 112, 116.

கோன்ட் [Comte], ஒகுஸ்ட் (1798—1857)—பிரெஞ்சு தத்துவ ஞானி, நேர்க்காட்சிவாத மரபை நிறுவியவர்.—26.

கோன்ட் [Comte], ஷார்ல் (1782—1837)—பிரெஞ்சு மிதவாத கட்டுரையாளர், கொச்சைப் பொருளாதார நிபுணர்.—107.

கௌஃப்மன், இல்லரியோன் இக்னத்தியெவிச் (1848—1916)—ருஷ்ய பொருளாதார நிபுணர், ''கார்ல் மார்க்சிடம் அரசியல் பொருளாதார விமரிசனத்தின் கண்ணோட்டம்'' எனும் கட்டுரையின் ஆசிரியர், பணப்புழக்கம், கடன் பற்றிய படைப்புகளையும் எழுதியுள்ளார்.—27, 28.

சார்லஸ் I (1600—1649)—ஆங்கிலேய மன்னர் (1625—1649), 17ஆம் நூற்றாண்டின் ஆங்கிலேய பூர்ஷ்வா புரட்சியின் போது மரண தண்டனைக்கு ஆளாக்கப் பட்டார்.—48, 50.

சான்-சிமோன் [Saint-Simon], அன்ரி (1760—1825)—பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்ட்.—131, 182.

சீனியர் [Senior], நாஸ்ஸா வில்லியம் (1790—1864)—ஆங்கிலேயக் கொச்சைப் பொருளாதார நிபுணர்.—68.

சுதர்லாந்து [Sutherland], ஹாரியெத் எலிசபெத் ஜார்ஜியன், கோமகள் (1806—1868)—பெரும் ஸ்காட்லாந்து நிலவுடைமையாளர்.—67.

சுதர்லாந்து [Sutherland], எலிசபெத், சீமாட்டி ஸ்தாஃபர்ட், 1833 முதல் கோமகள் (1765—1839)—பெரும் ஸ்காட்லாந்து நிலவுடைமையாளர், ஹாரியெத் எலிசபெத் ஜார்ஜியனின் மாமியார்.—65.

செர்னிஷெவ்ஸ்கி, நிக்கலாய் கவ்ரிலவிச் (1828—1889)—ருஷ்யாவின் புரட்சிகர ஜனநாயகவாதி, விஞ்ஞானி, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர்.—23, 152.

சைல்டு [Child], ஜோஸாயா (1630—1699)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், வங்கியதிபர், மெர்க்கன்டலிச ஆதரவாளர்.—123.

சோமர்ஸ் [Somers], ராபர்ட் (1822—1891) — ஆங்கிலேயக் கட்டுரையாளர்.—69—72.

டக்கர் [Tucker], ஜோஸாயா (1712—1799)—ஆங்கிலேய பாதிரி, பொருளாதார நிபுணர்.—124.

டக்கெட் [Tuckett], ஜான் தெபேல் (1864இல் காலமானார்)—ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர், ''முன்பும் இப்போதும் உழைப்பாளர் நிலையின் வரலாறு'' எனும் படைப்பின் ஆசிரியர்.—49, 102.

டபிள்டே [Doubleday], தாமஸ் (1790—1870)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், கட்டுரையாளர்.—117.

டன்னிங் [Dunning], டி. ஜி. (1799—1873)—ஆங்கிலேயத் தொழிற்சங்கவாதி, கட்டுரையாளர்.—125.

டாண்டே அலிகியேரி [Dante Alighieri] (1265—1321)—இத்தாலியக் கவிஞர்.—16.

டிட்ஸ்கென் [Dietzgen], ஜோசப் (1828—1888)—தலைசிறந்த ஜெர்மானியத் தத்துவஞானி; சுயேச்சையாகவே இயக்கவியல் பொருள்முதல்வாதத்திற்கு வந்து சேர்ந்தார்; சமூக-ஜனநாயகவாதி.—25.

டியூடர்கள்—இங்கிலாந்திலிருந்த ராஜ வம்சம் (1485—1603).—102.

டுபோன் [Dupont], எஷேன் (சுமார் 1831—1881)—சர்வதேச தொழிலாளர் இயக்கப் பிரமுகர், பிரெஞ்சு தொழிலாளி, 1848 பிரெஞ்சு புரட்சியில் பங்கேற்றார், 1862 முதல் லண்டனில் வாழ்ந்தார். முதலாம் அகில பொதுக் கவுன்சிலின் உறுப்பினர், இதன் எல்லா காங்கிரசுகளிலும் பங்கேற்றார். 1874இல் அமெரிக்கா சென்றார்.—166.

டெ பாப் [De Paepe], செஸார் (1842—1890)—பெல்ஜியத் தொழிலாளர், சோஷலிச இயக்கப் பிரமுகர், முதலாம் அகிலத்தின் உறுப்பினர், பெல்ஜிய தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—167.

தார்ண்டன் [Thornton], வில்லியம் தாமஸ் (1813—1880)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர்.—44.

தியேர் [Thiers], அடோல்ப் (1797—1877)—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், அரசுப் பிரமுகர், நிர்வாக ஆட்சித் தலைவர் (1871), குடியரசின் ஜனாதிபதி (1871—1873), பாரிஸ் கம்யூனை நசுக்கிய கொலைபாதகன்.—35, 162, 193.

நியூமன் [Newman], பிரேன்சிஸ் வில்லியம் (1805—1897)—ஆங்கிலேயக் கருத்துரையாளர், பூர்ஷ்வா தீவிரவாதி, மத, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான பல படைப்புகளின் ஆசிரியர்.—54, 64.

நெச்சாயெவ், செர்கேய் கென்னதியெவிச் (1847—1882)—ருஷ்ய புரட்சியாளர்-சதியாளர், ''மக்களின் பழிக்குப் பழி'' என்ற ரகசிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தியவர், 1869இல் ஸ்விட்ஸர்லாந்திற்கு குடிபெயர்ந்தார், அங்கே பக்கூனினுடன் நெருக்கமாக தொடர்பு கொண்டார். 1872ல் ஸ்விட்ஸர்லாந்து ஆட்சியாளர்களால் ருஷ்ய அரசாங்கத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டார், பீட்ரோபாவ்லவ்ஸ்க் கோட்டையில் மாண்டார்.—194.

நெப்போலியன் I (போனப்பார்ட்) (1769—1821)—பிரெஞ்சுப் பேரரசர் (1804—1814 மற்றும் 1815)—189.

நெப்போலியன் III (லுயி நெப்போலியன் போனப்பார்ட்) (1808—1873)—முதலாம் நெப்போலியனின் மைத்துனன், இரண்டாம் குடியரசின் ஜனதிபதி (1848—1851), பிரெஞ்சுப் பேரரசர் (1852—1870).—193.

பக்கூனின், மிஹயில் அலெக்சாந்திரவிச் (1814—1876)—ருஷ்யப் புரட்சியாளர், கட்டுரையாளர்; அராஜகவாதத்தின் தத்துவாசிரியர்; 1848—1849ம் வருடங்களில் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சியில் பங்கு கொண்டவர்; முதலாம் அகிலத்தின் உறுப்பினராக இருந்த பொழுது மார்க்சியத்தைத் தீவிரமாக எதிர்த்தவர்; 1872ம் வருடத்தில் ஹேக் நகரத்தில் நடைபெற்ற காங்கிரசில் பிளவு நடவடிக்கைகளுக்காக அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.—180—195, 204

பர்க் [Burke], ஏட்மன்ட் (1729—1797)—ஆங்கிலேய அரசியல் வாதி, பிற்போக்காளர், பொருளாதார பிரச்சினைகள் சம்பந்தமான படைப்புகளின் ஆசிரியர்.—55, 123—124.

பாஸ்டியா [Bastiat], பிரெடெரிக் (1801—1850)—பிரெஞ்சுக் கொச்சைப் பொருளாதார நிபுணர், முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்க நலன்களின் ஒத்திசைவுத் தத்துவத்தைப் பிரச்சாரம் செய்தவர்.—24.

பியா [Pyat], ஃபெலிக்ஸ் (1810—1889)—பிரெஞ்சுக் கட்டுரை

யாளர், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி, 1848ஆம் ஆண்டுப் புரட்சியில் கலந்து கொண்டவர், 1849இல் லண்டனுக்குக் குடிபெயர்ந்தவர்; ஒரு சில ஆண்டுகளுக்கு மார்க்சையும் அகிலத்தையும் எதிர்த்து அவதூறுப் பிரச்சாரம் செய்தார்.—160.

பிரீஸ்ட்லி [Priestley], ஜோசப் (1733—1804)—ஆங்கிலேய இரசாயன நிபுணர், தத்துவஞானி-பொருள்முதல்வாதி, முற்போக்கு சமூகப் பிரமுகர்.—145—147.

பிரெடெரிக் II (''மாபெரும்'' பிரெடெரிக் என்றழைக்கப்பட்டார்) (1712—1786)—பிரஷ்ய மன்னர் (1740—1786).—71, 96.

பிரைட் [Bright], ஜான் (1811—1889)—ஆங்கிலேய ஆலை முதலாளி, தங்குதடையற்ற வர்த்தகத்தின் ஆதரவாளர்களில் ஒருவர், தானியச் சட்டங்களுக்கு எதிரான சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர்.—23, 103.

பிரைஸ் [Price], ரிச்சார்ட் (1723—1791)—ஆங்கிலேய தீவிரவாதக் கட்டுரையாளர், பொருளாதார நிபுணர், தத்துவஞானி-பொருள்முதல்வாதி.—59—62.

பிளாக் [Block], மொரீஸ் (1816—1901)—பிரெஞ்சு பொருளாதார நிபுணர், கொச்சை அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—27.

பிளேக்கி [Blakey], ராபர்ட் (1795—1878)—ஆங்கிலேயத் தத்துவஞானி.—51.

பின்டர் (சுமார் 522—சுமார் 442 கி.மு.)—பண்டைய கிரேக்கக் கவிஞர்.—122.

பிஸ்மார்க் [Bismarck], ஓட்டோ (1815—1898)—அரசுப் பிரமுகர், பிரஷ்ய மற்றும் ஜெர்மானிய ராஜதந்திரி, பிரஷ்யாவின் மந்திரி-ஜனாதிபதி (1862—1871), ஜெர்மானியப் பேரரசின் சான்ஸலர் (1871—1890).—188, 193.

பிச்சர்-ஸ்டவ் [Beecher-Stowe], ஹாரியெட் (1811—1896)—அமெரிக்கப் பெண் எழுத்தாளர், நீக்ரோ விடுதலை இயக்கத்தில் கலந்து கொண்டவர்.—68.

பிட் [Pitt], வில்லியம், ஜூனியர் (1759—1806)—ஆங்கிலேய அரசுப் பிரமுகர், பிரதமர் (1783—1801, 1804—1806), டோரிகளின் தலைவர்களில் ஒருவர்.—86.

பில் [Peel], ராபர்ட் *(1750—1830)*—ஆங்கிலேய ஆலை முதலாளி, நாடாளுமன்ற உறுப்பினர்.—*120*.

பில் [Peel], ராபர்ட் *(1788—1850)*—ஆங்கிலேய அரசுப் பிரமுகர், மிதவாத டோரிகளின் தலைவர், பலமுறை பிரதமராயிருந்தார், மிதவாதிகளின் ஆதரவோடு தானிய விதிகளை மாற்றினார், முன்பு கூறப்பட்டவரின் மகன்.—*23, 120*.

புச்சானன் [Buchanan], டேவிட் *(1779—1848)*—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், ஸ்மித்தின் சீடர், விமரிசகர்.—*65—66*.

புரூதோன் [Proudhon], பியேர் ஜோஸெப் *(1809—1865)*—பிரெஞ்சு அரசியல் கட்டுரையாளர்; பொருளியல், சமூகவியல் ஆகிய துறைகளில் நிபுணர்; குட்டி முதலாளிகளின் சித்தாந்தவாதி, அராஜகவாதத்தைத் தொடங்கி வைத்தவர்களில் ஒருவர்.—*182*.

புரூவாம் [Brougham], ஹென்ரி பிட்டர் *(1778—1868)*—ஆங்கிலேயச் சட்ட நிபுணர், இலக்கியவாதி.—*123*.

புஸ்கே [Bousquet], அபேல்—பிரெஞ்சு அராஜகவாதி, போலீசில் பணி புரிந்ததற்காக முதலாம் அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*193*.

பூஷே [Buchez], ஃபிலிப் *(1796—1865)*—பிரெஞ்சு அரசியல்வாதி, வரலாற்று அறிஞர், கிறிஸ்துவ சோஷலிசத்தின் சித்தாந்தவாதிகளில் ஒருவர்.—*90*.

பெகேலி [Beghelli], ஜூஸெப்பெ *(1847—1877)*—இத்தாலியப் பத்திரிகையாளர், கரிபால்டியின் படையெடுப்புகளில் கலந்து கொண்டவர், சில குடியரசுப் பத்திரிகைகளின் ஆசிரியர்.—*192*.

பெக்கியோர் [Pecqueur], கான்ஸ்தன்தேன் *(1801—1887)*—பிரெஞ்சு பொருளாதார நிபுணர், கற்பனாவாத சோஷலிஸ்டு.—*126*.

பெபெல் [Bebel], ஔகுஸ்ட் *(1840—1913)*—சர்வதேச மற்றும் ஜெர்மானியத் தொழிலாளர் இயக்க பிரமுகர், ஜெர்மானியச் சமூக-ஜனநாயகத்தின் ஸ்தாபகர்கள், தலைவர்களில் ஒருவர், முதலாம் அகிலத்தின் உறுப்பினர், மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர், சகதோழர்.—*196—202*.

பேக்கன் [Bacon], பிரேன்ஸிஸ் *(1561—1626)*—ஆங்கிலேயத் தத்துவஞானி, இயற்கை விஞ்ஞானி, ஆங்கிலப் பொருள் முதல்வாதத்தின் ஆரம்பகர்த்தா.—45, 47.

பேர்வி, வசிலி வசிலியெவிச் (புனைபெயர் நி. ஃப்லெரோவ்ஸ்கி) *(1829—1918)*—ருஷ்ய பொருளாதார நிபுணர், சமூக வியலர், ''ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை மை'' எனும் நூலின் ஆசிரியர்.—152.

பைலஸ் [Byles], ஜான் பெர்னர்டு *(1801—1884)*—ஆங்கிலேயச் சட்ட நிபுணர், ''தங்குதடையற்ற வர்த்தகத்தின் குதர்க்கம்'' நூலின் ஆசிரியர்.—83.

போலிங்புரோக் [Bolingbroke], ஹென்ரி *(1678—1751)*—ஆங்கி லேயத் தத்துவஞானி, கட்டுரையாளர், அரசியல்வாதி. —114.

போல்டே [Bolte], பிரெடெரிக்—அமெரிக்க தொழிலாளர் இயக்க பிரமுகர், ஜெர்மானிய இனத்தவர்; அகிலத்தின் வட அமெரிக்கப் பிரிவுகளின் பெடரல் கவுன்சில் செய லாளர் *(1872)*.—180-184.

மக்காலோக் [MacCulloch], ஜான் ராம்ஸே *(1789—1864)*—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், ரிக்கார்டோவின் பொருளாதார போதனையைக் கொச்சைப்படுத்தி யவர்.—59.

மாகோலி [Macaulay], தாமஸ் பாபிங்டான் *(1800—1859)*—ஆங்கிலேய வரலாற்று அறிஞர், அரசியல்வாதி, விக் கட்சியின் உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்.—41, 52.

மாண்டெஸ்கியே [Montesquieu], ஷார்ல் *(1689—1755)*—பிரெஞ்சு முதலாளித்துவச் சமூகவியலாளர், பொருளி யலாளர், எழுத்தாளர். 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாளித்துவ அறிவொளி இயக்கத்தின் பிரதிநிதி, அர சியல் அமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட முடியாட்சி யின் தத்துவாசிரியர்.—115.

மாபெரும் சார்லஸ் (சுமார் *742—814*)—பிரெஞ்சு மன்னர் *(768—800)* மற்றும் பேரரசர் *(800—814)*.—61.

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)*—9, 14—18, 26—33, 68, 133, 137—150, 152, 175, 192, 194, 198—202.

மார்க்ஸ் [Marx], ஜென்னி (1844—1883)—கா. மார்க்சின் மூத்த மகள், சர்வதேச தொழிலாளர் இயக்கப் பிரமுகர், 1872 முதல் லோன்கேவின் மனைவி.—194.

மான்டேய்]Monteil], அமான் அலெக்ஸிஸ் (1769—1850)—பிரெஞ்சு வரலாற்று அறிஞர்.—94—95.

மாஜினி [Mazzini], ஜூஸேப்பே (1805—1872)—இத்தாலியப் புரட்சியாளர், பூர்ஷ்வா ஜனநாயகவாதி, இத்தாலிய தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவர்.—188.

மிராபோ [Mirabeau], ஒனேரே கப்ரியேல் (1749—1791)—18ம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியின் பிரபல பிரமுகர், முதலாளித்துவப் போக்குள்ள பிரபுக்குலத்தினர் மற்றும் பெரும் முதலாளிகளின் நலன்களைப் பிரதிபலித்தார்.—42, 71, 72, 99, 117.

மில் [Mill], ஜான் ஸ்டுவர்ட் (1806—1873)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், நேர்க்காட்சிவாதத் தத்துவஞானி.—23, 103.

முல்பெர்கெர் [Mülberger], அர்த்தூர் (1847—1907)—ஜெர்மானியக் குட்டி முதலாளித்துவக் கட்டுரையாளர், புரூதோன்வாதி.—198.

மென்டெல்சன் [Mendelssohn], மோசஸ் (1729—1786)—ஜெர்மானியப் பிற்போக்கு தத்துவஞானி.—32.

மைஸ்னர் [Meissner], ஓட்டோ கார்ல் (1819—1902)—ஹாம்பர்க் புத்தக வெளியீட்டாளர், மார்க்ஸ், எங்கெல்சின் படைப்புகளை வெளியிட்டார்.—131.

மோர் [More], தாமஸ் (1478—1535)—ஆங்கிலேய அரசியல்வாதி, கற்பனாவாதக் கம்யூனிசத்தின் ஆரம்பக்கால பிரதிநிதிகளில் ஒருவர்.—44, 78.

யார்க் [York], தெயொடோர் (1830—1875)—ஜெர்மானியத் தொழிலாளர் இயக்கப் பிரமுகர், லஸ்ஸால்வாதி, 1871—1874இல் ஜெர்மானியச் சமூக-ஜனநாயாகத் தொழிலாளர் கட்சியின் செயலாளர்.—196.

ரஸ்ஸல் [Russell], ஜான் (1792—1878)—ஆங்கிலேய அரசுப் பிரமுகர், விக் கட்சித் தலைவர், பிரதமர் (1846—1852, 1865—1866).—55.

ராஃபல்ஸ் [Raffles], தாமஸ் ஸ்தாம்ஃபர்ட் (1781—1826)—பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சியில் அதிகாரி; ஜாவாவில் கவர்னராக (1811—1816) இருந்தவர்.—108.

ரிக்கார்டோ [Ricardo], டேவிட் (1772—1823)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், மூலச்சிறப்பான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—21, 26, 120, 148. 177.

ரிஷார் [Richard], அல்பேர் (1846—1925)—பிரெஞ்சு பத்திரிகையாளர், அகிலத்தின் லியோன் கிளையின் தலைவர்களில் ஒருவர், சோஷலிச ஜனநாயகத்தின் பக்கூனின்வாத இரகசியக் கூட்டணியின் உறுப்பினர், பாரிஸ் கம்யூன் ஒடுக்கப்பட்ட பின் போனப்பார்டிஸ்டு.—193.

ருஸ்ஸோ [Rousseau], ஜான் ஜாக் (1712—1778)—பிரெஞ்சு அறிவியக்கவாதி, ஜனநாயகவாதி, குட்டி முதலாளித்துவ சித்தாந்தவாதி.—98.

ரூ லவேர்ன் [Roux-Lavergne], பியேர் செலெஸ்தேன் (1802—1874)—பிரெஞ்சு வரலாற்று அறிஞர், தத்துவஞானி-கருத்துமுதல்வாதி.—90.

ரொட்பேர்டஸ் [Rodbertus], யோஹன் கார்ல் (1805—1875)—ஜெர்மானியக் கொச்சை பொருளாதார நிபுணர், பிரஷ்ய ''அரசு சோஷலிசத்தின்'' பிற்போக்குக் கருத்துகளைப் பிரச்சாரம் செய்தவர்.—145, 148, 149.

ரொபேன் [Robin], போல் (1837—1912)—பிரெஞ்சு ஆசிரியர், பக்கூனின்வாதி, சோஷலிச ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவர்.—189.

ரோபர்ட்ஸ் [Roberts], ஜார்ஜ் (1860இல் காலமானர்)—ஆங்கிலேய வரலாற்று அறிஞர், இங்கிலாந்தின் தெற்கு மாவட்டங்களின் வரலாறு பற்றிய பல படைப்புகளின் ஆசிரியர்.—49.

ரோஜர்ஸ் [Rogers], ஜேம்ஸ் எட்வின் தோரல்ட் (1823—1890)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், பிரிட்டிஷ் தேசியப் பொருளாதார வரலாறு பற்றிய பல படைப்புகளின் ஆசிரியர்.—52, 103.

ரோஸ்கோ [Roscoe], ஹென்ரி என்ஃபில்ட் (1833—1915)—ஆங்கிலேய இரசாயன நிபுணர், இரசாயனம் சம்பந்தமான பல துணைநூல்களின் ஆசிரியர்.—146.

லவுவஸியே [Lavoisier], அன்டுவான் லொரான் *(1743—1794)* —பிரெஞ்சு இரசாயன நிபுணர், அரசியல் பொருளாதாரம், புள்ளிவிவர இயல் பிரச்சினைகளை ஆராய்ந்தார்.—*148.*

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினண்டு *(1825—1864)*—ஜெர்மானியக் குட்டி முதலாளித்துவக் கட்டுரையாளர், வழக்குரைஞர், 1860க்களின் துவக்கத்தில் தொழிலாளர் இயக்கத்தில் சேர்ந்தார், ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர் *(1863)*; ஜெர்மானியத் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கைத் துவக்கி வைத்தார்.—*10, 202.*

லிங்கே [Linguet[, ஸிமோன் நிக்கொலா அன்ரி *(1736—1794)*—பிரெஞ்சு வழக்குரைஞர், பொருளாதார நிபுணர், பூர்ஷ்வா சுதந்திரங்கள் மற்றும் சொத்துடைமை உறவுகளைப் பற்றிய ஆழ்ந்த விமரிசனத்தைத் தந்தார்.—*82.*

லீப்னெஹ்ட் [Liebknecht], வில்ஹெல்ம் *(1826—1900)*—ஜெர்மானிய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர்; கம்யூனிஸ்டுகள் சங்கம் மற்றும் முதலாம் அகிலத்தின் உறுப்பினர், ஜெர்மானியச் சமூக-ஜனநாயகத்தின் ஸ்தாபகர்கள், தலைவர்களில் ஒருவர், மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர், சகதோழர்.—*196.*

லூயி XVI *(1754—1793)*—பிரெஞ்சு மன்னர்(1774—1792), 18ம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியின் போது கொல்லப்பட்டவர்.—*80.*

லூதர் [Luther], மார்ட்டின் *(1483—1546)*—மதச் சீர்திருத்த இயக்கத்தின் பெருந்தலைவர், ஜெர்மனியில் புரோட்டஸ்டென்ட் (லூதரன்) திருச்சபையை நிறுவியவர், ஜெர்மானிய மத்தியதர வர்க்கத்தின் சித்தாந்தி.—*111.*

லெப்லான் [Leblanc], அல்பேர் ஃபெலிக்ஸ் *(பிறப்பு 1844)*—அகிலத்தின் பிரெஞ்சு ஸ்தாபனத்தின் உறுப்பினர், பக்கூனின்வாதிகளுடன் இணைந்தார், பாரிஸ் கம்யூனில் பங்கேற்றார். கம்யூன் ஒடுக்கப்பட்டதும் பிரிட்டனுக்கு குடிபெயர்ந்தார், இங்கே போனப்பார்ட்டிஸ்டாக இருந்தார்—*193.*

லெவி [Levi], லியோன் *(1821—1888)*—ஆங்கிலேயப் பொரு

ளாதார நிபுணர், புள்ளி இயலாளர், சட்ட நிபுணர்.—72.

லெ ஷபெலியே [Le Chapelier], இசாக் ரெனே கி (1754—1794)—பிரெஞ்சு பிற்போக்கு அரசியல்வாதி, தொழிலாளர் சங்கங்கள், வேலைநிறுத்தங்களைத் தடை செய்யும் சட்டத்தை உருவாக்கியவர்.—89.

லெஸ்ஸிங் [Lessing], கோட்ஹல்ட் எஃப்ரயிம் (1729—1781)—ஜெர்மானிய எழுத்தாளர், விமரிசகர், தத்துவஞானி, 18ஆம் நூற்றாண்டின் பிரபல அறிவொளியாளர்களில் ஒருவர்.—32.

லேசினியஸ் (காயுஸ் லேசிஹயஸ் ஸ்தோலோ)—கி.மு. 4ஆம் நூற்றாண்டின் முதல் பாதியிலிருந்த ரோமானிய அரசுப் பிரமுகர்.—61.

விட் [Witt], யான் டெ (1625—1672)—நெதர்லாந்து அரசுப் பிரமுகர், பெரும் வர்த்தக முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்தார்.—116.

விட்பிரெட் [Whitbread], சேமுயேல் (1758—1815)—ஆங்கிலேய அரசியல் பிரமுகர்.—86.

வில்ஹெல்ம் I (1797—1888)—பிரஷ்ய மன்னர் (1861—1888), ஜெர்மானியப் பேரரசர் (1871—1888).—162.

வில்ஹெல்ம் III ஒரான்ஸ்கி (1650—1702)—நெதர்லாந்தின் ஸ்டாட்கால்டர் (1672—1702), ஆங்கிலேய மன்னர் (1689—1702).—54.

வேய்ட் [Wade], பென்ஜமின் பிரான்க்ளின் (1800—1878)—அமெரிக்க அரசியல்வாதி, அமெரிக்காவின் தெற்கே அடிமை முறைக்கெதிராகப் போராடினர்.—16.

ஜார்ஜ் II (1683—1760)—ஆங்கிலேய மன்னர் (1727—1760)—85.

ஜார்ஜ் III (1738—1820)—ஆங்கிலேய மன்னர் (1760—1820).—86.

ஜான் II நற்குணவான் (1319—1364)—பிரெஞ்சு மன்னர் (1350—1364).—82.

ஜியோஃப்ராய் செயின்ட்-ஹிலேர் [Geoffroy Saint-Hilaire], எட்டியேன்

(1772—1844)—பிரெஞ்சு விலங்கியலாளர், பரிணம தத்துவ ஆதரவாளர்.—*95.*

ஜேம்ஸ் I *(1566—1625)*—ஆங்கிலேய மன்னர் *(1603—1625).*—*50, 79, 84.*

ஷூல்ட்ஸெ-டெலிச் [Schulze-Dlitzsch], ஹேர்மன் *(1808—1883)*—ஜெர்மானிய அரசியல்வாதி, கொச்சைப் பொருளியலாளர், கூட்டுறவுக் கழகங்களை ஏற்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களைப் புரட்சிப் போராட்டத்திலிருந்து திசை திருப்ப முயன்றார்.—*10.*

ஷேக்ஸ்பியர் [Shakespeare], வில்லியம் *(1564—1616)*—ஆங்கிலேய எழுத்தாளர்.—*93.*

ஷெலெ [Scheele], கார்ல் வில்ஹெல்ம் *(1742—1786)*—ஸ்வீடன் இரசாயன நிபுணர்.—*145—147.*

ஷொர்லெமர்[Schorlemmer], கார்ல்*(1834—1892)*—ஜெர்மானிய இரசாயன நிபுணர், ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்; மார்க்ஸ், எங்கெல்சின் நண்பர்.—*146.*

ஷோல் [Scholl]—பிரெஞ்சு தொழிலாளி, அகிலத்தின் லியோன் பிரிவின் உறுப்பினர், 1872இல் பேரரசை புனர் நாட்டும் போனப்பார்ட் திட்டங்களுக்கு ஆதரவளித்தார்.—*193.*

ஷ்வைட்ஸர் [Schweitzer], யோஹன் பப்டிஸ்ட் *(1833—1875)*—ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் தலைவர், ஜெர்மானியத் தொழிலாளர்கள் முதலாம் அகிலத்தோடு இணையத் தடையாக இருந்தார்.—*181, 190.*

ஸிஸ்மாண்டி [Sismondi], ஜான் ஷார்ல் லியொனர் ஸிமோன் டெ *(1773—1842)*—ஸ்விட்ஸர்லாந்து பொருளாதார நிபுணர், முதலாளித்துவத்தைக் குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டத்திலிருந்து விமரிசித்தார்.—*21, 127.*

ஸீபர், நிக்கலாய் இவானவிச் *(1844—1888)*—ருஷ்ய பொருளாதார நிபுணர், மார்க்சின் பொருளாதாரப் படைப்புகளை ருஷ்யாவில் முதன்முதலாகப் பரப்பியவர்களில் ஒருவர்.—*26.*

ஸீலி [Seeley], ராபர்ட் பென்டன் *(1798—1886)*—ஆங்கிலேயப்

பதிப்பக உடைமையாளர், கட்டுரையாளர், பூர்ஷ்வா கொடை வள்ளர்.—62.

ஸோர்கே [Sorge], **பிரெடெரிக் அடோல்ப்** *(1828—1906)*—சர்வதேச மற்றும் அமெரிக்கத் தொழிலாளர் இயக்கப் பிரமுகர், முதலாம் அகிலத்தின் செயல் திறமுடைய உறுப்பினர்களில் ஒருவர், நியூயார்க்கிலிருந்த பொதுக் கவுன்சிலின் உறுப்பினர், இதன் பொதுச் செயலாளர் *(1872—1874)*; மார்க்ஸ், எங்கெல்ஸின் நண்பர், சக தோழர்.—203.

ஸ்டிரைப் [Strype], **ஜான்** *(1643—1737)*—ஆங்கிலேய பாதிரி, வரலாற்று அறிஞர், டியூடர்கள் காலத்திய பிரிட்டிஷ் வரலாற்று ஆவணங்களைச் சேகரித்தார்.—79.

ஸ்டுவர்ட் [Steuart], **ஜேம்ஸ்** *(1712—1780)*—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், மெர்க்கன்டலிசத்தின் பிரதி நிதிகளில் ஒருவர்.—43, 65, 96.

ஸ்டுவர்ட்கள்—*1371* முதல் ஸ்காட்லாந்திலும் இங்கிலாந் திலும் *(1603—1649, 1660—1714)* ஆட்சி செய்த ராஜ வம்சம்.—53.

ஸ்டாஃபோர்ட் [Stafford], **வில்லியம்** *(1554—1612)*—ஆங்கி லேயப் பொருளாதார நிபுணர், மெர்க்கன்டலிசத்தின் பிரதிநிதி.—93.

ஸ்பினோஸா [Spinoza], **பாருஹ் (பெனெடிக்ட்)** *(1632—1677)*—ஹாலந்து தத்துவஞானி-பொருள்முதல்வாதி.—32.

ஸ்மித்]Smith], **ஆடம்** *(1723—1790)*—ஆங்கிலேயப் பொருளி யலாளர், மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொரு ளாதாரத்தின் மாபெரும் பிரதிநிதி.—26, 34, 65, 66, 82, 123.

ஸ்மித் [Smith], **கொல்டுவின்** *(1823—1910)*—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், வரலாற்று அறிஞர், அரசியல் பொருளாதாரத்தில் மான்செஸ்டர் மரபின் ஆதரவா ளர்.—103.

ஸ்லோவுன் [Sloane], **ஹான்ஸ்** *(1660—1753)*—ஆங்கிலேய இயற்கை விஞ்ஞானி, நூல்கள், கையெழுத்துப் பிரதி களைச் சேர்ப்பவர், இவருடைய சேகரிப்புகள்தான் பிரிட் டிஷ் மியூசியத்தின் துவக்கத்திற்கு வழிகோலின.—54.

ஹண்டர் [Hunter], ஹென்ரி ஜூலியன்—ஆங்கிலேய மருத்துவர், தொழிலாளர்களுடைய மோசமான வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய பல அறிக்கைகளின் ஆசிரியர்.—48.

ஹாரிஸன் [Harrison], வில்லியம் (1534—1593)—ஆங்கிலேய பாதிரி, பிரிட்டிஷ் வரலாறு பற்றிய பல படைப்புகளின் ஆசிரியர்.—44, 92.

ஹார்னர் [Horner], பிரான்சிஸ் (1778—1817)—ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர், அரசியல்வாதி.—121.

ஹின்ஸ் [Hins], எஷென் (1839—1923)—பெல்ஜிய ஆசிரியர், புரூதோன்வாதி, பின்னல் பக்கூனின்வாதி; முதலாம் அகிலத்தின் பெல்ஜியப் பிரிவைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர்.—190.

ஹெகல் [Hegel], இயோர்கு வில்ஹெல்ம் பிரெடெரிக் (1770—1831)—மூலச்சிறப்புள்ள ஜெர்மானியத் தத்துவஞானத்தின் மிகப் பெரும் பிரதிநிதி; புறநிலைக் கருத்துமுதல் வாதத்தைப் பின்பற்றியவர்.—27, 31, 32, 201.

ஹெப்னர் [Hepner], அடோல்ப் (1846—1923)—ஜெர்மானியச் சமூக-ஜனநாயகவாதி, Volksstaat பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவர், முதலாம் அகிலத்தின் ஹேக் காங்கிரஸ் பிரதிநிதி.—196.

ஹென்ரி VII (1457—1509)—ஆங்கிலேய மன்னர் (1485—1509).—45—47, 75.

ஹென்ரி VIII (1491—1547)—ஆங்கிலேய மன்னர் (1509—1547).—45, 75, 79.

ஹேஸ்டிங்ஸ் [Hastings], வாரன் (1732—1818)—இந்தியாவிலிருந்த முதல் பிரிட்டிஷ் கவர்னர் (1774—1785), கடுமையான காலனியாதிக்கக் கொள்கையைப் பின்பற்றினர்.—109.

ஹொராஷியஸ் (குயின்ட் ஹொராஷியஸ் ஃப்ளாக்) (65—8 கி.மு.)—ரோமானியக் கவிஞர்.—12.

ஹொலின்ஷெட் [Holinshed], ரஃபேல் (சுமார் 1580இல் காலமானர்)—ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்.—79.

ஹோட்ஸ்கின் [Hodgskin], தாமஸ் (1787—1869)—ஆங்கிலேயப்

பொருளாதார நிபுணர், கற்பனாவாத சோஷலிச நிலைகளிலிருந்து முதலாளித்துவத்தை விமரிசித்தார்.—105.

ஹோவிட் [Howitt], வில்லியம் (1792—1879)—ஆங்கிலேய எழுத்தாளர், கிறிஸ்துவ வரலாறு பற்றிய நூல்களின் ஆசிரியர்.—107.

இலக்கிய மற்றும் புராணப் பெயரகராதி

ஆதாம்—பைபிள் தொல்கதையின்படி கடவுளால் படைக்கப் பட்ட முதல் மனிதன். கடவுள் ஆதாமையும் முதல் பெண்ணாகிய ஏவாவையும் ஏடன் தோட்டத்தில் வாழ்க்கை நடத்துமாறு பணித்தார். கடவுளின் கட்டளையை மீறி அறிவு மரத்தின் கனியைத் தின்ற குற்றத்திற்காக இருவரும் தண்டிக்கப்பட்டனர்.—34.

ஆபெல்—பைபிள் தொல்கதையின்படி ஆதாமின் இளைய மகன்; மூத்த சகோதரன் கெய்ன் பொறுமையினால் தூண்டப்பட்டு ஆபெலைக் கொன்றான்.—103.

கெய்ன்—பைபிள் தொல்கதையின்படி ஆதாமின் மூத்த மகன், சகோதரன் ஆபெலைக் கொன்றவன்.—103.

பெர்சியஸ்—கிரேக்கத் தொல்கதையில் இடம்பெற்றிருக்கும் வீரன், மெடூஸாவின் தலையை வெட்டியவன், மேலும் பல அருஞ்செயல்களைச் செய்தவன்.—13.

மெடூஸா—கிரேக்கத் தொல்கதையில் சொல்லப்படுகின்ற கோர உருவம், இதைப் பார்த்த மனிதர்கள் கல்லாக மாறிவிடுவார்கள்.—13.

வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
சொர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001